# புவன சாத்திரம்.

மாணாக்கர் கற்றுக்கொள்ளும்பொருட்டுச்
செய்யப்பட்டது.

முதற்பிரதி.

## இந்துதேச விபரம்.

அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்திற்
பதிக்கப்பட்டது.

# TAMIL GEOGRAPHY,

FOR THE USE OF SCHOOLS.

PART I.

## THE GEOGRAPHY OF HINDUSTAN.

PUBLISHED BY THE AMERICAN CEYLON MISSION.

American Mission Press, Jaffna.
1842.

RangaRakes

tamilnavarasam.com

# புவன சாத்திரம்.

## ௧. அதிகாரம்.

வினா. புவன சாத்திரமாவதென்ன?

விடை. பூமியின் விபரத்தை உணர்த்துநூலேயாம்.

பூமியாவதென்ன?

நாங்கள் இருக்கிற உலகந்தான்.

பூமி எப்படிப்பட்ட வடிவமுள்ளது?

தோடம்பழம் போல ஏறக்குறையக் கோள வடிவமுள்ளது.

பூமியின் பருமம் எவ்வளவு?

அது சுற்றளவில் ஏறக்குறைய (௨௫௲) மயிலும்* மத்தியளவில் (௮௲) மயிலுமுள்ளதாயிருக்கின்றது.

பூமி கோளவடிவமென்றது எப்படித்தெரியும்?

பிரதானமாக ஐந்து அத்தாட்சிகளினாலே திட்டமாகத் தெரியும்.

அவ்வத்தாட்சிகள் என்ன?

௧வது. நாம் கிழக்கில் அல்லது மேற்கிலிருந்து புறப்பட்டுப் பூமியைச் சுற்றிப்போய் மறுபடியும் முன் இருந்தவிடத்து வந்து சேருதல்; ௨வது. சமுத்திரத்திலே கப்பல்கள் வரக் கண்டால் அவை தூரத்திலே வரும் பொழுது பாய்மரத்தின் நுனியையும் பின் கொஞ்சத்தூரங் கிட்டி வரும் பொழுது கப்பலின்

*௧ மயில் பத்திலொரு பங்கு காதம்.





முழு ரூபத்தையுங் காண்டல்; (௩வது.) இப்பூமி சூரியனுக்குஞ் சந்திரனுக்கும் நேரூடாக நிற்கையிற் பூமியினுடைய நிழல் சந்திரன் மேலே விழுந்து சந்திர கிரகணம் உண்டாகிற பொழுது அந்த நிழல் சந்திரன் மேற் சக்கரவடிவமாயிருத்தல்; (௪வது.) வடமுனையிலே நிற்குந் துருவநட்சத்திரம் நாம் வடக்கே போகப்போக உயர்ந்துயர்ந்து தோன்றி வடமுனையிற் போக உச்சத்திலே நிற்றலும், தெற்கே போகப்போக அதிகமதிகமாய்த் தாழ்ந்து பூமியின் நிரக்ஷிரேகைக்குந் தெற்கே போகக் கொஞ்சமேனுந் தெரியாமற் போதலுமே; (௫வது.) சூரியன் உத்தராயனத்திலே நிற்கையில் வட துருவத்திலே இருக்கிறவர்களுக்கு ஆறு மாதம் பகலுந் தென் துருவத்தில் இருக்கிறவர்களுக்கு ஆறு மாதம் இரவும், சூரியன் தக்கணாயனத்தில் நிற்கையில் தென் துருவத்தில் இருக்கிறவர்களுக்கு ஆறு மாதம்பகலும் வட துருவத்தில் இருக்கிறவர்களுக்கு ஆறு மாதம் இரவுமுண்டாயிருத்தல். மேற்கூறிய அத்தாட்சிகளைக் கொண்டு பூமி கோளவடிவமுள்ளதென்று தெரியவரும்.

மேற்கூறிய, ௫ம். நியாயத்தைக் கொண்டு பூமி கோளமாயிருக்கிறதென்று சொல்வதினும் அது விசிறி வடிவமாயிருக்கிறதென்று சொன்னாலென்ன? அப்பொழுதும் அதின் நிழல் சக்கரமாய்த்தானே விழும்?

அப்படி விசிறி வடிவமானால் அது எப்புறத்துச் சாய்ந்த காலத்தும் அதின் நிழல் சக்கரமாய் விழமாட்டாது.

பூமி சூரியனினின்று எவ்வளவு தூரத்தில் இருக்கின்றது?

RangaRakes tamilnavarasam.com

அது ஏறக்குறைய (௯. கோடியே. ௫௰. இலக்கம்) மயில் அல்லது (௯௰௫ இலக்கம்*.) காததூரத்தில் இருக்கின்றது.

பூமியை இயங்கியல்வஸ்துவென்றுசொல்லலாமா?

ஆம், அது வருஷம் ஒருமுறை சூரியனைச் சுற்றியோடுகிறதினாலும் நாளொருமுறை தன்னிலேதானே சுற்றிக்கொள்ளுகிறதினாலும் அப்படிச் சொல்லலாம்.

வருஷாந்த ஓட்டத்தினாற் பூமியில் உண்டாகும் விகாரங்கள் என்ன?

மாரி கோடை முதலிய பருவப் பெயர்ச்சிகள்.

பூமி நாடோறுந் தன்னிலே சுற்றிக்கொள்ளுகிறதினால் உண்டாகும் விகாரங்கள் என்ன?

இராப்பகலென்னும் இரண்டு சிறு பொழுதுப்பெயர்ச்சிகள்.

பூமி சூரியனால் என்ன பெற்றுக் கொள்ளுகின்றது?

வெளிச்சம், காங்கை, காற்று, மழை முதலியவைகள்.

பூமி சூரியனாலே வெளிச்சத்தை எப்படிப் பெற்றுக் கொள்ளுகின்றது?

சூரியன் ஒளியுள்ளதாயிருந்து தன் கிரணங்களைப் பூமியின் மேற் பரப்புகின்றதினாலே அதைப் பெற்றுக்கொள்ளுகின்றது.

பூமியிலே காங்கை எப்படி உண்டாகின்றது?

சூரியனுடைய கிரணம் பரமாணுவிற் படுகிறதினாலே உண்டாகின்றது.

காற்றெப்படி உண்டாகின்றது?

சூரிய கிரணம் பரமாணுவிற் பட்டு அதிக காங்கையைப் பிறப்பிக்கிற வேளையில், குளிர்மையான தேசப் பகுதிகளில் இருக்கிற பரமாணுக்கள் அக்காங்கையைத் தேடிக் கதியாய்ச் செ

*௭, கோடியே ௰௨, இலக்கத்து ௫௰௩, நாழிகை வழி.

RangaRakes



ல்லும் அசைவினாற் காற்றுண்டாகின்றது. உதாரணமாகச், சூரியன் உத்தராயனத்தில் நிற்கையில் அவ்விடத்தில் மிகவுங் காங்கை உண்டாகின்றதால் அக்காங்கையை நாடித் தெற்கேயிருந்து ஓடிவருகிற பரமாணுவைத் தென்றலென்றுஞ், சூரியன் தக்கணாயனத்தில் நிற்கையில் மிகவுங் காங்கையுண்டாகின்றதால் அக்காங்கையை நாடி வடக்கே இருந்தோடி வருகிற பரமாணுவை வடந்தையென்றுஞ் சொல்லுகிறோம். மேலுங் கிழக்கேயாவது மேற்கேயாவது அதிக மழை பெய்தால் அப்படி மழை பெய்யுந் திசையிலிருந்து மழையில்லாத திசையை நோக்கிக் கதியாக ஓடி வரும் பரமாணுவைக் கொண்டலென்றுங் கோடையென்றும் முறையே சொல்லுவார்கள். இவையன்றி இன்னும் பலவிதங்களினாலேயுங் காற்றுண்டாகின்றது.

மழையைப் பூமி எப்படிப் பெற்றுக்கொள்ளுகின்றது?

உலையிலே இருக்கிற சலங் கொதிக்கிற பொழுது அணுவணுவாய் நீராவி,மேலே செல்லுந் தன்மைபோல வாவி,கடல்,சமுத்திரம் முதலியவற்றினுள்ள நீர் சூரிய கிரணத்தாற் கனற்றப்படும் பொழுது அணுவணுவாய் மேலே இர்ப்புண்டு அவ்வணுவணுவாகிய நீரெல்லாம் ஆகாயத்திற் காற்றினாற் கூட்டிச் சேர்க்கப்பட்டதாய் ஒருமிக்கக் கூடியிருக்கும். அப்படிக் கூடியிருக்குங் கூட்டமே முகில். கொஞ்ச நீர் கூடியிருக்குங் கூட்டத்தை வெண் முகிலென்றுங் கனமாக நீர் பொருந்தியிருப்பதைக் க

tamilnavarasam.com

ரு முகிலென்றுஞ் சொல்லுவார்கள். மேலும் முகில்கள் பரமாணுவிலுங் கனங்குறைவான படியாற் பரமாணு அவைகளை விழவிடாதபடி தாங்கிக்கொண்டது. பின்னும் நீர் பூமியில் இருந்து முன் சொன்ன விதமாய் நாடோறும் ஏறிபேறி முகில்களுடனே கூடிக் கனங்கொள்ளுகிறபடியாற் பரமாணு தாங்கக் கூடாதபடி மழையாய்ப் பூமியில் விழுகின்றது.

*பனி எப்படி உண்டாகின்றது?*

முன் சொல்லிய விதமாய்ச் சூரியன் பகற் காலத்திலே நீரை அணுவணுவாய் இழுத்துக் கொள்ளும். சூரியன் அஸ்தமித்த பின் இவ்விதமான செயநிகை அதற்கில்லை. பகற் காலத்திலே இழுத்துக்கொள்ளப்பட்ட அணுக்களில் அரைக்கரைவாசி சூரியன் அஸ்தமிக்கும் வேளையிற் பூமிக்குக் கிட்டுமானமாய் அந்தரத்தில் நின்றதாலும் அவைகளை ஆகாயத்திற் செலுத்தக் கூடிய கிரணங்களும் இல்லாமையாலும் அவ்வணுவாய நீர்த்துளிகள் திரும்பப் பூமியில் விழுந்து பனியென்று சொல்லப்படுகின்றன.

*பூமியின் நாராசமாவதென்ன?*

பூமியின் வட துருவம் நின்று தென் துருவம் வரைக்கும் பூமியின் நடுமையத்தை ஊடுருவப் போகிறதாகவும் அதனிற் பூமி சுற்றிக்கொண்டிருக்கிறதாகவும் எண்ணப்படுகிற உருவாணியாம்.

*பூமியின் துருவங்களாவன என்ன?*

முன் சொன்ன நாராசம் ஊடுருவிப்போனதாகவெண்ணப்படுகிற அந்தங்களே. ஆகவே வட துருவந் தென் துருவமென இரண்டு துருவங்கள் உண்டு.





## ௨. அதிகாரம்.

*இயற்கையிலேயுள்ளதாய்ப் பூமியின் மேற் காணப்படுகிற முதற் பிரிவுகள் என்ன?*

நிலமும் நீரும்.

*பூமியின் மேல் நிலப்பரப்போ நீர்ப்பரப்போ மிகுதி?*

நிலம் ஐந்தில் இரண்டு பங்கும், நீர் ஐந்தில் மூன்று பங்குமாயிருப்பதால் நீர்ப்பரப்பே மிகுதி.

*இவ்வளவு சலம் பூமியில் இருப்பதினால் என்ன பிரயோசனம்?*

மழையும் பனியும் பெய்வதற்கும் வியாபாரமுதலிய தொழில்கள் நடப்பதற்கும் அச்சலமே காரணமாயிருப்பதினால் மிகுந்த பிரயோசனம்.

*கோளார்த்தமாவதென்ன?*

கோளத்தின் பாதியேயாம்.

*புவன சாத்திரிகளாற் பெரும்பாலும் வழங்கிவருகிற கோளார்த்த வகைகள் எத்தனை?*

குணகோளார்த்தம், குடகோளார்த்தம், உத்தரகோளார்த்தம் தக்கண கோளார்த்தம் என நான்கு.

*குண கோளார்த்தம் எது?*

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா நவ உலாந்து என்னும் பெருந் தேசங்களை அடக்கிய பூகோளப் பாதியேயாம்.

*குட கோளார்த்தம் எது?*

வட அமெரிக்கா தென் அமெரிக்கா என்னும் இரண்டு பெருந் தேசங்களையும் அடக்கிய பூகோளப் பாதியேயாம்.

*உத்தரகோளார்த்தம் எது?*

tamilnavarasam.com

பூமியின் நிரக்ஷரேகையினின்று வட துருவத்தின் (கூமம்) பாகை வரைக்கும் இருக்கிற பரப்பேயாம்.

தக்கண கோளார்த்தம் எது?

பூமியின் நிரக்ஷரேகையினின்று தென் துருவத்தின் (கூமம்) பாகை வரைக்குமுள்ள பரப்பேயாம்.

பூமியின் பெருந் தேசப் பகுதிகள் எவை?

ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா நவ உலாந்து என்பவைகளே.

தரையின் மேற்பரப்பிலுள்ள இயற்கைப் பிரிவுகள் என்ன?

மேடு, சமன்பூமி, மலை, பள்ளத்தரை, காடு முதலியவைகளே.

நிலம் எப்படிப் பகுக்கப்பட்டிருக்கின்றது?

பெருந்தேசம், தீவு, ஒடுக்க நாடு, முனை என்றவைகளாய்.

சலமுள்ள இடங்களுக்கு என்னென்ன பேரிடப்பட்டிருக்கின்றது?

சமுத்திரம், கடல், நதி, வாவி, கால்வாய், குடாக்கடல், ஒதுங்கு கடல் என்றவைகளாகப் புவன சாத்திரிகள் பேரிட்டிருக்கிறார்கள்.

பெருந் தேசமாவதென்ன?

பெருந் தேசமாவது கொஞ்சங் குறையச் சலத்தாற் பிரிக்கப்பட்ட தரையின் ஒரு பெரிய பங்கேயாம். உம். ஐரோப்பா.

தீவாவதென்ன?

முற்றுஞ் சலத்தாற் சூழப்பட்ட ஒரு சிறிய



தேசமாம். உம். இலங்கைத் தீவு, நிகைத்தியன் தீவு.

ஒடுக்க நாடாவதென்ன?

சமுத்திரங்களுக்கிடையே கழுத்துப் போல் ஒடுங்கிய தேசத்தின் சிறு பங்கேயாம். உம். தாரியன், சுவேசு.

கடல்முனையாவதென்ன?

கடலுக்குள் ஓடி விசாலித்திருக்கிற தேசத்தின் முகப்பேயாம். உம். கேப்புகோண், கேப்புக்கூட்கோப்பு. இவைகளைப் பூகோளப் படங்களிற் பார்.

மலையாவதென்ன?

தரையின் பெரிய உயர்ச்சியேயாம்.

---

## ௩. அதிகாரம்.

சமுத்திரமாவதென்ன?

தேசத்தினாற் பிரிக்கப்படாது சில மாதங்களுக்குக் கரை துறை தெரியாமல் மாலுமிகள் பாய்வலித்து ஓடக்கூடிய விஸ்தாரமுள்ள சலக்கூட்டமேயாம். உம. அத்துலாந்திக்கு, பாசிப்பிக்கு, இந்து சமுத்திரம் என்றவைகளே.

கடலாவதென்ன?

பெரும்பாலுங் கொஞ்சங்குறையத் தரையினாற் சூழப்பட்டுக் கப்பல் முதலிய மரக்கலன் பாய்வலித்து ஓடத்தக்க ஆழமான உப்புச் சலப்பிரிவேயாம். உம. மத்தித்தரையணி கடல், நாணற்கடல்.

RangaRakes
tamilnavarasam.com

வாவியாவதென்ன?

நிலஞ் சூழ்ந்த நன்னீர்த்திரளாயிருக்கின்றது. உம். வட அமெரிக்காவைக் காட்டிய படத்தில் இருக்கிற ஒன்றேரியா, ஈரை, ஊறன், ஐரோப்பாவிலுள்ள கொன்சுத்தன்சு என்றவைகள்.

நதியாவதென்ன?

உயர்ந்த மலைகளிலிருந்து அல்லது மேடுகளிலிருந்து தேசத்துப் பரக்கும் பெரிய நீரோட்டமாம். உம். கங்கை, வைகை.

குடாக்கடலாவதென்ன?

தேசத்துக்குள்ளே ஒரு குடாவிழுந்தோடி விசாவித்திருக்கிற நீர்க்கூட்டமேயாம்.

ஒதுங்குகடலாவதென்ன?

காற்றுக்கு அல்லது புயலுக்கு கப்பல் படவு முதலான மரக்கலன்கள் மோசப்படாமல் தாபரமாய் ஒதுங்கி நிற்கிறதற்கான கடலின் பங்கேயாம்.

---

## ௪. அதிகாரம்.

பிரதான திக்குகள் எவை?

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்றவைகளே.

படத்திலே ஊர் தேசங்களைப் பார்த்து மட்டிட்டுக் கொள்ளும்படி கற்போன் எங்கே முன்னாய் நிற்க வேண்டுமே?

வடக்கே முன்னாய் நிற்க வேண்டும்.

அப்போது அவனுக்கு வலப்பக்கம் எது?



சூரியன் உதயஞ்செய்கிற கிழக்கு.

இடப்பக்கம் எது?

சூரியன் அஸ்தமிக்கிற மேற்கு.

நிரக்ஷரேகையாவதென்ன?

பூமியைச் சுற்றிக் கிழக்கிலிருந்து மேற்கே நேராக ஓடி அதை உத்தராக்ஷிகோளமாகவும் தக்கணாக்ஷி கோளமாகவும் பிரிக்கிற ஒரு ரேகையேயாம்.

உலகப் படத்தில் நிரக்ஷரேகை எது?

படத்தின் வலப்பக்கமாகிய கிழக்கிலிருந்து இடப்பக்கமாகிய மேற்குக்கு உத்தர தக்கணங்கள் ஊடாக நடுமையத்தால் ஓடுகிற வரியேயாம்.

அக்ஷமாவதென்ன?

நிரக்ஷிரேகைக்கு வடக்காக அல்லது தெற்காக இருக்கிற பரப்பேயாம். நிரக்ஷிரேகைக்கு வடபால் இருக்கிற பரப்பெல்லாம் உத்தராக்ஷிமென்றுந் தென்பால் இருக்கிற பரப்பெல்லாந் தக்கணாக்ஷிமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

அக்ஷ ரேகைகளாவதென்ன?

நிரக்ஷி ரேகைக்கு இரு புறத்திலும் ஒன்றற்கொன்று சரியகலமாய்க் கிழக்கிலிருந்து மேற்காகப் பூகோளத்தைச் சுற்றிச் செல்லும் ரேகைகளேயாம்.

நிரக்ஷ ரேகைக்கு வடக்காக அல்லது தெற்காக இருக்கிற அக்ஷரேகைகள் இன்னின்ன பாகையில் இருக்கின்றனவென்று எப்படி அறியலாம்?

ஒவ்வொரு அக்ஷிரேகையின் முடிவிலும் போடப்பட்டிருக்கிற இலக்கங்களினால்.

பாகைகள் எங்கே தொடங்கி எண்ணப்படுகின்றன?

RangaRakes
tamilnavarasam.com

நிரக்ஷரேகையிலிருந்து வட புறமாகவுந் தென் புறமாகவுந் துருவங்களில் இருக்கிற (௯௰ம்) பாகை மட்டும் எண்ணப்படுகின்றன.

ஒரு பாகைக்கு எத்தனை மயில் அல்லது காதவழி இருக்கும்?

(௬௯½) மயில் அல்லது எழு காத வழி இருக்கும்.

ஒரு கலை, பாகையில் எத்தனைப் பங்கு?

(௬௰ல்) ஒரு பங்கு.

ஒரு விகலை கலையில் எத்தனைப் பங்கு?

(௬௰ல்) ஒரு பங்கு.

பூமி வடிவத்தைக் காட்டிய படங்களில் அல்லது கோளத்தில் வடக்கே இருந்து தெற்கே போகிற வரிகளுக்குப் பேரென்ன?

தேசாந்தரம்.

தேசாந்தரமாவதென்ன?

இங்கிலாந்து தேசத்தில் இருக்கிற இலண்டன் என்னும் பட்டினத்துக்குக் கிழக்காகவும் மேற்காகவும் அல்லது பின்னொரு குறித்த இடத்தில் இருந்து கிழக்காகவும் மேற்காகவும் (௱௮௰) பாகை வரைக்கும் எண்ணப்படுந் தூரமேயாம். இத்தேசாந்தர ரேகை படத்திலே ஒரு பூச்சியத்தினாலே அடையாளப்படுத்தப்பட்டிருக்கும். அதிலிருந்து கிழக்காக எண்ணப்படும் இடங்களுக்குக் குணதேசாந்தரமென்றும் மேற்காக எண்ணப்படும் இடங்களுக்குக் குடதேசாந்தரமென்றுஞ் சொல்லப்படும்.

தேசாந்தரரேகையாவதென்ன?

நிரக்ஷரேகையைச் சுத்த கோணத்திலே வெட்டித் துருவங்களிரண்டிற்கும் நேராய்ச்செல்லுகிறதாக எண்ணப்படும் ரேகையாம். அ



தற்குதாரணமாக பூமி உண்டை ஒரு பித்தளை வளையத்திற்கிடை நின்று சுழல்வதை நீ காண்கிறாயே, அது பூமியைக் குணகோளார்த்தம் குடகோளார்த்தமென இரண்டு பகுதியாய்ப் பகுக்கின்றது. பூமிப் படத்திலேயும் ரேகைகளினாலே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பூமியின் எப்பகுதிகள் மிகுந்த உஷ்டண பூமி?

கற்கிச் சக்கரம் மகரச் சக்கரம் என்னும் எல்லைகளுக்குள்ளே இருக்கிற பூமியின் மேற் சூரியனுடைய கதிர்கள் *இலம்பமாய்ச் சென்று மிக உஷ்டணம் உண்டாக்கின்றமையால் அவ்விடங்கள் உஷ்டண பூமியென்னப்படும்.

சமகுண பூமிகள் எவை?

கற்கிச் சக்கரம் மகரச்சக்காம் என்னும் எல்லைகளினின்று துருவச்சக்கரங்களுக்கு இடையே கிடக்கிற பூமியின்மேற் சூரியனுடைய கிரணஞ் சாய்வாகச் செல்லுகிறதினால் அவ்விடங்கள் உஷ்டண பூமியிற் போலக் காங்கை மிகுதியாயிராததினாலும் சீதள பூமியிற்போலக் குளிர்ச்சி மிகுதியாயிராததினாலும் சமகுணபூமிகள் என்னப்படும்.

பூமியின் எப்பகுதிகள் சீதள பூமிகளென்னப்படுகின்றன?

இரண்டு துருவச் சக்கரங்களுக்கும் இரண்டு துருவங்களுக்கும் இடையே கிடக்கிற பூமியின் மேற் சூரியனுடைய கதிர்கள் மிகவுங் கொஞ்சமாத்திரஞ் செல்லுகிறதினாலே மிகவுங் குளிர்ச்சி உண்டாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் சீதள பூமிகள் என்னப்படும்.

*இலம்பம், ஒருவரி அல்லது பரப்பின் மேற் பிரிதொன்று, ஒரு பாலுக்கொருபாற் சாய்வின்றி நேரே நிற்றல்.

RangaRakes

tamilnavarasam.com

## ௫. அதிகாரம்.

பூமியிலுள்ளவர்கள் எல்லாரும் ஒரே பாஷையைப் பேசிவருகிறார்களோ? அல்லது வெவ்வேறு பாஷையைப் பேசிவருகிறார்களோ?

வெவ்வேறு பாஷையைப் பேசி வருகிறார்கள். எப்படியெனில் தமிழர் தமிழ்ப் பாஷையையும் மருட்டியர் மருட்டியப் பாஷையையும், சிங்களவர் சிங்களப் பாஷையையும், பறங்கிக்காரர் பறங்கிப் பாஷையையும், இங்கிலிஷ்காரர் இங்கிலிஷ் பாஷையையும், பிராஞ்சிக்காரர் பிராஞ்சிப் பாஷையையும், சீனர் சீனப்பாஷையையும் பேசி வருகிறார்கள். இப்படியே எவ்வளவு வித்தியாசமான சாதிகள் உண்டோ அவ்வளவு வித்தியாசமான பாஷைகளும் உலகத்தில் உண்டு.

உலகத்திலுள்ள மனிதர்கள் எல்லாரும் ஒரேவிதமாய் உடுக்கிறார்களா?

இல்லை. அந்தந்தச்சாதியார் பூருவந்தொடுத்துத் தங்களுக்கு வசதியும் யோக்கியமுமென்று காணப்பட்ட பிரகாரமாய் உடுத்துவருகிறார்கள். உதாரணமாக ஐரோப்பா தேசத்தார் சட்டையிட்டுத் தொப்பிகவிக்கிறார்கள் இந்துதேசத்தார் பெரிய சோமன்களைத் தாறுபாய்ச்சி உடுத்தித் தலைப்பாகை வைக்கிறார்கள். வேறு சிலர் வேட்டி சால்வை உடுத்தித் தலைக்குச் சதுக்கங்கட்டுகிறார்கள். இவர் போலவே அந்தந்த நாட்டார் அவரவர்க்குரிய பழக்கத்தின் படி உடுத்திவருவார்கள்.

எல்லாரும் ஒரே நிறமுள்ளவர்களா?





இல்லை, சிலர் வெள்ளைநிறமுள்ளவர்களாகவுஞ், சிலர் மட்டான கறுப்பு நிறமுள்ளவர்களாகவுஞ், சிலர் தனிக் கறுப்புநிறமுள்ளவர்களாகவுஞ், சிலர் வெள்ளை மஞ்சல்நிறமுள்ளவர்களாகவுங் காணப்படுகிறார்கள்.

இந்த வித்தியாசங்கள் எதினாற் சம்பவிக்கின்றனவென்று நினைக்கவேண்டும்?

அது அந்தந்தச் சாதியார் இருக்கிற பூமியின் குளிர்மை காங்கை முதலிய வேற்றுமையினாலும் உண்பன உடுப்பன முதலிய வேற்றுமையினாலும் உண்டாகக்கூடியதென்று நினைக்க வேண்டும்.

இந்த ஊரில் இருக்கிற மரம், தடி, புல், பூண்டு, மிருகங்கள் எல்லாம் மற்றுந் தேசங்களிலும் அகப்படுமா?

அகப்பட மாட்டா, உதாரணமாக இந்த ஊரிலேயுள்ள கருங்காலி முதிரை முதலிய நேர்த்தியான மரங்கள் அமெரிக்கா ஐரோப்பா முதலிய பெரிய தேசங்களில் இல்லை. அதுபோல அவ்விடத்திலுள்ள கருவாலி, பயின் (Pine) முதலிய மரங்கள் இவ்விடத்திலில்லை. சிங்கங்கள், தீக்குருவிகள், (Ostritch) ஆபிரிக்காவில் இருக்கின்றன. ஆபிரிக்காவிலும் இத்தேசத்திலும் இல்லாத வெள்ளைக்கரடிகள் கிறீனிலாந்து (Greenland) தேசத்தில் உண்டு. ஆதலால் ஒரு இடத்தில் இல்லாத மிருகங்கள் மரந்தடிகள் பறவைகள் வேறொருவிடத்திலும் அவ்விடத்தில் இல்லாத சில பண்டங்கள் வேறிடங்களிலும் இருக்கக் கூடியதென்பதைப் புவன சாத்திரம் படிப்பதினால் அறிந்துகொள்ளலாம்.

RangaRakes
tamilnavarasam.com

*உலகத்திலுள்ளவர்கள் எல்லாரும் ஒரே தேவனை அநுசரித்து ஒரு சமயத்தில் நிற்கிறார்களா?*

உலகத்தாருக்குள்ளே நாலு வகையான மார்க்கங்களுண்டு. யூத மார்க்கம், கிறிஸ்துமார்க்கம், மகமது மார்க்கம், பொய்த் தேவ மார்க்கம். யூதர் உலகமெங்குஞ் சிதறியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பிரதானமாய் ஐரோப்பா அமெரிக்காவென்னுங் கண்டங்களிலே வாசம்பண்ணுகிறார்கள். மகமது மார்க்கத்தார், பார்சு, அரபி, துருக்கை, தாத்தாரி, இந்துஸ்தான் முதலான இடங்களிலே குடியிருக்கிறார்கள். பிரதானமாக உலகத்தில் நாலு வகையான பொய்த்தேவாராதனை நடந்து வருகின்றன. (௧.) இந்திய தேசமெங்கும் பிரபலமாயிருக்கிற சிவன், பிரமா, விட்டுணு, புத்தனென்னும் பொய்த் தேவர்களுக்குரிய ஆராதனை. (௨.) பூமியிலுள்ள மனிதரிற் சீனர்முதலிய மூன்றத்தொரு பங்கு சனங்கள் பூர்வீகத்திறந்தோர்க்குச் செலுத்துமாராதனை. எப்படியெனில் அவர்கள் மூதாக்கள் அடக்கம்பண்ணப்பட்டிருக்குஞ் சமாதிகளண்டையிலே பிரதான தினங்கள்தோறும் போய் அரிசி, கறி, பணம், சீலை முதலிய காணிக்கைகளை வைத்து அருச்சனைசெய்வார்கள். ஆகையால் இறந்தோர்களே அவர்களுடைய தேவர்கள். (௩வது.) ஆபிரிக்காவென்னுந் தேசத்திலுள்ளவர்களில் மிகுதியான பேர் தங்கள் தங்களுடைய மனப்பிடிபோல ஒருவன் ஒரு எலும்பையும், பின்னொருவன் ஒரு புல்லையும் வேறொருவன் ஒரு பூனையையும், இன்னுமொருவன் ஒரு மரத்தையும் இப்படியே அவனவனுடைய மனப்பிடி போல வணங்கிவருமாராதனை. இவ்விதமான வணக்கத்துக்கு (Fetish) பீத்திஷி என்று பெயர். (௪வது.) பாசிப்பிக்குச் சமுத்திரத்திலுள்ள தீவார் பயின்றவருமாராதனை. அது நாலுவிதத்தாலுங் கொடியதுந் தகாததுமாயிருக்கின்றது.

*சகல தேசத்தாரும் ஒரேவிதமாய் அரசாளப்படுகிறார்களா?*

இல்லை, சில தேசத்தார் இராசாக்களாலும், சில தேசத்தார் தங்களில் இருந்தெடுத்த தலைவராலும், சில தேசத்தார் தொன்றுதொட்டு வரும் இராசாக்களாலுஞ் சங்கத்தாராலும் ஆளப்படுகிறார்கள்.

---

## ௬. அதிகாரம்.

### ஆசியா தேசத்தைக் குறித்துச் சொல்லியது.—Asia.

*பெருந் தேசப்பகுதிகளில் எது பெரிதாயிருக்கின்றது?*

ஆசியாவே மிகவும் பெரிதாயிருக்கின்றது.

*அதின் நீளம் அகலம் என்ன?*

கிழக்கின் கடையெல்லை முதல் மேற்கின் கடையெல்லை வரைக்கும் ஏறக்குறைய (௩௱௫) காதவழியும் வடக்கின் கடையெல்லை முதல் தெற்கின் கடையெல்லை வரைக்கும் (௪௱௩௨) காதவழி தூரமுமாயிருக்கின்றது.

*ஆசியா தேசத்தின் எல்லைகள் எவை?*

வட திசைக்கு வட சமுத்திரமும், கீழ் தி

RangaRakes tamilnavarasam.com

சைக்குப் பாசிப்பிக்குச் சமுத்திரமுந், தென் திசைக்கு இந்து சமுத்திரமும், மேற்குத் திசைக்கு ஆபிரிக்கா, ஐரோப்பாவென்ற பெருந்தேசங்களுமேயாம்.

*ஆசியா தேசத்திலுள்ள சனத்தொகை எவ்வளவுண்டு?*

எறக்குறைய (௯௰) கோடி சனங்ள் உண்டு.

*ஆசியாத் தேசத்திலுள்ள பிரதான பாஷைகள் என்ன?*

அரபி, துருக்கை, பாரிசு, மலேயா, மோகுல், பங்காளம், சீனம், தமிழ், தெலுங்கு, கன்னடியம், பிரமம், மஹாட்டியம் முதலியவைகளே.

*அதிற் கிடைக்கக் கூடிய பிரதான திரவியங்கள் என்ன?*

நெல்லு, கோதுமை, குரக்கன் அல்லது கேப்பை, பயறு, எள்ளு, சோளம் முதலிய தானியங்களும், கருவா, ஏலம், வசுவாசி, கிராம்பு, மஞ்சள், இஞ்சி, கருப்பூரம், மிளகு முதலிய சரக்குகளும், இரத்தினம், முத்து, பவளம், பொன், வெள்ளி முதலிய நகைகளுங் கிடைக்கும்.

*அதில் நடந்த பிரதான காரியங்கள் என்ன?*

அதிற் பராபரன் முதல் ஆதிமனிதரை உண்டாக்கினார். அவர்களாலே மக்கள் உலகமெங்கும் பரம்பினார்கள். மேலும் இவ்விடத்திலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிறந்து மனிதருக்கு ஆத்தும ஈடேற்றத்தை உண்டாக்கும் படி மரித்தார்.

*ஆசியாவிலுள்ள பிரதான தேசங்கள் எவை?*



இந்துஸ்தான், (Hindustan) அரபி தேசம், (Arabia) பாரிசு தேசம், (Persia) துருக்கை தேசம், (Turkey) சேழ்காசியா தேசம், (Circassia) பிரம தேசம், (Burmah) மலாக்கா தேசம், (Malacca) சீயதேசம், (Siam) தொங்கின் தேசம், (Tonkin) சீன தேசம், (China) யாப்பான், (Japan) திபேத்துத் தேசம், (Thibet) சீனத் தாத்தரியா தேசம், (Chinese Tartary) தன்னரசாட்சியுள்ளதாத்தரியா தேசம், (Iudependent Tartary) ஆவுக்கான் தேசம், (Afghanistan) சிபேரியா தேசம், (Siberia) இவைகளே ஆசப்பதினைந்து.

---

## ௭. அதிகாரம்.

### இந்துஸ்தான்.—Hindustan.

முற்காலத்திலுள்ள கிரேக்கரும் உரோமரும் பாரிசு தேசம் முதற் சீன தேசம் வரைக்குமிருக்கிற விஸ்தாரமான பூமிக்கு இந்தியாவென்று பேரிட்டார்கள். இந்தியாவென்னப்பட்ட பெயர் இந்து நதியின் மூலமாய்ப் பிறந்து அதற்குச் சமீபமானவிடங்களுக்கு முற்காலத்தில் வழங்கப்பட்டாலும் இக்காலத்து ஐரோப்பாவிலுள்ள புவனசாத்திரிகள் கங்கை நதிக்குக் கிட்டவிருக்கிற கிழக்குத் தேசங்களுக்கும் அந்த நாமத்தைத் தானே வழங்கிவருகிறார்கள். சிந்து நதி தொடங்கி கங்கை நதி மட்டும் இமய மலைமுதற் கன்னியாகுமரி (Cape Comorin) வரைக்கும் விசாலித்திருக்கிற பூமியை இந்துஸ்தான் அல்லது இந்து தேசமென்னும் பேராற்

RangaRakes
tamilnavarasam.com

கூறுகிறார்கள். அதின் கருத்தென்னவெனில் இந்து, கறுப்பு, ஸ்தானம் இடம்; எனவே கறுப்பிடம் கறுத்தவர்களின் வாசம் எனப் போந்தது.

*இந்துதேசத்தின் எல்லைகள் எவை?*

வடக்கு இமய மலை (Himalaya) கிழக்கு அரக்கன் தேசம் (Arraccan) காசே (Cassay) முதலிய மலைகள் தென்மேற்குந் தென்கிழக்கும் பங்காளக் குடாக்கடலும் இந்து சமுத்திரமும் மேற்கு சிந்து (Sinde) நதியுமே.

*இத்தேசத்தின் நீளம் அகலம் என்ன?*

அதின் நீளம் வடக்கு முதல் தெற்கு வரைக்கும் (௲௮௱௮௰) மயில் அல்லது (௱௮௮) காதமும், அகலம் (௲௫௱௨௰) மயில், அல்லது (௱௫௨) காதமுமாயிருக்கும்.

*அத்தேசத்திலுள்ள பிரதான மலைகள் எவை?*

மேரு, கயிலாயமென்னப்பட்ட கொடுமுடிகளையுள்ள இமயமலை, காசி (Benares) க்குத் தெற்காக இருக்கிற விந்த மலை (Vindhya) அகத்திய இருஷி இருந்தாரென்றெண்ணப்படுகிற சாத்தாடி (Ghauts) மலைகளே. இன்னும் இந்த மலைகளின் தொடர் பல பல தேசங்களுக்கும் இடையே சங்கிலித் தொடர்பாய்ச் செல்வதினால் அவ்வத்தேசத்தார் அவைகளின் ஒவ்வொரு பகுதிக்கும் மந்தர மலை, (Mandara) இராசமால்வரை, (Rajemal) நீலகிரி, (Neilghery) சிறு மலை, பழனி மலையென்று வெவ்வேறு பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.

*பிரதான நதிகள் எவை?*

சிந்து, (Indus or Sinde) கங்கை, (Ganges) பிரமபுத்திர, (Brahmapootra) யமுனை, (Jumna) நிருமதை, (Nerbudda) மகாநதி, (Mahanuddy) குண்டக்கு, (Gunduck) தப்தி, (Tuptee) கொக்கரு, (Goggrah) சத்திலேச்சு, (Sutledge) கோதாவிரி, (Godavery) கிருஷ்ணை, (Krishna) காவேரி, (Cavery) வைகை, (Vygea) தாம்பிரவன்னி, (Tambiravanny) பெண்ணையாறு, (Pennar) பாலியாறு, (Palar) முதலியவைகளே.



*இத்தேசத்தின் வெப்பம் அல்லது குளிர்மையினால் உண்டாகுந் தேச சுவாத்தியம் என்ன?*

வட இந்து தேசத்திலும், நடு இந்து தேசச்சில பகுதிகளிலும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் கோடையாயிருப்பதினாலே, அக்காலங்களிற் பெரும்பாலும் வெப்பமும் ஆடிமாதம் முதல் ஐப்பசி நடுக்கூறு வரைக்கும் மாரிகாலமாயிருப்பதினால், பெரும்பாலுஞ் சுவாத்தியமுமான காலமுமாயிருக்கும். ஆவணி, புரட்டாதி மாதங்களில் மழை மிகுதியாய்ப் பெய்யும். கார்த்திகை, மார்கழி, தை மாதங்களிற் பனி மிகுதியாய்ப் பெய்வதினால் அந்த மாதங்கள் குளிர் காலமாயிருக்கும். தென் இந்து தேசத்தின் கருநாடகச் சீமைகளிலும் (Carnatic) இலங்கையின் வட பகுதிகளிலும் மாரி காலமுங் கோடை காலமுங் குளிரும் அனலும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படாமல் ஒரு விதமாயிருக்கின்றன.

*இத்தேசத்திலுள்ள பிரதான மரங்களும் பயிர்வகைகளும் புரோசனங்களும் என்ன?*

RangaRakes
tamilnavarasam.com

தேக்கு, தோதகத்தி, தூணி, தெங்கு, சமண்டலை, முதிரை, பாலை, கமுகு, மூங்கில், கரும்பு, பிரம்பு, அத்தி, இத்தி, ஆல், * அரசு, முதலியமரங்களும் சாயவேரும், பரிகாரத்திற்குரிய அநேகஞ் செடிகளும் பூண்டுகளும் பலாப்பழம், மாம்பழம், முந்திரிகை, அன்னதாழம் பழம், தேன்தோடம் பழம், முதலிய அனேகங் கனிவருக்கங்களும் நெல்லு, வரகு, குரக்கன், முதலிய பலவகைத் தானியங்களும் பஞ்சு, அவின், அவிரி முதலிய அனேகம் புரோசனங்களும் உண்டு.

*இந்தத் தேசத்திற்குரிய பிரதான மிருகங்கள் எவை?*

காண்டாமிருகம், யானை, கரடி, புலி, முட்பன்றி, காட்டுப்பன்றி, சிவிங்கி, ஆடு, மாடு, குதிரை, முசல், எருமை, கழுதை, ஒட்டை; பல்வகைக் குரங்கு, மான், மரை, நாய், கோணாய், பூனை, நாவி முதலிய அநேக மிருகங்கள் உண்டு.

---

* திருமதையாற்றின் அருகேயுள்ள பாரிகாசாவென்னப்பட்ட ஊருக்குக்கிட்ட விருக்கிற ஒருதீவிலே பெரிய ஆலமரமொன்றிருக்கிறது. அது உலகத்திலுள்ள எல்லா விருட்சங்களிலும் பெரிது. அந்த மரமுண்டாகி (௫௲) வருஷமாயிற்றென்றும் வெகு காலமாய் அம்மரத்தின் கீழ் கெபிபரரிஷி யிருந்து வந்ததினால் அதற்குக்கெபிபரரென்னும் பெயருண்டாயிற்றென்றும் ஊரவர்கள் சொல்லுகிறார்கள். அதின் நீள அளவிலே (௮௲) சனங்கள் இருக்கலாம். முற்காலத்திலே அந்தமரத்தின் விஸ்தாரமிப்பொழுதிருக்கிறதிலும் பெரிதாயிருந்தது. அதில்ஏறக்குறைய (௩௲௫௱) விழுது வேர் விட்டிருக்கிறது. இதில் (௬௱) (௫௱) விழுதுகள் பெரிய மரம் போலப்பருத்திருக்கின்றன. இதுபோற் பின்னுஞ் சிலமரங்கள் பாகார் நாட்டுக்கடுக்க வளருகின்றன. இவைகள் மகா இலட்சணமான மரங்களென்பதற்குச் சந்தேகமில்லை.



*பிரதான பட்சிகள் எவை?*

கருடன், இராசாளி, கூகை, ஆந்தை, கிளி, புறா, மயில், குயில், அன்னம், நாரை, வாத்து, தாரா, கோழி, கழுகு முதலிய பலவகையான குருவிகளும் பட்சியும் ஏராளமாய் உண்டு.

*பூச்சிபுழுக்கள் உண்டா?*

பலபலவகையான பூச்சிகளும், புழுக்களும், வண்டுகளும், தேட்களுமேயல்லாமல் விஷமான பாம்பு பல்விகளும அனேகம் உண்டு. அவைகளிற் சில பருப்பமுள்ளவைகளாயிருக்கின்றன.

*சுரங்கங்களில் அகப்படக் கூடிய பொருள்கள் என்ன?*

விலையேறப்பெற்ற பலவகை இரத்தினங்களும் பலவகையான உப்பும், முதற்றரமான வயிரக்கற்களும், இரும்பு, ஈயம், செம்பு, பொன் முதலியவைகளுமே.

*இந்த தேசத்தில் வெந்நீரூற்றுகளும் உண்டா?*

அப்படிப்பட்ட ஊற்றுக்கள் மலைகளுள்ள இடங்களில் மிகுதியாயிருக்கின்றன. அவைகளிற் கைவைக்கக் கூடாதவளவு சூடிருப்பதினாலே இந்து தேசத்தவர்கள் அவையைப் பரிசுத்தமென்று நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட ஊற்றுக்கள் பாகாரிலே மிகுதியாயிருக்கின்றன.

*இந்து தேசத்தாருடைய சாயல் என்ன?*

ஆசியாதேசத்திலுள்ள மற்றுஞ் சாதியாருடனே அவர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இவர்கள் மிகவும் வித்தியாசப்பட்டிருக்கிறவர்களாய்க் காணப்படுகிறார்கள். இவர்கள் முக

RangaRakes
tamilnavarasam.com

லட்சணமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வெள்ளை நிறமுள்ளவர்களல்ல. அல்லவென்று மிகவுங் கறுப்பு நிறமுள்ளவர்களுமல்ல, மிகுதியானவர்கள் சிவப்பும் மிகக்கொஞ்சப்பெயர் பொது நிறக் கறுப்புமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

*இத்தேசத்திலுள்ளவர்கள் மிகவும் பராக்கிரமமான குணங்களையுடையவர்களா?*

கங்கை நதிக்கு வடபால் இருக்கிறவர்கள் மிகவுந் துணிந்த நெஞ்சுள்ளவர்களும் அறிவிலே தேறினவர்களுமாயிருக்கிறார்கள். கங்கை நதிக்குத் தென்பால் இருக்கிறவர்கள் பெரும்பாலும் பயந்தவர்களும் அறிவீனருமாயிருக்கிறார்கள். சோழமண்டலத்திலுந் தக்கணத்திலும் இருப்பவர்கள் நுட்ப யோசனைக்கான புத்திமான்களும் படித்துத் தேறத்தக்க வல்லபமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். மருட்டியர் தயிரியவீனமான குணத்தைக் காண்பித்தாலும் போர்த்தொழிலுக்கான சுபாவமுடையவர்களுமாய் இருக்கிறார்கள்.

*இந்து தேசத்திலுள்ளவர்களின் படிப்பின் கிருபாகமென்ன?*

மகமது மார்க்கத்தார் இத்தேசத்திற்குட்பட்டு அவர்களுடைய கோவில்களையும் அரண்மனைகளையும் இடித்துப் பாழாக்க முன்னமே இந்து இராசாக்களின் பரிபாலனத்தின் கீழாகச் சாத்திரங்களுங் கல்வியும் அதிகப்பட்டுப் பேரான சாத்திரப்பள்ளிக்கூடங்களுங் கல்விமான்களும் அநேகராயிருந்தார்கள். பின்பு அதைப்



பரிபாலிக்க மனிதர் இல்லாததினால் அதிகமாய் மழுங்கிப்போயின. திரும்ப இங்கிலிஷ்காரர் வந்ததினால் பங்காளம், (Bengal) சென்னபட்டினம், (Madras) அக்கிரா, (Agra) வெம்பாய், (Bombay) முதலான துரைத்தனங்களுக்குச் சேர்ந்த இடங்களிலே தங்கள் தங்கள் சுயபாஷைகளையும் இங்கிலிஷ்பாஷையையும் படித்துவருகிறார்கள். மேலும் படித்துத் தேறுவதற்கான அவாவும் முயற்சியுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். கல்குத்தா (Calcutta) பட்டினத்திலும் காசிப்பட்டினத்திலுஞ் சமஸ்கிருத பாஷையைப் படித்துத் தேறுவதற்கான பெரிய சாத்திரப்பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

*இத்தேசத்தவர்கள் தங்கள் புத்தியினாலே உண்டாக்குகிற பொருள்கள் எவை?*

பலவகையான பட்டுநூற் புடைவைள், பருக்கன் ஆட்டுமயிர்ப் புடைவைகள், அவுரி, இரத்தினக்கம்பளம், சருகைவேலையுள்ள சீலைகள், பருத்திநூற் சேலைகள், மெல்லிய சால்வைகள், அம்மாறு, ஆயுதவகைகள், பித்தளை வேலைகள், பொன், வெள்ளி முதலிய வேலைகள், பலவகையான எண்ணெய்கள், வெடிஉப்பு முதலியவைகளே.

*இந்துதேசத்திலுள்ள இராணுவத் தொகை என்ன?*

சிப்பாசிகள் (௨) இலட்சத்து (௫௰௲) க்கு மேற்படவும், இங்கிலிஷ் பட்டாளங்கள் (௨௰௲) க்கு மேற்படவும் இருக்குமென்று எண்ணலாம்.

RangaRakes
tamilnavarasam.com

*இத்தேசத்திலுள்ள மார்க்கத்தவர்களைக் குறித்து என்ன அறிவாய்?*

இவர்களுக்குள்ளே பிரதானமாக ஐந்துமார்க்கத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், விக்கிரகாராதனைக்காரராகிய இந்துமதத்தார், மகமது மார்க்கத்தார், கிறிஸ்தவர்கள், பாழ்சிசு, (Parsees,) சீக்கிஸ், (Seiks) என்பவர்களே. இந்து மதக்காரர் சிவன், பிரமா, விட்டுணு, புத்தன், இவர்களில் ஒருவரை வழிப்படுகிறவர்கள். மகமது மார்க்கத்தாரும் இரண்டுவகையானவர்களாயிருக்கிறார்கள். ஒருவகையானவர்கள் இந்துதேசத்தை இராச்சியம் பண்ணினவர்களுடைய வமிசத்திற் சேர்ந்தவர்களுமாய்ப் பெரும்பாலும் வியாபார முகாந்தரமாகவந்து இந்துதேசத்திற் குடியிருந்த அரபிதேசத்தவர்களும் பாரிசுதேசத்தவர்களுமே. மற்றவர்கள் ஐதர்அலி(Hydar Ali)திப்புசுலுத்தான் (Tippoo Sultan)என்பவர்களுடைய காலத்திலும் அதற்கு முன்னும் இந்து மதமாகிய விக்கிரகாராதனையை விட்டு மகமது மார்க்கமானவர்கள். இவர்களை ஷையா (Sheah) வென்று சொல்லுவார்கள். கிறிஸ்தவர்களிலும் நெஸ்டோரியன் (Nestorian) கிறிஸ்தவர்களென்றும், உரோமான் (Roman Catholics) கிறிஸ்தவர்களென்றும், புறோத்தெஸ்தன்(Protestant)கிறிஸ்தவர்களென்றும் மூவகைப்படும். பாழ்சிசு மார்க்கத்தார் சூரியனை அல்லது அக்கினியை நமஸ்காரம்பண்ணுகிறவர்கள். இவர்களுடைய முன்னோர்கள் பார்சு தேசத்தில் இருந்தவர்கள். சீக்கிசு எ-





ன்னும் மார்க்கஞ்சாலிவாகன (Salivahana) சகனுடைய (௲௩௱௯௰)ம் வருஷத்திலே நெமக்சா(Namec-shah)என்பவனால் உண்டுபண்ணப்பட்டது. அதன் போதனைகள் இந்துமார்க்கத்திலும் மகமது மார்க்கத்திலும் இருந்தெடுக்கப்பட்டவைகளாயிருக்கின்றன. இதிலே சுரூப வணக்கமில்லாமல் ஒரே பராபரனை மாத்திரம் வணங்குவது போலப்போதித்துவருகிறார்கள்.

*இந்துதேசம் ஆராலே ஆளுகைசெய்யப்பட்டுவருகிறது?*

அதிலுள்ள சிலதேசங்கள் மோகுல் (Mogul) வமிசத்துத் துலுக்கராலும் இந்துதேசத்து இராசாக்களாலும் ஆளுகைசெய்யப்பட்டாலும் அவர்கள் இங்கிலிஷ்காரருக்குத் திறைகொடுத்துவருகிறார்கள். வேறுசிலர் திறைகொடாதிருந்தும் அவர்களுடைய உத்தரவின்படியும் யோசனையின்படியும் இராச்சியம் பண்ணிவருகிறார்கள். இவையல்லாத மற்றுந்தேசங்கள் இங்கிலிஷ்காரராலே கீழ்ப்படுத்தப்பட்டு அவர்களால் ஆளுகை செய்யப்பட்டு வருகின்றன. ஆகையால் இங்கிலிஷ்காரருடையசெல்வாக்குக்குட்படாத தேசமொன்றெனினும் இந்து தேசத்தில் இல்லை. இந்து தேசத்தில் இங்கிலிஷ்காரருக்குரிய தேசங்களை ஆளுகைசெய்யுந் தேசாதிபதியுஞ் சேனாதிபதியுமானவர் கல்க்குத்தா நகரத்தில் இருக்கிறார். இதுவுமல்லாமற் சென்னபட்டணம், வெம்பாய், அக்கிறுவென்னப்பட்ட துரைத்தனங்களிலும் அததற்குரிய எல்லைகளில் நடக்கிற காரியங்களை விசாரணைபண்ணுவது

RangaRakes
tamilnavarasam.com

ர்கான பெரிய தேசாதிபதிகளும் இருக்கிறார்கள். இங்கிலிஷ்காரர் இந்து தேசத்தைப் பிடிக்கவந்த காரணத்தைக் குறித்து இந்துதேச சரித்திரங்களிற் காணலாம்.

---

## அ. அதிகாரம்.

### இந்து தேசத்தின் பிரிவுகள்.

*இந்து தேசத்தின் பொதுவான பிரிவுகள் எவை?*

வட இந்து தேசம், (Northern Hindustan) நடு இந்து தேசம் அல்லது தக்கணம், (Deccan) தென்இந்துதேசம் (Southern Hindustan) என மூன்று பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

*வட இந்து தேசத்தின் எல்லைகள் எவை?*

வட திசைக்குத் தாத்தாரி தேசமுங் கிழக்குத் திசைக்கு அசம தேசமும், காசேக்கு மலைகளும், பங்காளக் கடலும், தென்றிசைக்கு நிருமதை ஆறும், மேற்றிசைக்குப் பாரிசு தேசமும் உண்டு.

*வட இந்து தேசத்தைச் சேர்ந்த நாடுகள் எத்தனை?*

இருபது. அவையாவன, காசிமீரம், (Cashmere) துவாப்பு, (Doab) கர்வால், (Gurwal) குமேயூன், (Kumaoon) நேபாளம், (Nepaul) புத்தன் தேசம், (Bootan) அசம தேசம், (Assam) லாகோர், (Lahore) பாஞ்சாலம், (Punjaub) மூலத்தான், (Mooltan) சிந்து, (Sinde) கச்சி, (Cutch) குசராத்து, (Guzerat) மாழுவம், (Malwah) ஆசுமீரம், (Adjmere) பராவி



ஸ்தானம் அல்லது தெல்லி, (Delhi) அல்லாபரத்து, (Allahabad) அயோத்தியா (Oude) பாகார், (Bahar) பங்காளம் (Bengal.)

*தக்கணம் அல்லது நடு இந்து தேசத்தின் எல்லைகள் எவை?*

வடதிசைக்கு நிருமதை நதியும், கீழ் திசைக்கு பங்காளக் கடலும், தென்றிசைக்குக் கிரிஷ்ணை நதியும், மேற்றிசைக்கு இந்து சமுத்திரமும் என்பவைகளே.

*இந்தப் பிரிவுக்குச் சேர்ந்த நாடுகள் அல்லது மாகாணங்கள் எத்தனை?**

(௰.) அவையாவன. ஆரங்கபாத்து, (Aurungabad) காந்தீசம், (Kandeish) பீதர் நாடு, (Beeder) நந்தீர் நாடு (Nandere) பீரார்நாடு, (Berar) விசையப்பூர், (Bejapoor) ஐதிராபாத்து, (Hydrabad) கந்தவன நாடு, (Gundwana) வட சருக்கார்கள், (Northern Circars) ஒரிசா, (Orissa) என்பவைகளே.

*தென் இந்து தேசத்தின் எல்லைகள் எவை?*

வட திசைக்குக் கிரிஷ்ணை நதியும், மற்றும் மூன்று பக்கங்களுக்குஞ் சமுத்திரமும்.

*இந்தப்பிரிவுக்குச் சேர்ந்த நாடுகள் அல்லது மாகாணங்கள் எத்தனை?*

(௯) அவையாவன, கன்னரம், (Canara) பாலக்காடு, (Balaghaut) மைசூர், (Mysore) மலை

---

*இந்து தேசத்தின் நாடு எனினும் மாகாணமெனினுமொக்கும். தென் சீமையிலுள்ள கருநாடகத்தில் இதற்குச் சில்லாவென்றுந் தாலுகாவென்றுங் கசுப்பாவென்றுஞ் சருக்காரென்றும் பலவித்தியாசப் பெயர்கள் உண்டு.

RangaRakes tamilnavarasam.com

யாளம், (Malabar) கொச்சி, (Cochin) திருவாளங்கோடு, (Travancore) கோயம்புத்தூர், (Coimbetoor) சேலம், (Salem) கருநாடகம், (Carnatic) என்பவைகளே.

*கருநாடகத்தைச் சேர்ந்த சிறுநாடுகள் எவை?*

வட ஆர்க்காடு, (Arcot) தென் ஆர்க்காடு, நல்லூர், (Nellore) அங்கோலி, (Ongole) தஞ்சாவூர், (Tanjore) திரிசிரப்பள்ளி, (Trichinopoly) கும்பகோணம், (Combaconum) மதுரை, (Madura) சிவகங்கை, (Shevagunga) இராமநாதபுரம், (Ramnad) திருநெல்வேலி, (Tinnevelly) தொண்டமான் புதுக்கோட்டை, Tondaman's Country) எட்டியாபுரம் (Ettyapuram) என்பவைகளே.

---

## ௧௰. அதிகாரம்.

### பிறிட்டிஷ இந்தியா.—British India.

### பங்காளத் துரைத்தனம்.—Bengal Presidency.

*பிறிட்டிஷ இந்தியாவைப் பற்றிய பொதுவான நடபடிகள் என்ன?*

இந்துதேசத்திற் பிறிட்டிஷிகாரர் அரசாட்சி பண்ணிவருகிற தேசங்களுக்குட்பட (௧) கோடியே (௯௭) இலட்சத்து (௬௰௮அ௰) சனங்கள் இருக்கிறார்கள். பிறிட்டிஷிகாரருடன் சிநேகமாக அவர்களைச்சேர்ந்துந் தனித்தும் அரசாட்சி செய்துவருகிற இராசாக்களுடைய தேசங்களிலே ஏறக்குறைய (௬) கோடி சனங்கள் இருக்கிறார்கள். பிறிட்டிஷி சாதியாருடைய தேசங்களுங் குறுநிலமன்னருடைய தேசங்களுந் திக்குக்குத்திக்கு ஒன்றைவிட்டொன்று கடந்து சிதறுண்டதுபோல இருக்கிறதினாலே அவைகளைக் குறித்து நிதார்த்தமாக எல்லாங்குறித்துச் சொல்வது அரிது. மேலும் பிறிட்டிஷிகாரராகிய இங்கிலிஷிகாரர் இருந்து துரைத்தனம் பண்ணுகிற ஸ்தானங்கள் நாலுண்டு. அவையாவன, பங்காளத் துரைத்தனம், சென்னைத் துரைத்தனம், வெம்பாயித் துரைத்தனம், அகிருத் துரைத்தனமானவைகளே. எல்லாத் துரைத்தனங்களிலுந் தலைப்பட்டினமாயிருக்கிற கல்க்குத்தா அதிகமேன்மையாயிருக்கிறதினால் அதை முதல் எடுத்து விபரிப்போம்.

---

### கல்க்குத்தா.—Calcutta.

*கல்க்குத்தா எப்படிப்பட்ட பட்டினம்?*

அது மிகவும் அலங்காரமும் விஸ்தாரமுமாயிருக்கிறதுமல்லாமல் குக்கிலி (Hoogly) என்னப்பட்ட ஆற்றோரத்திற் கிழக்குப் பக்கத்திற் கட்டப்பட்டிருக்கிறது. அதற்குள் இருக்கிற சிறப்பான வீடுகளில் மிகுதியாய் இங்கிலிஷிகாரார் குடியிருக்கிறார்கள். அதிற்கோட்டு வீடுகளும் மந்தனமண்டபங்களும் இந்து மதக்காரருடைய கோவில்களும் தேவாராதனை நடத்துதற்கேதுவான தேவாலயங்களும் மகமதுமார்க்கத்தாருடைய அநேகம் பள்ளிவாசல்களும் உண்டு. மேலும் வில்லியமென்னும் பேரையுடைய ஒருபெரிய அரணைகோட்டையும்



RangaRakes tamilnavarasam.com

(Fort William) உண்டு. குக்கிலி என்னப்பட்ட ஆறு, கப்பல்கள் அதின் வழியாய்ப் பட்டினத்திற்கு வரத்தக்க அவ்வளவு ஆழமாயிருக்கின்றது.

*இப்பட்டினத்திலே குடியிருக்கிற சாதிகள் என்ன?*

இங்கிலிஷ்காரர் (English) உலாந்தாக்காரர் (Dutch) பறங்கிக்காரர் (Portuguese) முதலிய ஐரோப்பாரும், மோகுல் வமிசமான துலுக்கரும், அரபி, பார்சு, சீனம், தாத்தாரி முதலிய தேசத்துச் சனங்களும் இந்து தேசத்தாருந்தான். இதிலே முற்கூறிய புறச்சாதியாரில் அநேகர் வியாபார முகாந்தரமாக இவ்விடத்தில் இருக்கிறார்கள்.

*கல்க்குத்தா துரைத்தனத்திற்குச் சேர்ந்த நாடுகள் எவை?*

கங்கை, பிரமபுத்திர என்னும் நதிகளின் கழிமுகச் சூழலிலுள்ள நாடுகளே. அவை பங்காளம், பாகார், அசமம், ஒரிசாவிலுள்ள மிற்னப்பூர் (Midnapoor) கற்றக்கு (Cuttack) என்பவைகளும் அறக்கன் மாத்தேபன் (Martaban) தேவோய் (Tavoy) பீனங்கு* (Penang) என்பவைகளுமேயாம்.

*இந்நாடுகளிலுள்ள குடிசனங்களின் தொகை என்ன?*

ஏறக்குறைய (௰௬) கோடி.

---

## பங்காளம்.—Bengal.

*பங்காளத்தின் எல்லைகள் எவை?*

மேற்கு பாகார், வடக்கு நேபாளம், சீக்கிம், (Sikkim) புத்தன் என்பவைகள்; கிழக்கு அசமநாடு, பிரம தேசம்; தெற்கு பங்காளக்கடல்.

*பங்காளத்தின் நீளம்அகலம் என்ன?*

(௪௱) மயில் நீளம், (௩௱) மயில் அகலம்.

*பங்காளத்தின் பிரதான நதிகள் எவை?*

கங்கைநதி, பிரமபுத்திரநதி, குக்கிலி, முதலானவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

கல்க்குத்தா, மூஷிதபாத்து, (Moorshedabad) தக்கா, (Dacca) இவைகளிற் கல்க்குத்தா தலைப்பட்டினம்.

*சனத் தொகை என்ன?*

(௮) இலக்கம்.

*பங்காளம் எப்படிப்பட்ட தேசம்?*

மிகுதியான இடங்கள் செழிப்பாயிருக்கிறதுமன்றித் தரை ஒப்புரவாயுமிருக்கின்றது.

*அத்தேசத்தில் உண்டாகிற புரோசனங்கள் என்ன?*

நெல்லு, அவுரி, புகையிலை, பருத்தி, கரும்பு, முதலியவைகளும் மருத்துப் பூண்டுவகைகளும்.

---

## பாகார்.—Bahar.

*பாகாரின் எல்லைகள் எவை?*

மேற்கு கந்தவனம், அல்லாபாத்து, அயோத்தியாவென்ற தேசங்கள், வடக்கு நேபாளத்தின் மலைகள், கிழக்கு பங்காளம், தெற்கு ஒரிசா, கந்தவனம் என்னுந்தேசங்கள்.

* தமிழர் சொல்லுங் கோலப்பிணு இதுவே.



RangaRakes

tamilnavarasam.com

*நீளம் அகலம் என்ன?*

(௨௱௫௰) மயில் நீளம்(௨௱) மயில் அகலம்.

*பிரதான நதிகள் எவை?*

கங்கைநதி, சோயணி, (Soane) குண்டக்கு, தம்மடா, (Dummoadah) முதலானவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

பருமவதிநகரம், (Patna) மொன்கிர், (Monghyr) பாகல்பூர், (Bhagulpore) தெயினைப்பூர், (Dinapore) பக்சா, (Buxar) இவைகளிற் பற்று, பாகாருக்குத் தலைப்பட்டினம், அதில் விசேஷமாய்ச் செய்யப்பட்டிருக்கிற அநேகம் பள்ளி வாசல்கள் உண்டு.

*பாகார் எப்படிப்பட்ட தேசம்?*

அதிகந் திறமாய்ச் செய்கைபண்ணப்பட்டிருக்கிற செழிப்பான தேசம்.

---

## அசமம்.—Assam.

*அசமம் எந்தப் பக்கமாயிருக்கின்றது?*

புத்தன் (Bootan) தேசத்துக்குத் தென்பக்கமாய்ப் பிரமபுத்திர நதிக்கு இரண்டு பக்கத்திலுங் கிடக்கின்றது.

*அசம தேசத்தின் நீளம அகலம் என்ன?*

(௭௱) மயில் நீளம் (௭௰) மயில் அகலம்.

*சனத்தொகை எவ்வளவு?*

அத்தேசத்தின் மிகுதியான பங்கு செய்கையின்றிக் காடுஞ் செடியுமாயிருப்பதினாலுஞ் சனங்கள் இங்குமங்குஞ் சிதறிக் குடியிருப்பதினாலுஞ் சனத்தொகையைத் திட்டமாய் அறிந்துகொள்வது அரிதாயிருக்கின்றது.

*அசமம் எப்படிப்பட்ட தேசம்?*



அதின் நிலச்சாயல் செழிப்பும் செய்கைக்கு வப்புமாயிருக்கின்றது.

*அசம தேசத்தின் பிரதான புரோசனங்கள் என்ன?*

நெல்லு, கடுகு, மிளகு, இஞ்சி, ஈரவெண்காயம், உள்ளி, புகையிலை, அவின், கோதுமை, வாற்கோதுமை இவைகளே.

*அத்தேசத்தின் வீடுகள் யாதினாற் கட்டப்பட்டிருக்கின்றன?*

மூங்கிலினாற் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதானிகள், அரசர் யாவரும் மூங்கிலினாற் கட்டப்பட்ட வீடுகளிற்றானே வாசம்பண்ணுகிறார்கள்.

*அத்தேசத்தாருடைய மார்க்கம் என்ன?*

விக்கிரகாராதனை.

---

## ஓரிசா.—Orissa.

*ஓரிசாவின் எல்லைகள் எவை?*

வடக்கு பங்காளம், தெற்கு வடசருக்கார், கிழக்கு பங்காளக் கடல், மேற்கு கந்தவனம்.

*ஓரிசா இந்து தேசத்தின் எப்பகுதிக்குச் சேர்ந்தது?*

நடுப்பகுதியாகிய தக்கணத்துக்குச் சேர்ந்தாலும் அதின் பாதித் தேசமாகிய கற்றுக்கு, மிற்றைப்பூரென்னுநாடுகள் பங்காளத் துரைத்தன தேசாதிபதியவர்களுடைய அரசாட்சிக்குட்பட்டிருக்கின்றன.

*ஓரிசாவின் பரப்பென்ன?*

அத்தேசத்தில் ஒழுங்கீனமான மலைகளும்,

RangaRakes
tamilnavarasam.com

விஸ்தாரமானகாடுகளும், அள்ளற்றரைகளுமன்றிப் பலவகை துஷ்ட மிருகங்களும் ஏராளமாயிருக்கின்றமையால் அத்தேசத்துக்குள்ளே போய் அதின் நிருபாகத்தைப் பார்க்கக்கூடாது. ஆகிலும் நடுப்பகுதி ஏறக்குறைய (௫௱) மயில் நீளமும் (௯) மயில்அகலமுமாயிருக்கும்.

*பங்காளத் துரைத்தனத்துக்குள்ளாக ஓரிசாவிலேயுள்ள பிரதானபட்டினங்கள் எவை?*

கற்றுக்கு, செகநாதம், (Juggernath) பலாசூர் (Balasore) இவைகளே.

*அதின் பிரதான பட்டினம் என்ன?*

கற்றுக்கு. (Cuttack)

*பிரதான நதிகள் எவை?*

கஞ்சூரி, (Gunjoory) மகாநதி (Mahanuddy) இவைகளே.

---

## அறக்கன்.—Arracan.

*அறக்கனின் நீளம் அகலம் என்ன?*

(உ௱) மயில் நீளம் (௯௰) மயில் அகலம்.

*அதெப்படிப்பட்ட தேசம்?*

மிகுதியான பங்கு காடுஞ் செடியுமாயிருக்கின்றது.

*பிரதான பட்டினம் எது?*

அறக்கனென்னும் ஆற்றின் மேற்குக் கரையிலேகட்டப்பட்டிருக்கிற அறக்கனென்றுசொல்லப்படும்பட்டினமேயாம்.

*பிரம தேசத்தின் போரிலே ஆவா (Ava) தேசத்தின் இராசா இங்கிலிஷகாரருக்குக் கொடுத்த தேசங்கள் எவை?*



அறக்கன், மாத்தேபன், (Martaban) தேவோய், (Tavoy) மேக்கை, (Mergui) தென்னசுராம் (Tenasserim) என்பவைகளே.

*மாத்தேபனென்ற தேசத்தின் நீளம் அகலம் என்ன?*

(௪௰) மயில் நீளம் ஏறக்குறைய (௩௫) மயில் அகலம்.

*மாத்தேபன் எவ்விதமான தேசம்?*

மிகுதியான பங்கு காடாயிருந்தாலும் அறக்கன் தேசத்திலுஞ் சவுக்கியமாயிருக்கின்றது.

*தலைப்பட்டினம் என்ன?*

மாத்தேபன்.

*அத்தேசத்தின் புரோசனங்கள் என்ன?*

நெல்லு, அவுரி, கரும்பு முதலியவைகளும் மருந்துப் பூண்டுகளுமேயாம்.

*தேவோய் முதலான தேசங்களின் நீளம் அகலம் என்ன?*

தேவோயும் அதற்கடுத்த இங்கிலிஷகாரருடைய அரசாட்சிக்குட்பட்ட தேசங்களும் ஏறக்குறைய (௩௱௫௰) மயில் தூரமாயிருக்கும். இதற்குக் கிட்டவிருக்கிற கரையோரம் மிகவுஞ் செழிப்பாயிருக்கின்றது.

*இவைகளேயன்றிப்பங்காளத்துரைத்தனத்தாருக்குரிய பிறிவான தேசம் பின்னெங்கேனும் உண்டா?*

பாக்குத் தீவென்னப்பட்ட கோலப்பினு, சிங்கப்பூர் (Singapore) முதலிய இடங்களும் உண்டு. இவைகள் பங்காளக் குடாக்கடலுக்குக் கிழக்கே இருக்கின்றன. இத்தீவுகளும் மிகவுஞ் செழிப்பாயிருக்கின்றன. குடிகள் பிரதானமாய்ச்சீனரும் மலாக்காயருமாயிருக்கிறார்கள். இந்துக்களும் மகமதுமார்க்கத்தாரும்மிகவுஞ்சிற்பம்.

---

RangaRakes tamilnavarasam.com

## ௰. அதிகாரம்.

### சென்னைத் துரைத்தனம்.—Madras Presidency.

இத்துரைத்தனத்துக்குச் சேர்ந்த தேசங்கள் எவை?

கிறிஸ்ணாநதிக்குத் தென்பக்கமாக இருக்கிற வடசருக்கார்நாடு, கருநாடகசீமை, பாலக்காடு, கொயம்புத்தூர், சேலம், கன்னரம், மலையாளம், மைசூர் முதலியவைகள்.

சென்னை எப்படிப்பட்ட பட்டினம்?

சோழமண்டலக் (Coromandel) கரையிற் கட்டப்பட்டிருக்கிற பட்டினங்களெல்லாவற்றிலும் முக்கியமானதாயிருந்தும் அதற்குப்போகிற படவு கப்பல் முதலியவைகளிலிருந்து கரையில் இறங்கிக்கொள்வது மிகவும் வருத்தம். அதிற் சேன் சாட்சு (St. George) என்னப்பட்ட கோட்டை உண்டு. அங்கே ஐரோப்பார் சிலர் குடியிருக்கிறார்கள். கோட்டைக்குள் மிகவும் உஷ்டணமாயிருப்பதினாலே இங்கிலிஷ்காரர் அதற்குட் குடியிராமற் கோட்டைக்குப் புறம்பே தங்கள்தங்கள் தோட்டங்களிலே வீடுகட்டியிருந்துகொண்டு வேலையைப் பராமரிக்கிறதற்கு மாத்திரங் கோட்டைக்குட் போய்வருகிறார்கள். பிழாக்குற்றவுண் (Black Town) என்னப்பட்ட பிரிவான பகுதியிற் பலசாதியாருமாய் ஒருலட்சஞ் சனங்கள் குடியிருக்கிறார்கள். இதில் வியாபாரிகளும், கடைக்காரரும், ஆர்மீனியரும், ஊர்ப்பிறந்த பறங்கிக்காரரும் சட்டைக்காரச் சாதிகளுடைய பழக்கம் பருமாற்றங்களை அரைவாசி முக்கால்வாசி பின்பற்றின

பங்காளத் துரைத்தனத்துக்குச் சேர்ந்த நாடுகளின் அட்டவணை.

| பிரிவுகள். | நீளம். | அகலம் | தலைப்பட்டினங்கள். | சனத்தொகை. | தலைப்பட்டினத்திலிருந்து மற்றப் பட்டினங்களுக்குள்ள தூரம் | உத்தராக்ஷம். பாகை | உத்தராக்ஷம். கலை. | குணதேசாந்தரம். பாகை | குணதேசாந்தரம். கலை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பங்காளம் | ௪௱ | ௩௱ | கல்க்குத்தா | ௮இல. | " | ௨௨ | ௨௩ | ௮௮ | ௨௮ |
| பாகார் | ௨௱௫௰ | ௨௱ | பதுமவதிகரம் | ௩இல.௰௪௲ | ௩௱௩௩ | ௨௫ | ௩௭ | ௮௫ | ௰௫ |
| அசமம் | ௭௱ | ௮௰ | சோழ்காற்று | ௰௫௲ | ௩௱௨ | ௨௪ | 0 | ௯௩ | 0 |
| கற்ருக்கு | " | " | கர்ருக்கு | " | " | " | " | " | " |
| மிற்ரூப்பூர் | ௱௩௰ | ௫௰ | மிற்ரூப்பூர் | ௯௰௲ | ௨௱௪௮ | ௨௰ | ௯௫ | ௮௯ | ௰ |
| அறக்கன் | ௨௱௪௰ | ௬௰ | அறக்கன் | ௮௲ | " | ௨௮ | ௪௰ | ௯௩ | ௬ |
| மாத்தேபன் | ௭௰ | ௩௰ | மாத்தேபய் | ௯௲ | " | ௰௯ | ௩௰ | ௯௮ | ௩௰ |
| தேவோய் | ௩௱௬௰ | ௪௰ | தேவோய் | ௮௲ | " | ௰௪ | ௪ | ௯௮ | ௬ |
| இராமறி | " | " | இராமறி | ௮௲ | " | ௰௯ | 0 | ௯௩ | ௰௫ |
| பீருங்கு | " | " | சோட்சுத்தவுள் | ௪௪௲ | " | ௬ | ௨௬ | ௱ | ௰௯ |

RangaRakes tamilnavarasam.com

கறுத்தவர்களும் அலங்காரமான வீடுகள்கட்டி யிருக்கிறார்கள். பல அரண்மனைகளும் மேன் மாடங்களும் பள்ளிவாசல்களுந் தேவாராதனைக் கோவில்களும் உண்டு.

*இந்தத்துரைத்தனத்துச் சேர்ந்த சனங்களின் தொகை என்ன?*

ஏறக்குறைய(க) கோடியே (௫௰) இலட்சம்.

---

### வட சருக்கார்நாடு.—Northern Circars.

*வட சருக்காரின் எல்லைகள் எவை?*

மேற்கு ஐதிராபாத்து, பீரார் என்னு நாடுகள், கிழக்கு பங்காளக்கடல். வடக்கு ஒரியாநாடு, தெற்கு குண்டகாமநதி. (Gundegama)

*அதெப்படிப்பட்டதேசம்?*

அதின் நடுப்பங்கு மிகவுஞ் செழிப்பானதுங் கரைப்பங்கு மிகவும் மணற்றேசமுமாயிருக்கின்றது.

*அதின் பிரதான புரோசனங்கள் என்ன?*

கரும்பு,பஞ்சி,புகையிலைமுதலானவைகளே.

*அத்தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?*

பங்காளம் முதலான இடங்களிலும் அதிக வெப்பமாயிருக்கின்றது. மழை ஆனி மாதத்தில் நடுக்கூறு தொடங்கிக் கார்த்திகை வரைக்கும் இருக்கும்.

*சனத்தொகை எவ்வளவு?*

மகமது மார்க்கத்தார் தவிர (உ௫)இலட்சம் இந்துக்கள்.

*வடசருக்காரின் பிரதான பிரிவுகள் எவை?*

கஞ்சம், (Ganjam) குண்டூர் (Guntoor) மசூ



லிப்பட்டினம், (Masulipatam) இராசமந்திரி, (Rajamundry) விசாகபட்டணம் (Vizagapatam) இவைகளே.

---

### கருநாடகம்.—Carnatic.

*கருநாடகம் எத்தனை பங்காய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது?*

வடகருநாடகம், நடுக்கருநாடகம்,தென்கருநாடகம் என மூன்று பங்காக.

*கருநாடகத்தின் நீளம் அகலம் என்ன?*

(௩௱௯௰) மயில் நீளம்(௭௫)மயில் அகலம்.

*வட பிரிவில் அடங்கிய தேசங்கள் எவை?*

நல்லூரின் ஒருபங்கும், அங்கோலியும், வேறு சில (Districts) டிஸ்திறிக்குகளுமேயாம். இவைகளிற் செப்புச் சுரங்கங்கள் உண்டு.

*இவைகளிற் பிரதான பட்டினங்கள் எவை?*

நல்லூர், அங்கோலி, என்பவைகளே.

*நடுக்கருநாடகத்தின் எல்லைகள் எவை?*

குடமுருட்டி (Coleroon) ஆறும் பெண்ணை ஆறும் (Pennar.)

*அதற்குள் அடங்கிய தேசங்கள் எவை?*

திரிச்சிராப்பள்ளியின் ஒரு பகுதி, ஆர்க்காடு, சிங்கிலிப்பெட்டை, (Chingleput) சந்திரகிரி, (Chandghery) நல்லூரின் மற்றப்பகுதி.

*இதற்குச் சேர்ந்த பிரதான பட்டினங்கள் எவை?*

சென்னபட்டினம், புதுச்சேரி,(Pondichery) ஆர்க்காடு, பழையக்காடு, (Pulicat) சித்தூர்,

RangaRakes
tamilnavarasam.com

(Chittoor) ஆரணியம் (Arnee) முதலியவைகளே.

*தென்கருநாடகத்தில்அடங்கிய தேசங்கள் எவை?*

திரிச்சிராப்பள்ளியின் மற்றப்பகுதி, திருநெல்வேலி, மதுரை, பாளையப்பட்டார் (Polygars) சீமை, இவைகளே.

*இதற்குச் சேர்ந்த பிரதான பட்டினங்கள் எவை?*

திரிசுரபுரம், தஞ்சைநகரம், மதுரை, தரங்கம்பாடி (Tranquebar) நாகபட்டினம், (Negapatam) கும்பகோணம், சீகாளி, (Sheally) சிதம்பரம், (Chillambrum) திருவாரூர், (Teruvaroor) மாயபுரம், (Mayaveram) பாவநாசம், (Pavanasum) வயித்தீஸ்பரன் கோவில், கூடலூர், (Cuddalore) மஞ்சக்குப்பம், காரைக்கால் (Carical) திருக்குற்றாலம், (Terucourtalum) குருநாடு, (Kurunadu) திருநெல்வேலி, பாளையங்கோட்டை, (Palamcotta) சங்கரனார் கோவில், (Sangaranar-coil) முதலியவைகளே.

*கருநாடகம் எப்படிப்பட்ட தேசம்?*

மிகவுங் காங்கையுள்ளது. நெல்லும், பஞ்சியும் மிகுதி. அல்லாமலும் அவ்விடத்திலே அநேக சத்திரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளிற் பரதேசி, பண்டாரம், பக்கிரிமுதலியவர்களுக்கு அன்னங்கொடுக்கப்படும்.

---

## பாலக்காடு.—Balaghaut.

[*Ceded Districts.*]

*பாலக்காட்டின் எல்லைகள் எவை?*

வடக்கு துங்கபத்திரி, (Tombuddra) கிஷ்



ணாநதி, தெற்கு மைசூர் இராச்சியம், கிழக்கு கருநாடகம், மேற்கு கன்னரம்.

*இதில் பிரதான பிரிவுகள் எவை?*

கடப்பை, (Cuddapah) பெல்லாரி, (Bellary) என்பவைகளே.

*பாலக்காட்டைக் கொம்பினியாருக்குக் கொடுத்ததார்?*

நீசாம் (Nizam) இராசா.

*பிரதான புரோசனங்கள் என்ன?*

கருப்பு, அவுரி, பஞ்சி முதலிய. தேசம் மிகவுஞ் செழிப்பானது. அவ்வூரவர்கள் மிகவும் நல்லவர்களுஞ் சமாதானமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.

*தலைப்பட்டினம் எது?*

பெல்லாரி, அது கொக்கரூ நதியின் மேற்குப்பக்கத்திலே கட்டப் பட்டிருக்கின்றது.

---

## கோயம்புத்தூர்.—Coimbatoor.

*கோயம்புத்தூரின் எல்லைகள் எவை?*

வடக்கு மைசூர், (Mysore) தெற்குத் திண்டிக்கல், (Dindigul) கிழக்குக் கிஸ்டணகிரி, (Kistnagherry) சேலம், (Salem) பாரிமால், (Baramahal) மேற்கு மலையாளம், (Malabar).

*கோயம்புத்தூர் எப்படிப்பட்ட தேசம்?*

மிகவுஞ் செழிப்பான தேசம், அதிற் செழிப்பான நெல்வயல்களும் அவைகளைச் செய்கைப்பண்ணுகிற உழுநருமிகுதி.

*அத்தேசத்தின் தலைப்பட்டினம் எது?*

கோயம்புத்தூர்.

RangaRakes
tamilnavarasam.com

அத்தேசத்துக்குக் கிழக்காகக் காவேரியாற்றினாற் பிரிக்கப்பட்டுக் கருநாடகத்துக்கிடையே கிடக்கிற மாகாணங்களின் பேர் என்ன?

சேலம், கிஸ்டணகிரி, (Kistnagherry) பாரிமால் என்பவைகளே. இம்மூன்றும் ஒரே கலக்கட்டரின் விசாரணைக்குக் கீழாக இருக்கின்றன.

---

## கன்னரம்.—Canara.

கன்னரத்தின் நீளம் அகலம் என்ன?

(௨௱) மயில் நீளம், (௬௫) மயில் அகலம்.

அதின் எல்லைகள் எவை?

வட திசை கோவை, (Goa) மராடம், (Mahratta) கீழ்த்திசை மைசூர், தென்றிசை மலையாளம், மேற்றிசை இந்து சமுத்திரம்.

அதெப்படிப்பட்ட தேசம்?

இத்தேச மலைசார் நாடாயிருப்பதாற் செய்கைப்படுத்துவது மிகவும் பிரயாசம்.

இத்தேசத்தின் புரோசனங்கள் என்ன?

நெல்லு, கருப்பு, கருவா, சாதிக்காய், மிளகு, ஏலம், சந்தனக்கட்டை முதலானவைகளே.

பிரதானபட்டினங்கள் எவை?

மங்களூர், (Mangalore) கலியாணிபுரம், (Callianpore) குண்டட்பூர் (Cundapoor) என்பவைகளே. இவைகளில் மங்களூர் தலைப்பட்டினம். அது ஒரு துறைமுகமாயிருக்கின்றது.

---



## குடகம்.—Coorg.

குடகத்தின் எல்லைகள் எவை?

வடக்கே மைசூரும், கன்னரத்தில் ஓர் பகுதியுந் தெற்கே கோயம்புத்தூருங் கிழக்கே மைசூரும் மேற்கே கன்னரமுமே.

அதின் நீளம் அகலம் என்ன?

வடக்கிலிருந்து தெற்கு மட்டும் (௬௧) மயில், கிழக்கிலிருந்து மேற்கு மட்டும் (௬௫) மயில்.

இத்தேசம் எப்படிப்பட்டது?

அதிக காடும் மரங்களும் இருப்பதாற் பெரும்பாலுஞ் செழிப்புள்ளதுஞ் சில இடங்களிற் கற்பாருள்ளதுமாயிருக்கின்றது.

அதின் பிரதான நதிகள் எவை?

சூர்ணவதி, இலட்சுமணதீர்த்தம், குமர்தாரி, காவேரி முதலியவைகளே.

அதில் எத்தனை தாலுகாவுண்டு?

(௫) அவை எலீசுபரம், கிக்கதநாடு, குடகம், தேவான்கச்சேறி, மடக்கறை.

அதின் தலைப்பட்டினம் என்ன?

முன்னே பெரியபட்டணம் (Periapatam) தலைப்பட்டணமாயிருந்தது. இப்பொழுது மேர்க்கரை (Mercara) தலைப்பட்டினமாயிருக்கின்றது. அது சீரங்கபட்டினத்துக்குக் கிழக்கே (௬௨) மயில் தூரத்தில் இருக்கின்றது.

அதின் புரோசனங்கள் என்ன?

நெல், புகையிலை, எள்ளு, கொள்ளு முதலியவைகளே.

RangaRakes tamilnavarasam.com

## மலையாளம்.—Malabar.

மலையாளத்தின் எல்லைகள் எவை?

வட திசைக்குக் கன்னரம், கீழ்த் திசைக்கும் மேற்றிசைக்குங் காத்தாடி மலைகள், தென்றிசைக்குக் கொச்சி, மேற்றிசைக்கு இந்து சமுத்திரம்.

அதின் நிளம் அகலம் என்ன?

(௱௫௫) மயில் நீளம் (௩௫) மயில் அகலம்.

இத்தேசம் எப்படிப்பட்டது?

அநேகம் நீரூற்றுகளும் ஆறுகளும் இருக்கிறபடியால் தேசஞ் செழிப்பாயிருக்கின்றது. அவைகள் கடலுக்குக் கிட்ட இருக்கிறதினால் மிகவும் நீளமானவைகளல்ல. அநேகந் தென்னமரங்கள் கரையடுத்திருக்கிற இடங்களில் வளருகின்றன. தேக்கமரமிகுதியாய் உண்டு.

பிரதான பட்டினங்கள் எவை?

கன்னனூர்,(Cannanore) தலைச்சேரி,(Tellicherry) கல்லிக் கோட்டை, (Calicut) மாகி (Mahe) முதலியவைகளே. இவைகளிற் கன்னனூர் தலைப்பட்டினம். அது ஒரு எரிக்கருகே கட்டப்பட்டிருக்கின்றது. அநேக அலங்காரமான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வூரின் புரோசனங்கள் என்ன?

தேக்கமரம் மிளகு முதலியவைகளே.

மலையாளத்தில் வர்த்தகம் நடக்கிறதோ?

ஆம் கன்னனூரில் இருக்கிற சோனக வர்த்தகர் அரபிதேசம், பங்காளம், சுமுத்திரா தீவு(Sumatra) சூரத்து (Surat) முதலிய இடங்களுக்குப்போய் அவ்விடங்களிலிருந்து குதிரை, வாதுமைக்கொட்டை, சரக்கு, சீனி, அவின், பட்டு, சாம்பிராணி, கருப்பூரமுதலியவைகளையும் இவ்விடத்திலிருந்து மிளகு, எலரிசி, சந்தனக்கட்டை, கயறு முதலியவைகளையும் ஏற்றி வியாபாரம் நடப்பிக்கிறார்கள்.



---

## மைசூர்.—Mysore.

மைசூரின் எல்லைகள் எவை?

வடக்குக்குப்பாலக்காடு, கிழக்கு மேற்கு தெற்குப் பகுதிகளுக்கு மேல்காத்தாடி மலைகள்.

அதெப்படிப்பட்ட தேசம்?

மலைகளினாற் சூழப்பட்டும் மறு தேசங்களைப் பார்க்க நில ஒப்பரவில் மிகவும் உயரமான தேசமாயுமிருக்கின்றது. அது சமுத்திரமட்டத்தின் ஒப்பரவுக்கு மேல் (௩௲) அடியுயரமாயிருக்கும்.

நீளம் அகலம் என்ன?

(௨௱௫௰) மயில்நீளம் (௱௪௰) மயில் அகலம் அதின்பரப்பு (௨௯௲௭௱௫௰) சதுரமயில் அளவு அகன்றதாயிருக்கின்றது.

சனத்தொகை எவ்வளவு?

(௩௰) இலட்சம்.

தரை எப்படிப்பட்டது?

மிகவுஞ் செழிப்பாயிருக்கிறது, அதில் நெல்லு, கோதுமை, கரும்பு, தென்னமரம், வெற்றிலைக்கொடி, கசகசா முதலிய புரோசனங்கள் உண்டு.

RangaRakes

tamilnavarasam.com

*அவ்விடத்திலுள்ள மிருகங்கள் எவை?*

பசு, எருமை, ஆடு, கழுதை, பன்றி, மட்டக்குதிரை முதலியவைகளே.

*இவ்விடத்தில் விளைகிற சுரங்க வஸ்துக்கள் என்ன?*

இரும்பு, மிகுதியாயுண்டாகின்றது. இருப்புவேலைகள் சின்னாராயண துர்க்கத்தில்(Chinnarayana Droog) மிகுதி.

*இவ்விடத்தில் உண்டாகிற பிரதான மரங்கள் எவை?*

தேக்கமரமுஞ் சந்தனமரமும்.

*பிரதான நதிகள் எவை?*

காவேரி, துங்கபத்திரி, வேதநாதி,(Vedanuddy)புத்திரி, (Bhudri) பெண்ணையாறு, பாலாறு, (Palar) பெண்ணாறு (Penaur) இவைகளே. காவேரிநதி மற்றவைகளிலும் பெரிதாயும் (சா) மயில் நீளமுமாயிருக்கின்றது.

*மைசூரிற் குடிசனங்கள்யார்?*

துலுக்கர், பட்டாணிகள், சமணர், (Jainas) பிராமணர், லிங்கதர் (Lingaits) முதலிய பல சாதிகளுமே.

*பிரதான பட்டினங்கள் என்ன?*

சீரங்கபட்டினம், (Seringapatam) வங்களூர் (Bangalore) மைசூர், பைதனூர், (Bednore) சித்றிலிதுர்க்கம், (Chittledroog) சேரம், (Sera) முதலியவைகள். அவற்றுட் சீரங்கந் தலைப்பட்டினமாயிருக்கின்றது. அதில் ஐதர் அலி திப்புசுலுத்தான் என்பவர்களுடைய அரண்மனைகளும் ஐதரின் பள்ளிவாசலும் உண்டு. சீரங்கபட்டினங் காவேரியாற்றிற் கட்டப்பட்டிருக்கின்றது. அதின் நீளம் (ச) மயிலும் அகலம் (கஇ) மயிலுமே. துலுக்கர் குடியிருக்கும் மற்றும் பட்டினங்களிற் போல இப்பட்டினத்திலும் வீடுகளுக்குப் பலகணிகள் இல்லை. தெருக்கள் மிகவும் ஒடுங்கியவைகளாயிருக்கின்றன. கல்குத்தாவுக்குஞ் சீரங்கபட்டினத்திற்குமுள்ள தூரம் (கூாஎய) மயில்.



---

## சென்னைத் துரைத்தனத்தைச் சேர்ந்த கோட்டுத் தலங்கள்.

*சென்னைபட்டணத்திலுள்ள சுப்பிறீங்கோடு நடப்பிப்பவர்கள் யார்?*

கல்குத்தாவில் நடப்பதுபோல சென்னைபட்டணத்திலுங் கோவறண்மேந்துக் கட்டளைச் சட்டங்கள் நடப்பிக்கப்படுகின்றன. சென்னைபட்டினத்திற் சுப்பிறீங் கோடுண்டு. அதிற் சீவ்சஸ்டிஸ் (Chief Justice) ஒருவரும் இரண்டுபியுனிசஸ்ட்டிஸ்களும் (Puisne Justice) இருந்து விசாரணை செய்வார்கள்.

*புரோவின்சியல் கோட்டு நியாயாதிபதிகள் எங்கெங்கே வந்து கூடுவார்கள்?*

சித்தூர், மசூலிப்பட்டினம், திரிச்சிராப்பள்ளி, தலைச்சேரி என்னும் பட்டினங்களிலுள்ள கோடுகளிலே.

*ஜில்லாக் கோடுகள் எங்கெங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன?*

பெல்லாரி, கன்னரம், செங்கிலிப்பெட்டை, சித்தூர், கும்பகோணம், கடப்பை, சிக்கேகோல், (Chicacole) கும்பம், (Cumbam) மதுரை, மலையாளம், நல்லூர், இராசமந்திரி, சேலம் என்னும் இடங்களிலே.

RangaRakes
tamilnavarasam.com

## சென்னைத் துரைத்தனத்துக்குச் சேர்ந்த நாடுகளின் அட்டவணை விபரம்.

| பிரிவு | மாகாணங்கள் or சில்லாக்கள் | நீளம் | அகலம் | பிரதானபட்டினங்கள். | சனத்தொகை. | உத்தராக்ஷம். பாகை | கலை | குணதேசாந்தரம். பாகை | கலை | சென்னையிலிருந்து தூரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வடசருக்கார் நாடு. | கஞ்சம் | ௱௨௰ | ௩௰ | கஞ்சம் | ௫இல,௮௮௲௭௯ | ௰௯ | ௨௨ | ௮௫ | ௰ | ௯௱௯௧ |
| | விசாகபட்டினம் | ௱௮௭ | ௱௰ | விசாகபட்டினம் | ௰இல.௪௱௰௫ | ௰௭ | ௪௨ | ௮௩ | ௨௯ | ௫௱௧ |
| | இராசமந்திரி | ௱ | ௮௰ | இராசமந்திரி | ௫இ.௭௮௲௮௫௨ | ௰௯ | ௫௯ | ௮௧ | ௫௪ | ௩௱௭௩ |
| | மசூலிப்பட்டினம் | ௱௰௪ | ௱ | மசூலிநகரம் | ௩இல.௩௨௲௨௩௯ | ௰௯ | ௯ | ௮௧ | ௰௧ | ௯௱௨௨ |
| | குண்டூர் | " | " | குண்டூர் | ௨இ.௯௯௲௭௪௯ | ௰௯ | ௰௭ | ௮௰ | ௨௯ | ௨௱௫௫ |
| கருநாடகம் அல்லது சோழமண்டலச் சீமை. | அங்கோலி } நல்லூர் } | " | " | அங்கோலி } நல்லூர் } | ௮இ.௪௯௲௫௭௨ | ௰௫ / ௰௪ | ௩௰ / ௨௮ | ௮௰ / ௮௰ | ௫ / ௧ | ௱௮௯ / ௱௰௧ |
| | வடஆர்க்காடு | " | " | பழவேர்க்காடு | ௫இ.௯௮௲௮௩௧ | ௧௩ | ௨௫ | ௮௰ | ௨௧ | ௩௰ |
| | தென்ஆர்க்காடு | ௭௫ | ௯௩ | கடலூர் | ௫இ ௮௫௲௨௪௰ | ௰௧ | ௪௩ | ௰௯ | ௪௯ | ௱௰௧ |
| | சிங்கிலிப்பேட்டை | ௱௨௰ | ௬௮ | சிங்கிலிப்பேட்டை | ௩இ.௩௩௲௨௱௰௯ | ௰௨ | ௫௯ | ௭௯ | ௫௫ | ௩௯ |
| | திரிசிராப்பள்ளி | ௯௯ | ௯௪ | திரிசிராப்பள்ளி | ௯இ.௫௨௲௪௮௰ | ௰ | ௪௯ | ௭௮ | ௪௪ | ௨௱௰௭ |
| | மதுரை | " | " | மதுரை or. திண்டிக்கல் | ௰இல.௩௯௲௭௨௫ | ௰ | ௨௧ | ௭௮ | 0 | ௨௱௯௧ |
| | திருநெல்வேலி | " | " | திருநெல்வேலி | ௮இ.௫௰௲௮௯௧ | ௯ | ௩௰ | ௭௭ | ௩௰ | ௩௱௯௧ |
| | தஞ்சாவூர் | ௱௰௫ | ௭௫ | தஞ்சைநகரம் | ௰இல.௨௮௲௭௩௰ | ௰ | ௪௨ | ௭௯ | ௰ | ௨௱௰௨ |

## சென்னைத்துரைத்தனத்துக்குச்சேர்ந்த நாடுகளின் அட்டவணை விபரம்.

| பிரிவு. | மாகாணங்கள் or சில்லாக்கள் | நீளம் | அகலம் | பிரதானபட்டினங்கள். | சனத்தொகை. | உத்தராக்ஷம். பாகை | கலை | குணதேசாந்தரம். பாகை | கலை | சென்னையிலிருந்து தூரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மைசூருக்குச்சேர்ந்த தேசங்கள். | பெல்லாரி | ௨௮௰ | ௨௯௪ | பெல்லாரி | ௭இ.௰௨௲௮௩௯ | ௰௫ | ௮ | ௭௯ | ௫௭ | ௩௱௰௯ |
| | கடப்பை | " | " | கடப்பை | ௰இல.௯௩௲௱௯௪ | ௰௪ | ௨௮ | ௭௯ | 0 | ௱௯௯௧ |
| | சீரங்கபட்டினம் | ௬ | ௧௰ | சீரங்கபட்டினம் | ௩௰௲ | ௰௨ | ௨௫ | ௭௯ | ௪௨ | ௨௱௮௧ |
| | சேலம or பாரமால் | " | " | சேலம் | ௰இல ௯௫௲௯௰ | ௰௨ | ௩௨ | ௭௮ | ௰௫ | ௨௱௰௭ |
| | கோயம்புத்தூர் | ௱௰ | ௭௰ | கோயம்புத்தூர் | ௮இல.௨௱௮௰ | ௰ | ௫௯ | ௭௯ | ௫௯ | ௩௱௩௨ |
| | கன்னரம் | ௨௱ | ௩௫ | மங்களூர் | ௭இ.௯௮௲௮௨௩ | ௰௨ | ௫௧ | ௭௪ | ௫௨ | ௪௱௪௯ |
| | மலையாளம் | ௨௱ | ௭௰ | கன்னனூர் | ௧இ.௭௯௲௯௰௯ | ௰௧ | ௫௧ | ௭௪ | ௫௨ | ௪௱௪௯ |

### சென்னைபட்டினம் முதல் கன்னியாகுமரி வரையிலே சோழமண்டலக் கரையிலுள்ள பட்டினங்கள்.

சென்னபட்டினம், சதுரங்கபட்டினம், கோவில், திருக்கிச்சிக்கோணம் சத்தஸ்தலங்கள், சேயூர், அலம்பார்வம், வித்திவாக்கம், பெருமாள்கோவில்,

கீழனூர், புதுச்சேரி, அரியன்குப்பம், கூடலூர், மஞ்சகுப்பம், பறங்கிப்பேட்டை, சீகாளி, சிதம்பரம், தேவிக்கோட்டை,

திருமலைவாசல், காவேரிப்பட்டினம், தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர், நாகபட்டினம், திருப்பூந்தி கோவில்புத்தூர், தோப்புத்துறை,

வேதாரணியம், கோடிக்கரை, கொடிக்காடு, ஐதிராம்பட்டினம், சிங்கவனம், கோட்டைப்பட்டினம், உரையூர், தொண்டி, அறுதாற்றுமங்கலம்,

திருப்பாலங்குடி, தேவிபட்டினம், ஆற்றங்கரை, உத்தரகோசமங்கை கீழக்கரை, வேம்பார், தூற்றுக்குடி, முனைப்பற்று, விசையவதி,

## ௰௧. அதிகாரம்.

### வெம்பாத் துரைத்தனம்.—Bombay Presidency.

*வெம்பாத் துரைத்தனத்துக்குச் சேர்ந்த நாடுகள் எவை?*

கச்சு, குசராத்து, காந்தீசம், ஆரங்கபாத்து, விசையப்பூர் முதலிய பெரிய நாடுகளுக்குரிய சில பிரிவான மாகாணங்கள். அந்த மாகாணங்களைப் பின்னாற் சேர்த்திருக்கிற அட்டவணையிற் காண்க.

*வெம்பாத் தீவின் நீளம் அகலம் என்ன?*

(௰) மயில் நீளம் (௫) மயில் அகலம்.

*வெம்பாப்பட்டினம் எப்படிப்பட்டவிடத்திற் கட்டப் பட்டிருக்கின்றது?*

கற்பாருள்ள பூமியிலே. மேலும் எல்லாத் துரைத்தனத்துக்கும் மூந்தினதாயும் அதிற் கப்பல்கள் ஒதுங்கி நிற்பதற்கான குடாக்கடல் இருப்பதினாலுமிகவும் எண்ணப்படத்தக்க ஒரு இடமாயிருக்கின்றது. பட்டினங் கற்பார் பொருந்திய இடத்திலிருந்தும் அதற்குட் கடலெடுத்துப் பெருகுவதினால் தெருக்களும் மற்ற நிலங்களுஞ் சகதியாயிருக்கும். இதற்காகச் சனங்கள் வீடுகளைமரத்தூண் நிறுத்திப் பலகை பரவிக் கட்டுகிறார்கள். இவ்விடத்தில் மிகுந்த இரவெண்காயமுண்டாக்குகிறார்கள். போசனத்திற்குரிய தானியங்களுங் கீரைகளும் இவ்விடத்திலே குறைவாயிருப்பதினாற் கூலிக்காரர் முதலிய சம்பளகாரருக்கு பங்காளமுதலிய இடங்களிற் கொடுக்கிறதைப் பார்க்க அதிகமாய்க் கொடுக்கவேண்டும் அப்படியிருந்தும் அநேக



கந்திரவியவான்கள் இவ்விடத்தில் இருக்கிறார்கள் இதில் இந்து மதத்தாரும் மகமது மதத்தாரும் பாழ்சிசென்பவர்களும் புடுத்துக்கீஸ்காரரும், ஆர்மீனியரும், யூதருமாக ஏறக்குறைய (௫) இலட்சத்து (௯௰௬) சனங்கள் இருக்கிறார்கள். மேலும் இத்தீவிற்குச் சேர்ந்த (மாகீ)ப்பட்டினத்திற் புடுத்துக்கீஸ்காரர் உரோமான் குருவேலைக்கென்று படிக்கிற ஒரு சாஸ்திரப் பள்ளிக்கூடமுண்டு. அவர்களுக்குக் கோவையிலுமுயர்ந்த சாஸ்திரப்பள்ளிக்கூடமொன்றுண்டு.

*இந்தத் துரைத்தனத்துக்குச் சேர்ந்த சனங்களின் தொகை என்ன?*

(௯௨) இலட்சத்து (௫௧௬௫௱௪௰௬.)

---

### சாலசித்தித்தீவு.—Salsette.

*சாலசித்தி தீவின் நீளம் அகலம் எவை?*

(௰௮) மயில் நீளம் (௰௫) மயில் அகலம். இதற்கும் வெம்பாவுக்குமூடே (௭௰) முழமட்டுக்கு ஓர் நீர்வாய்க்கால் பிரித்துஞ் சனங்கள் வரத்துப்போக்குப் பண்ணும்படி அதற்குமண்ணுங்கல்லுங் கொட்டித் தரைப்பாதையாக இரண்டையும் இணைத்துக்கொண்டார்கள். மேலும் இத்தீவிற் சிலபகுதிகள் மிகவுஞ் செழிப்பாயிருக்கின்றன. அவுரி, பஞ்சி, கரும்பு, சணல், முதலியவைகளுமிகுதி. மிகுதியானபங்கு காடாயிருப்பதினாலே வெம்பாத் தீவைப் பார்க்கச் சவு

RangaRakes

tamilnavarasam.com

க்கியங்குறைவு. மிகுதியானபங்கு காடாயிருந்தாலும் பழுதாயிருக்கிற வாவிகள் குளங்கள் முற்காலத்தின் செல்விக்கைக்கு அடையாளமாயிருக்கின்றன.

*இந்தத்தீவின் பிரதானபட்டினங்களும் அவைகளின் சனத்தொகையும் என்ன?*

தன்னா, (Tanna,) கென்னெறி, (Kenneri,) வேசோவா, (Versovah) இவைபிரதானபட்டினங்கள். சனத்தொகை (௫௰௲).

*வெம்பாவுக்கும் இந்து தேசத்துக்கும் இடையிலே இருக்கிற தீவெது?*

கரஞ்சா தீவு, (Caranja)

*இதற்குச் சமீபித்ததாயிருக்கிற விசேஷித்த தீவெது?*

எலிபந்தா தீவு (Elephanta) அதின்மலையிலே வெட்டப்பட்ட ஒரு விசாலமான கோவிலும் அதற்குள் அநேகஞ் சுரூபங்களும் உண்டு.

---

## கேயிரா.—Kaira.

*கேயிரா நாடுகள் எந்தத் தேசத்திற்குச் சேர்ந்தன?*

குசாரத்துக்குச் சேர்ந்திருந்தும் அந்த நாடுகள் அதற்குள்ளிருக்கும் மற்றும் பிரதானிகளுடைய பிரிவுகளுடனே இங்குமங்குங் கலந்திருப்பதினால் இவைகளின் எல்லைகளையும் வருமானங்களையும் எடுத்துப் பேசுவது அரிது. இந்த நாடுகள் முன்னே குயிக்குவரர் (Guicowar) இராசாவுக்கும் பெஷிவோ (Peshwah) இராசனுக்குமுரித்தாயிருந்தன.



இவைகள் இப்பொழுது இங்கிலிஷ்காரருக்குட்பட்டவாயிருந்தும் இன்னும் இவைகளின்வட திசையிலே கள்வர் முதலிய துஷ்டர்கள் வாசமாயிருக்கிறார்கள்,

*கேயிராவின் பிரதான பட்டினங்கள் எவை?*

கேயிரா, மாற்றர், (Mahtur) நெறியாத்து, (Neriad) தலக்கா, (Dhalca) குப்புரவஞ்சி, (Kuppurwunje) இவைகளே. இவைகளிற் கேயிரா தலைப்பட்டினமேயாம்.

---

## சூரத்து.—Surat,

*சூரத்து எந்த நதிக்கருகிலே கட்டப்பட்டிருக்கின்றது?*

தப்தி நதிக்கருகில். சூரத்துநாடு மகமதுமார்க்கத்தாருடைய அரசாட்சியின் காலத்திலே பேர்போன இடமாயிருந்தும் இப்பொழுது அடுத்த தேசங்களோடே சேர்ந்து போயிற்று பட்டினம் இரட்டைச் சுவரினாலே சூழப்பட்டிருக்கின்றது. இரட்டைச்சுவருக்கிடையே இருக்கிற நிலங்களிற் பயிர்வகைகளை வைத்து உண்டுபண்ணுகிறார்கள். சுவரில் அநேகங் கோபுரங்களும் பட்டினத்துக்குப் பன்னிரண்டு வாசல்களுமுண்டு. சுவராகிய மதிலை இளம்பிறைச் சாயலாகக் கட்டியிருக்கிறார்கள். இது பெரிய பிறித்தானியாவுக்குச் சேர்ந்த பட்டினங்களுக்குள்ளேமிகவும் பெரிதும் அதிக வருத்தகத் தொழில்களையுடையதுமாயிருக்கின்றது. அநேகம் வீடுகள் உயரமாயிருக்கின்றன. அல்லாம

RangaRakes tamilnavarasam.com

லும் அநேகம் பள்ளிவாசல்களும் இந்துக்களுடைய கோவில்களும் உண்டு. இப்பொழுது அதின் மகிமை குறைந்து போகிறதாய்க் காணப்படுகின்றது.

---

### புறேச்சு or பாரிகாசம்.—Broach or Pariecasam.

புறேச்சு எப்படிப்பட்ட தேசம்?

மிகவுஞ் செழிப்பாய்ச் செய்கைப்படுத்தப்பட்ட தேசமாயிருக்கின்றது. இத்தேசத்தில் பருத்தி மிகுதியாய் உண்டாகின்றது.

பிரதான பட்டினங்கள் எவை?

புறேச்சு, ஆமீவாத்து, (Amaad) கஞ்சூத்து (Kansoot) ஒல்பார், (Olpar) முதலியவைகளே. இவைகளில் புறேச்சு தலைப்பட்டினமேயாம். அது நிருமதையாற்றின் வடகரையிலே கட்டப்பட்டிருக்கின்றது. நேர்த்தியான புடைவைகள் இவ்விடத்திலே நெசவுபண்ணப்பட்டு வருகின்றன. மேலும் நோய்கொண்ட மிருகங்களைச் சுகப்படுத்துவதற்காக இவ்விடத்தில் ஒரு தரும வீடுண்டு. சில பாஞ்சியர்மாத்திரம் இவ்விடத்திற் குடியிருக்கிறார்கள்.

வேம்பாவுக்கும் இத்தீவுக்குமுள்ள தூரம் என்ன?

(௨௱௨௧) மயில்.

---

### கோவில்வாரா.—Goelwarah.

கோவில்வாரா நாடு எங்கே இருக்கின்றது?

கம்பைக் (Cambay) குடாக்கடலின் மேற்குப் பக்கத்திலே,



பிரதான துறைமுகங்கள் என்ன?

பாவநாகர், (Phawnugar) கோகம், (Goga) என்பவைகளே.

கோகத்திலுள்ள துருக்கர் என்னதொழில்செய்கிறார்கள்?

அவர்கள் (௬௱) (௫௱) தொன்பாரமுள்ள கப்பல், படவு செய்து வேம்பாவுக்குச் சரக்குகளேற்றி வருத்தகம் நடப்பிக்கிறார்கள்.

வியாபாரச் சரக்குகள் என்ன?

பஞ்சி, நெல்லு முதலியவைகளே.

---

### பங்கோல்.—Bauncole or Ft. Victoria.

பங்கோல் எப்படிப்பட்ட தீவு?

கொங்கணக் (Concon) கரையிலுள்ள ஓர் அரணை தீவு. அதில் ஆறு மயில் விஸ்தாரமுள்ள ஒரு குடாக்கடல் சிவர்னதுர்க்கத்துக்கு (Severndroog) வடக்கில் உண்டு.

குடிசனங்கள் என்ன சாதியார்?

அதிற் குடியிருப்பவர்களில் மிகுதியானவர்கள் துலுக்கர்.

---

### அஞ்சார்.—Anjar.

அஞ்சார்நாடுங் கோட்டையும் எந்தப் பிரிவுக்குச் சேர்ந்தவைகள்?

கச்சு தேசத்துக்கு.

ஆருடைய அரசாட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது?

முன்னே கச்சு தேசம் ராவுக் (Rao)குடையதாயிருந்தது. மறுபடி அவர் பிறிட்டிஷ் கார

RangaRakes tamilnavarasam.com

ருக்குக் கொடுத்துவிட வேம்பாத் துரைத்தனத்துக்குக் கீழாயிற்று.

தலைப்பட்டினம் என்ன?

அஞ்சார். கோட்டை மிகவும் அரணிப்பானது. இந்தக் கோட்டை கச்சுக்குடாக்கடலிலிருந்து (௰) மயில்தூரம். பட்டினம் (௨) மயில் சுற்றுள்ளதாயுஞ் சோலைகள், தோட்டங்கள், வயல்களினாற் சூழப்பட்டதாயுமிருக்கின்றது.

பிரதான துறைமுகம் என்ன?

உரோகார், (Rohur) அது அஞ்சார் பட்டினத்துக்கு (௰௨) மயிலுக்கப்பால் கச்சுக்குடாக்கடலில் இருக்கின்றது.

பூனா நகரி முற்காலத்தில் எத்தேசத்துக்குத் தலைப்பட்டினமாயிருந்தது?

ஆரங்கபாத்திலுள்ள பூனாநகரி முற்காலத்தில் மராடதேசத்துக்குத் தலைப்பட்டினமாயிருந்தும் இப்பொழுது வேம்பாத் துரைத்தனத்துக்குச் சேர்ந்திருக்கின்றது. பெஷிவோ இராசனின் அரண்மனையும் இவ்விடத்திலிருந்தது.

பூனாநகரி எவ்விடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது?

மூத்தா (Moota) நதியின் கரையிற்கட்டப்பட்டிருக்கின்றது.. பட்டினத்துக்குக் கிழக்கேயுள்ள ஓரிடத்தில் எலிபந்தா, காழி, (Carli) முதலிய கோவில்களிலுள்ள சுரூபங்களைப் போல வெட்டித்தீர்ந்த சிலவேலைப் பாடுகளும் உண்டு.

சனத்தொகை எவ்வளவு?

ஓரிலட்சம்.



பூனாநகரிக்கும் வேம்பாவுக்குமுள்ள தூரம் என்ன?

(௯௮) மயில்.

---

### வேம்பாத் துரைத்தனத்தைச் சேர்ந்த கோட்டுத்தலங்கள்.

வேம்பாவில் ஒரு கோவறனதோர் (Governor) இருந்து துரைத்தனம் பண்ணுகிறார். சென்னையிற் கோவறனர்தோரைப் போல இவரும் பங்காளக் கோவறனர்தோருக்குக் கீழ்ப்பட்டிருந்து ஆண்டுவருகிறார். சுப்பிறீங் கோட்டில் ஒரு சீவ் சஸ்டிஸ் என்பவரும் இரண்டு பியுனி சஸ்டிஸ்களும் இருப்பார்கள்.

புரோவின்சியல் கோடுகள் எங்கெங்கே உண்டு?

சூரத்து, ஆமெதபாத்து, (Ahmedabad) கேயிரா, வடகொங்கணம், தென்கொங்கணம், தக்கணமென்னும் இடங்களிலே.

சில்லாக்கோடுகள் எங்கே உண்டு?

ஆமெதபாத்து, பாரிகாசா, கெயிரா, தென்கொங்கணம், ஆமெதீநகரம், தக்கணம் பூனாநகரம்.

RangaRakes
tamilnavarasam.com

## வேமபாத் துரைத்தன நாடுகளின் அட்டவணை விபரம்.

| டிஸ்திரிக்குகள் or சில்லாக்கள். | இவைகளின் சனத்தொகை. | பிரதானபட்டினங்கள். | தலைபபட்டினத்திலிருந்துமற்றவைகளுக்குள்ளதூரம். | உத்தராக்கிஷம். பாகை. | உத்தராக்கிஷம். கலை. | குணதேசாந்தரம். பாகை. | குணதேசாந்தரம். கலை. |
|---|---|---|---|---|---|---|---|
| கச்சு | ரு இல. | பூச்சுபபட்டினம் | ‟ | உரு | யரு | கூகூ | ருஉ |
| டாழ்வா | சா இல. | டாழ்வாநகரி | ‟ | யரு | உ-அ | எ௬ | அ |
| கொங்கணம் வட. } | சூ இல. | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ |
| கொங்கணம் தெ. } | | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ |
| ஆமேதபாத்து | க இல. | ஆமேதபாத்து | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ |
| கேயிரா | சஇ யகது | கேயிரா | ‘ | உரு | 0 | எஉ | சஉ |
| சூரத்து | அ இல. | சூரத்துநகரம் | ‟ | உக | சரு | எரு | யச |
| புரேச்சு or பாரிகாசம் | கஇ.ருஎது | புரேச்சு | உஉக | உக | யக | எரு | எ |
| அத்தாவசி | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ |
| காத்திவார் | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ | ‟ |
| புனா | கஇல.யது | புனாநகரி | கூஅ | அ | ருய | எச | உ |



### வேம்பா முதற் கன்னியாகுமரி வரையில் மலையாளக் கரையிலுள்ளபட்டினங்கள்.

வேம்பாநகரி
மாங்தேவி
கோலாபா
வங்கோல்
கிவர்ன துருக்கம்
கிரியா அல்லது கோரைப்பட்டினம்
அஞ்சன்வில்வி
சாகரம்
இரட்டிகிரி
இராசபுரம்
தேவகரம்
செதாசிகரநகரம்
அஞ்சுதீவு
ஒனூர்
குண்டப்பூர்
மங்களூர்
காசிரக்கூடம்
சந்திரகிரி
கன்னனூர்
தலைச்சேரி
மாகி
கோயிலாந்தி
கல்விக்கோட்டை
பாப்பூர்
தானூர்
பனியாணி
கிராங்கனூர்
கொச்சி
பறக்காளி
கொல்லம
அஞ்சன்கோடு
திருவனந்தபுரம்
தென்காயாபட்டினம
கோலாச்சி
சிவானந்தபுரம்
கன்னியாகுமரி

## யஉ. அதிகாரம்.

### அக்கிறத் துரைத்தனம்.

இத்துரைத்தனத்துக்குச் சேர்ந்த நாடுகள் எவை?

அல்லாபாத்து, அக்கிறு, தெல்லி முதலிய நாடுகளும் இன்னும் இதற்குச் சமீபமாய் இங்கிலிஷிகாரருடையதாயிருக்கிற மற்றும் பிரிவுகளும்.

அக்கிறு எப்படிப்பட்ட பட்டினம்?

அது யமுனையாற்றின் மேற்குப் பக்கத்தில் இளம்பிறைச் சந்திரனுடைய வடிவமாகக் கட்டப்பட்டிருக்கின்றது. அது அக்பார் (Akbar)

என்னும் இராயருடைய காலத்தில் மிகவுஞ் செல்விக்கையுஞ் சிறப்புமாயிருந்தது. அந்த இராயருடைய அரண்மனையையும் பள்ளிவாசலையும்போலச்சிறப்பான கட்டுவேலை ஆசியாதேசத்திலோரிடத்திலுமில்லை. பளிங்குநிறமான அழுத்தக்கற்றூண் நாட்டி அதற்குமேலே அழுத்தக்கல்லினாலேதானே அரண்மனை கட்டியிருக்கின்றது. மேலும் அது மஞ்சள் சிவப்புநிறம் பொருந்திய அழுத்தக்கற்களினாலே அலங்கரிக்கப்பட்டுத் தங்கத் தகட்டினாலே உட்பக்கம் முழுதும் மூடப்பட்டிருக்கின்றது. சாசிகான், (Sha-jehan) ஆறங்கிசீபி, (Aurengzebe) என்பவர்களுடைய கல்லறையும் பள்ளிவாசல்களும் உயர்ந்த வேலைப்பாடுகளாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் விட்டுணு இந்தப்பட்டணத்திற் பரசிராமஅவதாரமெடுத்தாரென்று சொல்லப்படுகின்றது. இந்து மதத்தாராலே வியாபாரம் அதிகமாய் நடந்துவருகின்றது. பார்சியர் இந்நகரத்தில் மிகுதியாய்க் குடியிருக்கிறார்கள்.

*இத்துரைத்தனத்துக்குச் சேர்ந்த நாடுகளில் எவ்வளவு சனங்கள் இருக்கிறார்கள்?*

ஏறக்குறைய (௨) கோடி.

---

## அல்லாபாத்து.—Allahabad.

*அல்லாபாத்தின் நீளம் அகலம் என்ன?*

(௨௱௯௰) மயில்நீளம்(௱௨௰)மயில் அகலம்.

*அதின் எல்லைகள் எவை?*





மேற்கிலே மாழுவமும், அக்கிறுவும், வடக்கிலே அக்கிறுவும், அயோத்தியும், கிழக்கிலே பாகாருங் கந்தவனநாடும் தெற்கிலே கந்தவன நாடும்.

*பிரதான நதிகள் எவை?*

கங்கைநதி, யமுனை, கோமுட்டிநதி,(Goomty) இவைகளே.

*அதெப்படிப்பட்ட தேசம்?*

தெற்குங் கிழக்குந்தவிர மற்ற இடங்களெல்லாஞ் செழிப்பாயிருக்கின்றன. இவ்விடத்தில் அவினுங், கரும்பும், அவுரியும் பட்டும் பஞ்சியும் மிகுதி.

*பிரதான பட்டினங்கள் எவை?*

காசி, அல்லாபாத்து, மீர்சாப்பூர், (Mirzapoor) சூனார்,(Chunar) காசிப்பூர், (Ghazepoor) கலிங்கநகரம், (Callinger) முதலானவைகளே. இவைகளில் அல்லாபாத்துத் தலைப்பட்டினம்.

*இவைகளுக்குள் விசேஷமாக எண்ணப்படுகிற பட்டினம் எது?*

காசிப்பட்டினம் இது இந்துதேசத்தில் உயர்ந்த தேவஸ்தானமென்று சனங்கள் எண்ணுகிறார்கள். ஐந்திலக்கஞ் சனங்கள் இருக்கிறார்கள். அந்தப் பட்டினங் கங்கைக் கரையிற் கட்டப்பட்டிருக்கிறது. அதில் (௮௯) அக்கிரகாரங்களுண்டு. இந்து தேசத்தின் பலபல திசையிலுமிருந்தும் அநேகர் அத்தேசத்துக்கு யாத்திரை போய்ச் சேருகிறார்கள். அவ்விடத்திலுள்ள வீடுகள் மூன்று நாலு தட்டு உயரமுள்ளனவாய் இட்டிகையினாலுங் கல்லினாலுங் கட்டப்பட்டிரு

RangaRakes

tamilnavarasam.com

க்கின்றன. தெருக்கள் மிகவும் ஒடுங்கியன. முற்காலத்திலே காசிப்பட்டினஞ் சாத்திரங்களிற் பேர்சிறந்ததாயிருந்தது. அவ்விடத்தில் இப்பொழுதும் அநேக சங்கிருத சாஸ்திரப் பள்ளிக்கூடங்கள் உண்டு.

*அல்லாபாத்து எப்படிப்பட்ட பட்டினம்?*

மிகவுஞ் சிங்காரமாய்க் கட்டப்பட்டிருந்தாலும் வேலை சற்றே பருக்கனாயிருக்கின்றது. அது யமுனை யாறுங் கங்கை நதியுந் தலைப்பெய்யும் இடத்திற் கட்டப்பட்டிருக்கிறபடியால் அதைப்பிராயுகம் (Prayaga) எனச்சொல்வது.

---

## அக்கிற.—Agra.

*அக்கிறுவின் எல்லைகள் எவை?*

மேற்கு ஆசுமீரம், கிழக்கு அல்லாபாத்து அயோத்தி, வடக்குத் தெல்லி, தெற்கு மாழவம்.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௨௱௫௰) மயில் நீளம் (௱௫௰) மயில் அகலம்.

*எப்படிப்பட்ட தேசம்?*

மிகவுஞ் செழிப்பான தேசம், அவுரி, பஞ்சி, கரும்பு, முதலிய புரோசனங்களும் உண்டு.

*பிரதான பட்டினங்கள் எவை?*

அக்கிறு, கன்னோசம், (Kanouge or Canyacubja) இத்தேவா, (Etawah) குவாலியர் நகரி, (Gualior) ஆலவார், (Alvar) கல்ப்பீ (Calpee) என்பவைகளே. இவைகளில் அக்கிறுத் தலைப்பட்டினம்,

*அக்கிறு நகரி எவ்விடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது?*

தெல்லிக்குத் தென்கிழக்கே (௱) மயில் தூ



ரத்துக்கப்பால் யமுனையாற்றின் தென்பக்கத்திற் கட்டப்பட்டிருக்கின்றது. காசிப்பட்டினத்திற் போல அக்கிறு நகரியிலும் வீடுகள் பல அடுக்குகளுள்ளவைகளாயுந் தெருக்கள் பல்லாக்குகள் செல்லக்கூடாத ஒடுக்கமாயும் நகரி சிறப்பானதாயும் இருக்கின்றது. சிக்கந்தர் (Secundra) நகரியில் அக்பார் இராயரின் பள்ளிவாசல் ஒன்றுண்டு.

*அக்கிறுவிலுள்ள பிரதான அரண்மனை எது?*

ஷாச்சிகான் என்னும் மோகுல இராயன் தன் இராணிபேருக்குக் கட்டுவித்த விஸ்தாரமும் மகத்துவமும் பொருந்திய தஷிமால் (Tauje-Mahul) என்னும் பள்ளிவாசலே.

*அது எவ்விடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது?*

அக்கிறுநகரிக்கப்பால் (௯) மயில் தூரத்தில் யமுனை நதியின் தென்கரையிற் கட்டப்பட்டிருக்கின்றது.

*அக்கிறு ஆருடைய துரைத்தனத்துக்குக் கீழிருக்கின்றது?*

(௲௮௱௩) ஆண்டு இங்கிலிஷ்காரர் லார்ட்டு லேக்கு (Lord Lake) என்பவருடன் வந்து தேசத்தைப் பிடித்துக்கொண்டதாற் கும்பினியாருக்குக் கீழிருக்கின்றது.

*கல்குத்தாவுக்கும் அக்கிறுவுக்குமுள்ள தூரம் என்ன?*

(௮௱௯௰) மயில்.

---

## தேல்லி.—Delhi.

*தெல்லியின் நீழம் அகலம் என்ன?*

(௨௱௪௰) மயில் நீளம் (௨௱) மயில் அகலம்.

அதின் எல்லைகள் எவை?

வடக்கில் சத்திலேச்சு நதியும் சீக்கிஸ் (Seiks) தேசங்களும் மலைகளும், கிழக்கில் அயோத்தியுந் தெற்கில் அக்கிரு ஆசுமீரம் என்னுநாடுகளும், மேற்கில் லாகோர் நாடுகளும்.

இங்கிலிஷ்காரருக்குரிய பகுதிகள் எவை?

யமுனை யாற்றுக்குக் கிழக்கேயுள்ள தேசங்களும் வடகிழக்கிலுள்ள மற்றுநாடுகளுமே. தென்மேற்கேயுள்ள பகுதிகள் பிரிட்டிஷ்காரருடன் சேர்த்திக்கையாயிருக்கிற ஊர்ப்பிறந்தவர்களாகிய பிரதானிகளுக்கும் யமுனைநதிக்கு வடமேற்கிலும் சத்திலேச்சு நதிக்குத் தெற்கிலுமுள்ள தேசப்பிரிவுகள் சீக்கிஸ் பிரதானிகளுக்குமுடையவாயிருக்கின்றன.

பாறெல்வி (Bareilly) என்னும் பிரிவில் அடங்கிய நாடுகள் எவை?

கான்பூர், (Cawnpore) பறக்கபாத்து, (Furruckabad) என்பவைகளே.

பிரதான பட்டினங்கள் எவை?

தெல்வி, அரித்துவாரம், (Hurdwar) பாறெல்வி, சிறீகந்தம், (Sirhind) சகாரன்பூர், (Saharunpore) மீரத்து, (Meerut) கிசார், (Kissar) என்பவைகளே. இவைகளில் தெல்வி தலைப்பட்டினமேயாம். பழய தெல்வி அழிந்துபோயிற்று.

புதிய தெல்வியைக் கட்டினதார்?

ஷாச்சிகான் என்னும் மோகுல (Mogul) இராயன் யமுனையாற்றின் மேற்குக் கரையிற் புதிதாக ஒரு பட்டினத்தை (௧௬௩௧) வருடத்திற்கட்டி அதற்கு ஷாச்சிகானிபாத் (Shajehanibad) தெனப்பேரும் இட்டான். அது (எ) மயில் சுற்றுள்ளது. அதற்கு (எ) வாசல்கள் உண்டு. பட்டினத்துக்குள் முன்னிருந்த அமுராக்களாகிய (Omrahs) பிரபுக்களின் அரண்மனைகளும் பற்பல சிறப்பான பள்ளிவாசல்களுஞ் சம்மாமஸ்சீற் (Jumma-Musjid) றென்னும் பள்ளிவாசலும் ராவுஷுனத்தவுலாவின் (Row-shu-nud Dowlah) கோரியும் இடிந்து கெட்டுப்போயிருக்கின்றன. இப்பொழுதிருக்கிற தெல்விப்பட்டினத்தில் அநேக நேர்த்தியான வீடுகளுந் தெருக்களுங் கடைகளும் உண்டு. இராயருடைய அரண்மனை ஆற்றின் மேற்குக்கரையிற் கட்டப்பட்டிருக்கின்றது. சுற்றளவில் (௬) மயில் விஸ்தாரமுள்ளதாய் மூன்று பக்கத்திலுங் கற் சுவருள்ளதுமாயிருக்கின்றது.



தெல்வி எப்படிப்பட்ட பட்டினமாயிருந்தது?

இந்து தேசத்தாருடைய சரித்திரங்களிற் சொல்லியிருக்கிறபடி தெல்வி முற்காலத்திலே மிகவும் பேர்போன பட்டினமாயிருந்ததாகத் தோன்றுகின்றது. ஆகிலுந் துலுக்கர் வந்து தேசத்தைப்பிடித்து அரசாட்சி பண்ணின காலத்திலும் உறுதியாய் நின்று பிற்காலத்தில் அழிந்துபோயிற்று.

கல்குத்தாவுக்குந் தெல்விக்குமுள்ள தூரம் என்ன?

(௯௱௭௬) மயில்.

தெல்வியின் சனத்தொகை எவ்வளவு?

எண்பதிலட்சம்.

RangaRakes

tamilnavarasam.com

அக்கிறத் துரைத்தன விபரம்.

| மாகாணங்கள் or சுபாக்கள். | நீளம். | அகலம் | தலைப்பட்டினங்கள். | சனத்தொகை. | உத்தராக்ஷம் பாகை. | கலை. | ருணதேசாந்தரம். பாகை. | கலை. | கல்குத்தாவிலிருந்து தூரமயில். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அல்லாபாத்து | உ௱எ௰ | ௱உ௰ | காசி | ரு இல. அ௲ | உரு | கய | அக | க | சா௱கூஎ |
| அக்கிரு | உ௱ரு௰ | ௱அ௰ | அக்கிரு | கூ௰௲ | உஎ | ௰க | எஎ | ருக | அ௱க௰ |
| தெல்லி | " | " | தெல்லி | ௬இல. | உஅ | சக | எஎ | ௬ | கூஎகூ |



## ௰௬. அதிகாரம்.

### NATIVE STATES.

### நிசாமின் இராச்சியங்கள்.—Nizam's Dominions.

*நிசாம் இராசாவின் நாடுகள் எவை?*

ஐதிராபாத்து, பீதர், நந்தீர் என்பவைகளும் ஆரங்கபாத்து, விசையப்பூர், பீரார் இவைகளில் ஒவ்வொரு பகுதியுமானவைகளே. ஆரங்கபாத்து மிகவும் பாலடுத்ததுந் தரை கடல் நீரொப்புரவைப் பார்க்க இரண்டாயிரம் அடி உயர்ந்ததுமாயிருக்கின்றது. இவ்விடங்கள் சுபாவப்படியும் அரணிப்பாயிருக்கிறதினாலேதான் புறச்சாதியார் மராட்டியரைச் சிலகாலங்களில் வெல்லுகிறது பிரயாசமாயிருந்தது.

---

### பீதர் நாடு.—Beeder.

*பீதர்நாட்டின் எல்லைகளும் நீளம் அகலமும் என்ன?*

வடதிசைக்கு ஆரங்கபாத்து, நந்தீர்நாடு, கிழக்குத்திசைக்கு ஐதிராபாத்து, தென்றிசைக்குக் கிஷ்ணநதி, மேற்குத்திசைக்கு விசையப்பூர் என்பவைகளே. பீதர்நாடு (௱சம) மயில் நீளமும் (கூரு)மயில் அகலமுமாயிருக்கின்றது.

இத்தேசத்தில் மிகுந்த மலைகளும் அவைகளிலிருந்து சிறுநதிகளும் பாய்கிறதினால் தேசஞ் செழிப்புள்ளதும் புரோசனமுள்ளதுமாயிருக்கின்றது.

---

RangaRakes

tamilnavarasam.com

## நந்தீர் நாடு.—Nandere.

நந்தீர் எப்படிப்பட்ட தேசம்?

தேசஞ் செழிப்பாயிருப்பதினால் அநேகங் குடிசனங்களைத் தாபரிக்கக் கூடிய இடம்.

நீளம் அகலம் என்ன?

(௱௫௰) மயில் நீளமும (௯௫) மயில் அகலமுமுள்ளது.

அதின் எல்லைகள் எவை?

வடக்கு பீரார் நாடு, தெற்கு ஐதிராபாத்து, பீதர்நாடு, கிழக்கு கந்தவனநாடு, மேற்கு ஆரங்கபாத்து.

சனத்தொகை எவ்வளவு?

(௫) இலட்சம். அவர்களிற் பத்திலொரு பங்கு துலுக்கர்.

பிரதான பட்டினங்கள் எவை?

நந்தீர், காந்தாரம், (Candhar) வாலக்குண்டம், (Balcundah) நீர்மால், (Nirmuhl) இவைகளில் நந்தீர் தலைப்பட்டினம்.

---

## ஐதிராபாத்து.—Hydrabad.

ஐதிராபாத்தின் எல்லைகள் எவை?

வடக்கே கோதாவிரிநதி, தெற்கே கிஷ்ணநதி, கிழக்கே கந்தவனநாடு, மேற்கே பீதர்நாடும், ஆரங்கபாத்துமே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௱௮௰) மயில் நீளம் (௱௫௰) மயில் அகலம்.



ஐதிராபாத்து எப்படிப்பட்ட தேசம்?

மிகவும் உயர்ந்ததுஞ் செழிப்பானதும் மலைகளுள்ளதுமான தேசமாயிருக்கின்றது. திறமாய்த் தண்ணீர்பாய்ச்சப்படுகின்றது. ஆனாலுஞ் செய்கை திறமல்ல.

பிரதான பட்டினங்கள் என்ன?

கோல்குன்றம், (Golcondah) ஐதிராபாத்து வாரங்கோல், (Warangol) மீதக்கு, (Meduck) நீலக்குன்றம், (Nilcundah) இவைகளில் ஐதிராபாத்து தலைப்பட்டினம்.

ஐதிராபாத்தைக் கட்டினதார்?

(௲௫௱௮௫௰) வருடத்தில் மகமது கூலிகுற்றப்புஷா (Mahommed Kooli Kuttub Shah) என்னுந் துலுக்க இராசன், (௲௬௱௮௭௰) வருடத்தில் மோகுல இராயனாகிய ஆரங்கீசேபி என்பவன் வந்து தேசத்தைப் பிடித்துக் கொள்ளையடித்தான்.

சென்னைபட்டினத்திற்கும் இதற்குமுள்ளதூரம் என்ன?

(௩௱௫௨) மயில்.

---

## பீரார் நாடு.—Berar.

பீரார் எப்படிப்பட்ட தேசம்?

பீராரில் நாலில் மூன்று பங்கு அல்லது முக்கால்வாசி நிசாமுடைய ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றது. திறமாக நீர்பாய்ச்சப்பட்டுஞ் செய்கை திறமல்ல.

பீராரின் எல்லைகள் என்ன?

RangaRakes
tamilnavarasam.com

வடக்கிற் காந்தீசமும் அல்லாபாத்தும், தெற்கில் ஆரங்கபாத்துங் கோதாவிரிநதியும் கிழக்கில் கந்தவனநாடும், மேற்கில் காந்தீசமும் ஆரங்கபாத்துமே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௨௱௩௰) மயில் நீளமும் (௱௨௰) மயில் அகலமுமாயிருக்கின்றது.

அதிலுள்ள டிஸத்திரிக்குகள் எவை?

அபூல்பேசில் (Abul Fazel) என்பவருடைய விபரத்தின்படி அதிற் பதின்மூன்று சிறுநாடுகள் உண்டு. அவையாவன காவீல், (Kaweel) பூனர், (Poonar) கேகிராளம், (Kehrleh) நீர்நெல்லை, (Nernalah) குல்லம், (Kullum) பாசம், (Bassum) மாகோர், (Mahore) மாணிக்கதுருக்கம், (Manickdurgh) பற்னு, (Patna) தெலிங்காஞ்சி, (Tilinganch) இராமகிரி, (Ramghur) பேக்கர், (Bheker) பூவியாலை (Puffyaleh) என்பவைகளே.

பிரதான பட்டினங்கள் என்ன?

எலிக்பூர், (Elichpoor) குற்கைவில்லி, (Gawelghur) நாரார்யனலையம், (Narnallah) பூனர், பத்திரி (Patery) இவைகளில் எலிக்பூர் பிரதானமானது.

பிரதான நதிகள் எவை?

கோதாவிரி, தப்ததி, பூரணி, (Poornah) வரதம், (Wurdah) கேற்னு (Kaitna) முதலியவைகளே. மிகுதியான நதிகள் இருந்துந் தேசஞ் செய்கையில்லாமலுஞ் சனநெருக்கமில்லாமலும் இருக்கின்றது.



புரோசனங்கள் என்ன?

சில பகுதிகள் நேர்த்தியாய்ச் செய்கைப்படுத்தப்பட்டிருக்கிறபடியால் நெல், கோதுமை, வரற்கோதுமை, பருத்தி, அவின் முதலியவை உண்டாகின்றன. நிசாமுக்குக் கீழ்ப்பட்ட இடங்களன்றி மிச்சப்பங்குகள் மாழுவத்திலும் நாகபுரத்திலுமுள்ள மராட்டியருக்குடையவைகளாயிருக்கின்றன.

சனத்தொகை எவ்வளவு?

(௨௰) இலட்சம். மிகுதியானவர்கள் துலுக்கர், மற்றவர்கள் சைவ சமயத்தவர்கள்.

---

## விசையப்பூர்.—Bejapoor.

நிசாமின் ஆஞ்ஞைக்குட்பட்ட விசையப்பூரின் பகுதி எப்படிப்பட்ட தேசம்?

மிகுதியான பங்கு காடுஞ் செடியுமாயிருக்கின்றது. கொஞ்சப் பங்கிற் சனங்கள் குடியிருக்கிறார்கள். அதை வெட்டிக்கொத்திச் செய்கைபண்ணினாற் செழிப்பான தேசமாகும்.

அதின் எல்லைகள் எவை?

வடக்கில் ஆரங்கபாத்து, தெற்கில் துங்கபத்திரி நதியும் வட கன்னரமும், கிழக்கில் ஆரங்கபாத்தும் பீதர்நாடும், மேற்கில் கடலுமே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௩௱௫௰) மயில் நீளமும் (௨௱) மயில் அகலமுமாயிருக்கும், மேற்குத் திசைகள் காற்றுடிமலைபடுத்ததாயிருக்கின்றன. மேற்குப் ப

குதிகளில் நிலம் ஒப்புரவாயிருக்கின்றது, துங் கபத்திரி, கிஸ்ணாநதி, குதபற்பம், (Gutpurba) வீமம், (Bheema) என்னுநதிகள்பாய்ந்து ஊ ரைச் செழிப்பாக்கின்றன.

*பிரதான பட்டினங்கள் எவை?*

பூனா, விசையப்பூர், சத்தாரா, மீரிச்சு, (Mirritch) தார்வார், (Darwar) பந்தர்ப்பூர், (Punderpoor) உத்தானி (Huttaney) என்பவைகளே.

*சனத்தொகை எவ்வளவு?*

(௮௰) இலட்சம்.

*இவ்விடத்தில் வழக்கமான பாஷைகள் என்ன?*

மராட்டியம், கன்னரம்.

*நீசாமுடைய தேசத்துக்குள் அடங்கிய பிரதான நதிகள் எவை?*

துங்கபத்திரி, கோதாவிரி, கிஸ்ணா, வீமம், வரதம், இவைகளே.

*பிரதானபட்டினங்கள் எவை?*

ஐதிராபாத்து, கோலக்குன்றம், நந்தீர், தவுலாதபாத்து, ஆரங்கபாத்து, பீதர், எலிக்ப்பூர், புவாரன்பூர், இவைகளே. இவைகளில் ஐதிராபாத்து நீசாமுடைய ஆளுகைக்குத் தலைப்பட்டினமேயாம். இந்தப் பட்டினத்தின் தெருக்கள் மிகவும் ஒடுங்கியவாயிருக்கின்றன. அநேகம் வீடுகள் நெருப்புக் கதியாய்ப் பற்றத்தக்க வஸ்துக்களினாலே கட்டப்பட்டிருக்கின்றன. அரண்மனையைத் தவிர அநேகம் பள்ளிவாசல்களுண்டு. ஐதிராபாத்து ஒருமுறை தக்கணத்துக்குத் தலைப்பட்டினமாயிருந்தது.





*நாகபுரம் அல்லது பீரார் இராசாவின் துரைத்தன மாகாணங்கள்.*—Territories of the NagpoorRajah.

கந்தவன நாடு.—Gudwana.

*நாகப்பூர் இராசாவின் மாகாணங்கள் எவை?*

கந்தவனநாட்டின் மிகுதியான பிரிவுகள் இந்த இராசாவின் ஆளுகைக்குட்பட்டிருக்கின்றன.

*அதின் எல்லைகள் என்ன?*

வடக்கில் அல்லாபாத்து, பாகார் நாடுகளும், கிழக்கில் வடசருக்கார் நாடுகள், ஓரிசா, பங்காளம், பாகார் நாடுகளுந் தெற்கிலும் மேற்கிலுநீசாமுடைய தேசங்களும் மாழவதேசங்களுமானவைகளே.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௪௱) மயில் நீளமும் (௨௱௮௰) மயில் அகலமுமே.

*அதின் சிறு நாடுகள் எவை?*

வரத (Wurdah) நதிக்குக் கிழக்கே போகலம், (Boghela) சந்தேல், (Chandail) பில்லவுஞ்சார், (Billounja) சிங்குரோலி, (Singrowly) சோகாசிப்பூர், (Sohajipoor) காருமந்தளா, (Gurrah Mundla) நாகபுரம் என்பவைகளும், சிறிகூசம், (Sirgooja) சஸ்பூர், (Jushpoor) இரட்டினபுரம், (Ruttunpoor) கங்காப்பூர், (Gangpoor) சம்பலப்பூர், (Sumbhulpoor) சந்தாய் (Chandah) என்பவைகளுமே.

*நாகப்பூர் இராசாவுக்குச் சேர்ந்த குடிசனங்கள் எவ்வளவு?*

(௩௰) இலட்சம். இவர்கள் முரட்டாட்டமுள்ளவர்களுங் காட்டுத்தனமுள்ளவர்களும் ஒவ்

RangaRakes

tamilnavarasam.com

வொரு கோத்திரத்துக்கொவ்வொரு தலைவனுகஅநேக கோத்திரங்களாயிருக்கிறார்கள். இந்தக் கோத்திரத் தலைவர் எல்லாரும் இராசாவுக்குத் திறை கொடுத்து வருகிறார்கள்.

தேசத்தின் சாயல் என்ன?

மிகுதியான பங்கு மலையுங் காடுஞ் செடிகளுஞ் சன நெருக்கமில்லாத இடமுமாயிருக்கின்றது. நாகபுரத்து இராசாவின் நாடுகள் மிகவுஞ் செழிப்பும் புரோசனமுள்ளவைகளாயும் இருக்கின்றன. மிச்சமாயிருக்கிற பகுதிகளைச் செய்கைப்படுத்தக் கூடுமேயாகிற் செழிப்பாயிருக்கும், இவ்விடத்தில் மூங்கில் மிகுதி.

பிரதான பட்டினங்கள் எவை?

நாகபுரம், (Nagapuram or Nagpoor) ரத்தன் புரம், (Ruttanpoor) சந்தா, (Chandah) றையிப்பூர் (Rypoor) இவைகளே. இவைகளில் நாகபுரந் தலைப்பட்டினம்.

நாகபுரம் எப்படிப்பட்ட இடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது?

மலை சூழ்ந்த உயர்ந்த தரையில். அதின் தெருக்கள் மிகவும் ஒடுங்கியவுந் துப்புரவீனமுள்ளவைகளுமாயிருக்கின்றன. வீடுகள் விசாலமானவைகளல்ல, மிகுதியானவை ஓட்டுவீடுகள்.

நாகபுரத்தின் சனத்தொகை எவ்வளவு?

(௮௰௫.)

---



## அயோத்தியா.—Oude or Aydhia.

அயோத்தியாவின் எல்லைகள் எவை?

வட திசைக்கு நேபாளத்துக்குக் கீழ்ப்பட்ட சிறுநாடுகளுங் காடுகளும் மலைகளும், தென்திசைக்கு அல்லாபாத்தும், கீழ்த்திசைக்குப் பாகாரும், மேற்றிசைக்கு தெல்லி அக்கிறாவுமானவைகளே.

பிரதான பிரிவுகள் என்ன?

அயோத்தி, கோரக்ப்பூர், (Goruckpoor) பாரேயிச்சி, (Baraitche) கீராபாத்து, (Kyrabad) இலட்சுமணபதி, (Lucknow) என்பவைகளே. இவைகளில் இலட்சுமணபதி, கீராபாத்து, பாரேயிச்சி, மாணிப்பூரின், (Manicpore) ஒருபகுதி இவ்வளவும் அயோத்தியின் நபாபு விசியருக்குச் (Nabob Vizier) சேர்ந்தவைகளாயிருக்கின்றன.

நீளமகலம் என்ன?

(உ௱௫௰) மயில் நீளமும் (௱) மயில் அகலமும்.

இத்தேசத்திலுள்ளவைகளைக் குறித்து அறிந்திருக்கிறதென்ன?

இவ்விடத்திலுங் காசிப்பட்டினத்திலும் அக்கிறாவின் துவாப்பிலுமுள்ள இந்துச் சனங்கள் கலக்குத்தாமுதலிய நகரிகளில் இருப்பவர்களைப் பார்க்க அதிக சாமர்த்தியமுள்ளவர்களும் மிகுந்த பலசாலிகளுமாய் இருக்கிறார்கள். இந்தியருடைய சரித்திரங்களிற் காண்கிறபடி அயோத்தியில் தசரதமகாராசா இருந்து இராச்சியம்பண்ணினாரென்றும், அவருக்குப் புத்தி

RangaRakes
tamilnavarasam.com

ரனாக விட்டுணு இராமஅவதாரமெடுத்து இலங்கைக்கு இராவணனுக்கு விரோதமாகப் படையெடுத்துப் போனாரென்றும் அறிகிறோம்: மோகுல் இராசாக்கள் தேசத்தைப் பிடித்து தெல்லித் துரைத்தனத்துடன் சேர்த்திருந்தார்கள். மறுபடி ஆரங்கிசிபிராயன் சாக, மோகுல் இராச்சியத்தின் மகிமை குறைய அயோத்தி பிரிந்துவிட்டது.

*நிலம் எப்படிப்பட்டது?*

திறமாய்ச் செய்கைப்படுத்தப்பட்டாற்கோதுமை, வாற்கோதுமை, கரும்புமுதலிய புரோசனங்கள் உண்டாம். இப்பொழுதும் போசனத்துக்கடுத்த கீரைவகைகளும் அவுரியும், அவினும் வெடிலுப்பும் அவ்விடத்திலுண்டு.

*பிரதான நதிகள் எவை?*

கங்கைநதி, கோமுட்டிநதி, கொக்கருநதி இவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

இலட்சுமணநகரம், விசபாத்து, (Fyzabad) அயோத்தி, கிராபாத்து, கோரக்ப்பூர், பாரேயிச்சி, மானிப்பூர் இவைகளே. இவைகளில் இலட்சுமணநகரந் தலைப்பட்டினமாயிருக்கின்றது. ஆகிலுந் தெருக்கள் மிகவும் ஒடுக்கம், நபாபுவிசியருடைய அரண்மனையும் பள்ளிவாசல்களும் மிகவும் அலங்காரமாயிருக்கின்றன. எல்லாம் மூடுசாந்திலுஞ் செங்கல்லிலுஞ் செய்யப்பட்டுச் சித்திரந் தீர்ந்தவைகளாயிருக்கின்றன. கொக்கருநதியின் தெற்குப் புறத்தி



லே கட்டப்பட்டிருந்த விசபாத்து முற்காலத்திலே தலைப்பட்டினமாயிருந்தும் இப்பொழுது ஒரு சிறு பட்டினமாயிருக்கின்றது. அவ்விடத்திலும் அநேகம் அரண்மனைகள் இப்பொழுது நபாபுக்குடைத்தாயிருக்கின்றன.

*இப்பொழுதிருக்கிற அயோத்தியைப்பற்றி அறிந்தவைகள் என்ன?*

அத்தேசத்திற்சனங்கள் ஐதாய்த் தூரத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள். நடுப்பக்கம் மிகவுங்காடுஞ் செடியுமாயிருக்கின்றது. இராமர் சீதை, அனுமார், இலட்சுமணர் முதலியவர்கள் திரேதாயுகத்தில் இவ்விடத்தில் வாசம்பண்ணினார்களென்பதாய் இராமாயணமுதலிய புலமைகளிற் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்களுக்குக் கட்டப்பட்டிருக்கிற அநேகங் கோவில்கள் இவ்விடத்தில் இந்நாள் வரைக்கும் இருக்கின்றன. அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி என்னுமந்திரியுடன் இருந்து இவ்விடத்தில் இராச்சிய பரிபாலனம் பண்ணி வந்தானெனவுஞ் சொல்லியிருக்கின்றது.

———

## குபிக்கோவார் இராசாவின் ராச்சியங்கள்.—Territories of the Guiowar Rajah.

### குசராத்து or கூர்ச்சரராஷ்டிரம்.—Gujerat.

*குயிக்கோவார் இராசாவுக்குச் சேர்ந்த நாடுகள் எவை?*

குசராத்துநாட்டின் மிகுதியான மாகாணங்கள் இந்த இராசாவுக்கும் மிச்சம் கும்பினியாராகிய பிறித்தானியாருக்கும் உடைத்தாயிருக்கி

RangaRakes
tamilnavarasam.com

ன்றன. குயிக்கோவாருக்குச் சேர்ந்த இடங்களிற் பெரும்பாலும் மராட்டியர் இருக்கிறார்கள். தரையின் மிகுதியான பங்கு செழிப்பாயிருந்தும் வெகு காலமாக இராசாவில்லாமல் இராச்சியம் பொதுவாயிருந்தபடியாற் காணிபூமிகள் செய்கையில்லாமலத் தரவையாயிருந்தன.

*குசராத்தின் எல்லைகள் எவை?*

வடக்கு ஆசுமீரம், தெற்கு கடலும் ஆரங்கபாத்தும், கிழக்கு மாழுவமும் காந்தீசமும் மேற்கு பெரிய மணற்காடுங் கச்சுநாடுமானவைகளே.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௩௱௨௰) மயில் நீளமும் (௱௮௰) மயில் அகலமுமே.

*குசராத்திலுள்ள சிறுநாடுகள் என்ன?*

ஆமேதபாத்து, (Ahmedabad) பற்றன், (Puttn) நாதோத்து, (Nadowt) பேரோதை (Behrodeh) பேரோச்சி (Behroatch) சம்பனிர், (Chumpaneer) கோதேரம், (Kodehra) சோருதம், (Soret) இவைகளில் (௱௯௮) பிரிவுகள் உண்டு அவற்றுள் (௰௫) பிரிவுகளில் துறைமுகங்கள் உண்டு.

*எப்படிப்பட்ட தேசம்?*

கிழக்குப் பக்கங்கள் மலையடுத்தவைகளுங் காடுமிகுத்தவைகளும் மேற்குப்பகுதிகள் ஒப்புரவாயுஞ் சதகல் நிலமுமாயிருக்கின்றன. அந்நிலத்திற்கு உருன் (Runn) எனப்பெயர். சதகல் நிலங்களிலுங் காடுகளிலும் மலைகளிலுங் கள்வர் மிகுதி.



*பிரதான நதிகள் என்ன?*

நிருமதை, தப்த்தி, மகேந்திரமென்பவைகளே.

*இத்தேசத்திற் குடியிருக்கிற சாதிகளார்?*

கிராசியர், (Grassias) காட்டியர், (Catties) கூலியர், (Coolies) மீவாசியர் (Mewassies) பீலர் (Bheels) என்னுங் கள்ளச் சாதியார் மாகீநதிக்கு (Mahy river) வடக்கேயுள்ள சனங்களில் அரைவாசியிவர்களே. இவர்களிற் கூலிஎன்னப்பட்டவர்கள் கொடியசண்டாளர். பாழ்சியர், சயனர், (Jains) வணியர் முதலிய பலமதத்தவர்களுமுண்டு. அக்கினிபத்தராகிய பாழ்சியர் தீயுமுனை, (Point Diu) கம்பை, (Cambay) பாரிகாசம், (Barigaza) அகிலேசியா, (Oclaseer) அஞ்சுத்து, (Hansoot) வீரியோ, (Veriou) சூரத்து, (Surat) நவசாரி, (Nowsaree) ஊற்றுவார், (Oodwar) தேமான், (Damaun) வேம்பாய் (Bombay) முதலிய இடங்களில் மிகுதியாய்க் குடியிருக்கிறார்கள்.

*பிரதான பட்டினங்கள் என்ன?*

சூரத்து, ஆமேதபாத்து, புரோச்சு, கம்பை, கோகம், சம்பனீர், அவைகளில் சூரத்து தலைப்பட்டினம்.

*குயிக்கோவார் சீமையின் சனத்தொகை என்ன?*

(௨௰) இலட்சம்.

*தலைப்பட்டினம் என்ன?*

பரோடா (Brodera) அல்லது பரோடிரா. அதிற்பிரதானமான இரண்டு தெருக்களுண்டு.

RangaRakes
tamilnavarasam.com

அந்தப்பட்டினம் ஒருமுறை மகம்மது மார்க்கத்தாருடைய ஆளுகையின் கீழிருந்தபடியால் அவர்களுடைய காலத்திற் கட்டப்பட்ட சிறப்பான அரண்மனைகள் இப்பொழுதும் இருக்கின்றன. அதிலுள்ள மராட்டியருடைய கட்டுவேலைகள் மிகவுந்திறமானவைகளல்ல.

*குயிக்கோவார் இராசாவுக்குத் திறைகொடுக்கிறவர்கள் ஆர்?*

குசராத்தின் பற்பல பிரிவுகளிலுமுள்ள பிறதானிகள், ஆகிலும் அது எப்பொழுதுஞ் சரிவர நடக்கிறதில்லை. நொநெக்கரின், (Noanagur) பிரதானியும் வேறடா, (Baroda) அல்லது பூபந்தரின், (Boorbunder) பிரதானிகளும் இராசபீப்பிலாவின், (Rajapepla) இராசாவும் ஒழுங்காயிறுத்துவருகிறார்கள். முற்காலத்திற் சோமநாதர் கோவில் குயிக்கோவார் சீமையில் எங்கும் பேர்போனதாயிருந்தது. மறுபடி கிஷ்ணி (Gizni) நகரத்திலிருந்து சுலுத்தான்மாமுதுவந்து கொள்ளையாடின பின் அதின் கீர்த்தி மங்கிப் போயிற்று.

---

### கச்சு தேசத்தின் இராசாவாகிய இராவுக்குச் சேர்ந்த இடங்கள்.—Territories of the Rao of Cutch.

*இராவுக்குச் சேர்ந்த தேசங்கள் எவை?*

பலபல பிரிவாய்ப் பலபல பிரதானிகளாலும் ஆளுகைசெய்யப்பட்டுவரும் கச்சுதேசமுழுவதும் இராவுக்குச் சேர்ந்திருக்கின்றது.

*கச்சுநாட்டின் எல்லைகள் எவை?*

வட திசைக்குச் சிந்துதேசமுங் காடும், தென்றிசைக்கு இந்துசமுத்திரம், கச்சுக்குடாக்கடல், கிழக்குத்திசைக்குக் குசராத்து, மேற்குத்திசைக்குச் சிந்து தேசம்.



*அதின் நீளம் அகலம் என்ன?*

(௱௬௰) மயில்நீளம் (௯௰௫) மயில்அகலம்.

*நிலம் எப்படிப்பட்டது?*

காடுஞ்செய்கையில்லாததும் நடுப்பகுதிகள் அறியப்படாதவைகளுமாயிருக்கின்றன. மிகுதியான பங்குகள் காடும் பாழ்நிலங்களுமே. கச்சுநாட்டின் குதிரைகள் நல்லமட்டங்களாயும் அரபிக் குதிரைகள் இனத்திலே கூடியவைகளாயுமிருக்கின்றன. நிலங்கள் செய்கைபண்ணப்பட்டால் வர்த்திப்பாய் அதிக புரோசனங்களைக் கொடுக்கும். கச்சுநாட்டின் பதிவானவிடங்கள் கலடாயிருக்கின்றன. அநேக மலையருவிகள் இவ்விடத்தில் உண்டு. பிரதான நதிகள் இல்லை. சனங்கள் போர்த்தொழிலில் விருப்பமுள்ளவர்கள்.

*பிரதான பட்டினங்கள் எவை?*

பூச்சு, (Pooj) மந்தாவி, (Mandavie) அஞ்சர் (Anjar) யாரார், (Jarrah) கன்கோத்து, (Kuntcote கத்தேரியா,(Kuttaria) இவைகளே. இவைகளில் பூச்சு தலைப்பட்டினமேயாம். இராவு இராசாவின் அரண்மனைக்கடுக்க இருக்கிற இடமும் அவருடைய கோட்டையும் ஒழுங்கீனமாயிருக்கின்றன. வீடுகள் தெருக்களுக்கடுக்கக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளுக்கு நடுமுத்தம் உண்டு.

RangaRakes tamilnavarasam.com

*தன்னிட்டப்படி அரசாட்சி செய்துகொண்டு வருகிற பிரதானிகள் இருக்கிற இடங்கள் எவை?*

பூஞ்சுவார், (Punswara) டங்கார்ப்பூர், (Dungarpore) என்பவைகள் முன்னே உடையாப்பூர் இராசாவுக்குக் கீழாகவிருந்தும் இப்பொழுது தன்னரசு நாடுகளாயிருக்கின்றன. பூஞ்சுவார், டங்கார்ப்பூர் என்னும்பட்டினங்கள் அந்தந்தப்பேரையுள்ள மாகாணங்களுக்குத்தலைப்பட்டினமாயிருக்கின்றன.

---

## சத்தாரா இராசாவின் இராச்சியங்கள்.—Territories of the Rajah of Sattarah

*சத்தாரா இராசாவின் இராச்சியங்கள எவை?*

விசையப்பூரின் வட பக்கத்தில் இருக்கிற மாகாணங்களேயாம். இது மிகவும் மலையுள்ள தேசம். (௰௫) இலட்சங் குடி சனங்கள் இருக்கிறார்கள். இதின் எல்லைகளாவன, மேற்குத் திசைக்கு காற்ருடி மலைகள், தென்றிசைக்கு வாரணை (Warnah) நதி, கிஷ்ட்ணை நதி, வட திசைக்கு வீமா (Beemah) நதி, நீரா (Neerah) நதி, கிழக்குத் திசைக்கு நிசாமின் இராச்சியங்களானவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

சத்தாராள் நகரியுகோட்டையுந் தவிரப் பன்றிப்பூர் (Pundipoor) விசையப்பூர் முதலிய அநேகம் பட்டினங்கள் உண்டு. சத்தாரா நகரங் காற்ருடி மலைகளின் கிழக்குப் பக்கத்தில் இருக்கின்றது. அதில் ஒரு பேர்போன அரணை



கோட்டையும் விசேஷமான இராச அரண்மனையும் உண்டு.

*இவைகளேயன்றி வேறு பகுதிகளும் உண்டோ?*

சருவந்தாரி, (Sawantwari) அது கொங்கணநாட்டுக் குடாக்கடலுக்கும் மேற்குக் காற்ருடி மலைகளுக்குமூடாக இருக்கின்றது. தேசங் கறடு முரடானதாயிருந்துஞ் செய்கைப்படுத்தப்பட்டால் நல்ல நிலமாயிருக்கும். பிரதானபட்டினம் வாரி, அல்லது சர்வந்தாரி.

*கோலப்பூர் (Colapoor) எவ்விடத்தில் இருக்கின்றது?*

அரைவாசி காற்ருடி மலையினடியிலும் அரைவாசி மலையிலுமாகப் பொருந்யிருக்கிற ஒரு சிறுத் தேசமாயிருக்கின்றது. அது தன்னரசாட்சியான மராட்டியர் இருக்கிற இடம். பிரதான பட்டினங்களாவன, பாணெல்லா, (Parnella) மலகப்பூர், (Mulcapoor) இவைகளே. இவைகளிற் கோலப்பூர் தலைப்பட்டினமேயாம். அது மிகவும் பேர்போன இடம். அவர்கள் ஆளுகையில் அவர்களிடத்தில் இருந்து உலாந்தாக்காரர் பட்டினத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் மிகுந்த வியாபாரம் அவ்விடத்தில் நடந்தன. இப்பொழுதும் பலரும் மிளகு, தேங்காய், கைமரம், பலகைகள் முதலிய உடைமைகளை வியாபாரம் பண்ணிவருகிறார்கள்.. ஐரோப்பாருடைய கப்பல்களைப்போலத் திறமான கப்பல்களையும் இவ்விடத்திற் கட்டுகிறார்கள்.

---


tamilnavarasam.com

## திருவாளங்கோட்டின் இராசாவின் இராச்சியங்கள்.

## Territories of the Rajah of Travancore.

---

*திருவாளங் கோட்டின் எல்லைகள் எவை?*

வடதிசைக்குக் கொச்சி, கிழக்குத்திசைக்கு சங்கிலித்தொடர்பான மலைகள், தென்றிசைக்கும் மேற்றிசைக்கும் இந்து சமுத்திரம்.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௱௪௰) மயில் நீளம் (௪௰) மயில் அகலம்.

*தேசம் எப்படிப்பட்டது?*

தென்இந்து தேசத்திலுள்ள மற்றெந்தப் பிரிவுகளிலும் அதிக திறமாய்ச் செய்கைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மலைகளிலிருந்து எப்பொழுதும் அருவிபாய்ந்துகொண்டிருப்பதினாலே தேசஞ் செழிப்புங் குளிர்ச்சியுமாயிருக்கும். பள்ளத்தரைகள் பசுமையாயுஞ் செழிப்பாயும் இருக்கும். மரங்கள் மலைகளை மூடியிருக்கின்றன.

*புரோசனங்கள் என்ன?*

நெல்லு, மிளகு, ஏலம், இலவங்கம், சாதிப்பத்திரி, மஞ்சள், நீர்வள்ளி, சந்தனக்கட்டை, மற்றும் வாசனைச் சரக்குகளுமேயாம். காட்டுப்பக்கங்களில் யானை, குழுமாடு, புலி, குரங்கு, முதலிய மிருகங்கள் மிகுதி. அன்றியும் பல்வகை இராகப்பட்சிகள் அவ்விடத்திலுள்ள சோலைகளில் உண்டு. தேசசுவாத்தியம் மிகவுஞ் சவுக்கியமாயிருக்கின்றது. ஒருவருஷத்தில் மிளகு





(௫௬) ரூபாவுக்கு மேற்பட விலைப்படுகின்றது. தென்னமரங்கள் கொல்லம்முதலிய வடபகுதிகளில் மிகுதி. புகையிலை அவ்விடத்தில் அருமையானபடியால் யாழ்ப்பாணத்திலிருந்து வியாபாரத்துக்கேற்றப்படுகின்றது.

*பிரதான துறைமுகங்கள் என்ன?*

அஞ்சன் கோடு, (Anjengo) கொல்லம், (Quilon) ஐயபாக்கம், (Aibecca) போற்கை, (Porca) கோலாச்சி (Coleshy) இவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

திருவனந்தபுரம், (Trivanderam) திருவாளங்கோடு, (Travancore) அஞ்சன்கோடு, கொல்லம், ஆலப்பிளா, (Alapilah) கோட்டாறு, (Cottaroo) போற்கை இவைகளே. திருவனந்தபுரம் இப்பொழுது தலைப்பட்டினமாயிருக்கின்றது. இவ்வூரிற் கிறிஸ்துமார்க்கம் வெகுகாலத்துக்குமுன் உண்டாகி வெகுதூரம் பரம்பினது. இப்பொழுது (௯௰௲) சீரியசபைக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

*இவ்வூரிற் குடியிருப்பவர்கள் என்ன சாதிகள்?*

நம்பூரிப்பிராமணர், மாப்பிளைகள், நாயர், திரும்பர். இவர்களில் நாயர்கள் போர்த்தொழிலிற் பயின்று இராணுவ சேனைகளாயிருக்கிறார்கள். இவர்களுக்குரிய ஓர் வழக்கமென்னவெனில் விவாகம்பண்ணின அன்றேயல்லாமற் பெண்சாதிமுகத்தைப் புருஷன் கண்டிரான், புருஷன்முகத்தைப் பெண்சாதி கண்டிராள். ஆ

கையால் ஆணாகுதல் பெண்ணாதல் சோரத்தனமாய் நடப்பது அச்சாதிக்குரிய வழக்கம். நாயர் மலையாளத்தில் மிகுதியாயிருக்கிறார்கள்.

---

## கோச்சி இராசாவின் இராச்சியங்கள்.—Territories of the Rajah of Cochin.

*கொச்சியைக் குறித்து என்ன சொல்லக் கூடும்?*

அது திருவாளங்கோட்டுக்கு வடக்காக இருக்கிற ஒரு சிறுத்தேசம். இதிலொரு பகுதி பிறித்தானியருக்கும் மிச்சம் அவ்வூரின் இராசாவுக்குமுடைத்தாயிருக்கின்றது.

*கொச்சியின் எல்லைகள் எவை?*

வடக்கே மலையாள இராச்சியம், தெற்கே திருவாளங்கோடு, கிழக்கே திண்டிக்கல், மேற்கே கடல்.

*அது எப்படிப்பட்ட பூமி?*

செழிப்பானபூமி தேக்குமுதலிய மரங்கள் மிகுதி. தேசம் உயரமும் பள்ளத்தரைகள் மிகவுஞ் செழிப்புள்ளவைகளுமாயிருக்கின்றன. ஒரு வருஷத்துக்கிரண்டு முறை வெட்டுவேளாண்மை இருக்கும். அவ்விடத்திற் தோமாவின் பின்னடியாராகிய நசரேயக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். கொச்சியிலே யூதர் மிகுதி. அவர்கள் இருக்கும் பகுதிக்கு மாட்டச்சேரியென்னும்பெயர்.

*இத்தேசத்தவர்கள்வர்த்தகம் பண்ணும் இடங்கள் எவை?*

சூரத்து, வெம்பாய், மலையாளக்கரை, கன்னரம், அரபிதேசம், சீனம், கிழக்கேயுள்ள தீவுகள். இத்தேசங்களுக்கு மிளகு, ஏலரிசி, தே



க்கமரம், சந்தனக்கட்டை, தேங்காய், கயிறு, இலவங்கம் முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டுபோய்த் திரும்பி வரும்பொழுது வாதுமைக்கொட்டை, பேரீச்சம்பழம், முத்து, விளாம்பிசின், பருத்தி, அவின், சால்வைகள், சாம்பிராணி, கருப்பூரம், கருவா, கந்தவருக்கங்கள், கற்கண்டு, தேயிலை, பட்டு முதலியவைகளைக் கொண்டு வருவார்கள்.

*கொச்சியின் உரோமான் கண்காணி இப்பொழுது எவ்விடத்தில் இருக்கிறார்?*

கொல்லத்தில்; கொச்சியின் தென்பகுதிகளும், நாகபட்டணம், இலங்கைத்தீவு, முதலியவிடங்களும், அவருடைய விசாரணைக்குள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் (௱) திருச்சபைகள் உண்டு.

*கொச்சியின் தலைப்பட்டினம் எது?*

கொச்சிநகரி. அது கடற்கரையிற் கட்டப்பட்டிருக்கின்றது. அதில்புடுத்துக்கீசுகாரர் (௲௫௱௩ம்) ஆண்டிலே வியாபாரம்பண்ணும் முகாந்தரமாகக் கோட்டை கட்டினார்கள், மறுபடி (௲௬௱௬௰௩ம்) ஆண்டிலே உலாந்தாக்காரர் அதைப் பிடித்துக் கொண்டார்கள்.

---

## ௰௪ அதிகாரம்.

### சிந்தியா இராசாவின் இராச்சியங்கள்.—Territories of Dowlet Row Sindia.

*மராடத்திலுள்ள சிந்தியா இராசாவின் இராச்சியங்கள் எவை?*

RangaRakes tamilnavarasam.com

அவைகள் அநேகமாயிருந்துஞ் சிறிதும் பெரிதுமாய் இங்குமங்கும் பகுதிப்பட்டிருக்கிறபடியால் அவைகளின் எல்லைகளைச் சரிவரச் சொல்வதரிது. ஆகிலும் மாழவமும், அக்கிறுவின் ஒரு பகுதியுங் காந்தீசத்தின் ஒரு பகுதியும் இந்த இராச்சியத்துக் குட்பட்டவைகளுக்குள் விசேஷமாயிருக்கின்றன. இராச்சியமோ இன்னும் அமைவாயிருக்கவில்லை. இவர்களுடைய இராசனாகிய தவுலாத்துறௌ சிந்தியா (Dowlet Row Sindia) என்பவர்தமது இட்டப்படி அரசாட்சி செய்கிறவராயிருந்தும் பேருக்கப்படி இருக்கிறதேயன்றி மற்றப்படி இங்கிலிஷ்காரருடைய செல்வாக்குக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்.

*பிரதான பட்டினங்கள் எவை?*

முற்காலத்திலே உச்சாயினியும் (Oojein or Uzni) இக்காலத்திலே குவாலியர்நகரியுந் (Gualior) தலைப்பட்டினமாயிருக்கின்றது. மாழவ தேசத்தில் இருக்கும் பேர்போன பட்டினமாகிய உச்சாயினி முட்டைவடிவமாய்க் கட்டப்பட்டிருக்கின்றது. அதைச் சூழ்ந்திருக்கிற மதிலில் அநேக கோபுரங்கள் உண்டு. (௬) மயில் சுற்றுள்ளது. பட்டினத்துக்குத் தென்புறத்திலுள்ள மதில் சுப்பாரா (Soopra river) நதியினாற் கழுவப்பட்டுச் சயசிங்கப்பூர் (Jeysingpoor) என்று கூறப்படுகின்றது. மிகுதியான வீடுகள் செங்கல்லினாலும் பலகைகளினாலுங் கட்டப்பட்டிருக்கின்றன. பட்டினத்துக்குள்



ஒருவிஸ்தாரமான தெருவும் அதற்கிரண்டு பக்கத்திலும் உயரமான இரண்டடுக்கு மெத்தைவீடுகளும் உண்டு. இதிற் கீழ்வீடுகள் பண்டங்கள்வைத்து விற்கிற கடைகளாகவும் மேல்வீடுகள் வாசஸ்தலங்களாகவும் வழங்கப்படுகின்றன. இப்பொழுதிருக்கிற பிரதான கட்டுவேலைகளாவன, அலங்காரமான நாலு பள்ளிவாசல்களும் பற்பல இந்துமதக் கோவில்களும் உச்சினிமாகாளியம்மன் கோவிலுஞ் செயசிங்கப்பூரில் சயநகரத்தில் (Jyenagur) இருந்த செயசிங்க மகாராசாவினாற் (Rajah Jeysingh) கட்டப்பட்டிருக்கிற ஒரு சோதிடோப்புரிகையுஞ் (Observatory) சிந்தியாவின் அரண்மனைகளுமேயாம். விக்கிரமாதித்தன், போசராசா என்பவர்கள் காலத்திலிருந்த முந்தின உச்சாயினி அக்காலத்திற் சாத்திரம் வித்தை தத்துவமுதலியவற்றில் மேற்பட்டுப் பலத்த இராச்சியமாயிருந்தது. விக்கிரமாதித்தன் இறந்தபின் அதின் மகிமையுங் குறைந்து அழிந்துபோயிற்று. அதற்குத் தெற்கே ஒரு மயில்தூரத்தில் இப்பொழுதிருக்கிற உச்சாயினிப்பட்டினங் கட்டப்பட்டிருக்கின்றது. இப்பட்டணத்தைக் குறித்துத் தமிழ்ப் பாடல்களிற்காணலாம். சங்கிருதத்தில் உக்ஷாயினி, அவந்தியென்றும் இதற்குப்பேர். சிப்பாரா நதியண்டையில் விக்கிரமாதித்தனின் தம்பியாகிய பார்த்தாரிராசாவின் (Rajah Bhirtery) கெபியிருக்கின்றது. அக்கெபி கல்லிற் குடையப்பட்டதாய்த் தூண்களாற் றாங்கப்பட்டிருக்கின்றது. அதின் உள்ளறையில் இருக்கிற மதில்களில் ஆண்சு

RangaRakes

tamilnavarasam.com

ருபங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. பார்த்தாரி இராசா அதற்குட் பிரவேசித்தபொழுது திரும்பிவாராமற் பூட்டிக்கொண்டிருந்து விட்டாரெனக் கேள்வி. அக்கெபி நிலவறையாகக் காசி, அரித்துவாரம் என்னும் நகரிகள்மட்டும் போயிருக்கின்றதென அவ்வூரவர்கள் சொல்லுவார்கள். (௲௨௱௯௰ம்) வருஷத்தில் துலுக்கர் பட்டினத்தைப் பிடித்து ஆண்டுவந்தார்கள். மகமதுஷா (Mohammed Shaw) வென்னுந் துலுக்க இராயன் ஆளுங்காலத்திற்பேர்போன செயசிங்கராசா வந்து பட்டினத்தைப் பிடித்து இராசரிக்கம் பண்ணிவந்தார். ஆனாலுஞ் சில காலத்தின் பின் மராட்டியர் வசமாயிற்று. நாலு தலைமுறையளவுக்குச் சிந்தியா ராசாவின் வமிசம் ஆண்டுவந்தார்கள். பெஷ்வா (Peshwa Bajerows) விடத்தில் கொம்மந்தனாயிருந்த சயப்ப சிந்தியா (Jyapa Sindia) இவ்வமிசத்தில் முதலாண்டான். அவனுக்குப் பின் அவன் புத்திரன் சங்கோசி (Junkojee) ஆண்டுவருகையிற் பன்னிப்பற்றில் (Paniput) நடந்தபோரில் மடிந்தான். மறுபடி அவன் மாமனாகிய இரானோசி (Ranojee) சிங்காசனத்திலேறி இராச்சியபரிபாலனம் பண்ணினான். அவன்மகன் கேதராசி (Kedarjee) அவன்மகன் ஆனந்தவுரு (Anund Row) அவன் புத்திரன் தவுலாத்துவுரு சிந்தியா, மாதகாசி சிந்தியா (Madhajee Sindia) என்பவர்கள் முறையே ஆண்டுவந்தார்கள்.

கல்குத்தாவுக்கும் இதற்கும் உள்ளதூரம் என்ன?

(௯௱௲ள) மயில். வேம்பாவிலிருந்து (௵ா)



நகல் நிலங்களிலுங் காடுகளிலும் மலைகளிலுங் கள்வர் மிகுதி.

பிரதான நதிகள் என்ன?

நிருமதை, தப்த்தி, மகேந்திரமென்பவைகளே.

இத்தேசத்திற் குடியிருக்கிற சாதிகளார்?

கிராசியர், (Grassias) காட்டியர், (Catties) கூலியர், (Coolies) மீவாசியர் (Mewassies) பீலர் (Bheels) என்னுங் கள்ளச் சாதியார் மாகிநதிக்கு (Mahy river) வடக்கேயுள்ள சனங்களில் அரைவாசிபேர்களே. இவர்களிற் கூலியென்னப்பட்டவர்கள் கொடியசண்டாளர். பாழ்சியர், சயனர், (Jains) வணியர் முதலிய பலமதத்தவர்களுமுண்டு. அக்கினிபத்தராகிய பாழ்சியர் தீயுமுனை, (Point Diu) கம்பை, (Cambay) பாரிகாசம், (Barigaza) அகிலேசியா, (Oclaseer) அஞ்சுத்து, (Hansoot) வீரியோ, (Veriou) சூரத்து, (Surat) நவசாரி, (Nowsaree) உதற்றுவார், (Ood war) தேமான், (Damaun) வேம்பாய் (Bombay) முதலிய இடங்களில் மிகுதியாய்க் குடியிருக்கிறார்கள்.

பிரதான பட்டினங்கள் என்ன?

சூரத்து, ஆமேதபாத்து, புரோச்சு, கம்பை, கோகம், சம்பனீர், அவைகளில் சூரத்து தலைப்பட்டினம்.

குபிச்கோவார் சீமையின் சனத்தொகை என்ன?

(௨௰) இலட்சம்.

தலைப்பட்டினம் என்ன?

பரோடா (Brodera) அல்லது பரோடிரா. அதிற்பிரதானமான இரண்டு தெருக்களுண்டு.

அந்தப்பட்டினம் ஒருமுறை மகம்மது மார்க்கத்தாருடைய ஆளுகையின் கீழிருந்தபடியால் அவர்களுடைய காலத்திற் கட்டப்பட்ட சிறப்பான அரண்மனைகள் இப்பொழுதும் இருக்கின்றன. அதிலுள்ள மராட்டியருடைய கட்டுவேலைகள் மிகவுந்திறமானவைகளல்ல.

குயிக்கோவார் இராசாவுக்குத் திறைகொடுக்கிறவர்கள் ஆர்?

குசராத்தின் பற்பல பிரிவுகளிலுமுள்ள பிறதானிகள், ஆகிலும் அது எப்பொழுதுஞ் சரிவர நடக்கிறதில்லை. நொநெக்கரின், (Noanagur) பிரதானியும் வேறடா, (Baroda) அல்லது பூபந்தரின், (Boorbunder) பிரதானிகளும் இராசபீப்பிலாவின், (Rajapepla) இராசாவும் ஒழுங்காயிறுத்துவருகிறார்கள். முற்காலத்திற் சோமநாதர் கோவில் குயிக்கோவார் சீமையில் எங்கும்பேர்போனதாயிருந்தது. மறுபடி கிஷ்ணி (Gizni) நகரத்திலிருந்து சுலுத்தான்மாமுதுவந்து கொள்ளையாடின பின் அதின் கீர்த்தி மங்கிப் போயிற்று.

---

## கச்சு தேசத்தின் இராசாவாகிய இராவுக்குச் சேர்ந்த இடங்கள்.—Territories of the Rao of Cutch.

இராவுக்குச் சேர்ந்த தேசங்கள் எவை?

பலபல பிரிவாய்ப் பலபல பிரதானிகளாலும் ஆளுகைசெய்யப்பட்டுவருங் கச்சுதேசமுழுவதும் இராவுக்குச் சேர்ந்திருக்கின்றது.

கச்சுநாட்டின் எல்லைகள் எவை?

வட திசைக்குச் சிந்துதேசமுங் காடும், தென்றிசைக்கு இந்துசமுத்திரம், கச்சுக்குடாக்கடல், கிழக்குத்திசைக்குக் குசராத்து, மேற்குத்திசைக்குச் சிந்து தேசம்.



அதின் நீளம் அகலம் என்ன?

(௱௪௰) மயில்நீளம் (௬௰௫) மயில்அகலம்.

நிலம் எப்படிப்பட்டது?

காடுஞ்செய்கையில்லாததும் நடுப்பகுதிகள் அறியப்படாதவைகளுமாயிருக்கின்றன. மிகுதியான பங்குகள் காடும் பாழ் நிலங்களுமே. கச்சுநாட்டின் குதிரைகள் நல்லமட்டங்களாயும் அரபிக் குதிரைகள் இனத்திலே கூடியவைகளாயுமிருக்கின்றன. நிலங்கள் செய்கைபண்ணப்பட்டால் வர்த்திப்பாய் அதிக புரோசனங்களைக் கொடுக்கும். கச்சுநாட்டின் பதிவானவிடங்கள் கலடாயிருக்கின்றன. அநேக மலையருவிகள் இவ்விடத்தில் உண்டு. பிரதான நதிகள் இல்லை. சனங்கள் போர்த்தொழிலில் விருப்பமுள்ளவர்கள்.

பிரதான பட்டினங்கள் எவை?

பூச்சு, (Pooj) மந்தாவி, (Mandavia) அஞ்சர் (Anjar) யாரார், (Jarrah) கன்கோத்து, (Kuntcote கத்தேரியா, (Kuttaria) இவைகளே. இவைகளில் பூச்சு தலைப்பட்டினமேயாம். இராவு இராசாவின் அரண்மனைக்கடுக்க இருக்கிற இடமும் அவருடைய கோட்டையும் ஒழுங்கீனமாயிருக்கின்றன. வீடுகள் தெருக்களுக்கடுக்கக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகளுக்கு நடுமுத்தம் உண்டு.

RangaRakes
tamilnavarasam.com

*தன்னிட்டப்படி அரசாட்சி செய்துகொண்டு வருகிற பிரதானிகள் இருக்கிற இடங்கள் எவை?*

பூஞ்சுவார், (Punswara) டங்கார்ப்பூர், (Dungarpore) என்பவைகள் முன்னே உடையாப்பூர் இராசாவுக்குக் கீழாகவிருந்தும் இப்பொழுது தன்னரசு நாடுகளாயிருக்கின்றன. பூஞ்சுவார், டங்கார்ப்பூர் என்னும்பட்டினங்கள் அந்தந்தப்பேரையுள்ள மாகாணங்களுக்குத்தலைப்பட்டினமாயிருக்கின்றன.

---

## சத்தாரா இராசாவின் இராச்சியங்கள்.—Territories of the Rajah of Sattarah

*சத்தாரா இராசாவின் இராச்சியங்கள் எவை?*

விசையப்பூரின் வட பக்கத்தில் இருக்கிற மாகாணங்களேயாம். இது மிகவும் மலையுள்ள தேசம். (௰௫) இலட்சங் குடி சனங்கள் இருக்கிறார்கள். இதின் எல்லைகளாவன, மேற்குத் திசைக்கு காற்றூடி மலைகள், தென்றிசைக்கு வாரணை (Warnah) நதி, கிஷ்ட்ணை நதி, வட திசைக்கு வீமா (Beemah) நதி, நீரா (Neerah) நதி, கிழக்குத் திசைக்கு நிசாமின் இராச்சியங்களானவைகளே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

சத்தாராள் நகரியுகோட்டையுந் தவிரப் பண்டிப்பூர் (Pundipoor) விசையப்பூர் முதலிய அநேகம் பட்டினங்கள் உண்டு. சத்தாரா நகரங் காற்றூடி மலைகளின் கிழக்குப் பக்கத்தில் இருக்கின்றது. அதில் ஒரு பேர்போன அரணை



கோட்டையும் விசேஷமான இராச அரண்மனையும் உண்டு.

*இவைகளேயன்றி வேறு பகுதிகளும் உண்டோ?*

சருவந்தாரி, (Sawantwari) அது கொங்கண நாட்டுக் குடாக்கடலுக்கும் மேற்குக் காற்றூடி மலைகளுக்குமூடாக இருக்கின்றது. தேசங் கரடு முரடானதாயிருந்துஞ்செய்கைப்படுத்தப்பட்டால் நல்ல நிலமாயிருக்கும். பிரதானபட்டினம் வாரி, அல்லது சர்வந்தாரி.

*கோலப்பூர் (Colapoor) எவ்விடத்தில் இருக்கின்றது?*

அரைவாசி காற்றூடி மலையினடியிலும் அரைவாசி மலையிலுமாகப் பொருந்யிருக்கிற ஒரு சிறுத் தேசமாயிருக்கின்றது. அது தன்னரசாட்சியான மராட்டியர் இருக்கிற இடம். பிரதான பட்டினங்களாவன, பாரணெல்லா, (Parnella) மலகப்பூர், (Mulcapoor) இவைகளே. இவைகளிற் கோலப்பூர் தலைப்பட்டினமேயாம். அது மிகவும் பேர்போன இடம். அவர்கள் ஆளுகையில் அவர்களிடத்தில் இருந்து உலாந்தாக்காரர் பட்டினத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அக்காலத்தில் மிகுந்த வியாபாரம் அவ்விடத்தில் நடந்தன. இப்பொழுதும் பலரும் மிளகு, தேங்காய், கைமரம், பலகைகள் முதலிய உடைமைகளை வியாபாரம் பண்ணிவருகிறார்கள்.. ஐரோப்பாருடைய கப்பல்களைப்போலத் திறமான கப்பல்களையும் இவ்விடத்திற் கட்டுகிறார்கள்.

---

RangaRakes

tamilnavarasam.com

## திருவாளங்கோட்டின் இராசாவின் இராச்சியங்கள்.

## Territories of the Rajah of Travancore.

---

திருவாளங் கோட்டின் எல்லைகள் எவை?

வடதிசைக்குக் கொச்சி, கிழக்குத்திசைக்கு சங்கிலித்தொடர்பான மலைகள், தென்றிசைக்கும் மேற்றிசைக்கும் இந்து சமுத்திரம்.

அதின் நீளம் அகலம் என்ன?

(௱௪௰) மயில் நீளம் (௪௰) மயில் அகலம்.

தேசம் எப்படிப்பட்டது?

தென்இந்து தேசத்திலுள்ள மற்றெந்தப் பிரிவுகளிலும் அதிக திறமாய்ச் செய்கைப்படுத்தப்பட்டிருக்கின்றது. மலைகளிலிருந்து எப்பொழுதும் அருவிபாய்ந்துகொண்டிருப்பதினாலே தேசஞ் செழிப்புங் குளிர்ச்சியுமாயிருக்கும். பள்ளத்தரைகள் பசுமையாயுஞ் செழிப்பாயும் இருக்கும். மரங்கள் மலைகளை மூடியிருக்கின்றன.

புரோசனங்கள் என்ன?

நெல்லு, மிளகு, ஏலம், இலவங்கம், சாதிப்பத்திரி, மஞ்சள், நீர்வள்ளி, சந்தனக்கட்டை, மற்றும் வாசனைச் சரக்குகளுமேயாம். காட்டுப்பக்கங்களில் யானை, குழுமாடு, புலி, குரங்கு, முதலிய மிருகங்கள் மிகுதி. அன்றியும் பல்வகை இராகப்பட்சிகள் அவ்விடத்திலுள்ள சோலைகளில் உண்டு. தேசசுவாத்தியம் மிகவுஞ் சவுக்கியமாயிருக்கின்றது. ஒருவருஷத்தில் மிளகு





(௫௲) ரூபாவுக்கு மேற்பட விலைப்படுகின்றது. தென்னமரங்கள் கொல்லம்முதலிய வடபகுதிகளில் மிகுதி. புகையிலை அவ்விடத்தில் அருமையானபடியால் யாழ்ப்பாணத்திலிருந்து வியாபாரத்துக்கேற்றப்படுகின்றது.

பிரதான துறைமுகங்கள் என்ன?

அஞ்சன் கோடு, (Anjengo) கொல்லம், (Quilon) ஐயபாக்கம், (Aibecca) போற்கை, (Porca) கோலாச்சி (Coleshy) இவைகளே.

பிரதான பட்டினங்கள் எவை?

திருவனந்தபுரம், (Trivanderam) திருவாளங்கோடு, (Travancore) அஞ்சன்கோடு, கொல்லம், ஆலப்பிளா, (Alapilah) கோட்டாறு, (Cottaroo) போற்கை இவைகளே. திருவனந்தபுரம் இப்பொழுது தலைப்பட்டினமாயிருக்கின்றது. இவ்வூரிற் கிறிஸ்துமார்க்கம் வெகுகாலத்துக்கு முன் உண்டாகி வெகுதூரம் பரம்பினது. இப்பொழுது (௯௰௲) சீரியசபைக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்.

இவ்வூரிற் குடியிருப்பவர்கள் என்ன சாதிகள்?

நம்பூரிப்பிராமணர், மாப்பிளைகள், நாயர், குரும்பர். இவர்களில் நாயர்கள் போர்த்தொழிலிற் பயின்று இராணுவ சேனைகளாயிருக்கிறார்கள். இவர்களுக்குரிய ஓர் வழக்கமென்னவெனில் விவாகம்பண்ணின அன்றேயல்லாமற் பெண்சாதிமுகத்தைப் புருஷன் கண்டிரான், புருஷன்முகத்தைப் பெண்சாதி கண்டிராள். ஆ

RangaRakes
tamilnavarasam.com

கையால் ஆணாகுதல் பெண்ணாகுதல் சோரத்தனமாய் நடப்பது அச்சாதிக்குரிய வழக்கம். நாயர்மலையாளத்தில் மிகுதியாயிருக்கிறார்கள்.

---

### கோச்சி இராசாவின் இராச்சியங்கள்.—Territories of the Rajah of Cochin.

*கொச்சியைக் குறித்து என்ன சொல்லக் கூடும்?*

அது திருவாளங்கோட்டுக்கு வடக்காக இருக்கிற ஒரு சிறுத்தேசம். இதிலொருபகுதி பிறித்தானியருக்கும் மிச்சம் அவ்வூரின் இராசாவுக்குமுடைத்தாயிருக்கின்றது.

*கொச்சியின் எல்லைகள் எவை?*

வடக்கே மலையாள இராச்சியம், தெற்கே திருவாளங்கோடு, கிழக்கே திண்டிக்கல், மேற்கே கடல்.

*அது எப்படிப்பட்ட பூமி?*

செழிப்பானபூமி தேக்குமுதலிய மரங்கள் மிகுதி. தேசம் உயரமும் பள்ளத்தரைகள் மிகவுஞ் செழிப்புள்ளவைகளுமாயிருக்கின்றன. ஒரு வருஷித்துக்கிரண்டு முறை வெட்டுவேளாண்மை இருக்கும். அவ்விடத்திற் தோமாவின் பின்னடியாராகிய நசரேயக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். கொச்சியிலே யூதர் மிகுதி. அவர்கள் இருக்கும் பகுதிக்கு மாட்டச்சேரியென்னும்பெயர்.

*இத்தேசத்தவர்கள் வர்த்தகம் பண்ணும் இடங்கள் எவை?*

சூரத்து, வேம்பாய், மலையாளக்கரை, கன்னரம், அரபிதேசம், சீனம், கிழக்கேயுள்ள தீவுகள். இத்தேசங்களுக்கு மிளகு, ஏலரிசி, தேக்கமரம், சந்தனக்கட்டை, தேங்காய், கயிறு, இலவங்கம் முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டுபோய்த் திரும்பி வரும்பொழுது வாதுமைக்கொட்டை, பேரீச்சம்பழம், முத்து, விளாம்பிசின், பருத்தி, அவின், சால்வைகள், சாம்பிராணி, கருப்பூரம், கருவா, கந்தவருக்கங்கள், கற்கண்டு, தேயிலை, பட்டு முதலியவைகளைக் கொண்டு வருவார்கள்.



*கொச்சியின் உரோமான் கண்காணி இப்பொழுது எவ்விடத்தில் இருக்கிறார்?*

கொல்லத்தில்; கொச்சியின் தென்பகுதிகளும், நாகபட்டணம், இலங்கைத்தீவு, முதலியவிடங்களும், அவருடைய விசாரணைக்குள் இருக்கின்றன. எல்லாவற்றிலுந் (௩) திருச் சபைகள் உண்டு.

*கொச்சியின் தலைப்பட்டினம் எது?*

கொச்சிநகரி. அது கடற்கரையிற் கட்டப்பட்டிருக்கின்றது. அதில்புடுத்துக்கீசுகாரர் (௲௫௱௩ம்) ஆண்டிலே வியாபாரம்பண்ணும் முகாந்தரமாகக் கோட்டை கட்டினார்கள், மறுபடி (௲௬௱௬௩ம்) ஆண்டிலே உலாந்தாக்காரர் அதைப் பிடித்துக் கொண்டார்கள்.

---

## ௰௪ அதிகாரம்.

### சிந்தியா இராசாவின் இராச்சியங்கள்.—Territories of Dowlet Row Sindia.

*மராடத்திலுள்ள சிந்தியா இராசாவின் இராச்சியங்கள் எவை?*

RangaRakes tamilnavarasam.com

அவைகள் அநேகமாயிருந்துஞ் சிறிதும் பெரிதுமாய் இங்குமங்கும் பகுதிப்பட்டிருக்கிறபடியால் அவைகளின் எல்லைகளைச் சரிவரச் சொல்வதரிது. ஆகிலும் மாழுவமும், அக்கிருவின் ஒரு பகுதியுங் காந்தீசத்தின் ஒரு பகுதியும் இந்த இராச்சியத்துக் குட்பட்டவைகளுக்குள் விசேஷமாயிருக்கின்றன. இராச்சியமோ இன்னும் அமைவாயிருக்கவில்லை. இவர்களுடைய இராசனாகிய தவுலாத்துரௌ சிந்தியா (Dowlet Row Sindia) என்பவர்தமது இட்டப்படி அரசாட்சி செய்கிறவராயிருந்தும் பேருக்கப்படி இருக்கிறதேயன்றி மற்றப்படி இங்கிலிஷ்காரருடைய செல்வாக்குக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்.

*பிரதான பட்டினங்கள் எவை?*

முற்காலத்திலே உச்சாயினியும் (Oojein or Uzni) இக்காலத்திலே குவாலியர்நகரியுந் (Gualior) தலைப்பட்டினமாயிருக்கின்றது. மாழுவ தேசத்தில் இருக்கும் பேர்போன பட்டினமாகிய உச்சாயினி முட்டைவடிவமாய்க் கட்டப்பட்டிருக்கின்றது. அதைச் சூழ்ந்திருக்கிற மதிலில் அநேக கோபுரங்கள் உண்டு. (௬) மயில் சுற்றுள்ளது. பட்டினத்துக்குத் தென்புறத்திலுள்ள மதில் சுப்பாரா (Soopra river) நதியினாற் கழுவப்பட்டுச் சயசிங்கப்பூர் (Jeysing-poor) என்று கூறப்படுகின்றது. மிகுதியான வீடுகள் செங்கல்லினாலும் பலகைகளினாலுங் கட்டப்பட்டிருக்கின்றன. பட்டினத்துக்குள்



ஒருவிஸ்தாரமான தெருவும் அதற்கிரண்டு பக்கத்திலும் உயரமான இரண்டடுக்கு மெத்தை வீடுகளும் உண்டு. இதிற் கீழ்வீடுகள் பண்டங்கள் வைத்து விற்கிற கடைகளாகவும் மேல்வீடுகள் வாசஸ்தலங்களாகவும் வழங்கப்படுகின்றன. இப்பொழுதிருக்கிற பிரதான கட்டுவேலைகளாவன, அலங்காரமான நாலு பள்ளிவாசல்களும் பற்பல இந்துமதக் கோவில்களும் உச்சினிமாகாளியம்மன் கோவிலுஞ் செயசிங்கப்பூரில் சயநகரத்தில் (Jyenagur) இருந்த செயசிங்க மகாராசாவினாற் (Rajah Jeysingh) கட்டப்பட்டிருக்கிற ஒரு சோதிடோப்புரிகையுஞ் (Observatory) சிந்தியாவின் அரண்மனைகளுமேயாம். விக்கிரமாதித்தன், போசராசா என்பவர்கள் காலத்திலிருந்த முந்தின உச்சாயினி அக்காலத்திற் சாத்திரம் வித்தை தத்துவமுதலியவற்றில் மேற்பட்டுப் பலத்த இராச்சியமாயிருந்தது. விக்கிரமாதித்தன் இறந்தபின் அதின் மகிமையுங் குறைந்து அழிந்துபோயிற்று. அதற்குத் தெற்கே ஒரு மயில்தூரத்தில் இப்பொழுதிருக்கிற உச்சாயினிப் பட்டினங் கட்டப்பட்டிருக்கின்றது. இப்பட்டணத்தைக் குறித்துத் தமிழ்ப் பாடல்களிற் காணலாம். சங்கிருதத்தில் உக்ஷாயினி, அவந்தியென்றும் இதற்குப்பேர். சிப்பாரா நதியண்டையில் விக்கிரமாதித்தனின் தம்பியாகிய பார்த்தாரிராசாவின் (Rajah Bhirtery) கெபியிருக்கின்றது. அக்கெபி கல்லிற் குடையப்பட்டதாய்த் தூண்களாற் றாங்கப்பட்டிருக்கின்றது. அதின் உள்ளறையில் இருக்கிற மதில்களில் ஆண்சு

RangaRakes
tamilnavarasam.com

ருபங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. பார்த்தாரி இராசா அதற்குட் பிரவேசித்தபொழுது திரும்பிவராமற் பூட்டிக்கொண்டிருந்து விட்டாரெனக் கேள்வி. அக்கெபி நிலவறையாகக் காசி, அரித்துவாரம் என்னும் நகரிகள்மட்டும் போயிருக்கின்றதென அவ்வூரவர்கள் சொல்லுவார்கள். (௲௨௱௯ம்) வருஷத்தில் துலுக்கர் பட்டினத்தைப் பிடித்து ஆண்டுவந்தார்கள். மகமதுஷா (Mohammed Shaw) வென்னுந் துலுக்க இராயன் ஆளுங் காலத்திற்பேர்போன செயசிங்கராசா வந்து பட்டினத்தைப் பிடித்து இராசரிக்கம் பண்ணிவந்தார். ஆனாலுஞ் சில காலத்தின் பின் மராட்டியர் வசமாயிற்று. நாலு தலைமுறையளவுக்குச் சிந்தியா ராசாவின் வமிசம் ஆண்டுவந்தார்கள. பெஷ்வா (Peshwa Bajerows) விடத்தில் கொம்மந்தனாயிருந்த சயப்ப சிந்தியா (Jyapa Sindia) இவ்வமிசத்தில்முதலாண்டான். அவனுக்குப் பின் அவன் புத்திரன் சங்கோசி (Junkojee) ஆண்டுவருகையிற் பன்னிப்பற்றில் (Paniput) நடந்தபோரில் மடிந்தான். மறுபடி அவன் மாமனாகிய இரானோசி (Ranojee) சிங்காசனத்திலேறி இராச்சியபரிபாலனம் பண்ணினான். அவன்மகன் கேதராசி (Kedarjee) அவன்மகன் ஆனந்தவுரொ (Anund Row) அவன் புத்திரன் தவுலாத்துவுரொ சிந்தியா, மாதகாசி சிந்தியா (Madhajee Sindia) என்பவர்கள் முறையே ஆண்டுவந்தார்கள்.

கல்குத்தாவுக்கும் இதற்கும் உள்ளதூரம் என்ன?

(௯௱௯௰) மயில். வேம்பாவிலிருந்து (௫௱)



குவாலியர் நகரம் எவ்விடத்தில் உள்ளது?

அக்கிரா நகரத்துக்குத் தெற்கே (௮௰) மயில் தூரத்தில் இருக்கின்றது. மோகுல் இராசாக்களின் காலத்தில் இப்பட்டினஞ் சிறையாகப் பிடிபடுகிற இராசாக்களை அடைக்கிற வீடாயிருந்தது. அல்லாமலுஞ் சிங்கம், புலி, முதலிய காட்டு மிருகங்களும் இவ்விடத்தில் அடைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் மாதகாசி சிந்தியா இராச்சியம் பண்ணின பொழுது அரணான கோட்டையாக்கினார். (௲௱௯௭ம்) வருஷத்தில் துலுக்கரும் மறுபடி இந்தியரும் மோகுல் இராயர்களும் ஆவுக்கானியருமாய் ஆண்டுவந்தார்கள். அதில் ஒரு பெரிய கோட்டை இருக்கின்றது.

---

## இரசபுத்திரருடையவும் மற்றும்பிரதானிகளுடையவும் இராச்சியங்கள்.—Territories of the Rajpoot princes and other Chieftains.

இரசபுத்திர மராட்டியப் பிரதானிகளுக்கு ஆசுமீரம், மாழுவம் என்னுந் தேசங்கள் கொஞ்சங்குறைய முழுவதுஞ் சேர்ந்திருப்பதினால் முதல்முதல் அத்தேசங்களைக்குறித்துச் சொல்லிப் பிறகு அவைகளுக்குட்பட இருக்குஞ் சிறுச்சிறுப் பகுதியான இராச்சியங்களை அட்டவணையாகக் காண்பிப்போம்.

---

### ௧வது. ஆசுமீரம்.—Ajmere or Rajpootana.

இரசபுத்திரருக்குரிய தேசங்கள் எவை?

இராசபுத்தானியா வென்று சொல்லப்படுகிற

RangaRakes tamilnavarasam.com

ருக்கிறவர்களாகிய சோற்சு (Jauts) என்பவர்கள் குள்ளருங் கறுத்தநிற முள்ளவர்களுமாயிருக்கிறார்கள். உயர்ந்த வருணத்திலுள்ளவர்களாகி இரசபுத்திரர் பலவான்களும் வடிவுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுடைய நிறம் யூதருடைய நிறத்தைப்போல இருக்கும். இவர்கள் அவின் மிகுதியாகத் தின்று வெறிகொள்ளுகிறார்கள். அப்படியிருந்துந் தயிரியமுள்ளவர்களும் பிரதானிகளுக்கு உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். தேசத்தில் ஏராளமான பிரதானிகள் உண்டு. ஒவ்வொரு பிரதானியுந் தன்கீழான சிறு இராச்சியங்களை ஆளுகிறான். இவ்வகையான பிரதானிகளுஞ் சனங்களும் ஒருவருக்கொருவர் உதவியும் பந்துக்கட்டுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். ஆசுமீர்நகரியும் அதின் சுற்றுப்பக்கமும் பிறித்தானியருக்குக்கொடுக்கப்பட்டது. இது பங்காளத் துரைத்தனத்துக்குச் சேர்ந்திருக்கின்றது. அதிலே ஷாசீகானாற் கட்டப்பட்ட ஒரு அரண்மனையும் அலங்காரமாயிருக்கிற காச் மோயண்டீன் (Kaj Moryen Uddeen) என்னும் மகமதுவினது கல்லறையுஞ்சிறப்பானவைகளாயிருக்கின்றன. இவன் இந்தியாவிலுள்ள மகமதுக்களுக்குள்ளே மிகவும் பரிசுத்தவானென்றெண்ணப்பட்டிருக்கிறான்.



ஆசுமீரதேசம். அது (௩௱௫௰)மயில் நீளமும் (௨௱) மயில் அகலமுமாயிருக்கின்றது.

*அதின் எல்லைகள் எவை?*

வடதிசைக்கு மூலத்தான், லாகோர், தெல்லி, தென்றிசைக்குக் குசராத்து, மாழவம், கிழக்குத்திசைக்கு அக்கிறா, தெல்லி, மேற்றுத்திசைக்கு சிந்து, மூலத்தான் என்பவைகளே.

*தேசம் எப்படிப் பட்டது?*

பிக்கனீயர் (Bicanere) முதலிய வடபகுதிகள் காட்டுப்பூமியுந் தண்ணீரில்லாமல் வறண்டவைகளுமாயிருக்கின்றன. சொற்பூர்,(Joudpore) சயநகரம், (Jyenagur) முதலிய நடுப்பகுதிகள் மலையுள்ளவைகளாயும் சில இடங்கள் வனமும் மணல் மிகுத்த இடங்களுமாயிருக்கின்றன. ஆப்புவென்னு மலையின் சிகரங்கள் (௨௲) அடி உயரமும் அத்தேசத்தின் ஒரு பக்கமாத்திரங் குடியேறப்பட்டதாயும் மற்றப் பக்கங்களில் மணற்கும்பிகளுக்கூடாக ஒவ்வொரு கிராமங்களுங் காணப்படும். வயல்களிற் பயறு விதைக்கப்பட்டதாகக் காணலாம். அந்த வயல்களுக்கு மழையும், பனியுமில்லாவிட்டாற் கிணறுகளாற்றண்ணீர் பாய்ச்சுகிறது மிகவும் பிரயாசம். மணற்றரையாயிருப்பதினாற் கிணறுகள் மிகவும் ஆழமுந் தண்ணீர் கொஞ்சமுங் கெட்டதுமாயிருக்கும். வனத்தில் நூதனமான வத்தகக்காய் உண்டு. ஒட்டகம், மாடு, நரி, காட்டுக்கழுதை முதலானவைகள் இவ்விடத்தில் உண்டு. இவ்வனமான இடங்களிலே இ

RangaRakes tamilnavarasam.com

| பிரிவுகள். | | அரசாட்சியார். |
|---|---|---|
| | ஆசுமீரத்துக்குட்பட இருக்குந் தனித்தனிப் பிரதானிகளுடைய இராச்சியங்களின் அட்டவணை. | |
| க. பாற்றிநாடு | Bhatty | சிபேற்கான் Zebeta Khan |
| உ. சிக்கவதி | Shekavutte | செயப்பூர் இராசா |
| ௩. செயப்பூர் | Jaipur | செயப்பூர் இராசா |
| ச. பிக்கனியர் | Bicanere | பிக்கனியர் இராசா |
| ரு. எசல்மியர் | Jesalmir | ஏசல்மீமர் இராசா |
| சு. சொற்பூர் | Joudpore | சொற்பூர் இராசா |
| எ. ஆசுமீரம் | Ajmere | பிறிட்டிஷகாரர் |
| அ. பூந்தி | Bundi | பூந்திராசா |
| கூ. கொற்று | Kotah | கொற்றுராசா |
| ய. உடையாப்பூர் | Oodeypur | உடையாப்பூர் இராசா |
| யக. சாரோயி | Serowi | சாரோயி இராசா |
| யஉ. நீமக்கு | Nemuch | பிறிற்றிஷகாரருஞ் சிந்தியாவும் |

---

## மாழவம்.—Malwah.

மாழவத்தின் எல்லைகள் எவை?

வடக்கிலே ஆசுமீரம், அக்கிரு, தெற்கிலே காந்தீசம், பீரார், மேற்கிலே ஆசுமீரம், குசராத்து, கிழக்கிலே அல்லாபாத்து, கந்தவனநாடு.

மாழவம் எப்படிப்பட்ட தேசம்?

உயர்ந்ததுஞ் சமனானதும் மிகவுஞ் செய்கைப்படுத்தப்பட்டதுமான தேசம். அதில் அநேக நதிகள் ஓடுகின்றன. தேச சுவாத்தியம் யோக்கியம். நிலம் நல்லது. இத்தேசஞ் சமுத்திர மட்டத்துக்குமேலே (உது) அடி உயரமுள்ளதாயிருக்கும்.

பிரதான நதிகள் எவை?

சம்பல், (Chumbul) சம்பிளா, (Chambla) சின்னக்காளி, (Lesser Carli) பெரியகாளி,



(Great Carli) மீகி, (Mhye) சுப்பாரா, (Soopar) பாறுபதி, (Parbuttee) நியுயி, (Newy) ஆகார், (Ahor) என்பவைகளுந் தெற்கெல்லையிலிருக்கிற நிருமதையாறுமானவைகளே.

பிரதான திரவியங்கள் என்ன?

பலவகைத்தானியம், அவுரி, அவின், கரும்பு, புகையிலை, பருத்தி, இவைகளும் இரும்பு, ஈயம், முதலிய பஞ்சலோகங்களும் உண்டு.

பிரதான மிருகங்கள் என்ன?

புலி, கரடி, கோணாய், பன்றி, மான், ஆடு, மாடு, முதலியவைகளே.

இத்தேசத்தில் இருக்கிற குடிசனங்கள் ஆர்?

இராசபுத்திரர், மராட்டியர், பேர்போன கள்ளச்சாதியாராகிய பிண்டாரிகள் (Pindarees) கிறாசியர், (Grassias) பீலர், (Bheels) இவர்களே. பீலர் தெற்குப்பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கமச்செய்கையிற் கவனமில்லாதவர்கள். களவினாலும் வேட்டத்தினாலுஞ் சீவியம்பண்ணி வருகிறார்கள். அவர்கள் அம்பு, வில் முதலிய ஆயுதங்களையும் பரிட்சைபண்ணுகிறார்கள். கொஞ்சக் காலத்துக்குமுன்னே இவர்களைச் சீர்திருத்தும்படி அநேகர் பிரயாசப்பட்டார்கள்.

RangaRakes
tamilnavarasam.com

| பிரிவுகள். | | அரசாட்சியார். |
|---|---|---|

மாளவத்தில் இருக்குந் தனித்தனி இராச்சியங்களின் அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| க. | சந்தெரி சிந்தியா | Chanderry | சிந்தியா இராசா (Sindia Rajah) |
| உ. | கச்சுவாரா | Cutchwarra | |
| ங. | ஒமத்துவாரா | Ormetwarra | ஒமத்துவாரர, சிந்தியா இராசா, and ஒல்கார்(Holcar)இராச |
| ச. | சந்துவாரா | Sandwarra | சிந்தியா இராசா, கொற்று (Kotah) இராசா |
| ரு. | உச்சினி | Oojein | சிந்தியா இராசா |
| சு. | சாரங்கப்பூர் | Saurungpore | சாரங்கப்பூர், சிந்தியா திவாசு(Dewas)ராசா |
| எ. | இந்தூர் | Indore | ஒல்காரிராசா |
| அ. | தார் | Dhar | பூவார்(Puar)இராசா |
| கூ. | பூபால் | Phopal | பூபாலநபாப்பு |
| ய. | இறசின் | Raisunce | இங்கிலிஷகாரர், சிந்தியா; பூபால் |
| யக. | சாகார் | Saugur | இங்கிலிஷகாரர் |
| யஉ. | சிந்தியா | Sindia | சிந்தியா இராசா |

இவையன்றி இரசபுத்திரருடைய சீமைகள் வேறும் எங்கேயாகுதல் உண்டா?

தெல்விக்குத் தென்மேற்கிலும் அக்கிருவுக்கு வடமேற்கிலும் இருக்கிற நிலமுஞ் சம்பல்நதிக்கடுக்க இருக்கிற தொல்புரமும் (Dholpoor) தொல்புரத்துக்கும் வாரிக்குந் (Bari) தென்மேற்காகக் கிடக்கிற கேரோலி (Karouly) என்னும் நாடும் அக்கிருவுக்கு முப்பது மயிலுக்கப்பால் இருக்கிற பாரதபுரமும் (Bhurtpoor) அவர்களுடையவாயிருக்கின்றன.

மாளவத்தின் நீளம் அகலம் என்ன?

(உளருய) மயில் நீளம்(ளருய)மயில் அகலம்.

பிரதான பட்டினங்கள் எவை?





உச்சாயினி, இந்தூர், மந்தாய், (Munda) போபால், பில்சா, (Bilsah) சிரோஞ்சி, (Seronge) தியரி, (Teary) கொருவை, (Koorwey) கீமலாசம், (Khemlasa) சூசாவல்ப்பூர், (Shujawulpoor). இவைகளுள் உச்சாயினி பிரதானமானது.

---

### பந்தலக்குன்றம்.—Bundelkund.

பந்தலக்குன்றம் எப்படிப்பட்ட தேசம்?

மிகவும் மலைகளுள்ள தேசமாயிருக்கின்றது.

அதின் எல்லைகள் எவை?

வேற்டா, (Betwah) கேன், (Ken) என்னும் இரண்டு நதிகளும்.

அதிலுள்ள சனங்களும் அவர்கள் வாசஸ்தலமும் எப்படிப்பட்டது?

சனங்கள் மிகவும் வீரமும் நல்லகட்டுப்பாடான சடமுமுள்ளவர்களும் அவர்கள் வீடுகள் கல்லினாற் கட்டப்பட்டவைகளுமாயிருக்கின்றன.

அத்தேசத்தின் பிரதான பிரிவுகள் எவை?

தாற்றியா, (Dhattea) சான்சி, (Jhansi) தே (Terhi) என்பவைகளே.

இவைகளின் தலைப்பட்டினங்கள் எவை?

மேலேகூறிய பெயரையுடைத்தாய் அவ்வப் பிரிவுகளுக்காதிக்கமாயிருக்கும் பட்டினங்களே.

இராவின் (Rewah) இராச்சியங்களின் விபரம் என்ன?

இராவு இராசாவின் இராச்சியங்கள் பந்தலக்குன்றத்தின் தென்கீழ்ப் பக்கத்தில் இருக்கின்றன. இராவின் தலைப்பட்டினம் பிச்சாநதி

RangaRakes
tamilnavarasam.com

யின் கரையிலே (Bichanuddy) கட்டப்பட்டிருக்கின்றது. இந்தப் பகுதியில் நிலச்செய்கை திறமாய்க் காணப்படுகின்றது.

இந்த இராச்சியத்துக்குரிய பிரதான பட்டினங்கள் எவை?

மோ (Mow) இராயபுரம் (Raypoor) மக்கந்தபாத்து, (Muchondabad) முதலானவைகளே.

---

## சிக்கீம்.—Sikkim.

சிக்கீமின் எல்லைகள் எவை?

மேற்கே நேபாளம், கிழக்கே புத்தன்தேசம்.

நீளம் அகலம் என்ன?

நீளம் வடக்குமுதற் தெற்காக (௯௰) மயிலும் அகலம் (௪௰) மயிலுமாயிருக்கும்.

தேசம் எப்படிப்பட்டது?

கூர்க்கையர், (Goorkhas) கொடுத்த தேசங்கள் பதிவான நிலமேயன்றி மற்றவிடங்களெல்லாம் மலைகளினாலும் பள்ளத்தரைகளினாலும் நிறைந்திருக்கின்றன.

இவ்வூரிற் புரோசனங்கள் எவை?

கோதுமை, நெல்லு, பயறு, பலவகைக் கிழங்கு முதலியவைகளும் யானைத்தந்தம், இரும்பு, செம்பு, குங்குலியமுதலியவைகளும் உண்டு.

தலைப்பட்டினம் எது?

சிக்கீம். இது இவ்விராச்சியத்துக்கு நடுவாகத் தாமிக்கா (Thamikuma) நதியின் கரையிலே கட்டப்பட்டிருக்கின்றது.



இதிலுள்ள பெரிய கோட்டை எது?

நாகிரிக் கோட்டை (Nagricote) இது முன்னே கூர்க்கையருடையதாயிருந்தும் பின்பு பிரித்தானியர் பிடித்து அவ்வூரவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். இந்தக் கோட்டையிலிருந்து புத்தன் தேசத்துக்குப் போகத்தெருக்கள் உண்டு.

இத்தேசத்தின் குடிசனங்கள் ஆர்?

இலப்சா (Lapcha) என்கிற கோத்திரத்தார். இவர்கள் இந்தியரைப்பார்க்க நடையிலுங் குணத்திலும் பழக்கங்களிலும் வித்தியாசமானவர்களாயிருக்கிறார்கள்.

இவர்களுடைய அரசாட்சியின் விதம் என்ன?

இவர்களுக்கு ஒரு பிரதானி தலைவனாயிருந்து இராசரிக்கம் பண்ணிவருகிறான்.

இவர்களுடைய படை ஆயுதங்கள் என்ன?

நஞ்சுபாய்ச்சின வாள், தனு முதலியவைகள்.

இத்தேசத்தாரின் மதம் என்ன?

மகா லாமா (Grand Lama) தேயுலாமா (Teshu Lama) வென்பவர்களை வணங்குமதமே.

---

## நேபாளம்—Nepaul.

நேபாளத்தின் எல்லைகள் எவை?

வடக்கில் இமய மலையும் தெற்கில் அயோத்தியும் பாகாருங் கிழக்கில் புத்தன் தேசமும் மேற்கில் சிக்கீமுமானவைகளே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௭௱) மயில் நீளம் (௱) மயில் அகலம்.

RangaRakes tamilnavarasam.com

## நேபாளத்தின் இராச்சியங்கள்.

௧. நேபாளம்,
௨. (௨௪) இராசாக்களுடையவூர்.
௩. (௨௨) இராசாக்களுடையவூர்.

| | |
|---|---|
| ௪. மக்குவான் பூர், | Muckwanpoor |
| ௫. காறேச்சு, | Kirauts |
| ௬. காத்தாங்கு, | Katang |
| ௭. சேயன் பூர், | Cheyenpoor |
| ௮. சத்தாரி, | Saptari |
| ௯. மோரங்கு, | Morung |

நேபாளம் எப்படிப்பட்ட தேசம்?

இந்த இராச்சியமெங்கும் மலைகளும் பள்ளத்தரைகளுந் ஏராளமாயிருக்கின்றன. அநேக இடங்களில் இம்மலைகள் செங்குத்தாகவும் பள்ளத்தரைகளில் அநேகம் குடியேறப்பட்டதாகவும் இருக்கின்றன. அங்கே பொன்மிகுதி. இரும்பு, ஈயம், செம்பு, துத்தநாதமுமுண்டு.

பிரதான மலைகள் எவை?

தாயிபன் (Dhaibun) என்பது மிகவும் பேர்போன மலை. அது நீரொப்புரவுக்கு மேலே (௨௪௲௬௱௯௰) அடியுயரமுள்ளது.

பிரதான நதிகள் எவை?

அநேக நதிகள் இத்தேசத்துக்கூடாகப் பாய்ந்து கங்கை நதியுடனே சேர்ந்து பங்காளக்கடலில் விழுந்து ஓடுகின்றன. இவைகளிலொன்றுங் கப்பல் நிற்கிறதற்குத் தகுதியான ஆழச்சலமில்லாமல் இருக்கின்றது. ஒரு மலையைச் சூழ இருக்கிற போக்குமடி (Bogmutty) என்கிற நதியிலே முற்காலத்திலே சிவன் வாசம்ப



ண்ணினுரென்றும் அது மிகவும் பரிசுத்தமான தலமென்றும் நேபாளத்தில் இருக்கிற இந்துக்கள் எண்ணுகிறுர்கள். அன்றியும் அநேகர் அந்த நதியிலே காலைவைத்துக்கொண்டு மரிக்கிறதற்கும் அதின் கரையிலே சுடப்படும்படிக்கும் விரும்புகிறுர்கள்.

பிரதான பட்டினங்கள் எவை?

வாற்கொங்கு, (Bhatgong) சித்திலாங்கு, (Chittong) காஸ்திமான்றி,(Catmandoo) என்பவைகளே. அவற்றுள் காஸ்திமான்றி தலைப்பட்டினமேயாம்.

காஸ்திமான்றியைப் பற்றி விபரமாய்ச் சொல்லு?

நேபாளத்திற்குத் தலைப்பட்டினமாகிய காஸ்திமான்றி, பிசமடி (Bishenmutty) யாற்றின் கிழக்குக் கரையிலே கட்டப்பட்டிருக்கின்றது. அது நில மட்டத்தில் பங்காளத்தைப் பார்க்க (௪௲௫௱௮௪) அடி* உயரமான தரையிலே கட்டப்பட்டிருக்கின்றது. வீடுகளில் அநேகஞ் செங்கல்லினுலும் மரத்தினுலுங் கட்டப்பட்டு ஓட்டினுல் வேயப்பட்டும் அதின் தெருக்கள் காசிப்பட்டினத்திலுள்ள தெருக்களைப் போல அழுக்கும் ஒடுக்கமுமானவாயிருக்கின்றன. மேலும் இவ்விடத்தில் எவ்வளவு வீடுகள் இருக்கின்றனவோ அவ்வளவு கோவில்களும் எவ்வளவு

---

* இதில் அடியென்பது ௰௨ அங்குலங்கொண்ட நீளத்தை. அதைச்சிலர் உலாந்தா அடியென்றும் வேறுசிலர் சாதி அடியென்றுஞ் சொல்லுகிறுர்கள்.

RangaRakes
tamilnavarasam.com

குடிசனங்கள் இருக்கிறார்களோ அவ்வளவு விக்கிரகங்களும் இருக்கின்றன. இவ்விடத்தில் ஐயாயிரம் வீடுகளும் ஏறக்குறைய (௫௰௲) குடிசனங்களும் இருக்கிறார்கள்.

*சனங்கள் எப்படிப்பட்டவர்கள்?*

அதிலுள்ள கூற்கையர் இங்கிலிஷ்காரருக்குச் சிலவேளைகளிற் போர்முகத்திற்றோல்வியடைந்தாலும் இன்னும் போர்முயற்சிக்கடுத்த பெரிய சாதியாயிருக்கிறார்கள். இவர்களேயன்றி வேறும் அநேகர் அவ்விடத்திலே குடியிருக்கிறார்கள். அவர்களிற் சீனரும், நீவாசு (Newars) என்பவர்களும் பிரதான சாதிகளாயிருக்கிறார்கள். நீவாசு என்பவர்கள் கமக்காரராயும் அவர்களுடைய வீடுகள் பெரும்பாலும் மூன்றடுக்கு உயரமானவாயுஞ் சிறப்புள்ளவாயும் இருக்கின்றன.

---

## ௰௫ம். அதிகாரம்.

### லாகோர் இராசாவின் இராச்சியங்கள்.—Territories of the Rajah of Lahore.

*லாகோர் இராசாவின் இராச்சியங்கள் எவ்விடத்தில் இருக்கின்றன?*

சத்திலேச்சு நதிக்குஞ் சிந்து நதிக்கும் இடையிலே இருக்கின்றன. வடகிழக்கிலே கிடக்கிற பிரிவை மலைத் தேசமென்றும் மேற்கிலே கிடக்கிற பிரிவை ஒப்புரவானதேசமென்றும் இரண்டு பகுதிகளாகச் சொல்லுகிறார்கள். மே



லும் மலைத்தேசத்தைக் கோகிஸ்தான் (Kohishtan) அல்லது உயர்ந்த தேசமென்றும் நதிகள் ஓடிப் பாய்ந்திருக்கிற மற்றப்பகுதியைப் பாஞ்சாலம் என்றுஞ் சொல்லுகிறார்கள். பஞ்ச நதிகளாகிய சத்திலேச்சு, விதஸ்தம் அல்லது சைலம் (Jhylum) விபசம் (Beyah) ஐராவதி (Rauvee) சந்திரபாகம் (Chinaub) என்பவைகளுக்கூடாக விசாலித்திருக்கின்றது.

*லாகோரின் எல்லைகள் எவை?*

வடதிசைக்குக் காசுமீரம், பக்கோலி, மூசபர்பாத்து என்னு நாடுகளுந் தென்றிசைக்குத் தெல்லி, ஆசுமீரம், மூல்த்தான் என்னுந் தேசங்களுங் கிழக்கே சத்திலேச்சு நதியும் மேற்கே சிந்து நதியும் ஆபுக்கானிஸ்தான் தேசமுமே.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௫௱௨௰) மயில் நீளமும் (௨௱௨௰) மயில் அகலமுமே.

*அதின் பிரதான சிறுநாடுகள் எவை?*

துவாப்புசல்விந்தர் (Doabh-Beyt-Jallinder) துவாப்பு பாரி (Doabh Barry) இரட்சிநுபாத்து (Retchnabad) துவாப்புசென்னெட்டு (Doabh Jennet) சிந்துசாகரம் (Sinde-Sagor) என்பவைகளே.

*தேசம் எப்படிப்பட்டது?*

தேசசுவாத்தியம் நல்லதல்ல. மாரிகாலத்தில் மிகவுங் குளிர்மையாயிருக்கின்றது. தென் இந்து தேசப்புரோசனங்கள் இவ்விடத்திலே செழிப்பாய் வளர மாட்டா. ஆனாலுங் கோது

மை வார்கோதுமை மிகுதியாயுண்டாம். பாஞ்சாலநதிக்குக் கிட்ட இருக்கிற இடங்கள் மாத்திரஞ் செழிப்பாயிருக்கின்றன. மற்றுமிடங்கள் மிகவும் மணலுங் கரடு முரடானவைகளுமாயிருக்கின்றன. இந்துப்பு மாத்திரம் இவ்விடத்திற் சுரங்கங்களிலே எடுக்கிறார்கள்.

பிரதான நகரங்கள் என்ன?

லாகோர் நகரி, அமிர்தசாகரநகரி (Amritsir) என்பவைகளே. இவைகளில் லாகோர் தலைப்பட்டினம். அது ஐராவதி நதியின் தெற்குக் கரையிலே கட்டப்பட்டிருக்கின்றது. கோட்டை பெலனுளதுமல்ல, அகழியுமில்லை. மதில்கள் மிகவுயரமும் வெளிப்புறத்திற் சித்திரிக்கப்பட்டவைகளுமாயிருந்தும் உள்ளேயிருக்கிற கட்டுவேலைகளெப்போற் சுறுக்கு அழிந்துபோவதுமாயிருக்கின்றது. உயரமான பள்ளிவாசல்களுங் கொடுமுடிகளும் பட்டினத்தைச் சுற்றி இருக்கிற பலகோவில்களும் நேர்த்தியாயிருக்கின்றன.

இராச அரண்மனையைக் கட்டினதார்?

அக்பார் இராயர்கட்ட அவருக்குப் பின் வந்த இராசாக்கள் சிறப்பித்துவந்தார்கள். லாகோர் நகரிக்கு வடக்கே இரண்டு மயில் தூரத்திற் பேர்பெற்ற சிகான்கியரின் பள்ளிவாசல் உண்டு. அதின் மதில் (௬௱) சதுர யார் (Yard) சுற்றுள்ளது. அது ஒரு மகத்துவமான அரண்மனைபோலிருந்தும் அக்கிருவிலுள்ள தச்சு மால் என்னும் மாளிகைக்கு இழப்பு. இதற்குத் தெற்



கே ஷாசிகானின் பெண்சாதியாகிய நூர்சிகாணின் (Noor Jehan Begum) கல்லறை ஒரு பெரிய வெளியில் நிற்கின்றது.

லாகோர் எப்பொழுது மோகுல் அரசாட்சியானது?

(௲௫௱௨௰௬) வருஷத்திற் சுலுத்தான் பாபர் (Sultan Baber) என்னும் இராசனால், மறுபடி கொஞ்சக் காலத்துக்குக் கபோல (Cabul) தேசத்தாராகிய அபுதல்வி ஆவுக்கேனர் (Abdalli Afghans) ஆண்டு வந்தார்கள். (௬௰) வருடக் காலமாகச் சீக்ஸ் பிரதானிகள் அமிர்தசாகரத்திலிருந்து வந்தார்கள். இப்பொழுது ஆளுகிற இராசன் இரஞ்சித்து சிங்கு (Runjeet Singh).

லாகோரிற் குடியிருக்கிற பிரதான சாதிகள் எவை?

சீக்ஸ், சிங்குகள், (Singhs) சொற்சு, (Jauts) இரசபுத்திரர், இந்துக்கள் மகமது மார்க்கத்தார் என்பவைகளே. ஐராவதி (Ruvee) நதிக்குச் சந்திரபாக் நதிக்கும் இடையிற் குடியிருக்கிறவர்கள் தெற்பை (Dharpi) சிங்குகளென்றும் விதஸ்தம் என்னும் நதிக்குட்பட இருக்கிறவர்கள் தானகேப் (Dhanegeb) சிங்குகளென்றுஞ் சத்திலேச்சுநதிக்கும் யமுனை நதிக்கும் ஊடேயிருப்பவர்கள் மாளவ (Malawa) சிங்குகளென்றும் நானுக்ஷாவைப் பின்பற்றினவர்கள் காலாசசீக்ஸ் (Khalasa) என்றும் நானுக்ஷாவின் வமிசத்தார் நானுக்புத்திரரென்றுஞ் சொல்லப்படுகிறார்கள். சீக்சாதியார்மிகுந்தபலவான்களும் போர்த்தொழிலில் மிகவுந் தேறினவர்களுமாயிருக்கிறார்கள்.

சீக்ஸ்சாதியாருடைய வரலாறென்ன?

RangaRakes
tamilnavarasam.com

(தூசாாகூகம்) ஆண்டில் நானுக்ஷாவென்னொருவன் லாகோர்தேசத்தில்த் தளவந்தி(Tulwundy)என்னுங் கிராமத்திற்பிறந்து சீக்குமதத்தை உண்டுபண்ணி வெகுபேரைச் சீஷராக்கினபின் இறந்துவிட, குரு அங்கதன் (Angud) உத்தியோகம்பெற்று வெகு ஒழுங்குகளையும் உண்டுபண்ணினபின் (தூருாருஉம்) வருஷத்தில் இறந்துவிட்டான். மறுபடி சத்திரியனாகிய அமூர்ததாசு (Amera Dass) வந்து (தூருாஎசம்) வருஷத்தில் இறந்துவிட்டான். அமூர்ததாசின் குமாரன் இராமதாசு (Rama-Dass)நாலாவதாக வந்து அமிர்தசாகர நகரியையுங் கட்டினபின் இறந்துவிட (தூருாஅகம்) வருடத்தில் அருச்சுனன்மாள் என்பவன் (Arjoonmal) பட்டம்பெற்று சீக்ஸ்உடைய முதல்வேதமாகிய ஆதிகிராந்தத்தையும் (Adigrant'h) உண்டுபண்ணி (தூகூாகூம்) வருஷத்தில் இறந்துவிட அரிகோவிந்து(Harigovind) என்னுங் குரு வந்து பராக்கிரமசாலியாயிருந்து தன்னுடைய சீஷரைப் பசுவின் மாங்கிஷத்தைத்தவிர மற்றெந்த மாங்கிஷத்தையுஞ் சாப்பிடும்படி பண்ணி (தூகூாசசம்)வருஷத்தில் இறந்துவிட அவன்பேரனாகிய அரி (Hurray) என்பவன் சமாதானமாய் இராச்சியமாண்டு(தூகூாகூகம்)வருஷத்தில் இறந்துவிட அவன் குமாரன் அரிகிஷ்டினன் (Harrikrishnu)என்பவன் இராசரவாகி (தூகூாகூசம்) வருஷத்தில்த் தெல்லியில் இறந்துவிடத் திகிபகாதர் (TeghBehadar)இராசாவாகி இருக்குங் காலத்தில் (தூகூாஎரும்) வருடத்தில் மோகுல் அரசாட்சியார் அவனைப் பற்றுவில் இருக்கையிற் கொன்றுபோட்டார்கள். அவன் மகனாகிய குரு கோவிந்து (Guru-Govind) பத்தாம் இராசனுங் குருவுமாயிருந்தான். இவன் சீக்குடைய முழு ஒழுங்குகளையும் மாற்றி எல்லாரையும் போர்த் தொழிலிற் படிப்பித்துப் படைத்தலைவராக்கிச் சிங்குவென்னும் பட்டமும் அவர்களுக்குத் தரித்துத் தலைமயிர் தாடியொன்றும் வெட்டப்படாதென்று கட்டளைபண்ணி ஆண்டு வருங்காலத்தில் ஆரங்கிசீபென்னும் மோகுலராயனுஞ் சேனைகளும் வந்து போர்பண்ணினபொழுது கோவிந்து லாகோர் தேசத்தை விட்டோடித்தக்கணத்தில் நாதாத் (Naded) என்னும் ஊரிற் போய் (தூஎாஅ) வருஷத்தில் இறந்து விட்டான். அது முதல் லாகோர் மோகுல் இராச்சியமாயிற்று. சீக்ஸ் சாதியார் நானுக்ஷாவையுங் குருகோவிந்தனையும் பின்பற்றினவர்களாய் இந்நாள்வரைக்குஞ் சீக்கு மதமாயிருக்கிறார்கள்.



---

## மூல்த்தான்.—Moultan.

மூல்த்தானின் எல்லைகள் எவை?

வடக்கே லாகோர் தேசமும், ஆவுக்கான் நாடும் தெற்கே ஆசுமீரமுஞ் சிந்துதேசமும், கிழக்கே லாகோர் தேசமும் ஆசுமீரமும், மேற்கே பெலுக்கிஸ்தான் (Belloochistan) தேசமுமே.

RangaRakes
tamilnavarasam.com

*அது எட்படிப்பட்ட தேசம்?*

மூல்த்தான் என்கிற ஊரிலே சீனுப்பென்னும் (Chinaub) நதியிலே கட்டப்பட்டிருக்கிற மூல்த்தான் பட்டினத்தை லாகோர் இராசா சிலகாலத்துக்கு முன்னே பிடித்தான். ஆற்றின் இடப் பக்கத்திலிருந்து (௪) மயில் தூரமாயிருக்கிற பட்டினம் வடிவான கோபுரங்களுள்ள (௪௰) அல்லது (௫௰) அடி உயரமான ஒரு மதில் சூழ்ந்ததாக இருக்கின்றது. இதில் ஒரு கட்டுவேலையும் நேர்த்தியான சமாதிகளும் உண்டு. மூல்த்தானின் பட்டு மிகவும் உத்தமமாயிருக்கின்றது.

---

## சிந்து தேசத்திலுள்ள அமியர்களுடைய இராச்சியங்கள்.

## Territories of the Ameers of Sinde.

*சிந்தியின் அமீயர்களுடைய இராச்சியங்கள் எவை?*

மூல்த்தான் என்னுந் தேசத்துக்கிடையிலே பாய்கிற சிந்து நதியின் இருகரையிலுங் கிடக்கிற (௩௱) மயில் நீளமும் (௮௰) மயில் அகலமுமுள்ள இடங்களே.

*சிந்தியின் எல்லைகளையும் பிரதான பிரிவுகளையுஞ் சொல்லு.*

வடக்கில் மூலத்தான், ஆவுக்கானிஸ்த்தான் என்னு நாடுகளுங், கிழக்கில் ஆசுமீரம், மணல்வனம், கச்சுதேசம், தெற்கில் கச்சுதேசமுங் கடலும், மேற்கிற் கடலும் பலூக்கிஸ்த்தான் மலைகளுமே. கடலிலிருந்து சகம் (Saugar)





வரைக்கும் இருக்கிற சிந்துநதியின் பெருவெளி சிந்து தேசத்தின் ஆளுகைக்கு உடைத்தாயிருக்கின்றது. இந்தப் பகுதிகளிற் செகப்பூரிலிருந்து (Shekapoor) கடலுக்குப்போகிற ஒரு பகுதி இராசாவுக்குத் திறைகொடுக்கிற பிரதானிகளால் ஆளப்படுகின்றது. இதைக் கீழ்ச்சிந்தி நாடென்றுஞ் செகப்பூரிலிருந்து சகம் வரைக்கும் இருக்கிற இடங்களை மேற்சிந்தி நாடென்றுஞ் சொல்லுகிறார்கள். சிந்துநதியிலுள்ள தீவில் ஐதிராபாத்து (Hydrabad) என்னும் பட்டினங் கட்டப்பட்டிருக்கின்றது. சேவானில் (Shewan) இருந்து கடல்மட்டுக்கும் மேற்காக நிலம் விகற்பமாய்ச் சில நாடுகளில் முழுதும் மலைகளுஞ் சிலநாடுகளிற் சிறுத்தொடர்பான மலைகளும் நிறைவாயிருக்கின்றன. சிந்து நதி இந்த இராச்சியம் முழுவதிலும் எங்கும் பரந்திருக்கின்றது. இதில் பலாலி, (Fulalee) கூனி (Goone) என்னும் இரண்டும் பிரதான நதிகள். இவ்வூரில் மழை காலத்தில் நிலத்தைச் செய்கைப்படுத்தித் தானியங்களை விளைவிக்கிறார்கள். வருஷத்தின் சேஷமான காலங்களிலே அவுரி, கரும்பு முதலியவைகள் உண்டாக்கப்படுகின்றன. இவ்விடத்திலிருந்து நெல்லு, அவுரி, நெய், வெடிலுப்பு, வாசனைப் பண்டங்கள், புடவைகள், குதிரைகள், இவைபோல்வன அநேக வியாபார வுடைமைகளைப் பிறவூரிற் கொண்டுபோய் விற்கிறார்கள் இராச்சியம் அமீயர்களுக்குள்ளானதினால் நில

ச் செய்கையும் வர்த்தகத்தொழிலுங் குறைந்து போயின. இவ்விடத்தில் இந்தியர், சொர்சு, பெலுக்கிஸ் முதலான குடிசனங்கள் மிகுதியாயிருக்கிறார்கள். இராணுவச் சேனை மகமதுவைச் சேர்ந்தவைகளாயுஞ் சிந்தியின் உள்ளான ஆளுகை கொடுங்கோன்மையாயும் மேலான தத்துவம் மூன்று பெயருக்குள் அடங்கியதாயும் இருக்கின்றன. தலைப்பட்டினங்கள் ஐதிராபாத்து, தட்டா, (Tatta) முதலானவைகளே. பிரதான சிறுபட்டினங்கள் மகமது கானுடைய தொண்டா, (Mohammed Khaun's Taunday) சீவான், கீற்றி, (Ketee) கோறேச்சி, (Corachee) என்பவைகளே. இவ்விராச்சியத்தின் தலைப் பட்டினமாகிய ஐதிராபாத்து பலாவி நதியிற் கட்டப்பட்டிருக்கின்றது.

---

## ஆவுக்கான் இராச்சியங்கள் —Afghan Territories.

*ஆவுக்கான் இராச்சியங்களைச் சேர்ந்த நாடுகள் எவை?*

மூல்த்தானில் ஒரு பகுதியும், சோகாருஞ், சிந்தியும், லாகோரின் வடமேற்குப் பங்குகளுமேயாம். இந்த இராச்சியங்கள் ஆவுக்கானிஸ்த்தான் என்றும் பெயர்பெற்றதாய் ஆவுக்கானியாராகிய பத்தருக் (Patans) குடையதாயிருந்தாலும் அதின் ஆளுகைகாரர் கபோலத்தின் இராசாக்களுக்குக் கீழ்ப்பட்டவர்களும் அவர்களினால் நியமிக்கப்பட்டவர்களுமாயிருந்து அந்தந்த இராச்சியங்களை ஆளுகைசெய்து வ



ருகிறார்கள். இப்பொழுது மூல்த்தானின் நபாபும் கபோலத்தின் இராசாவும் சேர்த்திக்கையாய் ஆளுகைசெய்து வருகிறார்கள்.

*ஆவுக்கான் நாட்டின் எல்லைகள் எவை?*

வடக்கே குற்றூர், (Kuttore) அல்லது காவிரிஸ்தான், (Caffrestan) தெற்கே பலுக்கிஸ்தான், கிழக்கே சிந்துநதி, மேற்கே பாரிசுதேசத்திலுள்ள சீகிஸ்தான் (Segistan) நாடு என்பவைகளே.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௬௱௫௰) மயில் நீளமும் (௬௱) மயில் அகலமுமே.

*பிரதான பட்டினங்கள் எவை?*

கபோலம், காந்தாரம், (Candahar) கிஷிணி, பெஷாவார், (Peshawer.)

*அதின் சிறு நாடுகள் எவை?*

(அ) நவசீகரம் (Nowshehra) சாரசாதம், (Charshada) ரேசார், (Razzar) அற்றமாஞ்சீ, (Otmanzei) தூரான்சீ, (Turanzei) அமார்சீ, (Amarzei) சேர்ப்பாய், (Sherpai) தங்கை, (Tangeh) அல்லது பார்க்காசி, (Barkazei) என்பவைகளே.

---

## காசுமீரம்.—Cashmere or Serinaghur.

*காசுமீரத்தின் எல்லைகள் எவை?*

வடக்கிலும் வடகிழக்கிலுந் திபேத்து தேசத்தின் மலைகள், தெற்கிலுந் தென்கிழக்கிலும் லா

RangaRakes
tamilnavarasam.com

கோர் நாட்டிலுள்ள கிஸ்திவார், (Kishtewar) தென்மேற்கில் லாகோர்தேசம், மூசாபர்பாத்து (Musufferabad) முதலியவைகளே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௱௨௰) மயில் நீளமும் (௭௰) மயில் அகலமுமே.

காசுமீரம் எப்படிப்பட்ட தேசம்?

காசுமீரப் பள்ளத்தரை மிகவும் உயரமான மலைகளினாற் சூழப்பட்டிருக்கின்றது. இந்தப் பள்ளத்தாக்கு (௱௰) மயில் நீளமும் (௬௰) மயில் அகலமுமாயிருக்கின்றது. ஆசியாவிலுள்ள எந்த இடத்திலும் இது செழிப்புக்குஞ் சுகத்துக்கும் பேர்போன இடமாயிருக்கிறதுமன்றி மலை அடிவாரத்திலே இருக்கிற உயர்ந்த நிலத்திற் கோதுமை, வாற்கோதுமை முதலானவைகள் விதைக்கப்படுகின்றன. நேர்த்தியான மஞ்சளும் ஐரோப்பா தேசத்தின் மரங்களைப்போலொத்த மரங்களும் இவ்விடத்தில் மிகுதி. திபேத்தின் ஆட்டுமயிரினால் இவ்விடத்திலே அலங்காரமான ஒருவித சால்வையை உண்டுபண்ணுகிறார்கள். அதினாலும் இந்தப் பட்டினம் மிகவும் பேர்போனதாக இருக்கின்றது.

காசுமீர தேசத்தவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

பலவான்களுஞ் சாதுரியரும் இந்து தேசத்தில் இருக்கிறவர்களைப்பார்க்கச் சவுரியவான்களும் நற்றொழிற் பயிற்சிக்காரருமாயிருக்கிறார்கள். குடிசனங்களில் மிகுதியானவர்



கள் ஆதியில் இந்தியருடைய கோத்திரத்தாராயிருந்தும் மகமதுமார்க்கத்தாராயிருக்கிறார்கள்.

பிரதான பட்டினங்கள் எவை?

காசுமீரம், இஸ்லாமபாத்து, (Islamabad) என்பவைகளே. சிரீநகரம் (Serinaghur) என்னுங் காசுமீரம் பஞ்சநதிகளில் ஒன்றாகிய விதஸ்தம் என்னுநதியின் இருபக்கத்திலும் (௫) மயில் தூரத்துக்கு விசாலித்திருக்கின்றது. பட்டினத்துக்கூடே ஓடுகிற நதியின்மேல் நாலைந்து மரப்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பட்டினத்துக்குள் அநேகம் வீடுகள், இரண்டு அல்லது மூன்று அடுக்குள்ளவைகளாக இருக்கின்றன. இவ்வீடுகளிற் சில செங்கல் வேலையாயும் சாந்து பூசப்பட்டவாயும் மேற்கூரையிலுள்ள உத்திரங்களில் மண் சேர்ந்திருக்கிறவாயும் இருக்கின்றது. கோடைகாலத்தில் இவ்வடுக்குகள்மேற் பாத்திகட்டிப் பூமரங்கள் வைத்து உண்டாக்குவார்கள்.

அதிலுள்ள பிரதான வாவிக்குப்பேர் என்ன?

பட்டினத்துக்குத் தென்கிழக்காகத் தால், (Dhal) என்னும் வாவி ஒன்றுண்டு. அது (௫) அல்லது (௬) மயில் தூரமுள்ளதும் அண்டாகாரமானதுமாயிருக்கின்றது.

குடிசனம் எவ்வளவு?

ஏறக்குறைய இரண்டிலட்சம்.

காசுமீரம் இப்பொழுது எந்த இராசாவுக்குடையது?

லாகோர் இராசாவுக்குடைத்தாய் அவனுடைய இராச்சியங்களில் ஒன்றாயிருக்கின்றது.

காசுமீரம் எந்தப் பாகைகளுக்கூடே இருக்கின்றது?

RangaRakes
tamilnavarasam.com

வட அட்சத்தில் (௩௩) பாகைக்கும் குணதேசாந்தர ரேகையில் (௭௪) பாகைக்கும் ஊடே எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

*இதற்கடுக்க இருக்கிற தேசங்கள் எவை?*

லாகோர் தேசத்தில் இருக்கிற லீயாப் (Leia) பற்று சிந்துநதியின் கிழக்குக் கரையிலே (௭௬) மயில் நீளத்துக்கு ஆற்றுக்குங் காட்டுக்கும் ஊடாக ஒடுங்கிய தேசமாயிருக்கின்றது. ஆற்றுக்குக்கிட்ட இருக்கிற இடங்களிலே கோதுமை வாற்கோதுமை முதலியவைகளும் பருத்தி முதலிய தானியங்களும் உண்டாக்கப்படுகின்றன. இவ்விடத்தில் இருக்கிற குடிசனங்களுடைய நிறம், மாதிரி, போக்கு இவைகள் எல்லாந் தெற்குப்பக்கத்தில் இருக்கிறவர்களைப்பார்க்கத் திறமாயிருக்கின்றன. இவ்விடத்திற் சிந்துநதி (௨௰) மயில் அளவுக்குப் பெருக்கெடுக்கிறதினாலே வீடுகள் எல்லாம் (௰௫) அல்லது (௨௰) அடி உயரமான தூண்களினாற் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. காசுமீர்ப் பெண்கள் இந்து தேசத்திலுள்ள பெண்கள் யாவரிலும் மிகுந்த அழகுள்ளவர்களும் மயக்கத்தக்க பார்வையுடையவர்களுமாயிருக்கிறார்கள்.

*காசுமீரத்தின் தலைப்பட்டினம் என்ன?*

லீயா. அது வட அட்சத்தில் (௩௰) பாகைக்குங் குணதேசாந்தரத்தில் (௭௰) பாகைக்கும் ஊடே இருக்கின்றது. ஆளுகைகாரன் சிந்து நதிக்குக்கிட்ட இருக்கிற பட்டினமாகிய வக்காரிலே (Buckor) வாசம்பண்ணுகிறான்.



## புத்தன்தேசம் அல்லது தேவ இராசாவின் இராச்சியங்கள்.

## Kingdom of the Deb-Rajah of Bootan.

*புத்தன் தேசத்தின் எல்லைகள் எவை?*

புத்தன் அல்லது தேவ இராசாவின் இராச்சியங்கள் சிக்கீம் (Sikkim) என்ற தேசத்துக்குக் கிழக்காகவும் பங்காளத்துக்கு வடக்காகவும் இமய மலைக்குத் தெற்காகவும் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கிழக்கின் எல்லை இன்னும் நிச்சயமாய் அறியப்படவில்லை.

*அதின் விஸ்தாரம் என்ன?*

(௨௱) மயில் நீளமும் (௯௰) மயில் அகலமுமாயிருக்கின்றது.

*எப்படிப்பட்ட தேசம்?*

வடபக்கத்திலே இருக்கிற சில மலைகள் உயரமும் நித்தியமும் பனியினால் மூடப்பட்டும் இருக்கச் சில மலைகளிற் பெரிய ஆற்றுப் பெருக்கான நீரூற்றுகள் உண்டுபடுகின்றன. மேலும் இம்மலைகளில் அநேகங் குடிகள் வாசம்பண்ணுகிறார்கள்.

*தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?*

புத்தனியாவில் தேச சுவாத்தியம் அடிக்கடி வித்தியாசப்படுகிறதுண்டு. மழை மட்டாய்ப் பெய்து வருகின்றது.

*தலைப்பட்டினம் எது?*

தாசிஸ்தன் (Tassisudon) அல்லது தாசிஸ்சீயம்,

RangaRakes

tamilnavarasam.com

புத்ததேசத்தின் நதிகள் எவை?

மட்சியும், (Matchieu) பற்சியு, (Patchieu)
சின்சியு (Tchintchieu) இவை மூன்றும் ஒன்றி
த்துக் கன்சியு (Chantchieu) என்று நாமமுள்
ள பெரிய நதியாகி இரங்கபுரத்தூக் (Rung-
poor)கூடாகப்பாய்ந்து இரங்கமதிக்குக்(Ran-
gamatty)கிட்டப் பிரமபுத்திர நதியுடனே சே
ர்ந்தோடுகின்றது.

பிரதான புரோசனங்கள் எவை?

பேரிச்சம்பழம், அத்திப்பழம், தேன்தோ
டம்பழம், கிழங்கு முதலானவைகளே.

பிரதான மிருகங்கள் எவை?

இவ்வூரின் தென் பக்கத்திலே யானைகளும்
பலவித குரங்குகளும் மிகவும் உயரமும் வலி
மையுமுள்ள குதிரைகளும் உண்டு.

இவ்விடத்திலுள்ள சனங்கள் எப்படிப்பட்டவர்கள்?

இவ்விடத்தில் இருக்கிற சனங்கள் கறுத்த நி
றமும் பரந்தமுகமும் மொட்டந்தலையும் கட்
புருவமும் மெல்லிய (௬) அடிக்கு மேற்பட
உயரமுமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். வெ
ள்ளாண்மைக்கடுத்த மிகுதியான வேலைகளை
இவ்விடத்திற் பெண்பிள்ளைகள் செய்கிறார்கள்.

இவர்களுடைய சமயம் என்ன?

விக்கிரகாராதனையாகிய புத்த சமயம்.

அரசாட்சி எப்படிப்பட்டது?

தன்னிட்டமான அரசாட்சியாயிருக்கிறதுமு
ன்றி இதற்குரித்தான இராசா அவர்கள் தெய்
வத்தின் அவதாரம் என்றெண்ணப்படுகிற தரு



ம இராசா(Dharma Rajah)வேயாம். இவரை
அன்னியர் காணவேண்டியதாயிருந்தால் தேவ
இராசாவினாலே அறிந்துகொள்வதேயன்றி மற்
றப்படி அவர் இருக்கிற இடம் ஒருவருக்கும்
விளங்காது.

பிரதான பட்டினங்கள் எவை?

தாசிஸ்தன், பூனகம், (Poonakha) இரங்கபு
ரம், வண்டிப்பூர் (Wandipoor) இவைகளே.
இவைகளில் தேவ இராசாவென்பவர் வாசம்ப
ண்ணுகிற தாசிஸ்தன் தலைப்பட்டினமேயாம்.
இப்பட்டினம் நேர்த்தியாய்ச் செய்கைப்படுத்
தப்பட்டிருக்கிற ஒரு பள்ளத்தாக்கிற் கட்டப்
பட்டிருக்கின்றது. இராசாவின் அரண்மனை ந
ல்ல வேலைப்பாடாகக் கல்லினாற் கட்டப்பட்டி
ருக்கின்றது.

---

## ௰௬ அதிகாரம்

## புறதேசத்தாருக்குரிய இடங்கள்.

## *Foreign Settlements.*

### போட்டுக்கீசுகாரருடைய இடங்கள்—Portuguese Settlements.

போட்டுக்கீசுக்காரருடைய தத்துவத்துக்குள் அடங்கி
ய இடங்கள் எவை?

கோவையும் (Goa) அதற்கடுத்த தேசமுந்
தாமோன் (Damaun)என்ற துறைமுகமுந் தீயு
முனையு (Point Diu) மேயாம். மேலுங் கோ
வைக்குரிய தேசங்கள் தென் இந்து தேசத்தின்

RangaRakes

tamilnavarasam.com

கொங்கண நாட்டிற்குத் தென்பக்கமாய் (௯௫) மயில் நீளமாய்க் கரையைப்பற்றி யிருக்கின்றன, தெற்கிலே சடைச்சிவாகிரி, (Sadashevagurh) கட்று, (Cadara) என்று சொல்லப்பட்ட பிறிற்றிஷிகாரருக்குரிய தேசங்களினாலுங் கிழக்கிலே சுப்பாமாலு, (Soopa Mal) பிறிற்றிஷிகாரருடைய தேசங்களும், வடக்கிலே மருட்டியத் தலைவனாகிய சாவந்தவாரி இராசாவின் (Sawuntwarree Rajah) தேசங்களினாலும் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அது ஒன்பது பகுதியாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இதிலுள்ள பட்டினங்கள் எவை?

போட்டுக்கீசுகாரருடைய தேசங்களுக்குத் தலைப்பட்டினமாயிருக்கிற கோவைப்பட்டினமும், ஆற்றுக்குமேலாக (௮) மயில் தூரமாயிருக்கிற கோவையென்னும் பெயரையுடைய பழைய பட்டினமும். இப்பொழுது இருக்கிற போட்டுக்கீசுகாரர் இப்பழைய கோவையில் வாசம்பண்ணாமல் விட்டுவிட்டார்கள். இதில் இப்பொழுதும் அநேகங் கட்டுவேலைகளுங் கோவில்களும் ஆகஸ்த்தீனிஸ்(Augustines)உடைய சன்னியாச மடமும் இருக்கின்றன. இப்பொழுதிருக்கிற புதுக் கோவை ஒரு ஆற்றுவாயிலே கட்டப்பட்டிருக்கின்றது. இதிற் போட்டுக்கீசுகாரருடைய தேசங்களைப் பராமரிக்கிற ஆளுகைகாரன் (Viceroy) வாசம்பண்ணுகிறான்.

வேம்பாய்க்குங் கோவைப்பட்டினத்துக்கும் உள்ள தூரம் என்ன?

(௨௱௫௰) மயில்.



தீயுமுனை எப்படிப்பட்ட தீவாயிருக்கின்றது?

குசாரத்தின் தென்பக்கத்திலே இருக்கிற தீயு என்னப்பட்ட தீவும் அதை அடுத்திருக்கிற கடலும் ஒருமுறையில் மிகவும் பேர்போன இடமாயிருந்தாலும் இப்பொழுது (௪) மயில் நீளமும் (௧) மயில் அகலமும் (௪௰௲) குடிசனங்களுள்ள சிறுத்தீவுமாயிருக்கின்றது.

---

## பிராஞ்சிக்காரருக்குரிய இடங்கள்.—French Settlements.

பிராஞ்சிக்காரருடைய ஊர்கள் எவை?

புதுச்சேரி,(Pondichery)சந்திரநாகூர்(Chandranagore) மாகி (Mahe) இவைகளே. பிராஞ்சிச் சாதியார் ஒருமுறையில் இந்தியாவில் அநேகந் தேசங்களைத் தங்களுடையதாக்கியிருந்தாலும் இப்பொழுது இம்மூன்றூர்களையுந் தவிர மற்றவைகளெல்லாம் மறு சாதியாருக்கு உடைத்தாயிருக்கின்றன. புதுச்சேரி கருநாடகத்திலுள்ள சோழமண்டலக்கரையிலுஞ் (Coromandel Coast) சந்திரநாகூர் பங்காளத்திலும் மாகி மலையாளக்கரையிலும்(Malabar Coast) இருக்கின்றன.

புதுச்சேரி எப்படிப்பட்ட இடம்?

இந்தியாவில் ஐரோப்பார் மிகுதியாய்க் குடியேறியிருந்த இடமாகிய புதுச்சேரி மணலான இடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது. இதற்குக்கிட்ட இருக்கிற ஊர்களிலே பருத்தி, நெ

RangaRakes

tamilnavarasam.com

ல்லு முதலியவைகள் உண்டாகக்கூடியவைகளாயிருந்தாலும் இவ்விடத்திற் பேரீச்ச மரமுஞ் சிலவகையான சிறுதானியங்களும் மாத்திரம் உண்டாகின்றன. புதுச்சேரிக்குச் சேர்ந்த இடங்கள் (௫)மயில் நீளமுள்ளவைகளாகக் கரையை அடுத்திருக்கின்றன. இது உத்தராக்ஷத்தில் (௰)பாகைக்குங் குணதேசாந்தரத்தில் (௭௯ பாகைக்கும் ஊடே எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்றது. சென்னபட்டினத்துக்கும் இதற்குமுள்ள தூரம் (௱) மயில். கல்க்குத்தாவுக்கு (௲௬௰) மயில்.

*சந்திரநாகூர் எங்கே இருக்கின்றது?*

கல்க்குத்தாவுக்கு (௨௰) மயில் தூரத்துக்கப்பாற் குக்கிலியாற்றின் (Hoogly) மேற்குக் கரையிலிருக்கின்றது. இதில் (௪௰௲) குடிசனங்கள் இருக்கிறார்கள். இதற்குடைத்தாயிருக்கிற இடம் ஆற்றோரமாய் இரண்டு மயில் தூரமுள்ளதாக இருக்கின்றது. இப்பட்டினங் கல்க்குத்தாவைப் பார்க்கச் சுசமானதாயிருக்கின்றது. உத்தராட்சத்தில் (௨௨) பாகைக்குங் குணதேசாந்தரத்தில் (௮௮) பாகைக்கும் இடையேயிருக்கின்றது.

*மாகி எந்தக் கரையிலே கட்டப்பட்டிருக்கின்றது?*

மலையாளக்கரையிலே ஆற்றுக்குத் தென்பக்கத்திலுள்ள ஒரு உயர்ந்த மேட்டிற் கட்டப்பட்டிருக்கின்றது. பட்டினம் நேர்த்தியானதும் வீடுகள் நன்றாய்க் கட்டப்பட்டவைகளுமாயிருந்தும் வரவர அழிந்துபோகிற நிலைபரத்தி





ல் இருக்கின்றன. இவ்விடத்திலிருந்து மிளகு மறுசீமைகளுக்கு அதிகமாய் ஏற்றப்படுகின்றது. பிராஞ்சிக்காரர் மாகியில் (௲௭௱௨௨ம்) வருஷத்தில் வந்து குடியேறினார்கள். அது உத்தராட்சம் (௰௧) பாகை (௪௨) கலைக்குங் குணதேசாந்தரம் (௭௫) பாகை (௩௯) கலைக்கும் ஊடே இருக்கின்றது.

---

## தென்மார்க்கருக்குரிய இராச்சியங்கள்.—Danish Settlements.

*தென்மார்க்கருக்குரிய இராச்சியங்கள் எவை?*

கருநாடகத்தில் இருக்கிற தரங்கம்பாடியும் அதின் பட்டினமும் பங்காளத்தில் இருக்கிற சிறம்பூர் (Serampore) அல்லது சிறீராமபுரமும் அதின் பட்டினமுமேயாம்.

*இவர்களுடையதாயிருக்கிற தரங்கம்பாடியின் நீளம் அகலம் என்ன?*

(௫) மயில் நீளமும் (௩)மயில் அகலமுமாயிருக்கின்றது. இதற்குள்ளாக (௰௯) கிராமங்களுந் தரங்கம்பாடிப் பட்டினமும் டன்ஸ்பர்க்கென்னுங் கோட்டையுட் (Ft. Dansburgh) கட்டப்பட்டிருக்கின்றன. தரங்கம்பாடிப் பட்டினம் பெரிதுஞ் சனநெருக்கமுள்ளதுமாயிருக்கின்றது. (௲௮௱௰௪ம்) ஆண்டுதொடுத்துக் குடிசனங்கள் வத்தகத்தொழிலிலே தேறிவருகிறவர்களாயிருக்கிறார்கள். தரங்கம்பாடியிலுள்ள வத்தகர் மோரிசு தீவுக்கும் (Mauritius or Islc of France)

கோலப்பனுவுக்கும் (Penang or Prince of Wales Island,) இலங்கைக்கும் பற்றுவியாவுக்கும் (Batavia) சாராயம் (Arrack), பிராந்திச்சாராயம், (Brandy) செம்பு, பனஞ்சட்டம் முதலியவைகளை ஏற்றிக் கொண்டுபோய் விற்கிறார்கள். தரங்கம்பாடி முன்னே தஞ்சாவூர் மகராசாவுக் குடையதாயிருந்தது. தென்மார்க்கு அரசாட்சியார் அதை வாங்கிக்கொண்டு வருஷம் ஒன்றுக்கு (௨௲ம்) வராகன் திறைகொடுத்து வருகிறார்கள். தரங்கம்பாடி சென்னை நகரத்துக்குத் தென்மேற்கே (௱௪௫) மயில் தூரத்தில் இருக்கின்றது.

*சிறீராமபுரம் (Serampore) எவ்விடத்தில் இருக்கின்றது?*

கல்க்குத்தாவுக்கப்பால் (௰௨) மயில் தூரத்தில் குக்கிலி நதியின் மேற்குப்பக்கத்தில் இருக்கின்றது. வீடுகள் நேர்த்தியாய்க் கட்டப்பட்டுச் சுண்ணச்சாந்தால் வெள்ளை பூசப்பட்டிருக்கின்றன. தெருகள் விசாலமும் ஒழுங்குமாயிருக்கின்றன. இவ்விடத்திலேதான் சத்தியவேதபோதகர்கள் முதன் முதல் ஐரோப்பாவிலிருந்து வந்து கிறிஸ்துமார்க்கத்தைப் பரம்பப்பண்ணிப் பள்ளிக்கூடங்களை வைத்துப் படிப்பித்து அறிவு தலைப்படப்பண்ணி விவிலி என்னுஞ் சத்திய வேதத்தைப் பலபாஷைகளிலே திருப்பி அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து வெகு புத்தகங்களை அச்சடித்துச் சனங்களுக்குக்கொடுத்து மிகுந்த நன்மை செய்துவந்தார்கள்.

---



## ௰௭ அதிகாரம்.

## இந்து தேசத்தின் தீவுகள்.—Indian Isles.

### இலங்கைத் தீவு.—Ceylon or Lanka.

இலங்கைத்தீவை முற்காலத்திலே புறச்சாதியாரிற் சிலர் திப்புராவணம் (Taprobane) என்றுஞ் சிலர் சீலோன் தீவென்றுந் துலுக்கர் சிறன்றீபென்றுஞ் (Serendeep) சிங்களவர் சிங்கள தீவென்றும் (Singhala) பெயரிட்டார்கள். இப்பொழுது இங்கிலிஷ்காரர் சீலோன் என்னும் பெயராய் வழங்கிவருகிறார்கள்.

*சீலோன் என்று சொல்லப்படுகிற இலங்கைத்தீவு ஆசியாவுக்கு எந்தப் பக்கமாயிருக்கின்றது?*

ஆசியாவுக்குத் தென்புறமாயும் பூமியின் உத்தராக்ஷரேகைகளில் ஐந்தாம்பாகை முதல் ஒன்பதாம் பாகை வரைக்குங் குணதேசார்த்தரத்தில் ஏறக்குறைய (௭௯ம்) பாகை முதல் (௮௰) பாகை வரைக்கும் விசாலித்திருக்கிறதாயுங் கன்னியாகுமரியிலிருந்து வடகிழக்காக (௱௪௰) மயில் தூரமாயுஞ் சோழமண்டலத்திலிருந்து (௪௰) மயில் தூரமாயும் இருக்கின்றது.

*இதின் எல்லைகள் எவை?*

வடக்குமுதல் தென்கிழக்குத் தென்மேற்கு வரைக்கும் பங்காளக் குடாக்கடலினாலுந் தெற்கு இந்து சமுத்திரத்தினாலும் எல்லைப்பட்டு இப்படியே நாலு பக்கமுஞ் சலத்தாற் சூழப்பட்டிருக்கின்றது.

*இலங்கைத்தீவின் நீளம் அகலம் என்ன?*

நீளத்தில் ஏறக்குறைய (௨௱௯௰) மயில் தூரமும் அகலத்தில் (௪௰) மயில் முதல் (௱௭௰) மயில் வரைக்கும் இருக்கும். ஏனென்றால் வெ

RangaRakes
tamilnavarasam.com

ற்றிலை வடிவமாயிருக்கின்றது.

இத்தீவிலுள்ள பிரதான மலைகள் எவ்வை?

இலங்கைத்தீவின் நடுவிலே அநேகம் உயரமான மலைகளுஞ் சிறப்பான பள்ளத்தாக்குகளும் இருந்தாலுஞ் சிவனொளி பாதமென்னுங் கொடுமுடியும் (Adam's peak) நமனிகுலகண்ட மலையும், நுவரலி மலையும் (Nuwera Ellea Mountains) மிகவும் பிரதானமானவைகளாயிருக்கின்றன.

இத்தீவின் பிரதான நதிகள் எவை?

அநேகஞ் சிறு நதிகள் இருந்தாலும் படவுகள் பாய்வலித்தோடத்தக்கதாய் நாலு பிரதான நதிகள் மாத்திரம் உண்டு. அவையாவன மாவிலிகங்கை (Mahavillegunga) காளிகங்கை (Caligunga) களனிகங்கை, (Calanegunga) வலவிகங்கை (Valoovigunga) என்பவைகளே. இந்த நாலு நதிகளுஞ் சிவனொளிபாத மலைக்கருகிலிருந்து பாய்கின்றன.

இத்தேசத்தின் வெப்பங் குளிர்மை, சுகம் சுகவின்மை முதலிய காரியங்களைக் குறித்து என்ன அறிவாய்?

இத்தீவுக்கு நடுப்பக்கத்திலே உயரமான மலைகளிருப்பதினால் அவைக்கடுத்த இடங்களிற் சிலசில வேற்றுமைகள் உண்டாகின்றதுமன்றி மலையாளத்திற் பெருமழையும் புயலும் உண்டாகி அங்கே மாரிகாலங்களாயிருக்கிற வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் அதற்குக் கிழக்காயிருக்கிற இந்த இலங்கையின் மேற்குக் கரைத்துறை



த்தேசங்களாகிய கொழும்பு, (Colombo) நீர்கொழும்பு, (Negombo) முதலிய இடங்களிலும் மிகுதியான மழைபெய்யும், இந்த மாதங்களில் இலங்கைக்கு வடக்கிலுங் கிழக்கிலும் இருக்கிறவர்களுக்குஞ் சோழமண்டலத்தாருக்கும் வசந்தகாலமாய்ப் பொறுப்பான தென்றல் வீசும். மேலும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வடகிழக்கிலிருந்து வாடைக்காற்று உலாவுகிறதினாலே முன் வசந்தகாலமாயிருந்த இடங்களில் மாரியும் அதற்கெதிர்த்த பக்கங்களில் வசந்த காலமுமாயிருக்கும்.

இத்தீவிலுள்ள பயிர்வகைகளும் மரங்களும் எவை?

பனை, தெங்கு, தளப்பத்து, வேம்பு, இலுப்பை, புளி, கமுகு, கூர்தற்சமுகு, பலா, அத்தி, இத்தி, ஆல், அரசு, பூவரசு, கருங்காலி, புன்னை, மகிழ், முதிரை, மூங்கில, தேக்கு முதலிய அநேகவிதமான பெரிய மரங்களும், கோப்பி, புகையிலை, வெற்றிலை, வாழை, கரும்பு, கத்தரி, மிளகாய், தேன்தோடை, எலுமிச்சை, பம்பழமோசு, இராசவள்ளிக் கிழங்கு, வற்றாளைக் கிழங்கு முதலிய தோட்டப்புரோசனங்களும், பயறு, எள்ளு, நெல்லு, வரகு, சாமை, தினை, குரக்கன், முதலிய தானியவகைகளும், சாயவேரும், பருத்தியும், உள்ளி, மிளகு, சவ்வரிசி, ஈரவெண்காயம், மஞ்சள், இஞ்சி, கருப்பூரம், கருவா, எலரிசி சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம் முதலிய சரக்கு வகைகளும் உண்டு.

RangaRakes
tamilnavarasam.com

இத்தீவிலுள்ள பிரதான மிருகங்கள் எவை?

யானை, குதிரை, கழுதை, ஆடு, மாடு, எருமை, பலவிதமான குரங்குகள், புலி, சிவிங்கி, கரடி, மான், மரை, பன்றி, நரி, முயல், அணில், எலி, கீரி, நாய், கோணாய், மரநாய், பூனை, நாவி, கத்தூரி முதலியவைகளுமே.

பிரதான ஊர்வனவுகள் பூச்சிகள் எவை?

முதலை, ஆமை, மலைவிரியன், (Anaconda or Boa Constrictor) சாதிசாதியான பாம்பு பல்லிகள், ஓணான், அரணை, தேரை, தவளை, முதலியவைகளும், எரிவண்டு, பொன்வண்டு, முதலிய வண்டுகளும், பலவித ஈகளுங் கருங்குளவி, செங்குளவி, முதலிய பலவகையான குளவிகளும், குறளவணன்புழு, எரிபுழு, பனிப்புழு, முதலிய புழுவகைகளுங், கொதுகு, நுளம்பு, மட்டைத்தேள், கொடுக்கன், தத்துவண்டியன், மின்மினிப்பூச்சி, பொட்டுப் பூச்சிகளும், கட்டெறும்பு, சிற்றெறும்பு, நுள்ளான், கறையான், முல்வையன், முசுறு முதலிய எறும்புவகைகளுமுண்டு.

அதிலுள்ள பிரதான பட்சிசாலங்கள் என்ன?

கழுகு, மயில், குக்கில், கூகை, ஆந்தை, வலியான், பருந்து, கருடன், சிச்சிலி, கொண்டலாத்தி, புறா, வானம்பாடி, காடை, கவுதாரி, ஊர்க்குருவி, தூக்கணங்குருவி, காகம், கோழி, தாரா, வாத்து, காணுங்கோழி, வான்கோழி, சம்பங்கோழி, பலவகை நாரை, கொக்கு, கோட்டான் முதலிய புட்களும் இன்



னும் இராகம்பாடிக்கொண்டு வனங்களில் வாசமாயிருக்கிற அநேக பட்சிகளுமுண்டு.

சுரங்கத் திரவியங்கள் என்ன?

பொன், வெள்ளி, இரும்பு, ஈயம், செம்பு முதலிய லோகங்களும் வச்சிரந் தவிர்ந்த மற்றும் மாணிக்கம், மரகதம், புட்பராகம், வயிடூரியம், நீலக்கல், அக்கிக்கல், கோமேதகம், முத்து, பவளம், சுகந்திக்கல், பதுமராகம், படிகப்பச்சை முதலிய மற்றும் இரத்தினக்கற்களுங், கந்தகம், வெடியுப்பு, இந்துப்பு, இயமணல், (Plumbago) முதலியவைகளுமுண்டு.

பிரதான வாசனைப் புட்பங்கள் எவை?

மகிழ், அகில், பாதிரி, சோங்கு, காயா, பன்னீர், சண்பகம், புன்னை, மல்லிகை, அலரி, மருக்கொழுந்து, நந்தியாவத்தை, தாமரை, உரோசை, செவ்வந்தி, வெட்சி முதலியவைகளே.

இத்தீவில் வெந்நீரூற்றுகள் உண்டா?

ஆம். திரிகோணமலைக்கு வடமேற்கே (௭) மயில் தூரத்திலுள்ள கன்னியாவில் (Cannya) (௭) ஊற்றுக்களும் ஊவாமேல் நாட்டில் ஒரு ஊற்றும் இருக்கின்றன.

பிரதான துறைமுகங்கள் எவை?

இலங்கையில் அநேகந் துறைமுகங்கள் இருந்தாலுந் திரிகோணமலை, காலி, கொழும்பு என்னும் இம்மூன்றும் இப்பொழுது கப்பற்றுறைமுகங்களாயிருக்கின்றன.

இலங்கை யாதிற் பேர்போன தீவாயிருக்கின்றது?

அநேக நூதன வஸ்துக்கள் இருந்தும் முத்

RangaRakes
tamilnavarasam.com

துச்சலாபமுங்கருவாத்தோட்டங்களும் மிகுதியானபடியால் அதிக கீர்த்தியுள்ள தீவாயிருக்கின்றது.

இலங்கைத்தீவினால் இங்கிலிஷகாரருக்கு ஒருவருஷத்திற் கிடைக்கிற வருமானம் எவ்வளவு?

(௲௮௱௬௯ம்) வருடத்துக் கொழும்புப் பஞ்சாங்கத்தின்படி

| | £ | s | d. |
|---|---|---|---|
| Arrears of Revenue - | 2,910 | 5 | 1 |
| Fixed Revenue - | 325,760 | 12 | 8 |
| Incidental Revenue - | 38,848 | 9 | 11 |
| Receipts in aid of Revenue | 4,474 | 7 | 4 |
| Total. | 371,993 | 15 | 0 |

ஆகத்தொகை (௩) இலட்சத்து (௭௰௧௲௯௱௯௰௩) பவுன் (௰௫) சிலிங்கு.

கோவறனமேந்தார் ஒருவருஷத்தில் அதற்குச் செலவழிக்குஞ் செலவெவ்வளவு?

(௲௮௱௬௯ம்) வருடத்துக் கொழும்பிற் பஞ்சாங்கத்தின்படி

| | £. | s. | d. |
|---|---|---|---|
| Civil Expenditure - - | 251,981 | 19 | 9 |
| Military - - - | 43,883 | 14 | 4 |
| Commissariat - - - | 36,815 | 13 | 4 |
| Arrears of Expenditure - | 26,469 | 18 | 7 |
| Total. | 358,151 | 6 | 0 |

(௩) இலட்சத்து (௫௰௮௲௱௫௰௧) பவுன் (௬) சிலிங்கு கோவறணமேந்தார் செலவழிக்கருர்கள்.

ஒருவருஷத்தில் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதியான சரக்குகள் எவ்வளவிருக்கும்?

இறக்குமதிச் சரக்குகளில் மேற்சொல்லிய பஞ்சாங்கத்தின்படி (௫) இலட்சத்து (௯௰௫௲௮௱௮௰௮) பவுன் (௯) சிலிங்கும் ஏற்றுமதிச்சரக்குகளில் (௫) இலட்சத்து (௨௰௯௲௮௱௯௰) பவுன் (௫) சிலிங்குட் (௨) பென்சு அளவுக்குவரவாயிருந்தது.



இத்தீவு இப்பொழுது ஆருடைய அரசாட்சிக்குக் கீழாயிருக்கின்றது?

இங்கிலிஷகாரருடைய அரசாட்சிக்குக் கீழாக இருக்கின்றது. இந்துதேசத்தை ஆளுகிற கும்பினியாரின் (East India Company) அரசாட்சி முறையும் இத்தீவின் அரசாட்சி முறையும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ளது. இராசாத்தியின் அனுமதிப்படி ஒரு தேசாதிபதி இருந்து ஆண்டுவருவதால் இத்தீவு இராசாணியுடைய சொந்தப் பராமரிப்பின் கீழ் இருக்கின்றது. ஆனாலும் இந்துதேசத்தை அவ்விராசாணிக்குக் கீழ் இருக்கிற ஒரு கூட்டமான வர்த்தகர் திறை கொடுத்து ஆண்டுவருகிறார்கள்.

இலங்கையிற் சக்கரவர்த்திகளும் இராசாக்களும் ஆண்டகாலங்களிற் கீர்த்தியாயிருந்த நகரிகள் எவை?

நுவரை காளாவியிலுள்ள (Nuwera Kalawiye) அனுராசபுரம், (Anooradhapura) தம்மன்கடவையிலுள்ள (Tamankadawe) புல்லானுருவை (Pollannaroowa) சயவர்த்தன புரம் (Cotta,) கண்டி என்பவைகளே.

இக்காலத்தில் இலங்கையிற் பிரதான பட்டினங்கள் எவை?

திரிகோணமலை, மட்டைக்களப்பு, கண்டி, கொழும்பு, சலாபம், கற்பிட்டி, மன்னார், காலி, யாழ்ப்பாணம் முதலியவைகளே. இவைகளிற் கொழும்பு தலைப்பட்டினமாயிருக்கின்றது.

RangaRakes
tamilnavarasam.com

தலைப்பட்டினமாகிய கொழும்பைக் குறித்து என்ன சொல்லுவாய்?

கொழும்பென்னப்பட்ட சிறப்பான நகரத்தில்த் தீவையாளுந் தேசாதிபதி இருக்கிறார். அது இப்பொழுது இலங்கையிலுள்ள எல்லா இடங்களிலும் முக்கியமானதாயிருக்கின்றது. அதில் ஏறக்குறைய (௬௰௲) சனங்கள் இருக்கிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அது உத்தராக்ஷத்தில் (௬) பாகைக்கும் (௫௭) கலைக்குங் குணதேசாந்தரத்தில் (௮௰) பாகைக்கும் இடையே இருக்கின்றது. கொழும்புக் கோட்டை கடற்கரையோரமாயிருக்கின்றது. அதின் சுற்றளவு (௧வ) மயில். கொத்தளங்கள் வயிரிப்பான வேலையாயுஞ் சத்துருவினால் அசைத்துக்கொள்ளக் கூடாத அரணையும் இருக்கின்றன. கோட்டைக்குள்ளே அநேக நேர்த்தியான தெருக்களும் வீடுகளும் உண்டு. இராச தெருவிலுள்ள இராச அரண்மனையிலே தேசாதிபதி இருக்கிறார். அதற்குப் பிற்பக்கத்தில் மாலுமிகளுக்கு வெளிச்சங் காட்டுவதற்கான ஒரு உயரமான வீடுங்கட்டப்பட்டிருக்கின்றது.

இதையன்றி இராணுவத்துக்கடுத்த வீடுகளுங் கொலோனியற் சக்கிடுத்தார் முதலான பெரிய உத்தியோகஸ்தருடைய வீடுகளும் அப்பற்கோடும் (High court of Appeal), அட்மீரால்கோடும் (Vice admiral Court), தபாற்சாவடியும் (General post Office) கோட்டைக்குள் இருக்



கின்றன. கோட்டைக்கடுத்தபகுதிகள் குளிர்ச்சியான இடங்களாயிருக்கின்றன. கொழும்புப்பேட்டை நேர்த்தியாயும் ஒழுங்காயுங் கட்டப்பட்டிருக்கின்றது. அதற்கூடாக நேர்த்தியான (௰௫) தெருக்கள் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தெருவுக்கும் ஒவ்வொரு பேர் இடப்பட்டிருக்கின்றது. வீடுகள் பெரும்பாலும் ஒரடுக்கும், இரண்டடுக்கும் மூன்றடுக்குமுள்ளவைகளாய்ச் சிறப்பான காட்சியைக் கொடுக்கின்றன. பேட்டையிலுள்ள பிரதான கட்டுவேலைகளாவன, பிரவிஞ்சியால் நீதவான் (Provincial Judge) மஸ்திராத்து (Magistrate) பிசுக்கால் (Fiscal) என்பவர்கள் இருந்து காரியங்கள் நடப்பிக்கிற கோடுகள், சுப்பிறீங்கோடு, காவற்கூடம், (Jail) கச்சேரி முதலானவைகளே. இவைகளையன்றிப் பறங்கிகளுக்குரிய ஒரு புத்தகசாலையுங் கோவைசூரிக்காரர் இருப்பதற்கான ஆசுப்பத்திரிவீடும் (Small pox Hospital) இன்னும் அநேகஞ் சிறப்பான கட்டுவேலைகளும் உண்டு (௲௭௱௪௯ம்) வருடத்திலே கொலென்ஸ் (Gollenesse) என்னும் ஒல்லாந்துதேசத்தானாகிய தேசாதிபதியினாற் கட்டுவிக்கப்பட்ட உலாந்தாக்கோவில் (Wolfendhal Church or Dutch Church) மிகவும் உயர்ந்ததும் பட்டினத்துக்கு நடுவிலுள்ள ஒருமேட்டின்மேற் கட்டப்பட்டதாயுமிருக்கின்றது. அதிற் கிழமைதோறும் உலாந்தாக்காரராகிய சத்தியவேதக் கிறிஸ்தவர்கள் தேவாராதனைக்குப்போய்க்

RangaRakes
tamilnavarasam.com

கூடுவார்கள். அல்லாமலுந் தமிழ்க்கிறிஸ்தவர்கள் கூடும்படியாக றேபாட்.புறவுன்றிக்கு (Sir Robert Brownrigg) என்னுந் தேசாதிபதியினுற் கட்டுவிக்கப்பட்ட தோமாவின் கோவிலும் (Malabar Episcopalan Church called Thomas') அவருடைய பெண்சாதியினுற் தமிழ்ப் பிள்ளைகள் படிக்கும்படி கட்டுவிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடமும் இருக்கின்றன. அன்றியும் புடுத்துக்கீஸ்க் கிறிஸ்தவர்கள் கூடும்படியான கோவிலும் (St Paul's Church) உண்டு. இக்கோவில் பிரதான கண்காணியாராகிய விதுல்ஸ்தன் (Arch-deacon Dr. Twilston) என்பவருடைய முயற்சியினுலே கட்டப்பட்டு (௲௮௱௰௬ம்) ஆண்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டது. இவைகளை அல்லாமல் உரோமான் சபையாருக்கும் வெஸ்லியன் கிறிஸ்தவர்களுக்கும் (Wesleyan Methodists) பவுத்தீஸ்த்துக் கிறிஸ்தவர்களுக்கும் (Baptists) உரிய பற்பல கோவில்களும் உண்டு. கோட்டைக்கு ஒரு மயில் தூரத்துக்கப்பால் வெஸ்லியன் மிசியோன் கோவிலுண்டு. அது (௲௮௱௰௬ம்) வருஷத்திற் பிரதிஷ்டைபண்ணப்பட்டது. தட்டா தெருவிலுங் கடற்கரைத் தெருவிலும் ஒவ்வொரு இந்துமதக் கோவில்கள் உண்டு. மறுதானிடம் (Marandhan) என்னும் பகுதியில் சோனகருக்குரிய ஒரு பள்ளிவாசல் உண்டு. மச்சம், மாங்கிஷம், காய், கனி, கீரை, பூண்டு முதலியவைகள் விற்கும்படியான பலகடைகளும் உண்டு. அன்





றியும் இரண்டு புகைச்சூத்திரங்களும் பலஎண்ணெய்ச் செக்குகளும் உண்டு. பட்டணத்தில் இங்கிலிஷ்காரர், பறங்கிகள், தமிழர், சிங்களவர், சோனகர், மலாயக்காரர், சீனர், பார்சியர், காப்பிரிகள், பட்டாணிகள் முதலிய பலசாதிக்காரரையுங் காணலாம். கொழும்பிலிருந்து ஐரோப்பாவுக்குக் கருவா, மிளகு, கோப்பி, தேங்காயெண்ணெய், ஈயமணல், மருந்துச் சரக்குகள், சாராயம், எலரிசி, யானைத்தந்தம், கலைமான்கொம்பு, ஆமையோடு, கருங்காலி, முதிரை இவைகள் எற்றப்படுகின்றன. அன்றியும் பிரிட்டிஷ்காரர் குடியேறி இருக்கிற இடங்களுக்கு (British Colonies) சாராயம், கோப்பிக்கொட்டை, பாக்கு, தேங்காய், கயிறு, மீன்முள், மீன் நெய் முதலியவைகளை வியாபாரிகள் எற்றிப்போய் வரும்பொழுது அரிசி, நெல், கோதுமை, புடைவை, பட்டு, சீனி, கந்தவர்க்கங்கள், மருத்துப்பூண்டு முதலியவைகளைக் கொண்டுவருகிறார்கள்.

**தீவிலுள்ள பிரதான இந்துமதக் கோவில்கள் எவை?**

ஊவாவிலுள்ள (Uwa) கதிர்காமர் கோவில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவன் கோவில், கந்தசுவாமி கோவில்கள், கண்டியிலுள்ள பத்தினியம்மன் கோவில், திரிகோணமலையிலுள்ள கோணேசர் கோவில், பற்பல சிங்களக் கோவில்களுமே. இவைகளையன்றிப் பத்திரகாளி, வீரபத்திரன், விட்டுணு, பிள்ளையார், அம்மன் முதலிய விக்கிரகங்களுக்குக் கட்டப்பட்டிரு

RangaRakes
tamilnavarasam.com

க்கிற சிறுக் கோவில்களும் உண்டு.

இத்தீவிலுள்ள பிரதான சமயங்கள் என்ன?

சைவம், வைணவம், புத்தம், இஸ்லாமார்க்கம், கிறிஸ்துமார்க்கம் என்பவைகளே.

இத்தீவில் வழங்குகிற பிரதான பாஷைகள் என்ன?

தமிழ், சிங்களம், இங்கிலிஷ், புறுத்துக்கீஸ் என்பவைகளே.

குடியிருக்கிற பிரதான சாதிகள் எவை?

பிராமணர், செட்டிகள், வேளாளர், மடப்பளி முதலிய உயர்குலத் தமிழரும், இங்கிலிஷகாரர், உலாந்தாக்காரர், பறங்கிக்காரர் முதலிய ஐரோப்பாச் சாதியாரும், சோனகர், சிங்களவர், யாவகர், மலாயிக்காரர் முதலியவர்களும் உண்டு. சிங்களவர் ஆதியிற் கலிங்க தேசத்திலிருந்து (Now Cicacole) இலங்கைக்கு வந்து குடியேறினார்கள். புத்த சமயத்துக்குச் சாதிவேற்றுமையை ஆசரித்து நடப்பது விரோதமாயிருந்தும் புத்த சமயிகளாகிய சிங்களவருக்குள்ளும் சாதிவித்தியாசம் பார்ப்பது வழக்கம். இந்து மதக்காரருக்குட் பல பிரிவான சாதிகள் இருப்பதுபோல் அவர்களுக்குள்ளும் இருக்கிறார்கள். உயர்குலத்தவர்களில் அநேகர் கண்டியிலிருக்கிறார்கள். தமிழருக்குள்ளும் மேற்சொல்லிய உயர்குலமக்களேயல்லாமற் கீழ்மக்களென்னப்படுமநேக எளிய சாதிகள் உண்டு.

இத்தீவிலிருக்கிறவர்கள் அறிவில் எவ்வளவு தேறியிருக்கிறார்கள்?

சிங்களவர் பரிசுத்த பாஷையாகிய பாலியில்



எழுதப்பட்ட அநேக ஆகம முதலிய நூல்களில் தேறின அறிவாளிகளாயிருக்கிறார்கள். அவைகளில் அநேகம் புலமைகளாயும் இலக்கணம், வாகடம், சோதிடம், இதிகாசம் முதலிய நூல்களாயும் இருக்கின்றன. இலங்காபுரிச் சரித்திரம் பாலிப் பாஷையில் எழுதப்பட்டிருந்துங் கட்டுக்கதைக்கடுத்த அநேகம் பகுதிகளும் உண்டு. தமிழருக்குள்ளுஞ் சாத்திரங்கள் இருந்தும் பாகவதம், மகாபாரதம், இராமாயணம், காசிகாண்டம், புராணகாவியங்கள் முதலிய பல நூல்களிலும், இலக்கணம், சோதிடம், சங்கீதகீர்த்தனம் முதலிய நூல்களிலுந் தேறினவர்களாயிருக்கிறார்கள். சோனகருக்கு சீறுவென்னும் (Seera) புத்தகம் உண்டு. அதில் வீரனாகிய மகமதுநபியின் சங்கதிகளைக் குறித்து எழுதியிருக்கின்றது. ஆகிலுந் தீவிலுள்ளவர்களிற் சில பெயர் மாத்திரந் தங்கள் தங்கள் பாஷைகளில் எழுதப்பட்டிருக்கிற காவியங்களிலே படித்துத்தேறியிருக்க மிகுதியானவர்களோ அறியாமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இங்கிலிஷகாரர் இத்தீவைப் பிடித்து அரசாட்சிபண்ணத் தொடங்கினதின்மேல் மெய்த் தேவனை அறிகிற அறிவு தலைப்படத் தொடங்கிற்று. அதற்கடுத்த முயற்சிகள் விசேஷமாகத் தீவின் வடபக்கத்திலுங் கொழும்பு முதலிய மற்றும் பிரதான இடங்களிலுங் கோவறன்மேந்தாராலும் அமெரிக்கா, இங்கிலாந்துவென்னுந் தேசங்களிலிருந்து வந்திருக்கிற குருமாராலு

RangaRakes
tamilnavarasam.com

ஞ் செய்யப்பட்டு வருகின்றன. இப்படியே சனங்கள் அறிவிலே தலைப்படும்படி சாத்திரப் பள்ளிக்கூடமும் மற்றும் பள்ளிக் கூடங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

*இலங்கையின் பூர்வசங்கதிகளைக் குறித்து என்னதெரியும்?*

இலங்கைத்தீவில் முதற் குடியேறினதாரென்பது ஐயம். முற்காலத்தில் இலங்கையிற் காக்கைமூக்கராகிய இராட்சதர் (Cannibals) குடியேறி இருந்தார்களெனக் கட்டுக்கதையாய்ச் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவுக்கு (௫௱௪௯) வருஷத்துக்குமுன் சிங்களவர் கலிங்கதேசத்திலிருந்து இலங்கைக்குவந்து குடியேறினார்களென்றும் அதினால் இலங்கைக்குச் சிங்களதீவென்னும் (Singhala Dwipa) பெயர் உண்டாயிற்றென்றும் அநேகர் சொல்லுகிறார்கள். இலங்கையின் பூர்வ சங்கதிகளிற் சில இராமாயணத்திலுங் காணப்பட்டிருக்கின்றன. அதிற் சொல்லியிருக்கிறபடி இலங்கைதீவுக்குத் தெட்சண சமுத்திர தீவென்று பெயர். இராமாயணத்திற் சொல்லப்பட்டிருக்கிற இராட்சத கோத்திரத்திலுள்ள இராவணனுடைய வங்கிஷம் அற்றுப்போனபின் (௲௮௱௪௫) வருஷமளவும் இலங்கை காடாய்க் கிடந்ததென்றும், மறுபடி பூதகணங்கள் வந்து குடியிருந்தனவென்றுங் கதை. இலங்கையை முதல் ஆண்ட சிங்கள இராசா விசையன். அவன் இலங்கைக்கு வந்த காலத்தைக் குறித்துப் பலரும் பலவிதமாய் எண்ணுகிறார்கள். அவனுக்குப் பின் இருந்த இராசாக்க



ளில் அநேகர் அனுராசபுரத்திலிருந்து அரசாண்டுவந்தார்கள். இவர்களுடைய சங்கதிகளைக்குறித்து கடைசியில் இலங்கைச் சரித்திரத்திற் காண்க.

---

## ௰௮ அதிகாரம்.

### இலங்கையின் பிரிவுகள்.—General Divisions.

*இலங்கை எத்தனை பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது?*

அரசாட்சியாருடைய ஒழுங்கின்படி ஐந்து பெரிய பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன, க. வடமாகாணம், உ. தென்மாகாணம், ௩. கீழ்மாகாணம், ௪. மேல்மாகாணம், ௫. நடுமாகாணம் என்பவைகளே.

*வடமாகாணத்திலுள்ள நாடுகள் எவை?*

யாழ்ப்பாணம், (Jaffna) மன்னார், (Manaar) வன்னி (Wanny) என்னும் நாடுகளும், நுவரைகாளாவி என்னுந் தெசாவனியும் (Dessavony of Nuwerakalaweye) தீவுபற்றுகளுமே*.

*தென்மாகாணத்திலுள்ள நாடுகள் எவை?*

காலி, (Galle) தங்கல், (Tangalle) மாத்துறை, (Matura) அம்பாந்தோட்டை, (Hambantotte) என்னும் மாகாணங்களும், சப்பிறகாமந்தெசாவனியும், (Dessavony of Saffragam) ஊவாகீழ்நாடு (Province of Lower Uwa)

* Note மற்றும் மாகாணத்திலுள்ள பெயர்கள் பெரும்பாலுஞ் சிங்களப் பெயர்.

வெல்லசைநாடு (Welasse) என்பவைகளும்.

கீழ்மாகாணத்தில் அடங்கிய பிரிவுகள் என்ன?

திரிகோணமலை, (Trincomalie) மட்டைக்களப்பு, (Batticaloe) என்னும் மாகாணங்களும் வேகம்பாகம், (Wegampaha) குலுகம்பாகம், (Kooloogampaha) மிகனகொல்லப்பலத்தம், (Miganagollapalata) என்பவைகள் தவிர்ந்த விந்தனை, (Bin-tenne) தம்மன்கடவை, (Tamankadawe) என்னும் நாடுகளும் அடங்கியிருக்கின்றன.

மேல்மாகாணத்திலுள்ள நாடுகள் எவை?

கொழும்பு, (Colombo) சலாபம், (Chilaw) புத்தளம், (Putlam) என்னும் மாகாணங்களும் எழுகோறளை, (Seven Korles) திறிகோறளை, (Three Korles) நாலுகோறளை, (Four Korles) என்னுந் தெசாவணிகளும், புலத்துகாமங் கீழ்நாடுமே (Province of Lower Bulatgamma.)

நடு மாகாணத்திலுள்ள நாடுகள் எவை?

கண்டி, (Kandy) எட்டிநுவரை, (Yettinuwera) உடுநுவரை (Udunuwera) அரசிப்பற்று, (Harasipattoo) தம்பனை (Tumpane) தும்பறை, (Dumbere) ஏவாயிட்டி, (Hewahette) கொத்மாலை, (Kotmaly) புலத்துகாமி மேனாடு, (Upper-Bulatgamme) வேயிலூவா, (Weyeloowa) விந்தனை நாட்டிலுள்ள வேகம்பாகம், குலுகம்பாகம் மிகனகொல்லப்பலத்தம் என்னும் மாகாணங்களும், ஊவா, (Uwa) மாத்தளை, (Matelle) உடப்பலாத்தளை, (Udapalata) வளப்பனை, (Vallapana) என்பவைகளும்.



---

## ௧ வது. வடநாடு.—Northern Province.

வடமாகாணத்தின் சனத்தொகை எவ்வளவு?

(௨௱௯௯௲௱௮௧).

அது எத்தனை சதுரமயில் விசாலமுள்ளது?

நிலப்பரப்பு (௯௲௫௱௰௫) சதுரமயில் விஸ்தாரமுள்ளதாயிருக்கின்றது.

இம்மாகாணத்திலுள்ள பிரிவுகளுஞ் சிறுநாடுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?

அவைகளை அட்டவணையிற் காண்க.

RangaRakes tamilnavarasam.com

## அட்டவணை.

| Districts. | Provinces and Dessavonies | Number of Parishes | Population. |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம் | ௫ | ௨௱௰௯௲௬௱௪௰ |
| | வலிகாமங் கிழக்கு | ௯ | |
| | வலிகாமம் மேற்கு | ௪ | |
| | வலிகாமம் வடக்கு | ௪ | |
| | வடமராட்சி | ௫ | |
| | தென்மராட்சி | ௬ | |
| | பச்சிலைப்பள்ளி | ௪ | |
| | கரைச்சி | ௦ | |
| | பூனகரி | ௨ | |
| | தீவுபற்றுகள் | ௮ | |
| மன்னார். | மன்னார் | | ௨௭௯௲௱௯ |
| | கிழக்குமுள்ளிப்பற்று N | | |
| | கிழக்குமுள்ளிப்பற்று S. | | |
| | உடையாலூர் | | |
| | நடுச்செட்டிகுளம் | | |
| | சின்னச்செட்டிகுளம் | | |
| | மேற்குமுள்ளிப்பற்று | | |
| | பன்னங்காமம் | | |
| | தூணுக்காய் | | |
| வன்னி. | காரைக்காட்டு முள்ளிப் பற்று North | | ௭௲ |
| | காரைக்காட்டு முள்ளிப் பற்று South | | |
| | முல்லியவளைப்பற்று | | |
| | மேலைப்பற்று North | | |
| | மேலைப்பற்று South | | |
| | மேலைப்பற்று East | | |
| | கருணவாய்ப்பற்று N | | |
| | கருணவாய்ப்பற்று S | | |
| | புதுக்குடியிருப்பு | | |
| துவரை காளாவி | துவரை காளாவி | ௰௪ | ௪௫௯ ௨௱௪ |



## யாழ்ப்பாணம்—Jaffna.

*யாழ்ப்பாணத்தின் எல்லைகள் எவை?*

யாழ்ப்பாணம் இலங்கைத்தீவின் வட அந்தத்தில் கருநாடகக் கரையிலுள்ள தொண்டிப்பட்டணத்துக்கு நேர்கிழக்கே எதிர்த்த கரையிலிருக்கின்றது. வடக்கிலுங் கிழக்கிலும் பங்காளக்குடாக்கடலும் மேற்கில் மன்னார்க் குடாக்கடலுந் தெற்கிற் சமுத்திர வாய்க்காலும் இதற்கு எல்லைகளாயிருக்கின்றன.

*அதின் நீளம் அகலம் என்ன?*

வடமேற்கிலிருந்து தென்கிழக்கு வரைக்கும் (௩௫) மயில் நீளமும், வடகிழக்கிலிருந்து தென்மேற்குவரைக்கும் (௫)மயில் முதல்(௰௫) மயில்மட்டும் அகலமுமுள்ளது. (௯௨௱௨௰) சதுரமயில் விஸ்தாரமான பரப்புநிலத்தை அடக்கியிருக்கின்றது.

*அதின் பிரதான பிரிவுகள் எவை?*

வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூனகரி, வலிகாமம், தீவுபற்று முதலிய பலபிரிவுகளும் (௫௭)* கோவிற்பற்றும் (Parish) (௱௫௯) கிராமங்களும் உண்டு. அவைகளை அட்டவணையிற் காண்க.

*யாழ்ப்பாணத்தின் சனத்தொகை எவ்வளவு?*

தற்காலத்துக் கணக்குச் சட்டத்தின்படி (Modern Census) (௨௱௰௯௲௬௱௪௰.)

* In former times 32 Parishes were reckoned.

RangaRakes

tamilnavarasam.com

யாழ்ப்பாணத்தின் பிரிவுகளையும் கோவிற்பற்றுக்களை
யுஞ் சனத்தொகை நிலப்பரப்பு முதலியவைகளையுங்
காட்டும் அட்டவணை.

| Divisions | Parishes. | Population |
|---|---|---|
| யாழ்ப்பாணம். | †நல்லூர் | ௭௲௭௱௭௧ |
| | ‡வண்ணார்பண்ணை | ௰௧௲௯௱௯௯ |
| | சுண்டிக்குளி | ௯௲௱௩௯ |
| வலிகாமம் East. | கோப்பாய் | ௭௲௨௱௯௯ |
| | புத்தூர் | ௪௲௯௱௮௰ |
| | அச்சுவேலி | ௫௲௯௱௨௧ |
| வலிகாமம் N. | மல்லாகம் | ௭௲௮௱௪௫ |
| | *தெல்லிப்பழை | ௯௲௨௱௯௭ |
| | *உடுவில் | ௯௲௯௱௯௯ |
| | மயிலிட்டி | ௫௲௨௱௨ |
| வலிகாமம் W. | *பண்டத்தெருப்பு | ௫௲௯௱௩௪ |
| | சங்கானை | ௮௲௭௱௯௰ |
| | *வட்டுக்கோட்டை | ௭௲௯௱௪ |
| | *மானிப்பாய் | ௯௲௭௱௰௯ |
| வடமராட்சி. | உடுப்பிட்டி | ௰௧௲௯௱௯௨ |
| | கட்டைவேலி | ௰௧௲௯௱௭௮ |
| | ‡‖பருத்தித்துறை | ௰௲௧௱௭௭ |
| தென்மராட்சி. | நாவற்குளி | ௫௲௱௪௩ |
| | *சாவகச்சேரி | ௰௧௲௯௱௰௯ |
| | *வரணி | ௰௧௲௱௰௩ |
| | கச்சாய் | ௫௲௫௱௯௩ |
| | எழுதுமட்டுவாள் | ௪௲௪௱௯௯ |
| பச்சிலைப்பள்ளி | முகமாலை | ௲௭௱௩௨ |
| | தம்பகாமம் | ௲௭௱௪௧ |
| | புலோப்பழை | ௲௪௱௭௫ |
| | முள்ளிப்பற்று | ௨௲௯௱௭௧ |
| கரைச்சி. | கரைச்சி | ௲௪௱௮௭ |
| பூனகரி. | பூனகரி | ௩௲௧௱௯௬ |
| | பல்லவராயன் கட்டு | ௯௱௭௰ |

*அமெரிக்கன் மிசியோன் தலங்கள்.
†சர்ச்சுமிசியோன் தலங்கள்.
‡வெஸ்லியன் மிசியோன் தலங்கள்.
‖உரோமான் கத்தோலிக்க மிசியோன் தலங்கள்.



| Divisions. | Parishes. | Population. |
|---|---|---|
| தீவுபற்று. | வேலணை | ௨௲௯௱௮௮ |
| | ‖ஊர்காவற்றுறை | ௫௲௩௱௫௨ |
| | அல்லைப்பிட்டி | ௨௲௱௨௩ |
| | காரதீவு | ௫௲௮௱௯௫ |
| | புங்குடுதீவு | ௩௲௭௱௯ |
| | நயினாதீவு | ௭௱௯௪ |
| | அனலதீவு | ௲௱௮௨ |
| | நெடுந்தீவு | ௩௲௭௰௨ |

யாழ்ப்பாணத்தின் தேசசுவாத்தியம் எவ்விதமானது?

யாழ்ப்பாணங் கடலடுத்திருப்பதினாலுங் காலத்துக்குக் காலம் நல்லகாற்று வீசுவதினாலுந் தேசசுவாத்தியமுஞ் சுகமுங் குளிர்த்தியுமுள்ளது. வடதேசத்தைப்போல் அதிக காங்கையான பூமியல்ல. ஐரோப்பாருடைய சரீர சவுக்கியத்துக்கேற்ற பூமியாயிருக்கின்றது.

நாட்டுத் திரவியங்கள் எவை?

நெல், வரகு, கேப்பை அல்லது குரக்கன், சாமை, தினை முதலிய தானியவகைகளும், கிழங்கு வகைகளும் பச்சிலைப்பள்ளி வன்னி முதலிய நாடுகளில் உண்டாகிற உயர்ந்த புகையிலைகளும் வெற்றிலை, பாக்கும், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், நாரத்தம்பழம், (Orange) கொடிமுந்திரிகைப்பழம், அன்னதாழம்பழம், மாதளம்பழம், எலுமிச்சம்பழம் முதலிய பற்பல கனிவர்க்கங்களும், பூஞ்சோலைகளும், தோட்டங்களும், தெங்கு, கமுகு, பலா, மா, நாவல்,

‡‖வெஸ்லியனும் உரோமானுமுள்ள தலங்கள்.

RangaRakes
tamilnavarasam.com

இலுப்பை, ஆல், அரசு, செண்பகம் முதலிய விருட்சங்கள் நிறைந்த வனங்களும், பலவகைப் பயறுகளுங், கீரைகளும், சாயவேர் முதலியவைகளும் மிகுதியாய் உண்டு. இவைகளையன்றிக் காட்டுப் புறங்களில் பாலை, முதிரை, தாழை முதலிய மரங்களும் உண்டு.

*நிலம் எப்படிப்பட்டது?*

நிலம் மணலுங் கல்லுஞ் செம்மண் தரையுமாயிருக்கின்றது. சனங்கள் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் விதைத்துத் தை, மாசி மாதங்களில் அறுப்பார்கள்.

*மிருகங்களும் உண்டா?*

ஊர்திரி விலங்குகளையன்றி வன விலங்குகள் அரிதாய்க் காணப்படும். ஆடு மாடுகள் மிகுதியாய் உண்டு.

*சனங்கள் உண்டாக்குவதான பொருள்கள் எவை?*

புடைவைகளும் பனங்கட்டியும் பலவிதமான எண்ணெயுந்தான்.

*யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையின் மறுதுறைமுகங்களுக்கு ஏற்றப்படுகிற பொருள்கள் எவை?*

புகையிலை, வெற்றிலை, பனங்கவறு, பனங்கட்டி, மிளகாய், இரவெண்காயம் முதலியவைகளே. திருவாளங்கோட்டுக்கு (Travancore) வருஷந்தோறும் அதிக புகையிலை இவ்விடத்திலிருந்து ஏற்றப்படுவதால் அத்தேசத்து இராசா அவைகளை வாங்கி உயர்ந்த விலைக்கு விற்பார். ஆகையாற் புகையிலையினாலே அதிக பணவரவு





ண்டு. இங்கிலிஷ் வியாபாரிகள் வந்து பெருங் காடுகளைச் செவ்வைபண்ணி அதிக புகையிலை செய்விக்கிறார்கள்.

*யாழ்ப்பாணத்தில் வியாபாரத்துக்கு இறக்கப்படுகிற பொருள்கள் எவை?*

கஞ்சம், (Ganjam) பழவேர்க்காடு, (Pulicat) ஆரணியம், (Arnee) கருப்பூர், (Caroopoor) முதலிய தேசங்களிலிருந்தும் ஐரோப்பா, அமேரிக்கா முதலிய சீமைகளிலிருந்தும் வருகிற உயர்த்தியான புடைவை சால்வை சதுக்கங்களும், இரும்பு, வெண்கலச்சாமான், அரிசி, நெல், கறிச்சரக்குகள், மருத்துப்பூண்டுகள், மட்கலங்கள், வாசனைச் சரக்குகள் முதலியவைகளுமே.

*சனங்களின் குணம் என்ன?*

குடியிருப்பவர்களில் மிகுதியானவர்கள் தமிழர், அவர்களையன்றிச் சோனகரும் பறங்கிக்காரரும் இங்கிலிஷ்காரரும் உண்டு. தமிழர் முயற்சியுள்ளவர்களும் உழைப்பாளிகளுமாயிருக்கிறார்கள். கொஞ்சக்காலத்துக்கு முன் உலாந்தாக்காரர் ஆளுகையிலே கொலை, களவு, கொள்ளை முதலிய கொடிய தீமைகள் நடந்தும் இக்காலத்தில் இங்கிலிஷ்காரர் தீவுக்கதிபதிகளாயிருப்பதால் அவ்வளவு நெருக்கமல்ல. இனிமேல் தேசஞ் சீர்ப்பட்டுச் சனங்கள் அறிவாளிகளாயிருப்பார்களென்று நம்புவதற்கிடம் உண்டு. ஏனெனில் இங்கிலாந்து அமேரிக்கா முதலிய சீ

RangaRakes
tamilnavarasam.com

மைகளிலிருந்து வந்திருக்கிற இங்கிலிஷ்(Pro-
testant) புரொடெஸ்தன் குருமாரும் பள்ளிக்
கூடங்களை ஸ்தாபித்து சில வருஷக்காலமள
வாக உயர்ந்த சாஸ்திர வித்தைகளைப் படிப்பி
த்து மிகுநன்மைகள் செய்துவருகிறார்கள். அ
ரசாட்சியாரும் இங்கிலிஷ் பாஷையிலே தே
றும்படி பள்ளிக்கூடங்களைப் பல பகுதிகளிலும்
ஸ்தாபிக்க முயன்றிருக்கிறார்களென்பதைக் க
ண்டுங் கேள்விப்பட்டுஞ் சந்தோஷங் கொள்ளு
கிறோம்.

*சத்திய வேதக் குருமார் எங்கெங்கே இருக்கிறார்கள்?*

வட்டுக்கோட்டை, மானிப்பாய், தெல்லிப்
பழை, உடுவில், சாவகச்சேரி, வரணி, பண்ட
த்தெருப்பு என்னுங் கோவிற்பற்றுகளில் அ
மெரிக்கன் குருமாரும் நல்லூர், வண்ணார்பண்
ணை, யாழ்ப்பாணநகரி, பருத்தித்துறை என்
னும் இடங்களில் சர்ச்சுமிசியோன் குருமாரு
ம் வெஸ்லியன்மிசியோன் குருமாரும் இருக்கி
றார்கள். உலாந்தாக்காரர் தீவையாண்டகாலத்தி
ல் அவர்கள்(௩௨) பற்றுகளிலே (௩௨) கோவில்க
ளைக் கட்டிவைத்ததினால் அவைகளுக்குக் கோவி
ற்பற்றுகளென்ற பெயர். அமெரிக்கன் குரு
மார் (௨௫) வருஷத்துக்குமுன் வந்து மேற்
சொல்லிய கோவிற்பற்றுகளிலுள்ள உலாந்தாக்
கோவில்களைப் புதுப்பித்து அவைகளிற் கிழமை
தோறுந் தேவாராதனைபண்ணி வருகிறார்கள். ஒ
ரு காலத்தில் அவைகள் பாழாய் மையான பூமி
யாயிருந்தும் மறுபடி தேவாலயங்களாக அ



வ்விடங்களில் தேவ சங்கீர்த்தனமுந் தேவாரா
தனையும் நடக்கின்றன.

*யாழ்ப்பாணத்திற் சிறைகளை ஆளும் வழக்கம் இப்பொ
ழுதும் இருக்கிறதோ?*

இப்பொழுது (௰௩) சிறைகள் மட்டுக்கி
ருக்கிறார்கள். மிச்சமானவர்கள் இட்டம்பெ
ற்றுவிட்டார்கள். உலாந்தாக்காரர் காலத்தில்
நடந்ததும்போல் இப்பொழுது இருக்கிற சிறை
களுக்கு உபத்திரவமுங் கொடுமையும் உண்டா
கிறதில்லை. (௲௮௱௰௮ம்) ஆண்டில் சிறைகளை
விற்கவும் வாங்கவும் படாதென்று இங்கிலிஷ் அ
ரசாட்சியாராலே ஒரு கட்டளை உண்டாயிற்று.

*யாழ்ப்பாண நகரியைக் குறித்து என்ன தெரியும்?*

அது உத்தராக்ஷத்தில்(௯)பாகைக்கும்(௪௰)
கலைக்குங் குணதேசாந்தரத்தில்(௮௰) பாகைக்
கும் (௯) கலைக்கும் இடையில் இருக்கின்றது.
நேர்த்தியான ஒரு கோட்டையும் அதில் ஒரு
கோவிலும் கோட்டைத் தளகத்தனுடைய வீ
டும் மற்றுங் கட்டுவேலைகளும் உண்டு. கிழக்
கே கால்மயில் தூரத்தில் பேட்டை (Pettah)
இருக்கின்றது. பேட்டையிற் குடியிருக்கிறவ
ர்களில் மிகுதியானவர்கள் முன்னிருந்த உலாந்
தாக்காரரின் வங்கிஷத்தாராயிருக்கிறார்கள். இ
ங்கிலிஷ்காரர் தீவிற்கு வந்தபின் முன் இருந்த
உலாந்தாக்காரரில் அநேகர்வத்தாவிக்கும்(Ba-
tavia) அநேகர்தீவின் பல பகுதிகளுக்கும் போ
ய்க் குடியேறியிருக்கிறார்கள். பட்டணத்திற்
பெரிய கடையென்றுஞ் சின்னக் கடையெ

RangaRakes
tamilnavarasam.com

ன்றும் உண்டு. தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு ஒரு
கோவில் உண்டு (St. John's Church). அதில் ஒரு
குருவானவர் (Colonial Chaplain) கிழமைதோ
றுந் தேவாராதனை நடத்திவருகிறார். வண்ணார்
பண்ணைக்கயலிற் சிவன் கோவில் ஒன்றுண்டு.
நாற்பத்தெட்டு வருஷத்துக்குமுன் சங்கைபொ
ந்த வைத்திலிங்கச் செட்டியார் அவர்கள் அதிக
பணஞ் செலவழித்து இக்கோவிலைக் கட்டுவித்
தார். இந்நகரியில் ஒரு ஏசென்றும் (Agent) ஒரு
டிஸ்திரிக் நீதவானும், ஒரு பிசுக்கால் நீதவானு
ம், ஒரு மஸ்திராத்தென்னும் உத்தியோகஸ்தர்
களும் இருந்து இராசகாரியங்கள் பார்த்துவரு
கிறார்கள்.

*யாழ்ப்பாணத்தின் பூர்வசங்கதிகளைக் குறித்து என்ன அறிவாய்?*

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தைக் குறித்து
நாம் அதிகமாய் அறியாதிருந்தாலுஞ் சில காரியங்
கள்மாத்திரம் அறிவோம். முதல்முதல் யாழ்ப்
பாணம் முற்றும் வனமாயிருந்ததென்றும் சோ
ழமண்டலக் கரையிலிருந்து யாழ்ப்பாடியாகிய
வீரராகவன் (Vira Raghava a lyrist) என்னும்
ஒரு குருடன் முற்காலத்திலே இலங்கையை
ஆண்ட இராசாக்களில் ஒருவரிடத்திற் போய்
வீணை வாசித்த பொழுது அவர் அவனிற் பிரி
யப்பட்டு மேற்சொல்லிய காட்டை நன்கொ
டையாய்க் கொடுத்தாரென்றும் அப்பொழு
து அந்த யாழ்ப்பாடி காட்டை வெட்டிக்
கொத்திச் செம்மையாக்கி மறுபடி வடகரை



க்குப்போய் அப்பகுதி விசையநகரம் (Vija-
yanugger) தெலிங்க இராசாவுக்குக் கீழ்ப்பட்
டிராதிருக்கையிற் சனங்களைக் கொண்டுவந்து
இக்காட்டிற் குடியேற்றி வைக்கச் சனங்களு
ம் அதிகப்பட மறுபடி அதற்கு யாழ்ப்பாண
நாடென்னும் பெயர் உண்டாயிற்றென்றும் ம
றுபடி அவர்களை ஆளும்படி ஒரு இராசாவில்லை
யென்று யோசித்து சோழமண்டலத்துக்குப்
போய்ச் சோழவங்கிஷத்திலுள்ள (Race of
Solen) ஒரு இராசபுத்திரனைத் தெரிந்தெடுத்து
க் கலியத்தம் (௩௲௧ம்) வருஷத்தில் (101 B. C.)*
யாழ்ப்பாணத்திற் கொண்டுவந்து இராசாவாக
வைத்தானென்றும் அவ்விராச புத்திரன் சுபா
வத்தில் ஒரு கைசொத்தியாய் இருந்தபடியா
ல் அவருக்கு விசைய கூளங்கைச் சக்கிரவர்த்தி
(Vijaya Koolangai Chakrawarti) என்னும் பெ
யர் உண்டாயிற்றென்றும் அந்த இராசகுமாரன்
தமது தேசத்தைச் சீர்ப்படுத்த வேண்டுமென்
று முழு நோக்கமுள்ளவராயிருந்தாரென்றும்
அவருக்குப்பிறகு யாழ்ப்பாணத்தை ஆண்ட அ
வருடைய வமிசத்தாராகிய ஆரியச்சக்கிரவர்த்தி
கள் பலமுறைகளிலுஞ் சிங்களவருடன் போர்
பண்ணிக்கொண்டிருந்தார்களென்றுங் கேள்வி.
கிறிஸ்துவுக்கு (௲௪௱௰) வருஷத்துக்குப் பிற
கு சயவர்த்தனபுரத்தை (Cotta) ஆண்ட சிறீப
ராக்கிரம பாகுவென்பவன் (Sree Prakrama
Bahoo VI) யாழ்ப்பாணத்தை ஆண்ட சக்கிர

* The time is disputed.

RangaRakes
tamilnavarasam.com

வர்த்தியைத் துரத்திவிட்டு தேசத்தைச் சிங்கள அரசாட்சிக்குக் கீழ்ப்படுத்தித் தனது சொந்த மருமக்களில் ஒருவனை அதற்கு இராசாவாக வைத்தான். ஆகிலுஞ் சொஞ்சக்காலத்துக்குப் பின் சக்கிரவர்த்திகள்தாமே மறுபடியும் ஆண்டுவந்தார்கள். கிறிஸ்துவுக்கு (௲௫௱௪௪) வருஷத்தின்பின் சவியலென்னும் உரோமான் குருவானவர் (Father Francis Xavier) மன்னாரில் அநேகரைக் கிறீஸ்தவர்களாக்கின செய்தியை யாழ்ப்பாணத்தை ஆண்ட சக்கிரவர்த்தி கேள்விப்பட்ட பொழுது அவர்களில் (௬௱) பெயரைக் கொடுமையாய்க் கொல்லுவித்துச் சவியலையும் அவ்விடத்தில் இராமற்போகும்படி பண்ணினதினாலே புடுத்துக்கீஸ்காரர் சக்கிரவர்த்திகளுடன் பகைகொண்டு போர்பண்ணி (௲௫௱௯௧ம்) வருஷத்தில் தங்கள் சீமையாக்கி ஆண்டுவந்தார்கள். மறுபடி உலாந்தாக்காரர் (௲௬௱ம்) வருஷத்தில் புத்துக்கீஸ்காரரிடத்தில் இருந்து தேசத்தைப் பிடித்து ஆண்டு வந்தார்கள். அதன்பின் இங்கிலிஷ்காரர் (௲௭௱௯௫ம்) ஆண்டில் உலாந்தாக்காரருக்குக் கீழ்ப்பட்டிருந்த தேசங்களைப் பிடித்தபொழுது யாழ்ப்பாணமும் அவர்கள் அரசாட்சிக்குக் கீழாயிற்று.

---

## மன்னார்.—Manaar.

*மன்னார் எத்தெந்த ரேகைகளுக்கூடே எல்லைப்பட்டிருக்கின்றது?*

உத்தராக்கிஷத்தில் (௯) பாகைக்கும் (௬) கலைக்குங் குணதேசாந்தரத்தில் (௭௯) பாகைக்கும் (௫௮) கலைக்கும் ஊடே இருக்கின்றது.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௨) மயில் முதல் (௫) மயில்வரையில் அகலமும் (௰௮) மயில் நீளமும் உள்ளது. அதில் (௨௨) கிராமங்கள் உண்டு.

*நிலம் எப்படிப்பட்டது?*

உவர் நிலமானதால் வேளாண்மைக்கேற்ற இடமல்ல.

*அதிலுண்டாகிற திரவியங்கள் என்ன?*

தெங்கு, பனை முதலிய மரங்களும் பருத்தி, பயிர்பூண்டுகள் முதலியவைகளுங் காட்டுப்பக்கங்களில் அதிக சாயவேருங் கடற்பக்கங்களில் உப்புஞ் சங்கும் அதிகமாய் உண்டாகின்றன.

*தேசசுவாத்தியம் எப்படிப்பட்டது?*

காற்றுப் பெயர்ச்சியினால் மழை பெய்யும் பொழுது குளிர் காய்ச்சல் ஊருக்குள் உண்டாகி அநேகரைச் சேதம்பண்ணும் அத்தருணங்களிலன்றி மற்றெப்பொழுதுஞ் சனங்கள் சுகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வடதேசத்தைப்போல் மன்னார் உட்டண பூமியாயிராமல் குளிர்த்தியுஞ் சுகமுமுள்ள தேசமாயிருக்கின்றது.

*தென்கருநாடகத்தையும் இலங்கையையும் பிரிக்கிற கடல் எது?*

மன்னார்க் குடாக்கடல். இக்கடலின் கரை

RangaRakes

tamilnavarasam.com

ப்பக்கங்களெங்கும் மணற்குவியல் மிகுதி. இக்குடாக்கடலிற் சுளுப்பு, தோணி, படகு, சிறுவத்தை முதலியன செல்வதேயன்றிக் கப்பல்கள் செல்லத்தக்க ஆழமான கடலல்ல. இக்கடல்வழியாய்த் தோணிகள் சுளுப்புகள் சென்னபட்டினம் புதுச்சேரி, (Pondichery) கற்பிட்டி, (Calpentyn) நீர்கொழும்ப, (Negombo) கொழும்பு, (Colombo) முதலிய இடங்களுக்கு ஓடுகின்றன. கப்பல் முதலியவைகள் இலங்கைத் தீவைச் சுற்றித் திரிகோணமலை (Trincomalie) தீவாந்துறை, (Dondra Head) காலி, (Galle) என்னும் ஊர்கள்வழியாயோடுகின்றன. சேதுவென்று சொல்லப்பட்ட (Sethoo) இராமருடைய பாலம் (Adam's Bridge) தலைமன்னார் (Talamanaar) தொடங்கி இராமேஸ்புரப் (Ramisseram) வரையில் இருக்கின்றது. ஆழச்சலம் இல்லாமற் கற்பாராயிருப்பதாற் கப்பல்கள் அவ்வழியாய்ச் செல்லுகிறதில்லை. இப்பொழுது இங்கிலிஷ்காரர் பாம்பனித் (Paumban Pass) போயிருந்து வெகு வேலையாட்களை வைத்து அப்பாலத்தை இடித்துச் செவ்வைபண்ணுகிறார்கள். மன்னார்க்குடாக்கடலிற் சங்கும், முத்தும் விளைகின்றன.

*மன்னாரிலிருந்து மறுதேசங்களுக்கு வியாபாரத்துக்கேற்றப்படுகிற பொருள்கள் எவை?*

சங்கு, சாயவேர், பனங்கவறு, பாக்கு, பாலை, முதிரை முதலியமரங்கள், கருவாடு என்பவைகளே.



*மன்னாரில் வியாபாரத்துக்கிறக்கப்படுகிற சாமான்கள் எவை?*

புடைவை, அரிசி, நெல், கந்த வர்க்கங்கள், மருந்துப்பூண்டுகள் முதலியவைகளே.

*தலைப்பட்டினமாகிய மன்னாரைக் குறித்து என்னதெரியும்?*

அதில் ஒரு ஏசன்றும் (Agent) டிஸ்திரிக்கு நீதவானும் (Judge) இருந்து சிவிலுக்கடுத்ததுங் கிரிமினலுக்கடுத்ததுமான வழக்குகளை விளங்கிக் காறுபாறுபண்ணிவருகிறார்கள். இந்நகரியில் ஒரு சதுரங்கக் கோட்டையும் அகன்ற அகழியும் உண்டு. கோட்டைக்குள் உத்தியோகஸ்தர் வீடுகளும் வெடிமருந்து பீரங்கிக் குண்டுகள் இருக்கிற வீடுகளும் ஒரு றப்பிறமாதக் கோவிலும் இரண்டு வாவிகளும் உண்டு. கோட்டையிலிருந்து மூன்று மயில் தூரத்தில் பட்டினம் இருக்கின்றது. அதில் நூதனமான ஒருவகை விருட்சங்கள் (Sooria trees) மிகுதி. அவ்விடத்தில் நேர்த்தியான வீடுகளும் வங்களாவும் கோட்டுத்தலமுங் கச்சேரியும் உரோமான் கோவில்களும் பறங்கித்தெருவும் மற்றும் ஒழுங்கான தெருக்களும் பெரிய சந்தையுங் கடைகளும் உண்டு

*சனங்கள் என்ன சமயத்தவர்கள்?*

அநேகர் உரோமான் மதத்தவர்களுஞ் சிலர் இந்துமதக்காரருமாய் இருக்கிறார்கள். முற்காலத்தில் இவ்விடத்திற் சவியலென்னும் (Francis Xavier) உரோமான் குருவானவர் கத்தோலிக்கு மார்க்கத்தைப் பரப்பி அநேகரைச் ஞறி

RangaRakes
tamilnavarasam.com

ஸ்தவர்களாக்கினதினால் வெகு உரோமான் கிறிஸ்தவர்கள் உண்டு.

---

## வன்னி.—Wanny.

*வன்னிநாட்டின் எல்லைகள் எவை?*

கிழக்கே திரிகோணமலையும், மேற்கில் மன்னார்க்குடாக்கடலுந் தெற்கில் நுவரைகாளாவியும் (Newera Kalawiya) வடக்கில் யாழ்ப்பாணமும் அதற்கெல்லைகளாயிருக்கின்றன.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௬௫) மயில் நீளமும் (௫௰) மயில் அகலமுமுள்ளதாயிருக்கின்றது.

*தேசம் எப்படிப்பட்டது?*

பதிவானதரையும் ஏகத்துக்குப் பெருங்காடாயும் இருக்கின்றது. நிலம் அதிக காங்கையினால் வரண்டுபோவதால் பயிர் பூண்டுகள் வர்த்தியாமல் தீய்ந்துபோகின்றன.

*புரோசனங்களென்ன?*

நெல்லு மாரியில் ஒருபோகமுங் கோடையில் ஒருபோகமும் விளையும். இத்தேசத்தில் அகப்படக்கூடிய பிரதான பொருள்களாவன யானைத்தந்தம், ஆடுமாடுகள், மான், மரை, மெழுகு, தேன், பால், நெய், தேங்காய், உயர்ந்தபுகையிலை என்பவைகளே. இவைகளை விற்றுச் சனங்கள் புடைவை, உப்பு, கருவாடு முதலியவைகளை வாங்குவார்கள்.



*முற்காலத்தில் என்னசீராயிருந்தது?*

முன்னே இந்நாடு பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருபகுதியிலும் ஒரு வன்னிமை அல்லது வன்னிச்சி என்பவர்கள் இருந்தாண்டு வந்தார்கள். மறுபடி உலாந்தாக்காரர் யாழ்ப்பாணத்தைப் பிடித்து ஆண்டபொழுது இந்தவன்னியரைத் தங்களுக்கு யானைகளை வருஷந்தோறுந் திறைகொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது அவர்கள் இல்லையென்று மறுத்தார்கள். அதனால் உலாந்தாக்காரர் அவர்களுடன் போர்பண்ணி ஊரைப்பிடித்துப் பிரதான வன்னிச்சியாகிய மெரியா செம்பத்தி (Maria Sembatte) என்பவளையும் பிடித்துக் கொழும்புக்கனுப்பி சிறைப்படுத்திவைக்க அங்கே அவள் மரித்துவிட்டாள். மறுபடி இங்கிலிஷ்காரர் உலாந்தாக்காரரைத் துரத்திவிட்டுத் தீவைப் பிடித்து ஆண்ட பொழுது வன்னியர் (௲௮௱௩ம்) வருஷமட்டுஞ் சமாதானமாய் வன்னியை ஆண்டுவந்தார்கள். ஆனாலும் மறுபடி பண்டார வன்னிமையானவன் (Pantdra Wanniya) கண்டியாருடைய ஒத்தாசையைக்கொண்டு இங்கிலிஷ்காரருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி ஒருமுறையிலே வடநாடுகள் எங்குஞ்சென்று யானையிறவு (Elephant Pass) வரைக்கும்வந்து யாழ்ப்பாணத்துக்குட் செல்லவென்றிருந்தான். வன்னியை இட்டமான நாடாக்கித் தான் எல்லாத்துக்குமேலாக இருக்கவேண்

RangaRakes

tamilnavarasam.com

டுமென்பதே அவனுடைய நோக்கமாயிருந்தது. ஆனாலும் முயன்றகாரியம் நிறைவேறாமற்போனதால் விட்டுவிட்டான். முல்லைத்தீவில்(Mullativoe) இருந்த குமாரசேகரமுதலியார் (Kumara Segara Modliar) இத்தருணத்தில் அதிக குற்றவாளியாகக் காணப்பட்டதினாற் கொல்லப்பட்டார். வன்னிமையுடனே இங்கிலிஷிகாரர் அதிக போர்பண்ணியுங் கடைசியாய்த் திரிபெர்க்கென்னுங் கப்பித்தான் (Captain Driberg பண்டாரவன்னிமையுடனே (௲௮௱௯௰௩) வருஷம் அற்பசி மாதம் (௩௧) திகதி போர்பண்ணி அவனுடைய சேனைகளில் அநேகரைக்கொன்று நாற்பத்தாறு பெயரைப் பிடித்து மறியற்படுத்தி அவர்களுடைய ஆயுதங்களையும் மற்றுமுள்ள பொருள்களையும் பறித்துக்கொண்டுபோனான். மறுபடி சுவேல் என்னும் லவுத்தினங் கொம்மாந்தன் (Lieutenant Jewell) சத்துருவுக்கு விரோதமாய்ப்போய் அநேக ஆடுமாடுகளையும் பிடித்து, கலகக்காரரைத் துரத்திவிட்டு ஊரிற் சமாதானத்தை உண்டுபண்ணினார். (௲௮௱௪௰௩) வருஷம்முதல் (௲௮௱௰௮) வருஷம்வரையில் வன்னிநாடு கலகம் அடங்கி ஒரு கலக்கட்டரின் விசாரணைக்குக் கீழ்ப்பட்டிருந்தது.

வன்னிநாட்டின் பிரிவுகள் என்ன?

(௰௮) மேலைப்பற்று வடக்கு, மேலைப்பற்றுத் தெற்கு, மேலைப் பற்றுக் கிழக்கு, கிழக்குமுள்ளிப்பற்று வடக்கு, உடையூர், முல்லியவளைப்பற்று, காரைக்காட்டு முள்ளிப்பற்று வடக்கு, காரைக்காட்டு முள்ளிப்பற்றுத் தெற்கு, மேற்கு முள்ளிப்பற்று, பனங்காமம், நடுச்செட்டிகுளம், சின்னச்செட்டிகுளம், கிழக்குமுள்ளிப்பற்று தெற்கு, கருணவாய்ப்பற்று வடக்கு, கருணவாய்ப்பற்றுத் தெற்கு, துணுக்கை, புதுக்குடியிருப்பு. இவைகளிற் சில திரிகோணமலைக்கும், சில மன்னாருக்கும், சில யாழ்ப்பாணத்துக்குஞ் சேர்ந்திருக்கின்றன.

---

## நுவரை காளாவி.—Nuwera-Kalawiye.

இந்நாட்டின் எல்லைகள் எவை?

கிழக்கில் மாத்தளையும் (Matele) தெற்கிலும் மேற்கிலும் ஏழுகோறளையும் (Seven Korles) வடக்கில் வன்னியுமே.

எத்தனை பற்றுக்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது?

(௰௪) அவையாவன எருளிவி (Herelleve) மத்தம்பனை (Matambean) இந்துருவா (Indrowa) அளகாமுவே (Halagamuwe) உருளி (Huruly) மகப்போதனை (Mahapotane) மமீனியம் (Maminya) பரகாவம் (Parahawa) ஆகாவி (Hahalle) நவகாண்டகன் (Nuagamdaha) கில்விகாமம் (Killigam) இப்பாவிலா (Epawela) உல்லகல்லம் (Ollagalla) நுவரைகாமம் (Nuweragam) என்பவைகளே. அவைகளில் வடக்கிலுள்ள முதலேழும் ஏழுகோறளை நாட்டுக்கும் கிழக்கிலுள்ள மற்ற ஏழும் மாத்தளைக்குஞ்

சேர்ந்திருக்கின்றன.

*நிலம் எப்படிப்பட்டது?*

நுவரைகாளாவி முழுதுங் காடுஞ் செடியும் நிறைந்த பாழ்நிலமாய்க் கிடக்கின்றது. கிழக்கே சிறுமலைகள் உண்டு. காலோயா (Kala oya) வென்னும் நதியையன்றி வேறே நதிகளில்லை. இந் நதி தென்பகுதிகளுக்கூடாகச் சென்று பொன்பரப்பியைக் கடந்து (Pomparippo) கற்பிட்டிக் குடாவில் விழுகின்றது.

*தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?*

பெரும்பாலுஞ் சுகமுள்ளது, அநேக செடிகள் முளைத்திருக்கிற மேடுகள் கிட்ட இருப்பதால் அவைகளின் இலைகள் சலத்தில் விழுந்து உண்டாகிற நாற்றத்தினாற் குடிசனங்கள் விசேஷமாக மாரிகாலத்திலே காய்ச்சலினால் உபத்திரவம் அடைகிறார்கள்.

*புரோசனங்கள் என்ன?*

அநேகம் பகுதிகளில் நிலஞ் செழிப்பாய், வருஷத்தில் நெல்லுவேளாண்மை இரண்டுபோகம் விளைகின்றது. நெல்லையன்றிக் குரக்கன், கடுகு, மிளகாய், பருத்தி முதலியவைகளும் மிகுதியாய்ச் செய்யப்படுகின்றன. இந்நாட்டார் கடற்றுறை முகங்களுக்கும் உள்ளூர்களுக்கும் நெல்லு, சிறுதானியம், மிளகாய், பஞ்சி, முதலான புரோசனங்களை ஏற்றிப்போய் உப்பு, கருவாடு, புடைவை, பாக்கு, புகையிலை, இரும்பு, செம்பு, உருக்கு, ஈயம், மிளகு, வெள்வெண்காயம், ஈரவெண்காயம் முதலிய சரக்



குகளை மாற்றிக்கொண்டுவந்து வியாபாரம்பண்ணுகிறார்கள்.

*இவ்விடத்திற் குடியிருப்பவர்கள் ஆர்?*

சிங்களவருந் தமிழருமே. இவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களும் நேர்மையானவர்களுமாயிருக்கிறார்கள்.

*இத்தேசத்தின் பிரதான நகரி எது?*

அநுராசபுரம் (Anoorad'hapura) முற்காலத்தில் அதிக கீர்த்தி யடைந்திருந்தும் இப்பொழுது அழிந்து போயிற்று. இவ்விடத்தில் (௯௰) இராசாக்களுக்கு மேற்பட இருந்து கிறிஸ்துபிறக்க (௪௱௩௰௭) வருஷத்துக்கு முன்னே துவங்கிக் கிறிஸ்துவுக்குப் பின் (௭௱௨௯) வருஷம்மட்டும் அரசாண்டார்கள். கிறிஸ்துவுக்குமுன் (௫௱௪ம்) வருஷம் முதல் (௪௱௭௪ம்) வருஷம்வரையில் தீவை ஆண்டுவந்த பாண்டுவாசன் (Panduwasa) காலத்தில் எதிர்த்த கரையிலிருந்து தீவிற்குவந்து குடியேறின (௯) இராசாக்களில் ஒருவனாகிய அநுராச சக்கிய குமாராயன் (Anuradha Sekya Kumaraya) இந்நகரத்தைக் கட்டி அதற்குத் தன் நாமத்தைக் கொடுத்தானென்று சொல்லுகிறார்கள். பாண்டுகபாயன் (Pandukaa Baya) என்னும் இராசா இந்நகரை அலங்கரித்து சயவீபம் (Jayaweua) அபயவீபம் (Abayaweua) என்னும் இரண்டு பெரிய வாவிகளைச் சனங்களின் வசதிக்காகச் செய்வித்துக் கோவிலுக்கு அநேக நிலங்களைத் தருமசாதனமாய்க் கொடுத்துச் சனங்களுக்கு வெ

RangaRakes
tamilnavarasam.com

கு நன்மைகள் செய்து கிறிஸ்துவுக்கு முன்(௪௱௬௰௭ம்) வருஷம் முதல் (௭௰) வருஷக்காலமளவாக இந்நகரியில் இருந்து அரசாண்டு இறந்துவிட்டான். அனுராசபுரத்தைத் தேவனிப்பதீசன் ஆண்டபொழுது (Devenipea-Tissa) சம்புத்தீவில் இருந்து (Jambadiva) தருமசுகன் (Dharmasooka) என்னும் இராசா தன் குமாரன் மகிந்தனையும் (Mihindoo) குமாரத்தி சங்கமூர்தத்தையும் (Sangamirta) புத்தசமயத்தை அனுராசபுரத்திற் பரப்பும்படி அனுப்பினனென்றும் அவர்கள் வழியாய்ச் சனங்கள் புத்த சமயத்தைப் பின்பற்றத் துவங்கினர்களென்றும் அறிகிறோம். அனுராசபுரத்தையாண்ட இராசாக்களில் அநேகர் சிங்கள வமிசத்தார். அவர்களுடைய சங்கதிகளை இனிமேற் சரித்திரத்திற் றெளிவாய் அறியலாம். அனுராசபுரத்தில் அநேகஞ் சிறப்பான கோவில்களுங் கட்டுவேலைகளும் இராச அரண்மனைகளும் வாவிகளும் இருந்தும் இப்பொழுது எல்லாம் அழிந்து கீர்த்திமங்கிக் காடாய்க்கிடக்கின்றது.

---

## தென்மாகாணம்.—Southern Province.

*இம்மாகாணத்தில் அடங்கிய நாடுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?*

காலி, தங்கல், மாத்துறை, அம்பாந்தோட்டை, சப்பிறகாமம், வெல்லவை என்னும் நாடுகளும், இவைகளில் (௩௮௱௯௯ம்) ஆண்டுப் பஞ்சாங்கக் கணக்கின்படி (௨௱௯௮௩௯௱௭௰) சனங்களும் உண்டு.

*இம்மாகாணம் எவ்வளவு சதுரமயில் விஸ்தாரம் உள்ளது?*

(௬௩௱௨)

---

## காலி.—Galle

*காலியின் எல்லைகள் எவை?*

பந்தோட்டைநதி (Bentotte river) முதல் வலிகாமங்கோறளை (Belligam Korle) வரைக்கும் விசாலித்திருக்கின்றது.

*நீளம் அகலம் என்ன?*

(௫௰) மயில் முதல் (௱௰) மயில் மட்டும் நீளமும் (௬) மயில் முதல் (௨௫) மயில் மட்டும் அகலமுமாயிருக்கின்றது.

*அதில் எத்தனை பிரிவுகள் உண்டு?*

(௪) தளப்பப்பற்று (Talpepattoo) கங்கைபொடிப்பற்று (Gangaboddepattoo) வெள்ளைப்பொடிப்பற்று (Wellaboddepatto) வலாளவெற்றிக்கோறளை (Walallawetty Korle) என்பவைகளே.

*எவ்வளவு சதுரமயில் விஸ்தாரம் உள்ளது?*

(௫௱௯௨)

*சனத்தொகை எவ்வளவு?*

ஒரு சதுரமயிலிடத்துக்கு (௱௪௯) குடி வீதமாக முழுதிலும் (௮௮௩௨௱௪௨) சனங்கள் இருக்கிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

*நிலம் எப்படிப்பட்டது?*

மக்கிநிலமாயும் மலைநாடாயும் இருக்கின்றது.

RangaRakes tamilnavarasam.com

புரோசனங்கள் என்ன?

பலவகைத் தானியம், பலவிதக்கனிகள், கறுவா, கோப்பி, வால்மிளகு, பருத்தி, ஏலம் என்பவைகளே.

எவ்வித சுரங்கங்கள் உண்டு?

சிலவிடங்களில் இரும்புச் சுரங்கங்கள் உண்டு.

சனங்கள் உண்டாக்குகிற சாமான்கள் எவை?

பருக்கன் புடைவை, சாராயம், தேங்காயெண்ணெய், மரவெண்ணெய், கயிறு, ஆமையோட்டாற் செய்யப்படுகிற பெட்டிகள், சீப்புகள், மட்கலங்கள், கத்திகள், பாய், வெல்லம், பலவகைச்சுண்ணாம்பு முதலியவைகளே.

சனங்கள் எவ்விடத்திற்கு வியாபாரம் பண்ணுகிறார்கள்?

மாலைதீவுக்குப் (Maldive Islands) போய் வியாபாரம் பண்ணுகிறார்கள். அன்றியும் வடகரைக்கு (Coromandel Coast) தேங்காய், சாராயம், கயிறு, கோப்பி, மிளகு முதலியவைகளை ஏற்றி மறுபடி திரும்பி வரும்பொழுது நெல்லு, அரிசி, பஞ்சிப்புடைவை முதலியவைகளை வாங்கிவந்து விற்பார்கள்.

பிரதான நகரியாகிய காலியைக் குறித்து என்ன சொல்லுவாய்?

காலி இலங்கைத் தீவிலுள்ள பட்டினங்களில் ஒரு முக்கியமான நகரியாயிருக்கின்றது. அது உத்தராக்ஷி ரேகைகளில் (௬) பாகைக்கும் குணதேசாந்தரத்தில் (அ௰) பாகைக்கும் (௰௩)



கலைக்கும் ஊடே எல்லைப்பட்டிருக்கின்றது. நகரியைச்சூழப் பற்பல சிறுமலைகளுந் தெங்கு நிறைந்த சோலைகளும் உண்டு. அவ்விடத்திலுள்ள ஒதுங்கு கடலில் ஐரோப்பாவில் இருந்து வருகிற கப்பல்கள் வந்து நிற்கிறது வாடிக்கை. காலிக் கோட்டை ஒரு மயில் சுற்றுள்ளது. அவ்விடத்தில் அநேக கட்டுவேலைகள் உண்டு. அநேக சோனகரையும் அவர்களுடைய பள்ளிவாசலையும் அவ்விடத்திற் காணலாம். கடைத்தெருவும் ஒரு உலாந்தாக் கோவிலும் (Duteh Church) வெஸ்லியன் மிசியோன் கோவிலும் (Weslyan Mission Chapel) உண்டு. கொழும்புப் பேட்டையைப்போல இவ்விடத்துப் பேட்டை ஒழுங்கானதாய் இராதிருந்தும் அதிக விசாலம் உள்ளதும் நேர்த்தியான வீதிகள் நிறைந்த இடமாயும் இருக்கின்றது. வடகிழக்குக் காற்றுப் பெயர்ச்சியாயிருக்கும்பொழுது சீனத்துக் கப்பல்கள் இவ்விடத்தில் வந்தொதுங்கும். இவ்விடத்திற் சலம் நாற்றமுள்ளதுஞ் சுகவீனத்தை உண்டாக்குவதும் அல்லாமல் அதினாற் சனங்கள் யானைப்போந்தி (Ele phantiases) என்னும் வியாதியை அடைகிறார்கள். (௲௫௱௫) ஆண்டில் முதன்முதற் புடுத்துக்கீஸ் கப்பித்தான் அல்மேதாவென்பவனும் (Don Lorenzo De Almada) அவனைச் சேர்ந்தவர்களுங் காலித் துறைமுகத்தில் வந்திறங்கி ஒரு கோட்டையைக் கட்டிப் பட்டினத்தை ஆண்டபொழுது (௲௬௱௪௰) ஆண்டில் உலாந்தாக்காரர் பிடித்

RangaRakes

tamilnavarasam.com

தாண்டு மறுபடி இங்கிலிஷ்காரருக்கு விட்டுவிட்ட அதுமுதல் இந்நாள்வரைக்கும் இங்கிலிஷ் அரசாட்சியாருக்குக் கீழாயிருக்கின்றது. இவ்விடத்தில் ஒரு ஏசன்றுமட, நீதவானும், மூன்றுமஸ்திருத்து நீதவான்களும் இருந்து விசாரணை பண்ணி வருகிறார்கள். காலி நகரி கொழும்புக்குத் தென்கிழக்கே (௭௨) மயில் தூரத்திலிருக்கின்றது.

---

## தங்கல்.—Tangalle.

இந்நாட்டில் மாகம்பற்று (Mahagampattoo) கிரவாய்ப்பற்று, (Girrawaypattoo) தங்கல், (Tangalle) என்னும் பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. அது மாத்துறைக்கும் மட்டைக்களப்புக்கும் ஊடே தென்கிழக்குக் கரையில் இருக்கின்றது.

அதின் நீளம் அகலம் என்ன?

(௫௫) மயில் நீளமும் (௰௧) மயில் முதல் (௰௯) மயில் வரைக்கும் அகலமுமுள்ளதாயிருக்கின்றது. அதில் (௯௮) கிராமங்களும் (௩௮௱௰௪ம்) ஆண்டுக் கணக்கின்படி (௩௮௱௯௨) குடிசனங்களும் இருக்கிறார்கள்.

நிலம் எப்படிப்பட்டது?

நிலம் வெகத்துக்குக் காடுந் தண்ணீரில்லாமற் காய்ந்த பதிவான மணற்றரைகளும் வேளாண்மை செய்யக்கூடாத இடமுமாயிருக்கின்றது. இவ்விடத்தில் உப்பு அதிகமாய் விளைகின்றது.



பிரதான நகரி எது?

தங்கல். அது முன்னே ஒரு சிறு குறிச்சியாயிருந்தும் இப்பொழுது நகரியாயிருக்கின்றது. அவ்விடத்தில் அந்நாட்டை ஆளுங் கலக்கட்டரிருக்கிறார். இந்நகரி மாத்துறைக்கு வடகிழக்கே (௨௨) மயில் தூரத்தில் மட்டைக்களப்புக்குப் போற வழியிலிருக்கின்றது. அவ்விடத்தில் ஒரு சிறுக் கோட்டையும் உண்டு. இவ்விடத்திற் குடியிருப்பவர்களில் அநேகர் மீன்பிடிகாரர்.

---

## சப்பிறகாமம்.—Saffragam.

இந்நாடு நடுத்திசையிலுள்ள ஓர் விசாலமான தேசமாய்க் கழுத்துறைக்கடுக்க இருக்கின்றது. அது (௩௫௱௮௪) சதுரமயில் விஸ்தாரம் உள்ளதும் (௪௪௩௯௱௫௭) குடிசனங்களை அடக்கிய இடமுமாயிருக்கின்றது. சிலவிடங்களில் மலைகளுஞ் சிறு பசுமையான மேடுகளுஞ் சிலவிடங்களில் பள்ளத்தாக்குகளுஞ் சிலவிடங்களில் நேர்த்தியான மரங்கள் நிறைந்த வனங்களும் உண்டு. களுகங்கை நதி இவ்விடத்திலிருந்துண்டாகி அதற்கூடாகக் கிழக்கும் மேற்குமாய்ப் போய் இரத்தினபுரத்தில் விழுகின்றது.

நிலம் எப்படிப்பட்டது?

பெரும்பாலும் நிலங் களிமண்ணும் மணலுங்கலந்ததாய் வேளாண்மை செய்யப்படக்கூடிய இடமுமாயிருக்கின்றது.

RangaRakes tamilnavarasam.com

புரோசனங்கள் என்ன?

நெல்லு, குரக்கன், சோளம், பயறு, கடுகு, பலவித தானியங்கள், பாக்கு, கோப்பி, மிளகு, பலா, தளப்பத்து, தாழை முதலியவைகளே. மிகவுங்கொஞ்சத் தென்னமரங்கள் உண்டு. குடியிருப்பவர்களில் மிகுதியானவர்கள் சிங்களவர்.

அவர்கள் உண்டாக்குகிற உடைமைகளென்ன?

பாக்குவெட்டி, அம்பு, ஈட்டி, துவக்குப்பூட்டு, ஊன்றுகோல்கள், தளப்பத்துக்குடை, பலவிதப் பாய்கள், வெல்லம் என்பவைகளே.

கொழும்பு முதலிய இடங்களுக்கு வியாபாரத்துக்கு ஏற்றப்படுகிற சரக்குகள் எவை?

சனங்கள் கொழும்புமுதலிய இடங்களுக்குப் பாக்கு, கோப்பி, மிளகு, ஏலரிசி, விலையுயர்ந்த ரத்தினங்கள், யானைத்தந்தம், மான்கொம்பு முதலான பொருள்களை ஏற்றிக்கொண்டு போய்த் திரும்பிவரும்பொழுது பஞ்சிப்புடைவைகள், புகையிலை, கருவாடு முதலியவைகளைக் கொண்டுவந்து விற்பார்கள். இந்நாட்டின் மலைச்சாரல்களிலும் சனங்கள் வயிடூரியம், மரகதம், நீலக்கல், சுகந்திக்கல் முதலிய பலவித ரத்தினங்களைக் கோவறன்மேந்தாருடைய உத்தரவின்படி அரிப்பெட்டிகள் வைத்து எடுத்து வருகிறார்கள்.

---

## வெல்லசைநாடு.—Welasse.

இந்நாட்டின் எல்லைகள் எவை?

கிழக்கில் மட்டைக்களப்பும் வடக்கிலும்மேற்கிலும் விந்தனைநாடும் (Bintenne) தெற்கில்



ஊவா கீழ்நாடுமே.

நிலம் எப்படிப்பட்டது?

பதிவான தரையும் நாலு பக்கத்திலும் மலைகளினாற் சூழப்பட்டுப் பெருவெளியுங் காடுமாய் யானைகள், காட்டுப்பன்றிகள், மான், மரை முதலியன வாசம்பண்ணும் இடமுமாயிருக்கின்றது.

தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?

வரண்ட பூமியாயிருப்பதினால் தேசசுவாத்தியஞ் சுகவீனம் உள்ளது. சிலவேளைகளிற் காய்ச்சல் அநேகருக்குண்டாகி இறந்துபோகிறார்கள். (௲௮௱௫௰௭) ஆண்டில் ஆடிமாதம் (௰௧) திகதிமுதல் அற்பசிமாதம் (௨௰) திகதிக்குள் அவ்விடத்திலிருந்த (௨௱௫௰) இங்கிலிஷ்காரருக்குள் மூன்றிலொரு பங்கு பெயரைநீக்கி மிச்சமானவர்கள் இறந்துவிட்டார்களென்று அறிகிறோம்.

---

## கீழ்மாகாணம்.—Eastern Province.

இம் மாகாணத்தில் அடங்கிய நாடுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?

(௫) திரிகோணமலை, (Trincomalie) மட்டைக்களப்பு, (Batticaloe) விந்தனை, (Bintenne) தம்மன் கடவை, ('Tamankadawe) என்னும் நாடுகளும் அவைகளில் (௫௨௲௮௱௫௭*) சனங்களும் உண்டு.

எவ்வளவு சதுரமயில் விஸ்தாரம் உள்ளது?

(௪௲௮௱௯௫) சதுர மயில்.

* Excepting the Bintenne Division where no Return has been kept.

RangaRakes
tamilnavarasam.com

## திரிகோணமலை.—Trincomalie.

*இந் நாட்டின் எல்லைகள் எவை?*

வடக்கில் வன்னிப்பற்றுகள், கிழக்கில் பங்காளக் குடாக்கடல், தெற்கில் மட்டைக்களப்புங் கண்டி நாடுகளும் மேற்கில் நுவரைகாளாவியுங் கண்டி நாடுகளுமே.

*எவ்வளவு சதுரமயில் தூரமுள்ளது?*

(௲௬௱௮௰)

*சனத்தொகை எவ்வளவு?*

(௰௬௲௫௱௯௫)

*தேசம் எப்படிப்பட்டது?*

சிறுமலைகளும் மரங்களும் பசுமையான பயிர்பூண்டுகளும் நிறைந்திருப்பதால் இலங்கையின் மறுதிசைகளைப்பார்க்கச் சிறப்பானதாயிருக்கின்றது.

*தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?*

திரிகோணமலை அதிக காங்கையான பூமியாயிருக்கின்றது. முற்காலத்தில் இவ்விடத்தில் அநேக தென்னமரங்கள் இருந்தும் மறுபடி அவைகளிருப்பதினாற் சனங்கள் சுகவீனத்தை அடைகிறார்களென்ற எண்ணத்தைக்கொண்டு வெட்டிப்போடப்பட்டன. காட்டுப்பக்கங்களில் பலவகை மரங்கள் உண்டு அவைகளிற் பிரதான மரமாகிய கருங்காலி இங்கிலாந்து தேசத்துக்கும் (England) சென்னபட்டினம் (Madras) முதலிய இடங்களுக்கும் வியாபாரத்துக் கேற்றப்படுகின்றன.





*பிரதான நகரியாகிய திரிகோணமலையைக் குறித்து என்ன அறிவாய்?*

இந்நகரி இலங்கையிலுள்ள பிரதான நகரிகளில் ஒன்றாய் உத்தராக்ஷ இரேகையில் (௮) பாகைக்கும் (௫௧) கலைக்கும் குணதேசாந்தரத்தில் (௮௧) பாகைக்கும் (௨௫) கலைக்கும் ஊடே எல்லைப்பட்டிருக்கின்றது. இவ்விடத்திலுள்ள மலையின் சிகரத்திற் கோணேசருக்குக் (Konather or Koneser) கட்டப்பட்ட ஒரு முக்கியமான கோவிலிருந்தது. அது முற்காலத்தில் இந்து தேசமெங்கும் பிரபலியமாயிருந்தது. மறுபடி பறங்கிக்காரர் அவ்விடத்துக்கு வந்தபொழுது அக்கோவிலை இடித்து ஒரு கோட்டைகட்டினார்கள். அவ்விடத்திலுள்ள ஒதுங்குகடல் இங்கிலாந்து முதலிய சீமைகளிலிருந்து வருகிற எல்லாக் கப்பல்களுந் தங்குவதற்கான அவ்வளவு விஸ்தாரமுள்ள பிரதான துறைமுகமாயிருக்கின்றது. இது இந்துசமுத்திரத்திலுள்ள எந்தத் துறைமுகங்களிலும் பிரதான துறைமுகமாய் (Naval Depot) இருக்கின்றது. கப்பல், படவுகள் செய்வதற்கான வசதியான முற்றவெளியும் அவ்விடத்தில் உண்டு. கோட்டை மூன்றுமயில் விசாலமுள்ளதாய் மலைமேலிருக்கின்றது. அல்லாமலுந் துறைமுகத்துக்கு ஆதரவாக நகரிக்குமேற்கே மூன்றுமயில் தூரத்திற் கடலிற் சேர்ந்திருக்கிற ஒரு மலையின் வெடிப்பில் அரணான ஒரு கோட்டை உண்டு (Fort Ostenburg.) ஆகையாற் சத்து

ருவானவன் இலகுவாய் இந்நகரியைப் பிடிப்பது வருத்தம். கோட்டைக்கயலில் நகரியிருக்கின்றது. அது கொழும்பைப் பார்க்க விஸ்தாரமுள்ளதாயிருந்தும் அதிக சனநெருக்கமுள்ள நகரியல்ல. வீடுகள் சிறப்பும் ஒழுங்குமுள்ளவைகளல்ல. இங்கிலிஷ்காரரிற் சிலர் இவ்விடத்திற் குடியிருக்கிறார்கள். அப்படி இருப்பவர்களில் மிகுதியானவர்கள் சிவில் உத்தியோகஸ்தரும் இராணுவ உத்தியோகஸ்தருமே. இந்நகரியில் உரோமான் கத்தோலிக்கு மதத்தாருக்குரிய இரண்டு கோவில்களும் சோனகரின் பள்ளிவாசல்களுஞ் சில தமிழ்க் கோவில்களும் உண்டு. வெஸ்லியன் மிசியோன் குருமார் இவ்விடத்தில் இருந்து பிரையாசப்பட்டு வருகிறார்கள். விசாலமான கடைத் தெருக்களும் ஐரோப்பாவின் பலவிதச் சாமான்களுள்ள சாப்புகளும் இருக்கின்றன.

திரிகோணமலையின் பூருவசங்கதிகளைக் குறித்து என்ன தெரியும்?

முற்காலத்திற் திரிகோணமலை முக்கியமான இடமாயிருந்தது. சோழமண்டலத்து இராசாவாகிய மனுநீதிகண்ட சோழனின் (Manu Nitikanda Sholen) புத்திரனாகிய குளக்கொட்டு மகாராசா (Kulakkottoo Maha Rajah) கிறிஸ்துப்பிறக்க (௲௫௱௮௬) வருஷத்துக்கு முன் (512 of the Kaling) திரிகோணமலையின் தலவிசேஷத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு வந்து அம்மலையிலே கோணேசருக்கொரு கோவி



லைக்கட்டி மலையின்கீழ் ஒரு நகரியை உண்டுபண்ணித் தன் பிதாவின் இராச்சியத்தில் இருந்து சனங்களை வரவழைத்துக் குடியேற்றித் தனேயுன்னபூபாலன் (Taneunna Popalen) என்றொரு தமிழனை இராசாவாகவைக்க அவன் அந்நாட்டையும் அதையடுத்த பகுதிகளையுஞ் சில காலமாய் ஆண்டு வந்தானென்றும் மறுபடி அவன் வங்கிஷத்தாரென்றெண்ணப்பட்ட வன்னியர் (Vanniyas) வெகுகாலத்துக்குத் தன்னிட்டமாய் ஆண்டு வந்தார்களென்றுங் கேள்வி. மறுபடி பறங்கிக்காரர் அவ்வூரைப் பிடித்த பொழுது அதிலுள்ள கோவிலையழித்து அதிலகப்பட்ட பொருள்களினாலே குடாக்கடலுக்கு வடமேற்கு முனையில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். (1672 A. D.) (௲௬௱௭௨ம்) ஆண்டில் பிரான்சுக் கப்பல்களுக்குச் சேனாபதியாயிருந்த தலகாயென்பவன் (MeD .al Haye) தன் சனங்களுடன் இவ்விடத்தில் வந்திருக்க முயன்று கண்டி இராசாவோடே சேர்த்திக்கையாகி அவர்மூலமாய் இவ்விடத்தில் ஒரு கோட்டையைக் கட்டும்படி துவங்கினான். ஆனாலும் மறுபடி உலாந்தாக்காரர் வந்தெதிர்த்தபடியால் அவ்விடத்தை விட்டு வடகரைக்குப் போய்விட்டான் (௲௭௱௮௨ம்) ஆண்டு தைமாதம் நடுக்கூறில் கடல்வழியாய் ஹூக்ஸ் என்னுந் தளகர்த்தனுக்குக் (Sir Edward Hughes) கீழாகக் கொஞ்ச இங்கிலிஷ்க் கப்பல்களுங் கரைவழியாய் மனுரோவென்பவரும் (Sir Hector

RangaRakes tamilnavarasam.com

Munroe) அவர் சேனைகளும் வந்து போர்பண்ணித் தேசத்தைப் பிடித்துக் கொஞ்சக் காலம் வைத்திருந்து மறுபடி சப்பிறேன் என்னும் பிராஞ்சுச் சேனாபதி (French Admiral Suffrein) தேசத்தைப் பிடித்து உலாந்தக்காரருக்கு ஆளும்படி கொடுத்தான். (௲௭௱௯௰௫ம்) ஆண்டில் ஸ்துவாட்டென்னும் (General Stewart) இங்கிலிஷ் சேனாபதியுஞ் சேனைகளும் மூன்றுகிழமைமட்டும் போர்பண்ணித் தேசத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அதுமுதல் இந்நாள்வரைக்குந் திரிகோணமலை இங்கிலிஷ்காரருடையதாயிருக்கின்றது.

---

## மட்டைக்களப்பு.—Batticaloe.

இந்நாடு வடகிழக்குக்கரையில் குமுக்கன் ஆறு (Kumukan river) முதல் வெருகற்கை (Vergel Ganga) நதிமட்டும் விசாலித்திருக்கின்றது. அதின் நீளம் (௱௫௰) மயில்.

அதிலெத்தனை பிரிவுகள் உண்டு?

(௰) மண்முனை, (Manmoone) போறதீவு, (Porative) எருவில், (Eruwil) கரைவாகு, (Karrewahoo) சம்மாந்துறை, (Sammantorre) நடுக்காடு, (Nadukadoo) அக்கரைப்பற்று, (Akkarapattoo) பனகம், (Panaha) இறையூர், (Eraoor) கோறளைப்பற்று, (Korlepattoo) என்பவைகளே.

அதின் நிலப்பரப்பு எவ்வளவு சதுரமயில் தூரமுள்ளது?

(௲௱௫௰.)



சனத்தொகை எவ்வளவு?

(௨௭௲௫௱௭௪) குடிசனங்கள் இருக்கிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?

சவுக்கியமுஞ் சுகமுமுள்ளது. நமது தேசங்களில் வெப்பமான காலங்களில் அவ்விடத்திற் குளிர்மையாயிருக்கும்.

தேசம் எவ்விதமானது?

குமுக்கான் ஆறுமுதல் இறையூர் மட்டும் விசாலித்திருக்கிற தெற்குப் பகுதியிற் பல மலைகளும் பெரிய காடுகளும் உப்புச்சலம் நல்லசலம் உள்ள ஏரிகளும் பெரு வெளிகளும் உண்டு. நாவலூர் (Nalloor) துலங்கி வெருகெல் கங்கை நதிமட்டும் விசாலித்திருக்கிற வடபகுதியெலங்கும் ஏகத்துக்கு மணல் மிகுத்த நிலமாய்ச் செய்கையில்லாமற் பாழாய்க் கிடக்கின்றது. அதின் நாலுபுறத்திலுங் காடு சூழ்ந்திருப்பதுமல்லாமல் அதற்கூடே உப்புச்சலமுள்ள ஏரிகள் இருக்கின்றன.

பிரயோசனங்கள் என்ன?

காட்டுப் புறங்களிற் கருங்காலி, பாலை முதலிய நேர்த்தியான மரங்கள் உண்டு. அவைகளை வியாபாரிகள் சென்னைநகரம் (Madras) முதலிய இடங்களுக்கு வியாபாரத்துக்கு ஏற்றுவார்கள். அல்லாமலும் நெல்லு, தேங்காய் முதலிய பலஉடைமைகளுந் தெங்கு, பனை, மா, பலா முதலிய கனிவிருட்சங்களும் மிகுதி. காட்டுப்பக்கங்களில் வேட்டைக்கடுத்த மிருகங்க

ளுஞ் சமுத்திரத்தில் வேண்டிய மட்சங்களும் உண்டு.

இவ்விடத்திற் குடியிருப்பவர்கள் ஆர்?

மிகுதியானவர்கள் தமிழர், (௲௮௱௧ம்) ஆண்டு இவ்விடத்துக்குப் பயணம்போயிருந்த இரீடர் என்னும் வைத்தியன் (Surgeon Reader) எழுதியிருக்கிறபடி இவ்விடத்துச் சனங்கள் தருமக்குணம் உள்ளவர்களும் அன்னியரை உபசாரம்பண்ணுகிறவர்களுமாய் இருக்கிறார்கள். வெஸ்லியன் குருமார் இந்நாட்டிற் கிறிஸ்துமார்க்கத்தைப் போதித்துவருகிறார்கள். இவ்வூரவர்களிற் சிலர் இந்நாட்களிலே தங்கள் அஞ்ஞான விருளைவிட்டுநீங்கிச் சத்தியகிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள் என்றும், கிறிஸ்துமார்க்கம் பரம்பும்படி தங்களாலானமட்டும் பிரயாசப்படுகிறார்கள் என்றும் அவ்விடத்திலுள்ள குருமார் முதலியவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இந்நாட்டின் பிரதான நகரி எது?

மட்டைக்களப்பு. இது உத்தரக்ஷித்தில் (௭) பாகை (௪௫) கலையிலுங் குணதிசாந்தரம (௮௧) பாகை (௫௰) கலையிலும் இருக்கின்றது. அது மூன்றரைமயில சுற்றுள்ளது. அவ்விடத்தில் ஒரு சிறுச் சதுரங்கக்கோட்டையிருக்கின்றது. அதிற் பீரங்கிக்குண்டு மருந்து முதலிய சாமான்களிருக்கிற அறைகளுங் கோட்டைக் கொம்மாந்தனுடைய வீடும் இருக்கின்றன. ஏசன்றுடைய வீடு கோட்டைக்கு வெளியேயிருக்கின்றது. பட்டினத்தில் ஊரவர்களும் உலாந்தாக்காரருங் குடியிருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு றப்பிறமாதுக் கோவிலும் இரண்டு உரோமான் கத்தோலிக்கக்கோவில்களுஞ் சோனகருக்குந் தமிழருக்கும் உரிய சிறுப் பள்ளிவாசல்களுங் கோவில்களும் உண்டு.



---

## தம்மன்கடவை.—Tamankadawe.

இந்நாடு நடுத்திசையிலுள்ள ஓர் தேசமாய்க் கண்டிக்குக் கிழக்காக இருக்கின்றது.

அது எவ்வளவு சதுரமயில் விசாலம் உள்ளது?

(௯௱௨௪.)

குடிசனங்களின் தொகை எவ்வளவு?

(௨௲௮௱௯௭.) முற்காலத்தில் இவ்விடத்தில் அதிக குடிகள் இருந்தார்கள். இப்பொழுது மிகுதியான நிலங்கள் பாழாய்க் கிடக்கின்றன. நிலஞ் சதகலானபடியால் வேளாண்மை செய்வதற்குதவாது. காடுகளிற் கருங்காலி, பாலை, முதிரை முதலிய நேர்த்தியான மரங்கள் வளருகின்றன. இத்தேசத்துக்கூடாக மாவிலிகங்கை (Mahavillegunga) பாய்கின்றது.

இந்நாட்டின் பிரதான நகரியெது?

சயவர்த்தனபுரம் அல்லது பொல்லனருவை (Pollannaroowa,) இந்நகரி முற்காலத்தில் அதிக கீர்த்தி பெற்றிருந்தது. அதில் நேர்த்தியான தெருக்களும் பலவடுக்குள்ள அரண்மனைகளும் மாளிகைகளுஞ் சதுரங்கங்களுஞ் சிறப்பானகோவில்களும் இருந்தன. அவைகளிற் பிரதானமா

னது சைதவனருமா (Jaitawanaraama,) அதில் நேர்த்தியான தூண்களும் மதில்களும் இருந்தன. இதில் (௫௰) அடி உயரமுள்ள கௌதம புத்த னென்னும் விக்கிரகம் (Gautama Buddha) இருந்தது. இதையல்லாமல் மத்துதாகா, (Matte Daga) போயகா, (Poeyga) லங்கபாமா, (Lanka Paamae) மேரஸ்வத்த, (Mereswatte) கிரிவிகாரி, (Kere Vihare) முதலிய புத்தாலயங்கள் இருந்தன. அநுராசபுரத்தைப்போல இந்நகரியும் முற்காலத்திற் பிரதான இராசதானியங்களில் ஒன்றுயிருந்தும் மறுபடி அழிந்துபோக அதின் கீர்த்தி முழுதாக மங்கிப்போயிற்று.

---

## விந்தனை.—Bintenne*.

---

## மேல்மாகாணம்.—Western Province.

இம்மாகாணத்தில் உள்ள நாடுகள் எவை?

கொழும்பு, (Colombo) சலாடம், (Chilaw) புத்தளம், (Putlam) எழுகோறளை, (Seven Korles) நாலுகோறளை (Four Korles) மூன்றுகோறளை, (Three Korles) புலத்துகாமங் கீழ்நாடு (Lower Bulatgamee) என்பவைகளே.

சனத்தொகை எவ்வளவு?

(௪, இலட்சத்து ௯௱௬௮.)

எவ்வளவு சதுரமயில் விஸ்தாரம் உள்ளது?

(௪௬௪௱௨௰௨.)

* இந்நாட்டைக் குறித்து மெத்த அறியப்படவில்லை.



## கொழும்பு.—Colombo.

இந்நாடு எவ்வளவு சதுரமயில் விசாலம் உள்ளது?

(௬௪௱௭௨.)

சனத்தொகை எவ்வளவு?

(௨, இலட். ௬௪௱௪௨)

கொழும்பின் பிரதான பிரிவுகள் எவை?

ஹேவாகங்கோறளை, (Hewagam Korle) சலப்பிட்டிகோறளை, (Salpitty Korle) ஹினகோறளை, (Hina Korle) அலுத்தூர்கோறளை, (Alut Korle) அப்பிகங்கோறளை, (Hapetigam Korle) என்னும் நாடுகளுங் களுத்துறை டிஸ்திறிக்குமே.

தேச சுவாத்தியம் எப்படிப்பட்டது?

அதிக சவுக்கியமுஞ் சுகமுமுள்ளது. எப்பொழுதும் நல்லகாற்று வீசும், சிலகாலங்களில் மழை அதிகமாகப் பெய்யும்.

இந்நாட்டின் தலைப்பட்டனம் எது?

கொழும்பு அது இந்நாட்டிற்கும் இலங்கைத்தீவு முழுதுக்குந் தலைப்பட்டினமாயிருக்கின்றது. அதைக்குறித்து விபரமாய் முன்னே சொன்னபடியால் இப்பொழுது சொல்லவேண்டியதில்லை. கொழும்பில் முற்காலத்தில் அநேகஞ் சிறைகளிருந்தும வரவர எல்லாரும் இட்டம்பெற்றுப்போக இப்பொழுது (௨௱௯௪) பெயரளவு இருக்கிறார்கள்.

---

RangaRakes

tamilnavarasam.com

## சிலாபம்.—Chilaw.

*சலாபத்தின் எல்லைகள் எவை?*

இந்நாடு மகாஓயா (Maha Oya) நதி துவங்கி உடப்பங்கரை (Odepenkarre) வாய்க்கால்மட்டும் வடமேற்குக் கரையில் விசாலித்திருக்கின்றது. அதற்குக் கிழக்கே கண்டி நாடுகள் (Kandyan Provinces) இருக்கின்றன.

*அதின் நீளம் அகலம் என்ன?*

(௩௨) மயில் நீளமும் (௮) மயில் அகலமுமாயிருக்கின்றது.

*அதிலுள்ள பிரிவுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?*

| | | |
|---|---|---|
| அனுவலந்தன்பற்று | (Anuvalandanpatto) | ௨௲௯௱௯௫ |
| மனுசிராம்பற்று | (Monesserampatto) | ௲௭௱௬ |
| யாகம்பற்று | (Yagampatto) | ௬௲௮௮ |
| உத்தரபலத்தம் | (Ottarapalatta) | ௨௲௫௱௨ |
| மட்டப்பலத்தம் | (Meddepalatta) | ௲௰௭ |
| கேமலப்பற்று | (Kaymelpatto) | ௨௲௨௱௮௯ |
| | Total | ௰௬௲௫௱௭௫ |

குடிசனங்களில் மிகுதியானவர்கள் சிங்களவர்.

*நிலம் எப்படிப்பட்டது?*

சிலவிடங்களில் நிலம் பாழாயும் மணல் மிகுந்தும் இருக்கின்றன. சிலவிடங்களிற் களிமண்ணுஞ் சதகலுமுள்ளதாயும் நல்லநிலமாயும் இருக்கின்றது ஆகிலும் நிலம்பொதுவாக வேளாண்மை செய்வதற்கேற்ற நிலமாயிருக்கின்றது. தென்றிசை வடபகுதியைப்பார்க்க அதிகஞ் செய்கையுள்ளதாயிருக்கின்றது. வடபகுதிகள் முழுதுங் காடும் பாழ்நிலமுமாயிருக்



கின்றன.

*புரோசனங்கள் என்ன?*

நெல்லு, சிறுதானியம், புகையிலை, கோப்பி மிளகு, இரவெண்காயம் என்பவைகளே.

*சனங்கள் உண்டாக்குகிற பொருள்கள் எவை?*

புடைவை, மட்கலங்கள், செங்கல், வெல்லம் என்பவைகளே. தென்னங் கருப்பநீராற் சனங்கள் இவ்வெல்லத்தை உண்டாக்குகிறார்கள்.

*இந்நாட்டின் பிரதான நகரி எது?*

சலாபம். இந்நகரி கொழும்புக்கு வடக்கே (௪௯) மயில் தூரத்திலே தெற்கிலிருந்து வடக்காகப்பாய்கிற நதியிலிருக்கின்றது. கோட்டை ஆற்றுக்கு வடபக்கத்தில் இருக்கின்றது. அதில் கொம்மாந்தருடைய வீடும் வெடிமருந்திருக்கிற வீடும் ஒரு ஆசுப்பத்திரியும் உண்டு. கலக்கட்டர்வீடுங் கச்சேரியுங் கடற்கரை ஓரத்தில் இருக்கின்றது இந்நகரியில் ஒரு றப்பிறமாதுக்கோவிலும் ஒரு உரோமான் கோவிலும் இருக்கின்றன. றப்பிறமாதுக் கோவில் டெம்பிலர்துரை (F. J. Templer Esq.) அவர்களுடைய உதார உதவியுடன் கட்டப்பட்டு அவருடைய அநுமதிப்படியே யேமிஸ்கோவிலென்று (St. James's Church) பெயரிடப்பட்டிருக்கின்றது.

*அரிப்பு நகரியைக் குறித்து என்ன தெரியும்?*

இந்நகரி மன்னூர்க் குடாக்கடலில் உத்தராக்ஷம் (௮) பாகை (௪௭) கலையிலுங் குணதேசாந்தரம் (௭௯) பாகை (௪௰) கலையிலும் இருக்

RangaRakes

tamilnavarasam.com

கின்றது. நாக்ஸ் துரையவர்கள் (Captain Knox) (௰௯) வருஷமளவாகக் கண்டியின் மலைத்திசையிற் சிறையிருந்தபின் தப்பி இந்நகரத்திற்கு முதல் வந்தார். இந்நகரிக்கடுக்க இருக்கிற கொண்டச்சிக் குடாக்கடலில் (Condatchy Bay) முத்து விளைகின்றது. அவ்விடத்திற் சனங்கள் முத்துக்கொளிப்பதினால் இந்நகரத்திற்கு அரிப்புவென்னும் பெயருண்டாயிற்று. இவ்விடத்தில் ஒரு சிறுக் கோட்டை உண்டு. கடற்கரையோரத்திற் கில்போட்டென்பவரால் (Earl of Guilford) கட்டுவிக்கப்பட்ட ஒரு நேர்த்தியான வீடிருக்கின்றது. அது மேற்குத் திசையில் (Doric order) ஒழுங்காய்க் கட்டப்பட்டிருக்கின்றது. குடியிருப்பவர்கள் கரையார். இவ்விடத்தில் ஒரு உரோமான் கோவில் உண்டு.

---

## புத்தளம்.—Putlam.

இந்நாட்டின் எல்லைகள் எவை?

கிழக்கே தேமல்விப்பற்று (Demelepattoo) நாடும், நுவரைகாளாவியும் (Nuwerakalaweye) மேற்கே மன்னார்க்குடாக்கடல் (Gulf of Manaar) தெற்கே சலாபம் (Chilaw) வடக்கே மொத்துராக நதி (Moderagam river) என்பவைகளே.

அதின் நீளம் அகலம் என்ன?

(௪௮) மயில் நீளமும் (௮) மயில்முதல் (௰௬)





மயில் மட்டும் அகலமுமுள்ளது.

அதிலுள்ள பிரிவுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?

(௬) நாடும் அவைகளில் (௲௮௱௯கம்) வருஷிக் கணக்கின்படி (௰௧௲௯௱௯௨) குடிகளும் இருக்கிறார்கள். Viz.

| | | |
|---|---|---|
| புத்தளம் | (Putlam) | ௨௲௪௱௭௭ |
| கற்பிட்டி | (Calpentyn) | ௨௲௪௱௯௮ |
| அக்கரைப்பற்று | (Akkarapattoo) | ௫௲௯௱௯௯ |
| பொன்பரப்பி | (Ponparippoo) | ௪௱௯௮ |
| இராசவன்னிப்பற்று | (Rajahwannipattoo) | ௯௯ |
| குமாரவன்னிப்பற்று | (Kumarawannipattoo) | ௪௱௨௭ |
| | Total | ௰௧௲௯௱௯௨ |

தேசம் எப்படிப்பட்டது?

பொன்பரப்பி நாட்டைநீக்கி மற்றுமிடங்கள் முழுதும் ஒப்பரவானவைகளும் வேளாண்மை செய்யத்தக்க நல்ல நிலங்களுமாயிருக்கின்றன. அநேகம் பகுதிகள் காய்ந்து வறண்டு போயிருப்பதாற் செய்கையில்லாமற் பாழாய்க்கிடக்கின்றன.

புரோசனங்கள் என்ன?

நெல்லு, சிறுதானியம், புகையிலை, சாயவேர் முதலியவைகளே. தேங்காய் வடதேசத்துக்கதிகமாயேற்றப்படுகின்றது. அதிக பனைமரங்களும் உண்டு. ஆனாலும சனங்கள் யாழ்ப்பாணத்தாரைப் போல் அவைகளை அதிக பிரயோசனமாக்கிக்கொள்ளார்கள். அநேகம்பகுதிகளிற் புகையிலையும், பருத்தியும், அதிகமாய்

RangaRakes tamilnavarasam.com

உண்டாகின்றன. நாடெங்குஞ் சாயவேர் மிகுதி. பழவிருக்கங்களிற் பலாவுந் தோடையும் அவ்விடத்தில்லை. ஆனாலும் மா அப்பமரம் (Bread fruit tree) அன்னதாழை, கொய்யா, மாதளை, பப்பாய், முந்திரிகை முதலிய பலவித கனிவிருட்சங்களுந் தோட்டங்களில் வாழையும் பலவகைக் கிழங்குகளுமிகுதி. மருத்துப் பூண்டுகளும் அவ்விடத்தில் அகப்படும்.

*சனங்கள் உண்டாக்குகிற உடைமைகள் என்ன?*

உப்பு, பருக்கன் புடைவை, வெல்லம், கயிறு, வலை, மட்கலம், ஓலைப்பெட்டிகள் முதலானவைகளே. அல்லாமலுங் கொழும்புக்கடைக்கு இவ்விடத்திலிருந்து தேங்காயெண்ணெய்யும், பசுநெய்யும் வியாபாரத்துக்கேற்றப்படுகின்றன.

*குடியிருப்பவர்கள் ஆர்?*

தமிழருஞ் சோனகருங் கொஞ்சப்பறங்கிகளுமே. அவர்களிற் சோனகரின்றொகை (௬௲௯௱௯௨) மேற்சொல்லிய (௯) பிரிவுகளில் ஒன்றாகிய புத்தளம் கற்பிட்டிக் குடாக்கடலிலிருக்கின்றது.

*அதின் எல்லைகள் எவை?*

வடக்கே வழுக்கையாறும் (Welakkeyaar) தெற்கே உடப்பங்கரை வாய்க்காலும் (Odepan-karre) கிழக்கே இராசவன்னிப்பற்றுங் குமாரவன்னிப்பற்றும் மேற்கே கற்பிட்டிக்குடாக்கடலும் அதற்கெல்லைகளாயிருக்கின்றன.



*அதின் நீளம் அகலம் என்ன?*

(௨௰) மயில் நீளமும் (௪) மயில் முதல் (௯) மயில் வரைக்கும் அகலமுமுள்ளது.

*நிலம் எவ்விதமானது?*

மிகக் கொஞ்சவிடத்தில் மாத்திரம் வேளாண்மை செய்யப்படுகிறது. மற்றும் இடங்களெல்லாங் காடுஞ் செடியுமாயிருக்கின்றன. அவ்விடங்களில் யானைகள் மிகுதி. இந்நாட்டில் அதிக உப்புவிளைகின்றது. அதில் (௰௮) கிராமங்கள் உண்டு. அவைகளில் (௮) மாத்திரங் குடியிருப்புள்ள குறிச்சிகளாயிருக்கின்றன. குடியிருப்பவர்கள் புடைவைகளை நெய்து, உப்பளத்திலே வேலைசெய்து, மீன்பிடித்து, வியாபாரம்பண்ணி இவ்விதமாய்ச் சீவனம்பண்ணுகிறார்கள். புத்தளத்திலிருந்து அத்திசைபிலபுரத்துக்கு (Kurnagalle) பாக்குஸ் என்னுந் துரையினுடைய (late Thomas Ralph Backhouse Esq) உதவியினால் ஒரு தெருப்போடப்பட்டிருக்கின்றது.

*கொழும்புக்கு வியாபாரத்துக்கு ஏற்றப்படுகிற சாமான்கள் எவை?*

மாடுகள், பசுநெய், மான்கொம்பு, தானியம் முதலியவைகள் கொழும்புக்கேற்றப்பட்டு அவ்விடத்திலிருந்து சீர்மைப்புடைவை, கந்தவர்க்கங்கள், சீனி, இரும்பு, உருக்கு முதலிய பல உடைமைகள் கொண்டுவந்து இறக்கப்படுகின்றன.

RangaRakes

tamilnavarasam.com

பிரதான நகரியாகிய புத்தளத்தைக் குறித்து என்னசொல்லுவாய்?

அது கொழும்புக்கு வடகிழக்கே (௮௫) மயில் தூரத்தில் கற்பிட்டிக்குடாக்கடலின் தென்கிழக்குக் கரையில் இருக்கின்றது. உத்தராக்ஷம் (௮) பாகை (௰௨) கலையிலும் குணதேசாந்தரம் (௭௮) பாகை (௫௧) கலையிலும் எல்லைப்பட்டிருக்கின்றது. இலங்கையை ஆண்ட முதல் அரசனாகிய விசையன் (Vijaya Rajah) இப்பட்டினத்துக்குக் கிழக்கே (௬) மயில் தூரத்திலிருக்கிற தம்மன நுவரையில் (Tamana Nuwera) தனித்திருந்த கூவாயினியென்னும் பெண்ணை (Koovainy) மணஞ்செய்தான். (௰௪ம்) சதார்த்தத்திலே இப்பாதிதன் என்பவர் (Ibu Batuta) கண்ட பத்தாலாவென்பது (Battala) இதுதானென அநேகர் நினைக்கிறார்கள். நாக்ஸ் என்பவர் (Captain Knox) தம்முடைய இலங்காபுரிச் சரித்திரப் புத்தகத்தில் (Historical Relations of Ceylon) சொல்லியிருக்கிற புத்தலூனென்பது (Pootaloon) இதுவே. இந்நகரியில் மிகுதியான வீடுகள் மண்ணாற் கட்டப்பட்டிருக்கின்றன. பட்டினத்தின் நடுவே கடைவீதிக்கருகே பப்பரப்புளி என்னும் (Giant's Tamarind) மிகவும் பெரிய ஒரு விருட்சம் இருக்கின்றது. அது சதாகாலமாய் நின்றுவருகுதென்று சனங்கள் சொல்லுவார்கள். அதின்சாயல் ஓர் கன்மலையைப் போலிருக்கின்றது. சுற்றளவில் (௪௫) அடி வி



சாலமுள்ளது. நிலத்திலிருந்து (௮இ) அடிக்கப்பால் இரண்டு கொம்புகள் உண்டாகி நிருதிட்டமாய் வளர்ந்திருக்கின்றன. ஒருகொம்பு சுற்றளவில் (௨௨இ) அடியும் மற்றது (௨௬வ) அடியுமுள்ளது. இவைகளிலிருந்து அநேகங் கிளைகளெழும்பி இருக்கின்றன. உயரம் (௭௰) அல்லது (௮௰) அடிமாத்திரமே. பூக்கள் அதிக வெண்மையாயிருக்கும். அதின் பழம் முட்டைவடிவம் உள்ளதும் (௬) அங்குல நீளமும் (௪) அங்குல அகலமும் உள்ளது. நாங்கள் கண்டறிந்தவைகளில் இதொரு நூதனமான மரமாயிருக்கின்றது. இம்மரத்துக்கருகே சோனகருக்குரிய ஒரு பள்ளிவாசல் உண்டு. உவர்நிலமானபடியால் தென்னமரம் கற்பிட்டியில் மிகுதியாயிருப்பதுபோல் இவ்விடத்திலில்லை. இவ்விடத்தில் நல்லசலம் அகப்படாது. புத்தளத்துக்குச் சமீபமான வெளியில் அநேக வாவிகள் உண்டு. முன் புத்தளம் வர்த்தகம்நடக்கிற இடமாயிருந்தது. வடதேசத்திலிருந்து அநேகம் படகுகளுந் தோணிகளும் அவ்விடத்தில் வந்து நிற்கும். அவைகளிற் பலவிதமான புடைவைகள், உருமால், இலஞ்சி முதலிய பல சாமான்களையும் வியாபாரத்துக்குக் கொண்டுவந்து திரும்பிப்போகையிற் பாக்கு, கோப்பி, மிளகு முதலியவைகளை ஏற்றிக்கொண்டு போவார்கள். இப்பொழுது நடுப்பகுதிகளுக்கு மாத்திரஞ் சனங்கள் நெல்லு, அரிசி, பாக்கு, கோப்பி, மி

RangaRakes tamilnavarasam.com

ளகு, பஞ்சி, வெல்லம் முதலியவைகளைக் கொண்டுபோய் அவைகளுக்குப் பதிலாகக் கருவாடு, உப்பு, புடைவை, பித்தளைச்சாமான் முதலியவைகளை வாங்கிக்கொண்டுவந்து விற்பார்கள். உப்பளம் பட்டினத்துக்கு இரண்டுமயில் தூரத்துக்கப்பால் இருக்கின்றது. வருஷித்திலே கிட்டத்தட்ட (௱௩௰௲) பறை உப்பு விளைகின்றது. (௲௮௱௯௧ம்) வருஷித்தில் உப்பினாலே கோவறன்மேந்தாருக்குப் புத்தளத்தில் மாத்திரம் (௨௲௪௱) பவுன் வருமானமாயிருந்தது. சமீபத்திலிருக்கிற காட்டில் யானை, புலி முதலிய மிருகங்களிருக்கின்றன.

கற்பிட்டி நகரியைக் குறித்து என்ன சொல்லுவாய்?

இந்நகரி கொழும்புக்கு வடக்கே (௯௫) மயில் தூரத்திற் கற்பிட்டிக் குடாக்கடலுக்கு மேற்குப்பக்கத்தில் இருக்கின்றது. இந்நகரத்தைச் சூழக் கடலிருக்கின்றது. இவ்விடத்தில் (௲௬௱௬௪ம்) வருஷித்தில் உலாந்தாக்காரரால் கட்டுவிக்கப்பட்ட ஒரு சதுரங்கக் கோட்டை உண்டு. கொம்மாந்தனுடைய வீடும், உப்பு, சாராயம், நெல்லு முதலியவைகளிருக்குங் களஞ்சிய வீடுகளும் மறியற்கூடமும் பிரதானமானவைகளாயிருக்கின்றன. இவைகளை அல்லாமல் ஆயத்துறையும் மஸ்த்திராத்திருக்குஞ் சாவடியும் உண்டு. கோட்டைக்குக் கொஞ்சத் தூரத்துக்கப்பாற் பேட்டையிருக்கின்றது. அதில் அநேகம் ஓட்டடுக்கு வீடுகளும் தென்னந் தோப்



புகளும் நேர்த்தியான தெருக்களுங் கடைத்தெருவும் உண்டு. பேட்டையிலும் அதையடுத்த இடங்களிலும் (௫) கோவில்கள் உண்டு. ஒன்று அப்பிறமாதுக் கிறிஸ்தவர்களுக்கும் ஒன்று உரோமான் கத்தோலிக்க மதத்தாருக்கும் மூன்று தமிழருக்கும் உடையது. இவைகளையன்றிச் சோனகருக்குரிய மூன்று பள்ளிவாசல்களும் உண்டு. றப்பிறமாதுக்கோவில் மண்ணாற் கட்டப்பட்டிருந்தும் (௨௱) வருஷக்காலமாயிருக்குதென்று ஒரு உலாந்தாத் துரைச்சாணியின் கல்லறையில் வெட்டப்பட்டிருக்கிற காலசங்கதியினால் அறிகிறோம். கற்பிட்டியிலிருந்து சென்னபட்டினம் முதலிய இடங்களுக்குத் தேங்காய், எண்ணெய், கயிறு, தேன், நெய், மீனெண்ணெய், மாவெண்ணெய், சாயவேர் முதலிய பலசாமான்கள் ஏற்றப்பட்டு அவ்விடங்களிலிருந்து புடைவை, நெல்லு, அரிசி, சணற்கயிறு, கந்தவர்க்கம், சுரங்கப்பொருள்கள், மருத்துப்பூண்டுகள் முதலியவை இறக்கப்படுகின்றன. சலாபத்துக்குங் கொழும்புக்கும் ஊடே ஒரு புதுவாய்க்கால் வெட்டிவிட்டிருப்பதாற் கற்பிட்டிச் சனங்கள் வியாபாரம் பண்ணுவதற்கு இலகுவாயிருக்கின்றது. கொழும்புக்குக் கருவாடு, நெய், மான்கொம்பு முதலியவைகள் ஏற்றப்பட்டு அவ்விடத்திலிருந்து சீனத்துப் பீங்கான், சீர்மைப் புடைவை, சீனி, பேரீச்சம்பழம், பலாப்பலகை, ஓடு, செங்கல், இரும்பு, உரு

RangaRakes tamilnavarasam.com

க்கு என்னும் பலவிதசாமான்கள் இறக்கப்படுகின்றன. குடியிருப்பவர்கள் தமிழரும் பறங்கிக்காரரும் பாவகருஞ் சோனகருமே. (௲௮௱௭௧ம்) வருஷக்கணக்கின்படி இவ்விடத்தில் (௨௩௲௱௯௮) சனங்கள் இருக்கிறார்கள். பேட்டையிலும் அதற்கயலிலும் தெங்கு பனை நிறைந்திருக்கிற (௩௱௮௰) தோட்புகள் உண்டு. இவைகளையல்லாமற் சிலபெயருடைய தோட்டங்களிற் பலவகையான செடிகளும் பழங்களும் உண்டு. மா, வாழை, கொய்யா, பப்பாய், மாதளை, எலுமிச்சை முதலியவைகளே. கற்பிட்டிக்குடாவில் அதிக சங்கு விளைகின்றது. கற்பிட்டிக்கு அயலில் நேர்த்தியான சாயவேரும் மரவெண்ணெய் உண்டாக்குகிற ஒருவித மரமும் அதிகமாய் உண்டு.

---

## ஏழுகோறளை.—Seven Korles.

*இந்நாட்டின் எல்லைகள் எவை?*

இந்நாட்டையும் ஆரிசிப்பற்றையும் (Harasipattoo) பிரிக்கிற திக்கோயா நதி (Dick-oya) கீழ்த்திசைக்கும், இந்நாட்டையும் மூன்று கோறளையையும் (Three Korles) பிரிக்கிற மகாஓயா நதி (Maha-oya) தென்றிசைக்கும் சம்பலகாமுவா நதியும் (Seemblagamuwa-oya) நுவரைகாளாவியும் வடதிசைக்கும் (Nuwerekalaweye) எல்லைகளாயிருக்கின்றன.



*எவ்வளவு சதுரமயில் விசாலம் உள்ளது?*

(௲௩௭௱௨௮.)

*சனத்தொகை எவ்வளவு?*

ஒரு சதுரமயில் தூரத்துக்கு (௨௭) குடிகள்வீதமாக முழுப்பரப்பிலும், கஇலட். ௨௩௯௱௮) குடிசனங்கள் இருக்கிறார்கள். இந்நாடு முன் ஏழுகோறளைகளாக அல்லது சிறு நாடுகளாகப் பிரிபட்டிருந்தது. ஆனாலும் மறுபடி (௰௨) மேனாடுகளாகவும் (௰௨) கீழ்நாடுகளாகவும் வகுக்கப்பட்டு ஏகாதொளசிப்பற்று (Ehaiedolos patto) பாகாவி தொளசிப்பற்று (Pahaledolos pattoo) என்றழைக்கப்படுகின்றது.

*நிலம் எப்படிப்பட்டது?*

நிலம் மேனாடுகளில் ஒப்பரவுள்ளதும் கீழ்நாடுகளிற் சிறு குன்றுகளும் மலைகளும் உள்ளவைகளாய் இருக்கின்றன. நிலம் பெரும்பாலுஞ் செழிப்புள்ளது.

*தேக சுவாத்தியம் எவ்விதமானது?*

அதிக சுவக்கியம் உள்ளதல்ல. நிலஞ் சதுப்பாயிருப்பதாற் சிலகாலங்களில் ஒருவகையான காய்ச்சல் உண்டாகும்.

*புரோசனங்கள் என்ன?*

நெல்லு, சிறுதானியம், பருத்தி, சணல், தேங்காய், பலா, எலுமிச்சை முதலிய பலபுரோசனங்களும் உண்டு. புரோசனங்களைக் கொண்டு போய்ச் சனங்கள் அடுத்த கரைப்பக்கங்களில் வியாபாரம் பண்ணுவார்கள். இந்நா

RangaRakes

tamilnavarasam.com

ட்டின் வருமானங்களைப் பார்க்கும்படி ஒரு ஏசன்றுத்துரையும் மற்றுங் கோவறன்மேந்துக் காரியங்கள் பார்க்கும் வேறு துரைகளும் இவ்விடத்திலிருக்கிறார்கள்.

இந்நாட்டின் தலைப்பட்டினம் எது?

அத்திசையிலபுரம் அல்லது குருணாகல்(Kurnagalle) இவ்விடத்தில் மேற்சொல்லிய ஏசன்றும் மற்றுந் துரைகளும் இருக்கிறார்கள். இந்நகரி கொழும்புக்கு வடகிழக்கே (௫௮) மயில் தூரத்திலுங் கண்டிக்கு வடமேற்கே (௨௬) மயில் தூரத்திலும் இருக்கின்றது. பாண்டவர் ஐவருக்கும் (Pandavas) குருகுலமன்னருக்கும் போர்நடந்த இடமாகிய குருச்சேத்திரத்திலிருந்து (Kurukshetra or Kururutta) பிரசைகள் வந்து ஆதியிற்குடியேறினபடியால் இதற்குக் குருணாகல் என்னும் பெயருண்டாயிற்றென்று அநேகர் சொல்லுகிறார்கள். ஆனாலும் இழு பாஷையிலும் (Elulanguage) பரிசுத்த பாலிப் பாஷையிலும் (Palilanguage) எழுதப்பட்டிருக்கிற பிரபந்தங்களிற் குருணாகல் என்பது யானைமலை (Elephant-rocks). அதைப் பாலிப்பாடையில் வித்தியாபாரகராயிருந்தவர்கள் அத்திசையிலபுரம் (Hatiscilapoora) எனத் திரித்துக் கொண்டார்கள். இந்நகரியில் ஒரு விசாலித்த தெருவும் கோவறன்மேந்து வீடுகளையன்றி மற்றும் வீடுகள் ஓலையினால் வேயப்பட்டவைகளாயுங் குடிகளில் மி



குதியானவர்கள் வர்த்தகத்தொழில் செய்பவர்களாயும் இருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு கடைத்தெருவுண்டு. அதில் நடுத்திசையிலுள்ளவர்கள் நெல்லு, கோப்பி, மிளகு முதலிய நிலப்புரோசனங்களைக் கொண்டுவந்து விற்று உப்பு, கருவாடு, பஞ்சி முதலியவைகளை வாங்கிக் கொண்டு போவார்கள். இவ்விடத்தில் இரண்டு கோவில்கள் உண்டு. அவைகளில் ஒன்று (௲௮௱௨௧ம்) ஆண்டு கோவறன்மேந்தாருடைய உத்தரவின்படி கட்டப்பட்டிருக்கிற வெஸ்லியன் மிசியோன் கோவிலும் மற்றது உரோமான் கத்தோலிக்கமதக் கோவிலுமே. இவைகளையல்லாமற் சோனகருக்குரிய பள்ளிவாசலும் உண்டு. சோனகர் இவ்விடத்தில் மிகுதி. பட்டினத்தைச்சுற்றிக் கறுவாமரங்களும் மற்றுஞ் சிறப்பான விருக்கங்களும் உண்டு. இந்நகரி இலங்கையில் முன் கீர்த்தியாயிருந்த பிரதான இராசதானிகளில் ஒன்றாயிருந்தும் இப்பொழுது அதின் மகிமை கொஞ்சமும் இல்லாமற்போயிற்று.

---

நாலு கோறளையும் (Four Korles) மூன்று கோறளையும் (ThreeKorles) கண்டிநாடுகளோடே (Kandyan Provinces) சேர்ந்திருக்கின்றன. அவைகளைக் குறித்து அதிகந் தெரியாமையால் இவ்விடத்திற் சொல்லாமல் விடுகிறோம்.

RangaRakes
tamilnavarasam.com

## புலத்துகாமி.—Bulatgamme.

இந்நாடு புலத்துகாம மேனாடாகவுங் கீழ்நாடாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கீழ்நாடு மூன்றுகோறளைக் கயலிலிருக்கின்றது. மேனாடு உடப்பலாத்தளைக்குச்(Udapalatta) சமீபமாயிருக்கின்றது. இவ்விரண்டு பகுதியான நாடுகளுக்கூடாக அநேக நதிகள் பாய்வதினால் நிலஞ் செழிப்புள்ளது. பலவிடங்களிற் சிறு மலைகளும் பள்ளத்தாக்குகளும் இருப்பதினாற் தேசஞ் சிறப்பான காட்சியைக் கொடுக்கின்றது. நிலம் பெரும்பாலும் வேளாண்மை செய்வதற்கேற்றதாயிருக்கின்றது. இந்நாட்டைக் குறித்து மெத்த அறியப்படவில்லை.

---

## நடுமோகாணம்.—Central Province or Interior.

இம்மாகாணத்திலுள்ள நாடுகளும் அவைகளின் சனத்தொகையும் எவ்வளவு?

கண்டி, (Kandy) யெட்டிநுவரை, (Yatti-nuwera) உடுநுவரை, (Udunuwera) அரசிப்பற்று, (Harasipattoo) தம்பனை, (Tumpane) தும்பறை,(Dumbere )ஏவாகொற்றி,(Hewahette) கொற்மாலை, (Kotmaly) புலத்துகாமமேனாடு, (Upper Bulatgamme) வேயிலூவா,(Weyeloo-wa)என்னும் நாடுகளும் விந்தனைநாட்டின் சில பிரிவுகளும் ஊவா, (Uwa)மாத்தளை,(Matelle) உடப்பலாத்தளை, (Udapalata) வளப்பனை, (Wallapana)என்னுந்திசைவன்னிகளும்,(Dess-





avanies) அவைகளில்(க.இலட். ௬௭௲௨௱௭௫) குடிகளும் இருக்கிறார்கள்.

எவ்வளவு சதுரமயில் விஸ்தாரம் உள்ளது?

(௫௲௰௬) சதுரமயில் விசாலம் உள்ளது.

---

## கண்டி.—Kandyan Provinces.

முன் கண்டி இராசாக்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த நடுத்திசையிலுள்ள நாடுகளைக் கண்டி நாடுகளெனச் சொல்வது. இவைகள் டேவி என்பவருடைய (Dr. Davy) கணக்கின்படி உத்தராக்ஷித்தில் (௬) பாகை (௨) கலைமுதல் (௮) பாகை (௪௫) கலைவரைக்கும் குணதேசாந்தரத்தில் (௮௰) பாகை (௮) கலைமுதல் (௮௧) பாகை (௪௫) கலைவரைக்கும் விசாலித்திருக்கின்றன.

எவ்வளவு சதுரமயில் விசாலம் உள்ளவை?

(௰௪௲௱௪௪) சதுரமயில்,

சனங்களின் தொகை எவ்வளவு?

(௨. இலட், ௮௮௲௪௱௮௬)

தேசசுவாத்தியம் எப்படிப்பட்டது?

காட்டுப்பக்கங்களில் தேசசுவாத்தியம் அதிக சுகயீனமுள்ளதாயிருந்தும் ஏவாகொற்றி, (Hewahette) வளப்பனை, (Wallapanne)ஊவா, (Uwa) கொத்மாலை, (Kotmaly) என்னும் நாடுகள் அதிக சவுக்கியமுள்ள தேசங்களாயிருக்கின்றன.

நிலம் எவ்வகையானது?

RangaRakes

tamilnavarasam.com

பெரும்பாலுஞ் செழிப்புள்ளது.

புரோசனங்கள் என்ன?

கோப்பி, கறுவா, பாக்கு, மிளகு, கரும்பு, புகையிலை, சணல், பஞ்சி முதலானவை மிகுதியாயுண்டு. இவைகளையன்றி நெல்லு, சிறுதானியம், பலவித மிருகங்களும் இருக்கின்றன. கண்டிநாட்டார் மலைகளுக்கருகே நிலவறைகள் செய்து அவைகளிலிருந்து நீர்ப்பாய்ச்சி நெல் வேளாண்மை செய்கிறார்கள்.

சனங்களின் கைவேலையான பொருள்கள் எவை?

புடைவை, வெல்லம், பாய், மட்கலம் முதலியவைகளும், துப்பாக்கி, கத்தி, வாள், மண்வெட்டி, கோடரி முதலிய பலவித ஆயுதங்களுமே.

ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகள் எவை?

இறக்குமதிச் சரக்குகளாவன உப்பு, கருவாடு, பஞ்சிப்புடைவைகள், தேங்காய், சீனத்துப் பீங்கான்கள், பித்தளைச்சாமான் முதலானவைகளே. ஏற்றுமதிச் சரக்குகளாவன நெல்லு, அரிசி, சிறுதானியம், கறுவா, கோப்பி, மிளகு பாக்கு, வெல்லம், வெள்வெண்காயம், ஏலரிசி, இரும்பு, ஈயமணல், (Plumbago) விலையுயர்ந்த இரத்தினக்கற்கள் முதலானவைகளே.

சனங்களின் தன்மை என்ன?

குடியிருப்பவர்களில் மிகுதியானவர்கள் சிங்களவர், இவர்கள் உடைநடை பாவனைகளில் மற்றுஞ் சாதியாரைப்பார்க்க மெத்த வித்தியா



சமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் அன்னியரைக்கண்டாற் பயமுள்ளவர்களும் வெருட்சியுள்ளவர்களுமாயிருந்தும் தங்கள் சிநேகிதருடன் நேர்மையுள்ளவர்களும் மரியாதையுள்ளவர்களும் உபசாரணை தருமக்குணம் உள்ளவர்களுமாயிருக்கிறார்கள். எக்காரியத்திலும் நாணயமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.

பிரதான நகரியாகிய கண்டியைக் குறித்து என்ன அறிவாய்?

இந்நகரிமகாநுவரை (Maha Nuwera or the great City) என்றழைக்கப்படுகின்றது. அது எட்டிநுவரையின் (Yattinuwera) தலைப்பட்டினமாயிருப்பதால் அதைக்குறித்து அந்த இடத்தில் வரும்பொழுது கண்டுகொள்க.

---

## எட்டிநுவரை.—Yattinuwera.

இந்நகரி கண்டிநகரியை அடக்கியிருப்பதால் மற்றெந்த நாடுகளைப்பார்க்கிலும் அதிக கீர்த்தியுள்ளதாயிருக்கின்றது. அதின் பலபகுதிகளிலும் மலைகளுந் திடல்களும் விசாலமான பள்ளத்தரைகளும் இருப்பதால் பார்வைக்குச் சிறப்பானகாட்சியைக் கொடுக்கின்றது. இந்நாட்டிலே குடிகள் அதிகமாயிருக்கிறார்கள். புரோசனங்கள் அதிகமாயுண்டாகின்றன. நெல்லு ஒருவருஷத்தில் இரண்டுபோகம் விளைகின்றது.

தலைப்பட்டினமாகிய கண்டியைக் குறித்து என்ன அறிவாய்?

RangaRakes
tamilnavarasam.com

இந்நகரி உத்தராக்ஷம் (௭) பாகை (௨௧) கலையிலும் குணதேசாந்தரம் (௮௰) பாகை (௪௭) கலையிலும் இருக்கின்றது. அது நில ஒப்புரவைப்பார்க்க (௲௪௱௯௭) அடி உயரமுள்ளது. கொழும்பிலிருந்து கண்டி (௮௰) மயில் தூரமுந் திரிகோணமலையிலிருந்து (௱௬௰) மயில் தூரமும் மாத்துறையிலிருந்து (௱௭௧) மயில் தூரமும் மட்டைக்களப்பிலிருந்து (௱௨௬) மயில் தூரமுமாயிருக்கின்றது. இந்நகரிக்கூடாக அநேக தெருக்களிருக்கின்றன. அவைகளிற் கிழக்குமேற்காய்ப்போகிற கொழும்புத் தெருவும் வடக்குத் தெற்காய்ப் போகிற திரிகோணமலைத்தெருவும் வதுளைக்குப்(Badulla)போகிற தெருவும் பிரதானமானவைகளாயிருக்கின்றன. கண்டி இராசாக்களின் காலத்தில் இந்நகரி இப்பொழுதிருப்பதைப்பார்க்க மெத்த வித்தியாசமான காட்சியுள்ளதாயிருந்தது. கொழும்புத் தெருவுந் திரிகோணமலைத் தெருவும் வந்துசந்திக்கிற இடத்தில் நேர்த்தியான கடைகளிருக்கின்றன. கண்டியின் பிரதான கட்டுவேலைகளுக்குள் இராச அரண்மனை (Pavilion) இலங்கையிலுள்ள கட்டுவேலைகளுக்குள் அதிக நேர்த்தியானதாய் நகரியின் வடகிழக்கந்தத்தில் இருக்கின்றது. அது கல்க்குத்தா நகரிக்கயவிலுள்ள சவுரிஞ்சியிலுள்ள (Chowringhee) வீடுகளுக்குச் சமானமாயிருக்கின்றது. அதிலுள்ள வேலைகள் இன்னும் முடியவில்லை. மேசரு



டைய அரண்மனை(Major General's residence) பட்டினத்தின் மேற்கெல்லையாயிருக்கிற தொடர்பான மலைகளில் ஒன்றிலிருக்கின்றது. அம்மலைக்குக்கீழே அரைவாசித்தூரத்தில் திரிகோணமலைத் தெருவுக்குக்கிட்ட இராசாக்களை அடக்கம்பண்ணும் அறை (Royal Cemetery) இருக்கின்றது. அதில் இராசவமிசத்திலுள்ள எல்லா இராசாக்கள் வீரவான்களுடைய சடலங்களுஞ் சாம்பரும் இருப்பதால் அவ்விடங் கீர்த்தியுள்ளதாயிருக்கின்றது. கோடுகளிலே இறந்தவர்களுடைய சரித்திரஞ் சிங்களப்பாஷையில் வெட்டி எழுதப்பட்டிருக்கின்றது. மலைக்குக்கீழே இரண்டு கோவறன்மேந்து வீடுகளிருக்கின்றன. முற்காலத்தில் கோட்டுஸ்தலமும் பிரபுக்களின் வாசமுமாயிருந்த அரண்மனையுங் கட்டுவேலைகளும் இப்பொழுது கச்சேரியாகவும் (Cutchery) கொமிசனர் துரைகளிருக்கும் (Judicial and Revenue Commissioners) வீடுகளுமாக மாற்றப்பட்டிருக்கின்றன. அரண்மனையில்ஒருபங்காகிய(Hall of Audiance)சபைகூடும்மண்டபம் இப்பொழுது நீதிஸ்தலமும் நாயிற்றுக்கிழமைகளிற் பிரசங்கம்நடக்கிற கோவிலுமாயிருக்கின்றது. அவ்விடத்திலுள்ள புத்தகசாலை இக்காலத்துக் கட்டுவேலையாயிருக்கின்றது. மறியல்வீடு(Jail) அதிக விசாலமுள்ளதும் நேர்த்தியாகக் கட்டப்பட்டதுமாயிருக்கின்றது. தமிழ்த் தெருவில் நேர்த்தியான ஒரு

RangaRakes
tamilnavarasam.com

ஆசுப்பத்திரிவீடிருக்கின்றது. இவைகளையன்றி மலைக்குமேலே (Castle hill) வெடிமருந்து பீரங்கிகளிருக்கும் அறைகளும் (Castle barrack) பட்டினத்தின் பலபகுதிகளிலும் இராணுவ உத்தியோகஸ்தருடைய வீடுகளும் உண்டு. கிழக்கந்தத்தில் மஸ்திராத்துக்கோடும் (Magistrate Court) திரிகோணமலைக்குப் போகிற தெருப்பாதையிலே ஒரு சத்திரமும் (Hotel) இருக்கின்றன. இச்சத்திரம் பயணக்காரருக்குதவியாக (௲அ௱ஈஉம்) ஆண்டு கட்டப்பட்டிருக்கின்றது. கண்டிநகரியில் (௪) இந்துமதக்கோவிலும் (௰௨) புத்த ஆலயங்களும் இருக்கின்றன. அவைகளாவன விட்டுணுவுக்குக் கட்டப்பட்டிருக்கிற மகாதேவாலயம் (Maha Dewalle) நரேந்திர சிங்கராசனாற் கட்டுவிக்கப்பட்டிருக்கிற நாததேவாலயம் (Naata Dewalle, sacred to Naata who is the 5th or Maitree Bhuddha of the present Kalpa) கதிர்காம தேவாலயம் (Katragam Dewalle) பத்தினி தேவாலயம் (Pattini Dewalle, sacred to Pattini or Durga) என்னும் இந்துமதக்கோவில்களும் தலதமாவிகவம் (Daleda Malegawa) இராசமாயம் (Rajakemaya or Palleymaale Wihare) மலவத்திவிகாரை (Malwatte Wihare) பூசமாளவிகாரை (Pooja Mall Wihare) கொகுகோதுளவிகாரை (Koloogodella Wihare) குண்டிவி விகாரை (Kondly Wihare) இராமவிகாரை (Rama



Wihare) கங்கிரமவிகாரை (Gangaraama Wihare) சிதைவள்ளிவிகாரை (Settawella Wihare உதுகம்போலவிகாரை (Huduhumpola Wihare) என்னும் புத்த ஆலயங்களுமே. முன் இந்நகரியில் சோசிவாஸ் என்னுங் குருவானவரால் (Venerable Father Jose Vaz) கட்டுவிக்கப்பட்ட ஒரு நேர்த்தியான உரோமான்கோவிலிருந்தது. ஆனாலும் மறுபடி நரேந்திரசிங்கன் இராசாவானபொழுது அக்கோவிலை முழுதாயிடித்துப் போட்டான். வெஸ்லியன், சார்ச்சுமிசியோன் பாதிரிமார் இப்பொழுது இவ்விடத்திலிருக்கிறார்கள். (௲உ௱௬௰ம்) ஆண்டுமுதல் (௲௱௮௰ம்) ஆண்டுவரையில் ஆண்ட பண்டித பராக்கிரம பாகுஇராசன் (Pandita Prakrama Bahoo III) இந்நகரியைக் கட்டினார்

---

## உடுநுவரை.—Udunuwera.*

---

## அரசிப்பற்று.—Harasipatto.

இந்நாடு உடராட்டமென்னும் (Udaratta பெரிய நாட்டிலடங்கிய ஓர் தேசமாயிருக்கின்றது. அது காட்டுக்கஸ்தோட்டி (Katrekastotte) கிரியகாமி (Girreagame pass) என்னும் இடங்களுக்கூடே எல்லைப்பட்டிருக்கின்றது. வடகரையிலிருந்து கெசபாகு இராசன் (Gaja Bahoo Ist) நாலுாறு குடிகளைக்கொண்டுவந்து

* Not much is known of this country.

RangaRakes tamilnavarasam.com

இவ்விடத்திற் குடியேற்றினபடியால் அதற்கு அரசிப்பற்றெனப் பெயர்வந்தது. இந்நாட்டிற்காடுகளில்லை. பலபகுதிகளிலுஞ் சிறுமலைகளிலும் தெங்கு, மா முதலிய பழவிருக்கங்கள் நிறைந்த தோப்புக்களும் நேர்த்தியான வயல்களும் இருக்கின்றன. நடுத்திசையிலுள்ள நாடுகள் அதிக செழிப்பாயிருக்கின்றன. புத்தளத்துக்குச் சனங்கள் வியாபாரம்பண்ணுகிறார்கள். அவ்விடத்திலிருந்து மறுதேசங்களுக்குப் பாக்கேற்றி உப்பிறக்குவார்கள்.

---

தம்பனை.—Tumpane.

இந்நாடு எழுகோறளை (Seven Korles) நாலுகோறளை(Four Korles) அரசிப்பற்று(Harasipattoo) எட்டினுவரை (Yattenuwera) என்னும் நாடுகளுக்கூடாக இருக்கின்றது. இதைச் சிங்களவர் தம்பனகர (Tumpanahay) என்றழைக்கிறார்கள். வடகரையிலிருந்து கெசபாகு இராசனாற் கொண்டுவரப்பட்ட குடிகளில் (௱௫௰) பெயர் இவ்விடத்தில்வந்து குடியேறியிருந்ததினாலே இதற்கு இந்தப் பெயர்வந்ததெனச் சொல்லுகிறார்கள். இந்நாட்டிற் சிறுமலைகளும் புரோசனமுள்ள பள்ளத்தரைகளும் உண்டு.

---

தும்பழை.—Dumbere.

இத்தேசம் உடராட்டத்திலுள்ள ஓர் பகுதியாய்த் தும்பழை மேனாடு(Upper Dumbere) என்றும் தும்பழை கீழ்நாடென்றும் (Lower Dumbere) அழைக்கப்படுகின்றது. மாவலிகங்கைநதி (Mahawelle-gunga river) இந்நாட்டைக் கண்டியிலிருந்து பிரிக்கின்றது. இத்தேசத்தைக்குறித்து மெத்த அறியப்படவில்லை.

---

ஏவாகோற்றி.—Hewahette.

இந்நாடு உட்டராட்டத்தில் ஓர் பகுதியாய்க் கண்டிக்குத் தென்கிழக்கே எல்லைப்பட்டிருக்கின்றது. அதின் பிரதான நகரியாகிய அங்குராங்கத்தை(Hangramketty)கண்டியிலிருந்து(௰௬) மயில் தூரமுள்ளதாயிருக்கின்றது. இந்நாடு செழிப்புஞ் சிறப்புமான பூமி. அதிற் சிறப்பான சிறுமலைகள் மிகுதி. இவ்விடத்தில் அதிக குடிசனங்களிருக்கிறார்கள். நெல்லு அதிகம் விளைகின்றது. அங்குராங்கத்தை நகரியிலுள்ள மலைகளிலிருந்து மகாஓயா நதி பாய்கின்றது. முன் கண்டிப்போர் நடந்தகாலத்தில் இவ்வூரவர்கள் அதிக உபத்திரவம் அடைந்திருந்தார்கள்

---

கோற்மாலை.—Kotmaly.*

---

வேயிலூவா.—Weyeloowa.

(௲௬௱௫௰ம்) ஆண்டு புடுத்துக்கீஸ்காரருக்

* Not much is known of this Province.



RangaRakes
tamilnavarasam.com

குங் கண்டி நாட்டாருக்கும் இவ்விடத்தில் நடந்த போருக்காகமாத்திரமே இந்நாடு பேர்போனதாயிருக்கின்றது. அத்தருணத்தில் இராசசிங்கன் (Raja Singha II) (௰௭) வயதுள்ளவனாய்க் கண்டிப்போருக்குத் தளகத்தனாய்வந்து புடுத்துக்கீஸ்காரரை முறியடித்து அவர்களுடைய தளகத்தனாகிய கொஸ்தந்தீனுவை (Don Constantine Desaa) மறியலிற் போடுவித்தான்.

---

### ஊவா.—Uwa.

இந்நாடு கண்டிக்குக் கிழக்கேயுள்ளது. குராக்குண்ட ஓயாநதி (Goorakondra oya) இந்நாட்டைச் சப்பிரகாமமலைக் கோறளையிலிருந்து பிரிக்கின்றது. இது (௲௮௱௬௧ம்) ஆண்டுக் கணக்கின்படி இந்நாட்டில் (௨௨௲௪௱௨ம்) சனங்களிருக்கிறார்கள். அது கீழ்நாடாகவும் மேல்நாடாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளிலும் அநேகம் கோறளைகளும் பற்றுகளும் உண்டு. தேசக்காட்சி சிறப்புள்ளது. சிலவிடங்களிற் பெரியகாடுகளும் மற்றவிடங்களில் ஒப்புரவான வெளியும் நிலங்களுமிருக்கின்றன. தேசசுவாத்தியஞ் சவுக்கியமுள்ளது. நிலம் வேளாண்மை செய்வதற்கேற்றதாய் அதிக புரோசனங்கள் உண்டாகின்றன. தீவெங்குமுள்ள கோப்பிகளில் நேர்த்தியானவிதம் இவ்விடத்தில் உண்டாகின்றது. இவ்விடத்து மாடுகள்



திறமாயிருந்தும் மறுதிசைகளுக்குக் கொண்டுபோனாற் செத்துப்போம். கதிர்காமம் இந்நாட்டிலுள்ள ஓர் சிறுகுறிச்சியாயிருக்கின்றது. இவ்விடத்தில் இந்துமதக்காரர் இருக்கிறார்கள். கதிர்காமர்கோவில் இவ்விடத்தில் விசேஷமாயிருக்கின்றது. அதற்குப் பலதேசங்களிலுமிருந்து சனங்கள் யாத்திரைபண்ணுகிறார்கள்.

---

### மாத்தளை.—Matelle.

இந்நாடு கண்டிக்குக் கிழக்கேயிருக்கின்றது. கசபாகு இராசாவினாற் கொண்டுவரப்பட்ட பிரசைகளில் அநேகர் இவ்விடத்துக்குவந்து குடியேறினார்கள். இந்நாடு (௨௲௨௱௭௨) சதுரமயில் விசாலமுள்ளதும் இவ்விடத்திற் (௰௪௲௪௱௯) குடிகள்மட்டுக்கிருக்கிறார்கள். தேசத்தின் பலபகுதியிலுஞ் சிறுமலைகளும் பள்ளத்தரைகளுமிருப்பதால் தேசஞ் சிறப்புஞ் செழிப்பும் உள்ளதாயிருக்கின்றது.

---

### உடப்பலாத்தனை.—Udapalatta.

இந்நாடு உடசாட்டத்திலுள்ள ஓர்தேசமாய்க் கண்டிக்குத் தெற்கேயிருக்கின்றது. இவ்விடத்தில் நெல்லெம்பிநுவரை (Nellemby Nuwera) என்னும் பட்டினம் இருந்தது. இராசசிங்கன் கண்டிநகரியைவிட்டுப் பிரிந்தபொழுது தன் நீதிஸ்தலத்தை இவ்விடத்திலுண்டாக்கி

RangaRakes

tamilnavarasam.com

ணன். இந்நாடு மலையும் பள்ளத்தரையுமான பூமியாயிருந்தும் அநேக காடுகளில்லை. நெல்லு, குரக்கன், அவுரி என்னும் புரோசனங்கள் உண்டாகின்றன.

---

## இலக்கிஷ தீவுகள் மாலைதீவுகள் முதலியன.

## Laccadives and Maldives.

இலக்கிஷ தீவுகள் எவ்விடத்தில் இருக்கின்றன?

மலையாளக் கரைக்கு மேற்காக உத்தராக்கிஷத்தில் (௰ம்) பாகைக்கும் (௰௨ம்) பாகைக்கும் ஊடேயிருக்கின்றன. சனங்கள் குறைவும் பெரும்பாலும் அவர்கள் புசிப்பனவு தேங்காயும் மீனுமாயிருக்கின்றன.

மாலைதீவுகள் எவ்விடத்தில் இருக்கின்றன?

இலக்கிஷ தீவுகளுக்குந் தென்பக்கமாயும் நிரக்கிஷ ரேகைக்கும் உத்தராக்கிஷ ரேகையின் (௮ம்) பாகைக்குமிடையேயிருக்கின்றன. இத்தீவுகள் பதினேழு சிறுக்கூட்டமான தீவுகளாயிருக்கின்றன. இவைகளிற் பெருந்தீவுகள் குடியேறினவைகளாயுஞ் செய்கைப்படுத்தப்பட்டவைகளாயும் இருக்கின்றன. தீவுகளின் இராசன் மாலைதீவில் வாசம்பண்ணுகிறான். சனங்கள் மகமது மார்க்கத்தாராயிருக்கிறார்கள்.

இவைகளையன்றி இந்து தேசத்துக்குரிய தீவுகள் பின்னும் எங்கேயாகுதல் உண்டா?

பங்காளக் குடாக்கடலின் தென்கிழக்குப்பக்கத்தில் அந்துமான் (Andaman), நிக்கொபார்





(Nicobar) என்னுந் தீவுகளுமுண்டு. இத்தீவுகள் காடுஞ்செடியும் நிறைந்தவைகளுஞ் சுகவீனமுள்ள தீவுகளுமாயிருக்கின்றன. சனங்கள் மிகவுங் குரூரமுள்ளவர்களும் அறியாமையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.

---

END OF PART FIRST.

RangaRakes

tamilnavarasam.com

## Glossary of Astronomical, Geographical, and other terms used in this work.

| | |
|---|---|
| அகழி | Ditch |
| அக்ஷம் | Latitude |
| உத்தராக்ஷம் | North Latitude |
| தக்கணாக்ஷம் | South Latitude |
| அணு | Particle, atom |
| அண்டாகாரம் | Oval form |
| ஆளுகைகாரன் | Viceroy, Governor |
| ஆஸ்பத்திரி | Hospital |
| இந்துக்கள் or இந்தியர் | Hindus, or Indians |
| இயங்கியல்வஸ்து | Moving body, as planets |
| இயற்கை | Nature |
| இராணி | Hindu queen |
| ஈர்த்தல் | To attract |
| உச்சம் | Zenith |
| உத்தராயனம் | North Declination |
| உருவாணி | Axis, Rod |
| உருவுதல் | To pass through, to penetrate |
| உஷ்டணபூமி | Torrid Zone |
| ஒதுங்குகடல் | Harbour |
| ஒடுக்ககாடு | Isthmus |
| கச்சேரி | Cutchery |
| கடல் | Sea |
| கண்டம் | Continent |
| கத்தோலிக்கமதம் பாப்புமார்க்கம் | R. Catholic Religion, or Catholicism or Popery |
| கலை | Minute |
| கல்லறை | Monument, Catacomb |
| கனற்றல் | To heat |
| கஸ்பா | Cusbah, the head village, Talook |
| காங்கை | Heat |
| காதம் | 10 miles or 7½ Naligay |



| | |
|---|---|
| கால்வாய் | Channel, strait |
| காற்று | Wind |
| கொண்டற்காற்று | East Wind |
| கோடைக்காற்று | West Wind |
| வாடை or வடந்தை | North Wind |
| தென்றல் | South Wind |
| கிரணம் | Beam of rays |
| கிரகணம் | Eclipse |
| சூரியகிரகணம் | Solar Eclipse |
| சந்திரகிரகணம் | Lunar Eclipse |
| குடாக்கடல் | Gulf or Bay |
| கொத்தளம் | Bastion |
| கோளவடிவம் | Spherical body |
| கோளார்த்தம் | Hemisphere |
| குணகோளார்த்தம் | East Hemisphere |
| குடகோளார்த்தம் | West Do |
| உத்தரகோளார்த்தம் | North Do |
| தக்கணகோளார்த்தம் | South Do |
| கோப்பி | Coffee |
| கோறளை | Term used in Ceylon for the subdivision of a province |
| சக்கரவடிவம் | Circular form |
| கற்கிச்சக்கரம் | Tropic of Cancer |
| மகரச்சக்கரம் | Tropic of Capricorn |
| துருவச்சக்கரம் | Polar Circle |
| சக்கரவர்த்தி | Hindu Emperor |
| சமகுணபூமி | Temperate Zone |
| சமன்பூமி | Plane |
| சமாதி | Sacred tombs |
| சமுத்திரம் | Ocean |
| சன்னியாசிகள் | Monks or Devotees |
| சாய்வு | Obliquity |
| சாவடி | Inn, Choultry |
| சீதளபூமி | Frigid Zone |
| சுத்தகோணம் | Right-angle |
| சுற்றளவு | Circumference |
| சுற்றியோடல் | To revolve |

RangaRakes
tamilnavarasam.com

| | |
|---|---|
| சோதிடோற்புரிசை | Astronomical Observatory |
| தக்கணுயனம் | Declination South |
| திசை | Region |
| திசைவன்னி | Dessavanny |
| தீவு | An extensive region, Continent or Island |
| துருக்கம் | Hill fortress |
| துருவன் நட்சத்திரம் | Polar Star |
| துவாப்பு | Doab, any tract of country included between two rivers |
| தேசாந்திரம் | Terrestrial Longitude |
| குணதேசாந்திரம் | East Longitude |
| குடதேசாந்திரம | West Longitude |
| தேசாதிபதி | Viceroy, Governor |
| தேயிலை | Tea-plant |
| நடுமையம் | Centre |
| நவாப்பு | Nuwab, A mohammedan Viceroy or Governor |
| நாராசம் | Axis |
| நிரக்ஷரேகை | Equator |
| நீராவி | Steam |
| பக்கிரி | Fakeer, A mahommedan mendicant |
| பட்டாணிகள் | Patans or Affghans |
| பரமாணு | Atmosphere |
| பருவம் | Season; Change of weather |
| பள்ளத்தறை | Vale or Valley |
| பள்ளிவாசல் | Mosque |
| பாகை | Degree |
| பிறிற்றனியர் | Britains |
| பிறிட்டிஷ்காரர் | British |
| புவனசாஸ்திரம் | Geography |
| புவனசாஸ்திரி | Geographer |
| பூகோளப்படம் | Map of the World |
| பெருந்தேசம் | Grand Division of a Continent |



| | |
|---|---|
| பேட்டை | Pettah |
| மத்தியளவு<br>விட்டம் | Diameter |
| மந்தணமண்டபம் | A large edifice erected for assembling a council or Parliament |
| மலை | Mountain |
| மழை | Rain |
| மாலுமி | Pilot |
| முனை | Cape, Promontory |
| மேடு | Hill |
| வாவி | Lakes of the largest size |
| விகாரங்கள் | Variations |
| விகாரை | Bhuddist temple |
| றப்பிறமாது | Reformed |

RangaRakes tamilnavarasam.com

## Errata in the First Part of Geography.

| புறம் | வரி | பிழை | திருத்தல். |
|---|---|---|---|
| ௮ | ௭ | கடல்முனை | முனையாவதென்ன |
| ௰௮ | ௰௨ | ஆகப்பதினைந்து | ஆகப்பதினாறு |
| ௨௭ | ௰௪ | அசயதேசமும் | அரக்கதேசமும் |
| ௨௯ | ௮ | திரிசிரப்பள்ளி | திரிசிராப்பள்ளி |
| ௩௩ | ௨௪ | ௰௯கோடி | ௯ கோடி |
| ௫௨ | ௰௩ | சனத்தொகை யென்ன | அதின் சனத்தொகை என்ன |
| ௫௫ | ௬ | பற்று | பதுமவதிநகரம் |
| ௫௩ | ௨௩ | (௭௰) | (௮௰) |
| ௫௫ | ௯ | ( ௯) | (௱) |
| ‶ | ௰௩ | பிரதான | தலைப் |
| ‶ | ௰ | ஓரியா | ஓறிசா |
| ௪௪ | ௰௯ | தசஆகா | தாஆகா |
| ௪௯ | ௬ | மேல்காத்தாடி | காத்தாடி |
| ௪௭ | ௰௩ | Penaur | Panaur |
| ௪௮ | ௯ | (௯௱௭௰) | (௫௱௭௰) |
| ‶ | ௨௫ | சிக்கேகோல் | சிக்காலக்கோடி |
| ௬௨ | ௰௫ | எவை | என்ன |
| ‶ | ௰௭ | (௭௰) | (௪௱) |
| ௬௬ | heading | Paricasam | Barigaza |
| ‶ | ௨௰ | இத்திவுக்கு | இதற்கு |
| ௬௭ | ௰௯ | மராட தேசத்துக்கு | மராடவிராச்சியங்களுக்கு |
| ௯௪ | ௬ | செவில | செல்ல |
| ௯௯ | ௨௰ | கந்தவனநாடு | வடசருக்கார் |
| ௭௪ | heading | Gudwana | Gundwana |
| ‶ | ௰௭ | காறுமந்தளா | காறு, மந்தளா |
| ௭௬ | ௰௬ | தத்தனபுரம் | இரத்தினபுரம் |
| ௭௯ | heading | Aydhia | Ayodhia |
| ௮௩ | ௰௨ | Baroda | Burruda |
| ‶ | ௰௩ | Boorbunder | Poorbunder |
| ௮௨ | ௨௰ | Booj | Boodje |
| ௮௫ | ௨௩ | சத்தாராள் | சத்தாரா |
| ‶ | ‶ | கெரியுகோட்டை | நகரியுங்கோட்டை |



| புறம் | வரி | பிழை | திருத்தல் |
|---|---|---|---|
| ௮௪ | ௰௨ | பொருந் | பொருந்தி |
| ௮௯ | ௭ | அஞ்சன்கோடு | அஞ்சுதங்கல் |
| ௮௮ | ௬ | பருத்தி | பஞ்சி |
| ‶ | ௨௬ | மராடத்திலுள்ள | மராட்டியச் |
| ௯௰ | ௨௪ | சிப்பாரா | சுப்பாரா |
| ௯௪ | ௩-௪ | வர்களாகி | வர்களாகிய |
| ௯௬ | heading | மாழவம் | உவது-மாழவம் |
| ௯௮ | ௨ | பொபால் | பூபால |
| ‶ | ௰௮ | தே | தழ்கு |
| ‶ | ௨௪ | இராவின் | இறிவாவின் |
| ‶ | ௨௫ | இராவு | இறிவா |
| ‶ | ௨௭ | இரா | இறிவா |
| ௱ | ௨௪ | சிக்கிமு | [illegible]வால் |
| ௱௯ | ௰௩ | வந்தார்கள் | வந்தாண்டார்கள் |
| ‶ | ௰௭ | நதிக்குச் | நதிக்குந் |
| ௱௰ | ௬ | பகுதி இராசா | பகுதகபோல இராசா |
| ௱௰௩ | ௰௭ | சோகாருந் | லீயாவுந் |
| ‶ | ௨௩ | பத்தருக் | பட்டாணிகளுக் |
| ௱௰௫ | ௰௩ | தானியங்களும் | புரோசனங்களும் |
| ‶ | ௨௩ | காஸ்மீரத்தின் | லீயாவின் |
| ௱௰௭ | ௰௯ | கடபுருவமுமமெல்லிய | மெல்லியகட்புருவமும் |
| ‶ | ௨௰ | உயரமுமுள்ள | உயரமுள்ள |
| ௱௨௫ | ௰௮ | தெருகள் | தெருக்கள் |
| ௱௩௮ | ௰௬ | தெசாவனி | திசைவ[illegible]னி |
| ‶ | ௨௩ | தெசாவனி | |
| ௱௩௯ | ௰௫ | தெசாவனி | |
| ௱௪௪ | ௮ | நாட்டுத்திரவியங்கள் | நாட்டுப் புரோசனங்கள் |
| ௱௭௨ | ௰௭ | Me D l | M. De. La |
| ௱௮௨ | ௰ | Ponparippoo | Pomparippoo |
| ‶ | ௰ | கோடுகளில | கோரிகளில் |
| ௱௯௯ | ௨௫ | Rajakemaya | Rajamaya |
| ‶ | ௨௯ | Koloogodella | Kotoogodella |
| ௨௱ | ௰௭ | காட்டிலபங்கிய | காட்டிலடங்கிய |

RangaRakes tamilnavarasam.com